5-6

மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு.

உ

சிவமயம்

ஸ்ரீ பாலசித்த குரவே நம :

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க.

நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய

நால்வர் நான்மணி மாலை - ஓர் ஆய்வு

இது

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்

பத்தொன்பதாம் பட்டம்

அருண்மிகு குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

அவர்களின் அருளாணையின்வண்ணம் வெளிவருகிறது.

பதிப்பாசிரியர் :

குமாரசிவ. **இராசேந்திரன்** பி. காம்., பி. எல்.,

திருமடம், - மயிலம்.

ஆய்வறிஞர்கள் :

டாக்டர் **சு. திருநாவுக்கரசு** எம். ஏ., பிஎச். டி.

தேர்வுநிலை விரிவுரையாளர்.

டாக்டர் **இரா. இலட்சாராமன்**

எம். ஏ., எம். ஃபில்., பிஎச். டி.

முதுநிலை விரிவுரையாளர்.

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி,

மயிலம்-604 304.

நூல் குறிப்பு

தலைப்பு	:	நால்வர் நான்மணிமாலை - ஓர் ஆய்வு.
பதிப்பாசிரியர்	:	சிவத்திரு. குமார சிவ. இராசேந்திரன், பி. காம்., பி. எல்.,
ஆய்வறிஞர்கள்	:	டாக்டர் சு. திருநாவுக்கரசு டாக்டர் இரா. இலட்சாராமன்.
முதற்பதிப்பு	:	26 - 9 - 1994.
உரிமை	:	மயிலம் - பொம்மபுர ஆதீனம்.
வெளியிட்டோர்	:	மயிலம் - பொம்மபுர ஆதீனம்.
பொருள்	:	இலக்கிய ஆய்வு.
தாள்	:	11.6
அளவு	:	கிரவுன் 1/8.
எழுத்து	:	10 புள்ளி.
பக்கங்கள்	:	viii+226
விலை	:	ரு. **36-00**
படிகள்	:	750
அச்சிட்டோர்	:	ஸ்ரீ வீரஹனுமான் பவர் அச்சகம், 60, இராஜாஜி வீதி, திண்டிவனம் - 604 001. போன் : 22142.

5-6

உ

ஸ்ரீ பாலசித்த குரவே நம :

குருமரபு வாழ்த்து

பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின் வீரசைவ
பரமே காட்டப்
பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த சங்குகன்னப்
பால சித்தர்
வரமயிலார் முருகனுப தேசமுடன் வந்துகுரு
வாகி யாண்ட
திரமிகுபேர் சிவஞான பாலயநற் குருமரபு
சிறந்து வாழி.

உ

சிவமயம்

ஸ்ரீ பாலசித்த குரவே நம:

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க.

பதிப்புரை

செந்தமிழும் சிவநெறியும் பரப்பும் வீரசைவ ஆதீனங்களுள் ஒன்று மயிலம் பொம்மபுர ஆதீனம் ஆகும். தமிழகத்தில் வீரசைவ நெறிக்குத் தாயகமாகவும் நாயகமாகவும் திகழும் இவ்வாதீனத்தின் ஆதிகுருமுதல்வர் ஸ்ரீ பாலசித்தரின் முதற்சீடர் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் ஆவார். அவர்தம் அருட்சீடர் நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். சிவப்பிரகாசர் அருளிய முப்பத்துநான்கு நூல்களும் தோத்திரம்; சாத்திரம், காவியம், சிற்றிலக்கியம் முதலான பகுப்புகளுக்குரியனவாகும். அவற்றுள் இன்றுவரை கிடைக்கப் பெறாமல் உள்ள ஏசுமத நிராகரணம், திருவெங்கையலங்காரம், தலவெண்பா, கொச்சகக் கலிப்பா என்னும் நான்கு நூல்கள் தவிர, ஏனையவை, பலரால் பலகாலங்களில் உரைகளுடன் வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வாதீனத்தின் 18-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள், கிடைக்கப் பெற்றுள்ள நூல்கள் அனைத்தையும் முதன்முதலாக ஒன்றாகத் தொகுத்து "நல்லாற்றூர் சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள்" என்னும் பெயரில் வெளியிட்டருளினார்கள்.

தற்பொழுது அருளாட்சி புரிந்துவரும் இவ்வாதீனத்தின் 19-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள் சமயநெறிநின்று சமுதாய ஈடேற்றத்துக்கு அரும்பெருந்தொண்டு புரிந்துவருபவர்கள். அவர்கள் சிவப்பிரகாசரின் நூற்பொருள்களை மக்கள் தம் உள்ளத்திலும், இல்லத்திலும் வைத்துப் பயன் கொள்ள

வேண்டும் என்னும் திருவருட் பெருங்கருணையுடன் குருபூஜை முதலிய விழாக்காலங்களில் சிவப்பிரகாசர் நூல்களை அறிஞர்களின் உரைகளோடு வெளியிட்டு அருள் புரிகின்றார்கள்.

மேலும் இவர்கள் "சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக" என்னும் உயர்பெருங் குறிக்கோளுடன் தமிழகச் சைவத் திருமடங்களுள் முதன்முதலாகத் தமிழ்க் கல்லூரியைத் தோற்றுவித்தருளிய 18-ஆம் பட்டம் குருமகாசந்நிதானம் அவர்களின் திருவருள்நெறியைப் பொன்னெனப் போற்றித் தம்கல்லூரி மாணவர்கள் தமிழ்ப்புலமை பெறுவது மட்டுமல்லாமல், சிவப்பிரகாசர் நூல்களிலும் தோய்ந்து புலமை பெற்று இகபரநலன்களை எய்த வேண்டும் என்னும் திருவுளம் கொண்டவர்கள்.

குருமகாசந்நிதானம் அவர்களின் திருவுளப்பாங்கினைச் செயல்படுத்தும் நிலையில் பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகள் அவர்களைத் தலைவராகக் கொண்டு அவர்களுடன் அறிஞர் பெருமக்கள் ஐவர் கொண்ட குழுவினால் உருவாக்கப் பெற்றதே சிவப்பிரகாசர் செந்தமிழ் உயராய்வு மையம் ஆகும்.

குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியுடன் சிவப்பிரகாச சுவாமிகளின் நூல்களில் மாணவர்கள் புலமை பெறுமாறு, கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு சிறப்பு வகுப்புகள் நடத்தச் செய்தும், வாய்மொழி, எழுத்துத் தேர்வுகளைத் தாமே நடாத்தியும், வெற்றிபெறும் மாணவர்க்கு ஒரு பெரும் பரிசாக ரூ. 5,000/- வழங்கியும் இம்மையம் தம் திருத்தொண்டினைச் செய்து வருகின்றது.

அவ்வகையில் இலிங்க, குரு, சங்கமபத்தியை நினைவூட்டும் வண்ணம் முதன்முதலாக நூலாய்வுக்கு எடுத்துக்கொண்ட நூல்கள் முறையே சோணசைலமாலை, நால்வர்நான்மணிமாலை, நன்னெறி என்னும் மூன்றுமாகும்.

குருமகாசந்நிதானம் அவர்கள் மூலபாடவடிவில் இம்மூன்று நூல்களையும் ஒரே நூலாக அச்சிட்டு மாணவர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் வழங்கியது மட்டுமல்லாமல் இந்நூல்களைப் பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்களின் ஆய்வுச் சிந்தனைகளை ஆதீனத்தின் சார்பில் நூலாகவும் வெளியீடு செய்தருளுகின்றார்கள்

கல்லூரி விரிவுரையாளர்கள் திரு. டாக்டர் சு. திருநாவுக்கரசு, திரு. டாக்டர் இரா. இலட்சாராமன் ஆகியோர், தாங்கள் பயிற்றுவித்த நால்வர் நான்மணிமாலை என்னும் நூலை ஆராய்ந்து, முறையே சிவப்பிரகாசர் நோக்கில் திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் பற்றியும், சிவப்பிரகாசர் நோக்கில் திருநாவுக்கரசர், நம்பியாரூரர் பற்றியும் தம் ஆய்வுச் சிந்தனைகளைக் கட்டுரைகளாக்கித் தந்துள்ளனர்.

கட்டுரையாளர்களுக்கும், இவ்வாய்வுக் கட்டுரைகளைச் சிறப்பான முறையில் உரிய காலத்தில் அச்சிட்டளித்த திண்டிவனம் – வீரஹனுமான் அச்சகத்தார்க்கும் திருவருளும் குருவருளும் மேன்மேலும் பெருகுவனவாகுக.

இந்நூலினைப் பதிப்பிக்கும் பணியை அடியேனுக்கு வழங்கியருளி இருமைக்கும் நலம் சேர்க்கும் குருமகா சந்நிதானம் அவர்களின் திருவடிக் கமலங்களை எழுமையும் போற்றி வணங்குவேன்.

இந்நூற்சிந்தனைகளைப் பயன்கொண்டும் சமுதாயம் உய்ய வேண்டுமென்பதாக எல்லாம்வல்ல மயிலம்மணக்கோல முருகப்பெருமானின் திருவருளையும், ஸ்ரீ பாலசித்தர், ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் குருவருளையும் வேண்டுகின்றேன்.

அருண்மிகு குருமகாசந்நிதானம் அவர்களின்
திருவுளப்பாங்கின் வண்ணம்

மயிலம்
26—9—94.

குமாரா. சிவ. இராஜேந்திரன்,
பி.காம். பி.எல்.,
மயிலம் – திருமடம்,

பொருளடக்கம்

சிவப்பிரகாசர் வணக்கம்

எவர்க்கும் மெய்ஞ்ஞான சோதி ஈயும் மாணிக்க மாகி
உவப்பொடு வெறுப்பு மாகி உற்றிடும் விடயத் தெய்தும்
பவப்பெரும் புணரி நீந்தப் பாரதி யாகும் எங்கள்
சிவப்பிர காச தேவன் திருவடி சென்னி வைப்பாம்.

சமயநெறி காட்டும் செந்தமிழ்ச் சிவப்பிரகாசர்

உலகம் போற்றும் உயர்தனிச் செம்மொழிகள் பல. அவற்றுள் அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி ஒன்றாகும். பழம்பெரும் சிறப்பினையுடைய இம்மொழியின்கண் தோன்றிய நூல்கள் பற்பல வகையினவாகும். தமிழ் மக்களின் அறியாமையாலும்,அலட்சியத்தாலும் நீருக்கும், நெருப்புக்கும் ரீ கரையானுக்கும் இரையானவை போக இன்றுள்ள தமிழ் நூல்களை எண்ணிப்பார்த்தாலும், அவற்றின் விரிவும் பரப்பும், எண்ணிக்கையாலும், உருவத்தாலும், உள்ளடக்கத்தாலும், உணர்த்தும் முறைகளாலும் எண்ணற்றனவகளாகவே விளங்குகின்றன.

அவற்றை ''அரசியல் பின்னணி, நூற்பொருண்மை, சமுதாய உணர்வு''1 முதலான அடிப்படைகளில் இலக்கிய வரலாற்றாய்வாளர் கள் எடுத்துரைப்பர்.

இலக்கியம் என்பது : 'பொதுவாக இலக்கியம் என்பது' வாழ்விலிருந்து எழுவது; வாழ்வைப் பற்றியது; இன்ப, துன்பங்களை மட்டுமின்றி, எதிர்பார்ப்புகளை, ஏக்கங்களை, கற்பனைகளை, குறிக் கோள்களை வடிப்பது; இருப்பதையும் இயல்வதையும் தரும் குறிப்பே டாக அமைவது; விழைவுகளையும் விருப்பங்களையும் புனையும் கால்ச் சுவடியாகக் காணப்படுவது; எழுந்த காலத்தின் சான்றிதழாக அமையும் பாங்கால் பிற்காலத்தவராலும், எக்காலத்தவராலும் வேண்டப்படுவது; போற்றப்படுவது. இட, மொழி எல்லைகட்கு அப்பாற்பட்ட செல்வாக்கும் நிலைபேறும் உடையது; தானே கனியாகச் சுவைதந்து அமையினும், இன்னும்பல சுவைக்கனிகள் தோன்ற விதையூன்றுவது. 2

சமயம்-ஒரு விளக்கம் : உலக உயிர்கள், இன்பம் பெற்று வாழவே விரும்புகின்றன. அவைகளின் விருப்பம் 'இன்பம் பெறுவது ஒன்றே' என்பதைத் தொல்காப்பியமும் 3 இயம்புகின்றது.

உயிரினங்களுட் சிறந்த மக்களினமும் அவ்வின்பத்தை நாடித்தேடி அலைந்து எய்த்து அல்லற்பட்டு உழல்கின்றது. அவ்வின்பம் பெறுவதற்கான நெறி அறியாது இன்னலுறுகின்றது. இந்நிலையில் 4

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்னும் தெய்வக்குரல், இறையருள் பெற்றோரால் எழுப்பப் பெறுகிறது.

'இன்னா உலகத்து இயற்கை; இனிய காண்க இதன் இயல் புணர்ந்தோரே' (புறம் 194) என்னும் சங்கப் புலவரின் செந்தமிழ் வாக்கும் உள்ளத்திற்குத் தெளிவு தருகின்றது.

இவ்வாறு இன்னல் கலவாத, இன்ப நிலையைக் காட்டுவது சமயமேயாகும். சமயமும், சமுதாயமும் ஒன்றையொன்று சார்ந்தும், ஒன்றில் ஒன்று இணைந்தும், பிணைந்தும் விளங்குகின்றன. சமயம், சமுதாயத்தை வளர்க்கின்றது; சமுதாயத்தால் வாழ்கிறது என்பது பேருண்மையாகும்.

'சமயம்' என்னும் சொல்லுக்கு உரைகாணும் ஆங்கிலப் பெரு நூல் ''அது மனிதனுக்கும், சமுதாயத்துக்கும் நன்மையும் தூய்மையும் பெருக்கப் பயன்படுவது'' 5 எனக்காட்டுகிறது.

ஆங்கில அகராதி சமயம் என்பதற்குக் 'கடமையுணர்ச்சி'6 என்று பொருள் தருகின்றது. 'சமையம்' என்னும் சொல்தான் சமயம் என்று ஆயிற்று என்பர் அறிஞர்.

சமைத்தல் என்னும் தொழிற் பெயரின் பகுதியே 'சமை' என்பது. சமை என்னும் வினைப்பகுதிக்குப் 'பக்குவப் படுத்து' என்பது பொருள். எனவே ஒருமை நலத்துக்கும், உலக வாழ்வுக்கும் பயன் தரும் முறையில் மனிதனைப் பக்குவப்படுத்தி. அருட்பேற்றுக்கு ஆளாக்குவதே சமயத்தின் தனிப் பெரும் ஆற்றல்; அதுவே அதன் அடிப்படைச் செயலுமாகும் சமயம், பலவகையாக அமைந்து நன்மை யூட்டுகிறது. அது,

'மனிதர் அறிவு விளக்கம் பெற்று, உறுதி எய்தி இன்பவாழ்வு அடைய உதவும் ஞானக்கோயிலாகும்; உலகம், உயிர், இறை ஆகிய வற்றைக் காட்டும் ஞான விளக்காகும்; உடல் இன்பத்துக்கும், உயிர் இன்பத்துக்கும் உதவும் நன்மைகளை விரித்துத் தீமைகளை விலக்கிக் காக்கும் ஞான அரணாகும். உலகியல் ஒழுக்கங்களைக் கற்பிக்கும் நீதி நிலையமாகும்'7 என்பர் பெரியோர்.

எனவே, அன்பு, அமைதி, அருள், இன்பம் ஆகிய உயர்ந்த பண்புகளை மனிதன் பெறுமாறு செய்கின்ற சமயம் என்பது ஓர் வாழ்க்கை நெறியாகும். இது மனிதனை விலங்குப் பண்பிலிருந்து விடுதலை பெறச்செய்து, மனிதப் பண்பில் மலர்ச்சியுற வைத்துத் தெய்வ அருளில் திளைக்கச் செய்வதனையே குறியாகவும், நெறியாகவும் கொண்டுள்ளது எனலாம்.

தமிழ்-பக்தி மொழி: இலக்கியம், சமயம் பற்றிய இத்தகைய கண்ணோட்டங்களுடன், நுண்மாண் நுழைபுலம் மிக்கோர் தமிழ் இலக்கியங்களை ஆயும் போதும், அவற்றுள் தோயும் போதும் ஆன்ம ஈடேற்றத்தை உள்ளீடாகக் கொண்ட பக்திமணம் யாண்டும் பரவி நிற்பதை நுகர்வர்; நுனித்துணர்ந்த அவற்றை நனிஉணர்த்துவர்.

சமயச்சிந்தனைகளுக்கு அரணாகவோ, முரணாகவோ நூல்கள் அமைந்தாலும், அந்நூல்களின் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைவது சமயம் பற்றிய சிந்தனையேயாகும். எனவே எவ்வகையில் நோக்கினாலும் சமயச் சிந்தனைகளைப் புறக்கணித்துத் தமிழைச் சிந்திப்பது இயலாத ஒன்று; அப்படிச் சிந்தித்தால், அச்சிந்தனை சாறு நீங்கிய கரு··பினைப்போல் அமைவதாகுப்; பயன் ஒன்றும் இல்லை எனலாம்.

பக்திப் பாடல்கள், உணர்வாலும், அளவாலும் உலகில் உள்ள எப்மொழியிலும் காணப்படாத அளவு தமிழிற் காணப்படுகின்றன. மறைத்திரு. தனிநாயக அடிகளார் '' ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழியென்றுப், கிரேக்கம் இசையின் மொழியென்றும், செருமன் தத்துவத்தின் மொழியென்றும், பிரெஞ்சு தூதின் மொழியென்றுப், இதாலியன் காதலின் மொழியென்றும் கூறுவது ஒருபுடை யொக்கும் எனில் தமிழைப் பக்தியின், (இரக்கத்தின்) மொழியெனல் பொருந்தும் ''8 என்று சிறப்பித்துக் கூறுவார்.

தமிழில் காலங்கள் தோறும் சமயநூல்கள் :

உலகிலுள்ள பற்பல சமயங்களையும், வேதங்களையும் அடிப்படையாகக் கொண்டு இருவகையில் அடக்கி விடலாம். வேதங்களை, அவற்றின் தொடர்பான நூல்களை ஒப்புக்கொண்டு விளங்குபவை 'வைதிக சமயங்கள்' என்றும், வேதங்களை ஏலாத சமயங்களை 'அவைதிக சமயங்கள்' என்றும் குறிப்பிடலாம். இவற்றை அகச்சமயங்கள், அகப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், புறப்புறச் சமயங்கள் என்று நால்வகைப்படுத்தி. அவற்றுள் ஒவ்வொரு வகையும் ஆறு உட்பிரிவுகள் கொண்டனவாகவும் வரையறுத்துக் காட்டுவர். இவை தவிர்த்து இசுலாமியம். கிறித்துவம், பெர்சியம் முதலான சமயங்கள் இவ்வுட்பிரிவுகளுக்ககப்படாத உலகளாவிய அவைதிக சமயங்களாகும். தமிழ்நாட்டில் தோன்றி, வளர்ந்து வரும் சமயங்கள் சைவம், வீரசைவம், வைணவம் சன்மார்க்கம், காணாபதியம், கௌமாரம், சாக்தம், சௌரம் முதலானவையாகும்.

வடநாட்டில் தோன்றிய ஜைனம், பௌத்தம் முதலான சமயங்களும் நாத்திகக் கொள்கைக் கொண்ட உலகாயதம் எனும் சாருவாகம் முதலானவையும் தமிழகத்தில் புகலடைந்து வளர்ச்சியுற்றதையும் தமிழக வரலாற்றினால் அறிய முடிகிறது.

14ஆ நூற்றாண்டுக்குப் பின்னர் இந்தியாவிலும், சிறப்பாகத் தமிழகத்திலும் ஆட்சிமாற்றங்களால் இசுலாமியம், கிருத்தவம் முதலானவை கால்கொள்ளத் தொடங்கின; வளர்ந்தன.

வரலாற்றுக்குப் புலப்படாத காலந்தொடங்கி, தமிழகத்தில் தமிழிலக்கியங்களில் பல்வேறு சமயக்கொள்கைகள், கோட்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய நூல்கள் தோன்றியுள்ளன.

நதிகளெல்லாம் எங்குத் தோன்றி, எத்திசை நோக்கி ஓடினாலும் முடிவில் அவை கடலினைச் சென்றடைவது போல, உலகில் நிலவும் சமயங்களெல்லாம் ஒரே பரம்பொருளிடத்தில் சென்றே சேர்கின்றன.

'பொங்குபல சமயமெனும் நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்குகரை காணாத கடலே' (திருவருட்பா-மகாதேவ 48)

என்று வள்ளற் பெருமானும்,

'ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்' (திருமந்-2104)
'ஒன்றது பேரூர்; வழி ஆறு அதற்குள்' (திருமந்-1558)

என்று திருமூலநாதரும், இவ்வுண்மையைத் தெளிவுறுத்திகின்றார்கள்.

ஆறுகளெல்லாம் நிலவளம் சிறக்கக் காரணமாதல்போலச் சமயங்கள் யாவும் மக்களின் உளவளம் சிறக்கக் காரணமாகின்றன.

எனவே, அன்பையும் அருளையும் அடிப்படையாகக் கொண்ட ஆன்மிக நெறியாம் சமய நெறியொன்றே, மக்களையும் மன்னுயிர்க் -குலங்களையும் ஒருமையுணர்வுடன் இணைக்கவும் பிணைக்கவும் வல்லதாகும். இதனால்தான், அருணகிரிநாதர் 'சமய பக்தி' என்பது 'வீணான ஒன்றன்று' என்று அறிவுறுத்துகின்றார்.

'சமய பக்திவ்ரு தாத்தனை நினையாதே
சரண பத்மசி வார்ச்சனை தனைநாடி
அமைய சற்குரு சாத்திர மொழிநூலால்
அருளெ னக்கினி மேற்றுணை தருவாயே'

(சமய - பொதுத் திருப்புகழ்)

'வேந்தா! கடம்பு புனைந்தருள்
சேந்தா! சரண்சரண் என்பது
வீண்போமது ஒன்றல என்பதை உணராதோ'

(மாண்டார் - பொதுத் திருப்புகழ்)

பக்தி இயக்கம் பரவிய சூழல்:

தொல்காப்பியத்துள் இறை, உயிர், தளை பற்றிய சமயச் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

சங்கச் சான்றோர் வாழ்விலும், தெய்வச் சிந்தனைகள் சிறந்து விளங்கின. இயற்கைக்கும், காதல், வீரம் காட்டும் உலகியல் வாழ்க்கைக்கும் அக்காலத்து மக்கள் முதன்மை கொடுத்துள்ளனர். அவர்தம் பாடல்களில் தெய்வம் பற்றிய செய்திகள் உவமையாகவும் உள்ளுறையாகவும் இடம்பெற்றுள்ளன. சமயக் காழ்ப்புணர்ச்சி இல்லாத அக்காலத்தில்தான் 'திருமுருகாற்றுப்படை' 'பரிபாடல்' முதலான சமயப் பொருண்மைகொண்ட நூல்கள் தோன்றின.

சங்க காலத்தைச் சார்ந்தும், அதற்குப் பின்னரும் சமணம், பௌத்தம் முதலான வடநாட்டுச் சமயங்கள் தமிழகத்தில் ஊடுருவியபோது மொழியால், நாட்டால், பண்பாட்டால், நாகரிகத்தால் அயன்மைப்பட்ட மன்னர்கள் தமிழகத்தே அம்மதங்களுக்கு ஆதரவு தந்தனர். அதனால் தமிழ்மக்கள் புறச்சமயத் தாக்குதலை எதிர்க்க இயலாமல் தம்முடைய தொன்மைச் சமயமாகிய சைவத்தின் நெறிகளைப்பின்பற்றுவதில் தடுமாற்றமுற்று, 'நீர்வழிப் படூஉம் புணை போல' ஒருநெறி கொள்ளலின்றி, வாழாமல் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

அருளாளர்களின் அற்புதத் தோற்றம்:

அத்தகைய சூழலில்தான் இறைவனருளால் அருளாளர்கள் தோன்றி, மக்கட்சமுதாயத்துக்கு உய்யும்நெறி காட்டி உதவினர். 'உலக உபகாரம் ஞானியர் விவகாரம்' என்பதை இவர்கள் வாழ்க்கையால் உலகு உணர்ந்தது. ஞானியர் தோற்றம், இறையருளால் நிகழ்வது என்னும் உண்மையை வள்ளலார் உணர்த்துகிறார்.

'அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த மனிதர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தை பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே!'

(திருவருட்பா, ஆறாந்திருமுறை - உற்றதுரைத்தல்-9)

எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய சிவபெருமான், தென்னாட்டில் தோன்றிய புறச்சமயக் களைகளைக் களைந்து, சைவப்பயிர் வளர்க்கத் திருவுளங்கொண்டு, தன் திருவடியில் கலந்து, நீங்காத பேரின்பம் துய்த்துக்கொண்டிருந்த வாதவூரடிகளைத்திருவாதவூரில் பிறக்கச்செய்து, திருப்பெருந்துறையில் நொடியளவில் உபதேசித்து ஞானநிலை அடைவித்து, அடியவரோடு கூட்டுவித்து அதிசயம் நிகழ்த்தியதாக மாசில் மணிவாக்காகிய திருவாசகமும் மேற்கண்ட உண்மையை உறுதிப்படுத்துகின்றது.

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுந்
தெழுதரு சுடர்ச்சோதி
ஆக்கி யாண்டுதன் அடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே!'
(திருவா - அதிசய - 8)

இவ்வாறு அருளாளர்கள் தோன்றிச் செந்தமிழ்ச் சைவநெறியினைப் பண்ணார் தமிழிசைப் பாநலம் கெழுமத் தலங்கள்தோறும் சென்றுப் பாடியும் பரவியும், வாழ்ந்தும் வாழ்வித்தும் அன்புநெறி, தொண்டுநெறி ஆகியவற்றைச் சமுதாயம் மேற்கொண்டுய்ய உதவினார்கள்.

சமய குரவர் தோற்றமும் சிறப்பும்:

தன்னலப்பற்றை மாய்த்து, காணும் கரணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணுமாறு பதிகரணங்கள் வாய்க்கப்பெற்ற அவர்கள் இறைவனை அகத்தும் புறத்தும் கண்டனர்; எதிருற்ற சோதனை இறையருளால் வென்றுச் சாதனைகளைப் படைத்துக்காட்டினர். தாங்கள் பெற்ற பேரருள் இன்பத் திளைப்புகளை எல்லோரும் ஓதி உணர்ந்து உய்யும் வண்ணம் எளிய இனிய தமிழால் பாடியருளினர். அவர்களின் வாழ்வினாலும் வாக்கினாலும் திருமாமறை, திருநீறு, திருஐந்தெழுத்துஆகியவைவிளக்கமுற்றன. சைவசமயச் சிறப்புகளை உலகறியச் செய்தவர்களுள் நால்வர் முதன்மையானவர்கள். அவர்கள் தோற்றத்தின் பெருமையைச் சுட்டிக்காட்டும் பாடல் ஒன்று.

'சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தானெங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத்தெங் கே?'

- சிவானந்தமாலை.

திருமுறைகளின் சிறப்பு:

நால்வர் முதலாகச் சிவபெருமான் உட்படத் திருமுறை ஆசிரியர்கள் இருபத்தெழுவர் பாடிய ஞானப்பாடல்களே பன்னிரு திருமுறைகள் ஆகும். இவற்றின் சிறப்பினைக் கூறும் பாடல் :

'திருமுறையே சைவநெறிக் கருவூலம்; தென்தமழின்
தேன்பா காகும்;
திருமுறையே கயிலையின்கள் சிவபெருமான் செவிமடுத்த
செந்தமிழ் வேதம்:
திருமுறையே நடராசன் கரம்வருந்த எழுதியருள்
தெய்வ நூலாம்;
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும்
சிறப்பிற் றாமால்!'

- சிதம்பரத் தலத்துத் தனிப்பாடல்.

திருமுறையால் பெறமுடியாத பயனை வேறு எம்முறையாலும் பெறமுடியாது. தமிழிசைநலம் கெழுமிய இத்திருமுறைகளின் ஆற்றலுக்கு நிகரானது வேறு எதுவும் இல்லை என்று போற்றுவார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள். அவர்தம் பாடல் வருமாறு:

'வெந்தழல் நீராமால்; வெள்ளெலும்பு பெண்ணாமால் ;
வந்தமத வேழம் வணங்கிடுமால் ; - சந்தமெழப்
பாடுவார் உள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்? '

சைவசமய ஒளிவிளக்குகள் :

குரு, இலிங்க, சங்கம வடிவில் இறைவனைக் கண்டு பக்தி செலுத்தியும், பாடிப் பரவியும், அவர்களுக்குத் தொண்டுசெய்தும் வாழ்ந்த சிவனடியார்கள் பலராவர். இவர்களின் குறிக்கோளும், தொண்டும், வாழ்வியலும் உலகோர் உணரும்வண்ணம் இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றவர்கள். இவ்வுயரிய அடியார்களின் அருள்நிறை வரலாறுகளைப் பெருமையுறவும், பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டவும் பாடிய கவிவளவர் தெய்வச்சேக்கிழார் ஆவார் இவர் அருளிய திருத்தொண்டர்புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்து ஒருநிறை நிலையை விள்க்குகிறது. இப்பன்னிரு திருமுறைகளின் உட்பொருள் வெளிப்பாடே பன்னிரு சூத்திரங்கள் கொண்டுதிகழ்வதும் சித்தாந்த சாத்திர நூல்களுள் தலையாயதும் ஆகிய சிவஞானபோதமாகும்.

இவ்வாறு, இடைக்காலத்தில் புறச்சமய மேகங்கள் தமிழக வானில் சைவ ஒளியை மறைத்து இருளினை ஊட்டியபோது

அருளாளர்களெனும் பெருங்காற்று, அம்மேகங்களைச் சிதறியோடச் செய்து, சைவசமய ஒளியை நிலவுலகம் பெறுமாறு செய்தது.

சிவப்பிரகாசச் செங்கதிரோன் தோற்றம்:

பெரியபுராண காலத்துக்குப் பின்னர் 13, 14ஆம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட சோழ, பாண்டியப் பேரரசுகள் மறைந்தன. ஆங்காங்கிருந்த படைத்தலைவர்கள், சிறுசிறு பகுதிகளைத் தத்தமக்குரியதாக்கிக்கொண்டு குறுநில மன்னராயினர். எங்கும் குழப்பமும் போரும் கொந்தளிப்பும் நிகழ்ந்தன. தமிழின்மீது வடமொழி முதலான பிறமொழிச் செல்வாக்கும் இந்துசமயத்தின்மீது இசுலாமியம், கிருத்துவம் முதலிய பிறமதச்செல்வாக்கும் மிகுந்து தமிழர் வாழ்வை நிலைகுலையச்செய்தன. இச்சூழலில் விசயநகரப்பேரரசு (கி.பி.1337 - 1565) தோன்றித் தென்னிந்தியாவில் முகமதியரின் ஆதிக்கம் பரவவொட்டாமல் தடுக்கவும் இந்தியப் பண்பாட்டினை நிலைநிறுத்தவும் ஆனவரை முயன்றது. இருப்பினும் 15, 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் வேற்றவர் ஆட்சிக்கு நம் தமிழகம் உட்பட்டுவிட்டது.

இத்தகைய சூழலில். செந்தமிழ்நாடு செய்த தவப்பயனால் ஊனமிலா ஞானநெறி காட்டி உலகை உய்விக்கும் மெய்ஞ்ஞானியர்கள் காலந்தோறும் வாழையடிவாழையெனத் தோன்றுகின்ற வரிசையில் பதினேழாம் நூற்றாண்டு குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தின் தென்திசை ஸ்ரீவைகுண்டத்தில் குமரகுருபரரும், வடதிசைக் காஞ்சியில் சிவப்பிரகாசரும் சிவஞானச் செங்கதிரோனாகத் தோன்றிப் புறச்சமயப் பனிமூட்டத்தைப் போக்கிச் சைவ, வீரசைவ சமயநெறிகளைப் புலப்படுத்திக்காட்டினர்.

நடையறாப் பெருந்துறவு பூண்ட நற்றமிழ் ஞானச்செல்வர்களாகிய இவர்களால் சமயம், தத்துவம், புராணம், சிற்றிலக்கியம் ஆகிய பொருண்மைகொண்ட நூல்கள் தமிழுக்குக் கிடைத்தன.

இவ்விருவருள் ஒருவராகிய, வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரிய, மயிலம் - பொம்மபுர ஆதீன அருட்சீடர் 'கற்பனைக் களஞ்சியம்' சிவப்பிரகாச சுவாமிகளின் தோற்றம்,

'சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனியெதிர் காலத்தின் சிறப்பும்

இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்கும் திருவருள் உடையேம் '

(பெரிய - திருஞான - 659)

என்னும் தெய்வச்சேக்கிழார் வாக்கினைச் சொல்லித் துதிக்கும் வகையில் சிறந்து விளங்குகின்றது. அவர்தம்மையும் அவர்தம் அருளிச்செயல்களையும் போற்றும் பாடல்களில் விளங்குகின்ற பொன்மொழித்தொடர்களால் அவர்தம்மை ஏத்துதல் சாலும். 'சிவப்பிரகாசர் எவர்க்கும் மெய்ஞ்ஞானஜோதி ஈயும்மாணிக்கமாகத் திகழ்பவர்; பவப்பெரும் புணரி நீந்தப் பாரதி (தோணி) யாக விளங்குபவர்; புலவர்நெஞ்சம மருளும் இன்தமிழ்ப் பாமாலைகளைச் சிவபிரானுக்கே சூட்டிமகிழ்ந்தவர்.

சைவ, வீரசைவ நெறிகளையும், அந்நெறிகளை விளக்கிக் காட்டிய அருளாளர்களையும், அந்நெறிநின்று வாழ்ந்த அடியார் களையும் போற்றிப் பாடியவர்; வீரசைவநெறிக்குத் தாயகமாகவும் நாயகமாகவும் தமிழகத்தில் திகழ்கின்ற மயிலம் - பொம்மபுர ஆதீனத்தின் இரண்டாம் பட்டம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளைத் தம் ஞானாசிரியராகக் கொண்டு அவர்மீது நெஞ்சுவிடுதூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், திருப்பள்ளி யெழுச்சி, கலம்பகம் ஆகிய சிற்றிலக்கியங்கள் ஐந்தினைப் பாடியவர் குருநாதர்மீது தாம் பாடிய கலம்பகநூலை மூன்றாம் பட்டத்துச் சுவாமிகள் முன்னிலையில் அரங்கேற்றியவர்.

சிவப்பிரகாசரின் சிறப்புகள் :

''தமிழ், கன்னடம், வடமொழி முதலிய மொழிகளில் இவருக் கிருந்த புலமைத்திறங்களை இவர்தம் நூல்களால் அறியலாய். வீரசைவக் கோட்பாடுகளை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொல்லும் நூல்களுள் இவர்தம் நூல்கள் முதன்மையும் முழுமையும் பெற்றனவாகும்.

இவரருளிய நூல்களில் காணப்பெறும் கற்பனைச் செறிவையும் நிறைவையும் நோக்கிக் 'கவிசார்வ பௌமர்' என்றும், 'கற்பனைக் களஞ்சியம்' என்றும் போற்றப் பெறுபவர். திருவள்ளுவர் கருத்து களை மிகுதியும் தம் நூல்களில் ஆண்டமை கொண்டு 'வள்ளுவப் பிரகாசர்' எனப் பெறுபவர். நீதி இலக்கியமாகிய நன்னெறியின்

சிறப்பினைக் கருதி 'நன்னெறிப் பிரகாசர்' என்றும், சிலவாண்டுகள் துறைமங்கலத்தில் தங்கித் திருவருள் தொண்டு செய்தமையால் 'துறைமங்கலம் சிவப்பிரகாசர்' என்றும், நல்லாற்றூரில் இட்டலிங்க பரசிவத்தில் கலந்தமையால் 'நல்லாற்றூர்ச் சிவப்பிரகாசர்' என்றும் அறிஞர் உலகத்தால் ஒருமனதாகப் போற்றப்பெறுபவர்.''9

தோத்திர, சாத்திர நூல்களை அருளிய அருட்குரவர் :

'சைவத்தின் மேற்சமயம் வேறு இல்லை' என்பது தமிழ்ச் சான்றோர்களின் துணிப. சிவபெருமானை, வழிபடு தெய்வமாகக் கொள்ளும் அடிப்படை நெறியில் ஒத்து, சிற்சில வழிபாட்டு முறைகளாலும், தத்துவ நெறிகளாலும் தனித்து நிற்பது வீரசைவமாகும். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தை ஊட்டும் சாதனங்கள் வேதசிவாகமங்கள் ஆகும்.

இறைவனைத் துதிக்கும் வேதமந்திரங்களைப்போலச் சைவ சமய குரவர் முதலானோரால் தமிழில் பாடப்பெற்றவை, வேதசாரம் எனப்பெறும் தோத்திர நூல்கள் ஆகும். இவை இறையருள் இன்பத்தில் இடையறாது திளைக்க உதவுவன. அவ்வாறே சிவாகமங்களின் உண்மைகளை உரைப்பன ஆகமசாரம் எனப்பெறும் சித்தாந்த சாத்திரங்கள் ஆகும். இவை இறை, உயிர், தளை என்னும் முப்பொருள் இயல்புகளை முறையாக விளக்குவன. ஆன்மா தளையினின்றும் நீங்கிச் சிவப்பேறெய்த வழிகாட்டுவனவாகும்.

தோத்திரங்கள், இலக்கியங்கள் போன்றவை; சாத்திரங்கள், இலக்கணம் போன்றவை இலக்கியங்களிலிருந்தே இலக்கணங்கள் தோன்றுமாறுபோலத் தேவார திருவாசகம் முதலான பன்னிரு தோத்திரங்களினின்றே சிவஞானபோதம் முதலாகிய 'பதினான்கு சாத்திரங்கள் தோன்றின. இஃதறியார், சைவ சித்தாந்த சாத்திரங்களுக்கு முதன்மை நூலாகத் திகழும் சிவஞானபோதம், வடமொழியிலிருந்து பெயர்த்து எழுதப்பெற்ற 'மொழிபெயர்ப்பு நூல்' என்று வாய்கூசாது பேசிவருவர். மேலும், எவ்வுயர்ந்த சிந்தனைகளும்

வடமொழியாளர்க்கே வாய்க்கும் என்றும் தமிழர் அம்மொழியி னின்றே மொழிபெயர்த்து அறிவர் என்றும், தமிழ் நூல்களுக் கெல்லாம் வடமொழி நூல்களே அடிப்படையானவை என்றும் ஊறுபாடு மிக்க மாறுபாட்டுக் கொள்கைகளைச் சொல்லித்திரிந்து வருவர்.

இவற்றையெல்லாம் மறுத்து உண்மையைத் தெளிவுறுத்துமுக மாகவே 'பொய்கண்டார் காணாப் புனிதனாம் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதமானது திருமுறைகளிலிருந்து தோன்றிய தென்பதை நிலைநிறுத்தும்வகையில் 'சிவஞானபோதமும் பன்னிரு திருமுறையும்' என்னும் நூலும் 'திருமுறைத் தெளிவே சிவஞான போதம்' என்னும் நூலும், இன்னும் இவைபோலும் நூல்களும் கட்டுரைகளும் தோன்றலாயின.

இருபெருஞ் சைவத்திற்கு ஒருபெரும் சமய சந்தான குரவர் சிவப்பிரகாசர்:

தேவார திருவாசக தோத்திரங்களைச் சமய குரவர் நால்வரும் சிவஞானபோதம் முதலான சாத்திரங்களைச் சந்தான குரவர் நால்வரும் அருளியுள்ளனர். இவர்களெல்லோரும் சிவப்பிர காசருக்குப் பன்னூறாண்டு முற்பட்டவர்கள்.

சிவப்பிரகாசர் தோத்திர சாத்திர நூல்களை அருளிய வகையில் சமய குரவராகவும், சந்தான குரவராகவும், சைவத்திற்கும் வீரசைவ நெறிக்கும் விளங்குகின்றார் என்னும் உண்மையை எண்ணும்போது அவர்தம் தோற்றச்சிறப்பும் ஞான நூல்களை அருளிய தொண்டின் உறைப்பும் அருமை பெருமை தெரிந்த அனைவராலும் வியந்து வணங்கத் தக்கனவாக உள்ளன.

படைப்புகளின் சிறப்புகள்:-

உணர்வினில் வல்லோராகிய இவ்வனுபூதிச் செல்வர், காலங் கடந்தும் ஞாலத்தில் விளங்கிநன்னெறிப்படுத்தும் ஒப்பிலா இலக் கியங்கள் முப்பத்து நான்கினைப் படைத்துள்ளனர். இவை காப்பியம், சிற்றிலக்கியம், நீதி இலக்கியம், தருக்க நூல், சமய இலக்கியம், தத்துவ நிலையில் சைவ சித்தாந்தம், வீரசைவ சித்தாந்தம், வேதாந்தம் முதலியனவாகப் பல பகுதிகளில் அமைந்துள்ளன.

இவையாவும் இலக்கிய, சமய, தத்துவங்களின் ஞானக்கருவூலங்க -ளாகும் இவற்றுள் தலவெண்பா, கொச்சகக்கலிப்பா, திருவெங்கை யலங்காரம் என்னும் மூன்று நூல்கள் இதுவரை கிடைத்தில. ஏசுமத நிராகரணம் என்னும் கிருத்தவ சமய மறுப்பு நூலின் ஓலைச்சுவடி இலண்டன் பொருட்காட்சியகத்தில் இருப்பதாகவும், அந்நூல் தமிழகத்திற்கு கொண்டு வருவதற்காக முயற்சி நடைபெறுவதாகவும் அறியப்பெறுகிறது.

திருவெங்கை உலாவில் அத்தலத்துக் கோயில் திருக்குட முழுக்கு பற்றிய பாடல் குறிப்பு (கண்ணி 65-68), பிரபுலிங்கலீலை பாடிமுடிக்கப்பெற்ற காலம்பற்றிய பாடல்(பிரபுலிங்க-மான்மிய-23) மயிலம் - பொம்மபுர ஆதீன மூன்றாம்பட்டத்துச் சுவாமிகளின் அருளாட்சிக்காலம் பற்றிய குறிப்புகள் ஆகியன கொண்டு சிவப்பிர காசர் காலம் கி.பி. 1603 - 1654 என்று அறிஞர்கள் வரையறை செய்கின்றனர்.

அருள்ஞான குரவராகிய செந்தமிழ்ச் சிவப்பிரகாசர் புரட்டாசித் திங்கள் முழுமதிநாளில் இட்டலிங்க பரசிவத்தில் இரண்டறக் கலந்தருளினார்.

மயிலம் - பொம்மபுர ஆதீனத்தின் அரும் பெரும் பணி:

'சைவமும்தமிழும் தழைத்தினிதோங்குக' என்னும் தனிப்பெருங் குறிக்கோளுடன், தமிழுக்குக் கோயில் என்னும் தண்டமிழ்க் கல்லூரி யைத் தோற்றுவித்து, எண்திசையும் புகழ்பரப்பி நூற்றாண்டுவிழாக் காணும் இவ்வாதீனத்துப் பதினெட்டாம் பட்டம் - குருமகா சந்நிதானம் அவர்கள் சிவப்பிரகாசரின் நூல்கள் முப்பதையும் ஒரே நூலாக அச்சிட்டுச் 'சிவப்பிரகாசர் செந்தமிழ் நூல்கள்' என்னும் பெயரில் தந்தருளிய தொண்டுக்கு நிகரானது, தரணியில் பிறிதும் உண்டோ?

முன்னோர் வாழ்ந்துகாட்டிய திருவருள்நெறியைத் தம் வாழ்வியல்நெறியாகக் கொண்டு, தற்பொழுது அருளாட்சிபுரிந்து வரும் பத்தொன்பதாம் பட்டத்துக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆண்டுதோறும் ஒவ்வொரு நூலினை உரையுடன் வெளியிட்டு ஞானக்கொடையைச் செய்துவருகின்றார்கள். சமயநெறிப்பட்ட,

திருமுறைச் சமுதாயம் மலரவேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் அதற்கு அடிப்படையாக, இல்லங்கள்தோறும் சைவத்திருமுறை களின் நலம் பெருகவேண்டும் என்னும் உயர்பெருங் குறிக் கோளுடன் 'பன்னிரு திருமுறை வழிபாட்டு மன்றத்தை' நிறுவி அன்பர்கள் திருமுறைப் பயனைத் துய்த்துத்துலங்க வழிவகை செய்துவருகின்றார்கள். கன்னட மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பெற்ற பசவரின் சிந்தனைகளைப் 'பசவரின் பொன் மொழிகள்' என்னும் பெயரில் சிலசில பகுதிகளாக அச்சிட்டு ஆண்டுதோறும் வீரசைவர்மாநாட்டு விழாக்களில் வெளியிட்டுப் பேரருள்புரிகின்றார்கள்.

ஆதீனத்து அருட்சீடர் சிவப்பிரகாசரின் பெயரைத் தம் இயற் பெயராகக் கொண்டவர்கள். அவருக்கு ஞானாசிரியராகத் திகழ்ந்த சிவஞான பாலய சுவாமிகள் என்னும் பெயரை, அருட்கோல் ஓச்சும் தம் தீக்கைப் பெயராகக் கொண்டவர்கள், ஆதீனத்து ஞானியர் வரிசையில் பத்தொன்பதாமவராக இவர்கள் இடம் பெறுவதால் அவ்வெண் ஒன்றையும் ஒன்பதையும் கூட்டினால் வரும் பத்து என்ற எண்ணில் முதன்மையான ஒன்றினை நினைவு படுத்தும் போது, ஆதீனத்து முதற்குரவராக எண்ணத்தக்கவர்கள்.

எனவே ஆதீனத்து முதற்குரவரும், அருட்சீடராகிய சிவப்பிர காசரும், அவர்க்கு ஞானாசிரியராகிய சிவஞான பாலய சுவாமி களும் ஆகிய மூவரும், ஓருருவம் தாங்கி வந்தது போலவும், தாணுமாலயப் பெருமானைப் போலவும் அன்பர்களின் சிந்தனைக் குத் தேனூற்றாய்த் திகழும் இவர்கள் ஆற்றிவரும் ஆன்மிக அருந் தமிழ்ப்பணிகள் பெரிதும் போற்றிப் பயன்கொள்ளத்தக்கன.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுகொண்டு, தம் அருட்பார்வையில் பொருந்துவோர்களைப் புரந்துவருபவர்கள்.

முன்னோர் காலந்தொட்டு வழிவழியாக வரும் ஞானத்தொடர்பு கொண்ட பேரூர் ஆதீனத்துக் குருமகா சந்நிதானம் தவத்திரு. சாந்தலிங்க அடிகளார் மற்றும் அறிஞர் பெருமக்கள் ஆகியோரின் பெருவிருப்பத்திற்கிணங்கச் 'சிவப்பிரகாசர் செந்தமிழ் உயராய்வு மையம்' என்னும் ஒன்றினை நிறுவித் தம் கல்லூரியில் தமிழ்ப்

புலமை பெறும் மாணவர்கள் சிவப்பிரகாசர் நூல்களிலும் புலமை பெற வழிவகை செய்திருக்கிறார்கள்.

பயிலும் மாணவர்களின் ஊக்கத்தை ஆக்கப்படுத்தும் வகையில், அன்பர்கள்வாயிலாக உருபாய் ஐயாயிரத்துக்கான (உரூ. 5000/-) பரிசில் ஒன்றை நிறுவி, முதன் முதலாக இவ்வாண்டில் அப்பரிசைப் பெறும் தகுதிமிக்க மாணவர் ஒருவருக்குமட்டுமல்லாமல், பங்கு கொண்டோர் அனைவருக்கும் ஊக்கப் பரிசுகள் தந்தருளிச் சிறப்பினைச் செய்கின்றார்கள்.

முதலாண்டு நூலாய்வுப் போட்டிக்காகத் தெரிந்தெடுக்கப்பெற்ற சோணசைல மாலை, நால்வர் நான்மணிமாலை, நன்னெறி என்னும் முந்நூல்களையும் தனியொரு நூலாக அச்சிட்டு மாணவர் முதலாகப் பல்லோர்க்கும் வழங்கிப் புலமைக்கு வழிவகுத்துள்ளார்கள்.

இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசையாக ஞானநூல் தனை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என்னும்இவற்றைத் தம்வாழ்வியலாலும் வாக்கியலாலும் வெளிப்படுத்திவரும் இவர்கள், முதலாண்டுப் போட்டிக்கான பாடநூல்களைப் பயிற்றிய ஆசிரியப் பெருமக்களின் நூல்நுட்பச் சிந்தனைகளைக் கட்டுரைகளாகத் தொகுத்து அச்சிட்டு வெளியீடும் செய்தருளுகின்றார்கள்.

இவ்வகையில் வீரசைவ அருட்பெருஞ் சான்றோர்கள் ஐவகை ஒழுக்கம் (பஞ்சாசாரம்) எண்வகைக் காப்பு (அஷ்டாவரணம்) அறு வகைத் தொடர்பு (ஷட்ஸ்தல யோகம்) என்னும் மூவகை நெறியில் முறை பிறழாமல் ஒழுகித்தம் தனிப்பட்ட உயர்வுக்கு மட்டுமல்லாமல் சமுதாயத் தூய்மைக்கும், நலத்துக்கும் ஆக்கம் செய்ய வல்லவர்கள் என்னும் சான்றோர் மொழிக்கு இலக்கணமாகத் திகழ்பவர்கள்.

இனி, நால்வர்நான்மணிமாலையைப் பற்றியும் அந்நூலில் துதிக்கப்பெறும் சமய குரவர் நால்வருள், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் பற்றிய பாடல்களுள் அமைந்துள்ள செய்திகளைப் பற்றியும்அடுத்தடுத்துள்ள இயல்களில் ஆய்வுசெய்யப்பெறுகின்றன.

அடிக்குறிப்புகள்

1. புதிய நோக்கில் தமிழிலக்கிய வரலாறு, டாக்டர்.தமிழண்ணல், பக்.22-25, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1992.
2. தமிழிலக்கியங்களைப் பாதுகாத்தல் (கட்டுரை), தமிழ்க் கல்வி இயக்கக் கட்டுரைகள் (நூல்),டாக்டர். ச.வே.சுப்பிரமணியன், பக். 236, உலகத் தமிழ்க்கல்வி இயக்கம், சென்னை, 1985.
3. ‘எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது, தான் அமர்ந்து வருஉம் மேவற்றாதலின்’ (தொல்-பொருள்-26)
4. திருநாவுக்கரசர்-பொது-மறுமாற்றத் திருத்தாண்டகம்
5. ENCYCLOPADIA-VOL- 19- P. 103.
6. CHAMBERS-P.788.
7. சமயம், சபாபதி நாவலர், ப.12,தமிழ்வளர்ச்சிக்கழகம், 1939.
8. புதிய நோக்கில் தமிழிலக்கியவரலாறு, டாக்டர்.தமிழண்ணல், ப.288, மீனாட்சி புத்தகநிலையம், மதுரை, 1992.
9. சிவப்பிரகாசர் (கட்டுரை), திருவேகம்பம் கும்பாபிடேக மலர், டாக்டர். சு.திருநாவுக்கரசு, ப. 91, 92, காஞ்சி சிவனடியார் திருக்கூட்டம், 1992.
10. சிவஞானபோதமும் பன்னிருதிருமுறையும் (நூல்), தே. ஆ. ஸ்ரீனிவாசாசாரியார், திருவாவடுதுறை ஆதீனம், 1954.
11. திருமுறைத்தெளிவே சிவஞானபோதம்(நூல்), டாக்டர். வை. இரத்தினசபாபதி, டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் மெய்புணர்வு மேல்நிலைக் கல்விநிறுவனம், சென்னைப்பல்கலைக் கழகம், 1979.

இயல் இரண்டு

நால்வர் நான்மணி மாலை

நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

-உமாபதி சிவாசாரியார்.

நூல் - பெயர்க்குறிப்பு :

முத்து,பவழம், மரகதம், மாணிக்கம் ஆகிய நான்கு மணிகளை ஒன்றன்பின்ஒன்றாக அமையுமாறு முறையே தொடுக்கப்பெறும் நான்மணிமாலை போலத் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமய குரவர் நால்வரையும் போற்றித் துதிக்கும்முறையில் வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், அகவல் என்னும் பாக்கள்,பாவினங்களால் அந்தாதி யாப்பில் நாற்பது பாடல்களால் பாடப்பெற்ற நூல் நால்வர் நான்மணிமாலையாகும். நான்கு மணிகளால் தொடுக்கப் பெற்ற மணிமாலைபோல இந்நூல் அமைதலால் இஃது உவமவாகு பெயராகும்; மேலும் இந்நூல் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும்.

நூற்சிறப்பு :

'இப்பிரபந்தம்,இவ்வாசிரியர்களின் அற்புதங்களுட் பலவற்றை எடுத்துக்கொண்ட செய்யுட்கு இணங்கும் அளவு, சுருங்கச்சொல்லல் முதலிய அழகு நிரம்பத் தொகுத்து விதத்தலால், சுருங்கியதோர் தோற்றம் உடைத்தாய் விளங்கினும், உரைசெய்வான் புகும் நுண்ணறிவாளர்க்கெல்லாம் பொருளகலங் காட்டி அணிபெற விரிந்துநிற்றல்பற்றித் திராவிடமாபாடிய கர்த்தரென வியக்கத்தக்க பெரியாரும் இதயத்தமைத்துப் பேணிய தெய்வீகமுடையது.'1

சிவபெருமானின்முக்கட்சுடர்போன்று திகழ்வன பெரியபுராணம் திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் ஆகியனவாகும். வலக்கண்ணெனத் திகழும் பெரியபுராணத்துள் விரிவாகப் போற்றித் துதிக்கப் பெறுகின்ற தேவாரமூவர், திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் ஆகியோரின்வாழ்க்கைவரலாறுகள், அவர்கள்அருளியதிருமுறைகள்,

நிகழ்த்திய அற்புதங்கள் ஆகியவற்றைத் திறனாய்வு அடிப்படையில் போற்றித் துதிக்கும் அருள்நூல் இது.

இந்நூலின்கண் திருமுறைகளின் மாட்சி, சாத்திரக் கருத்துகள், வேதம், திருக்குறள் முதலியவை பற்றிய கருத்துகள் விளக்கமுறுகின்றன. இந்நூல்சொல்நோக்கு, பொருள்நோக்கு, தொடைநோக்கு, நடைநோக்கு ஆகியவற்றால் சிறந்து விளங்குவது. சமயப்பேரன்பர்களாலும் இலக்கிய ஆர்வலர்களாலும், வாசித்தும் நேசித்தும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போற்றிவரப் பெறுவதாகும்.

தோத்திர நூலாகத் தமிழில் அடியார்களைப் பாடக்காரணம்:

உணவுப்பொருளை உருவாக்கியும், தானேஉணவாகஅமைந்தும் உதவுகின்ற நீரினைப் போலவும், இறைதிருமேனியைக் காட்டியும், தானே இறையாக வழிபடப்பெறும் நிலையிலும் அமைகின்ற ஒளியூட்டும் திருவிளக்கினைப் போலவும் தோத்திர சாத்திரங்கள் இறைவனை உணர்த்துவன ; இறை வடிவமாகப் போற்றவும் பெறுவன. மூவாத பேரன்பால் தேவாரம் இசைத்த மூவருள் ஒருவராம் ஒப்பிலா அப்பர்பெருமான் அருளிய 'தோத்திரமும்சாத்திரமும் ஆனார் தாமே' என்று இறைவனைத் துதிக்கும் தொடர் இவ்வுண்மையை உணர்த்தும். தெய்வப் பாடல்களில் திருவருள் பதிந்துள்ளது என்பதனைத்,

'தாவடி யோட்டும் மயிலிலும் தேவர் தலையிலும்என்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோ!'

என்னும் கந்தரலங்காரப்பாடலும் உணர்த்துகின்றது. சிவப்பிரகாசர் திருவெங்கைக் கலம்பகப் பாடலில், திருக்குறட்பாவின் அடிகளை உமையொருபாகனின் திருவடியாகவே எண்ணித் துதிக்கின்றார்.

'என்னடிகள் வெண்குறள்நேர் அடியி ரண்டும்
என்தலையில் இருத்தும்இறை'

என்பது அவர் வாக்கு.

இத்தகைய தெய்வத் தமிழ்ப் பாடல்களையே, இறைவன் தனக்குச் செய்யும் அருச்சனையாக ஏற்று மகிழ்கிறான்.

'நமக்கும் அன்பிற், பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும், ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார், தூமறை பாடும் வாயார்'

(பெரிய, திருமலை-தடுத்தாட்-70)

என்னும் சேக்கிழார் வாக்கு சிந்தனைக்குரியதாகு .

சிவப்பிரகாசரும், இறைவன் சுந்தரர்பாட்டில் மிக விருப்பினன் என்பதனைப் 'படியிலா நின்பாட்டில் ஆரூர! நனிவிருப்பன் பரமன்' (பாடல்-3)என நால்வர்நான்மணிமாலையுள் தக்க காரணங்களுடன் விளக்குந்திறம் அறிந்து போற்றத்தக்கதாகும்.

இவ்வாறு, இறைவனை இருந்தமிழால் ஏத்தி இறைஞ்சுதல் ஒன்றே இறையருள்பெறுவதற்கு எளியவழியாகும். இதனை ஓர்ந்து உணர்ந்து அருணகிரிநாதர் உரைப்பது காண்க:

'பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே.
(பத்தியால்-பொது)

இத்தகைய தோத்திரங்களும் தமிழால் அமையவேண்டும் என்பது ஆன்றோர் விருப்பமாகும்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே!'

என்று திருமூலரும்,

அம்புவி தனக்குள்வளர் செந்தமிழ் வழுத்தியுனை
அன்பொடு துதிக்கமனம் அருள்வாயே!' (ஐங்கரனை)

என்று அருணகிரிநாதரும்,

'விரைவிடை இவரும் நினைப்பிற வாமை
வேண்டுநர் வேண்டுக; மதுரம்
பெருகுறு தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்' (சோண-39)

என்று சிவப்பிரகாசரும் கனத்த செந்தமிழால் இறைவனைப் போற்றியுள்ளனர்.

பாடும் பிறவியை நாடிய துறவி:

இறைவன்பால் பிறவாமையை வேண்டுவர் அடியார்கள். ஆனால் சிவப்பிரகாசரோ,இறைவனின்பொருள்சேர்புகழைத் தமிழ்ச் சொல்மலரால் துதிக்கும் பிறவியையே வேண்டுகின்றார். பாடும் நெறியில் அவர்கொண்ட ஈடுபாடும், பாட்டின்வாயிலாக இறையருளின்பம் எய்திட இயலும் என்றெண்ணிய தேற்றமும் இதனால் தெரியவருகின்றது.

சிவப்பிரகாசரைத் துதிக்கும் பாடலொன்று, 'இன் தமிழ்ப் பாமாலை சினவிடையவர்க்கே சாத்தும் சிவப்பிரகாசதேவன்' என்று அவர்தம்மைப் புகழ்கின்றது.

உலகெங்கும் மேவிய தேவாலயங்கள்தோறும் எழுந்தருளிப் பேரருள்புரிபவன் முருகனே என்று பாடிய அருணகிரிநாதரைப் போலச் சிவப்பிரகாசர் தம் குருநாதர்மீது ஐந்து நூல்கள் பாடியதும் சைவ சமய குரவர் நால்வரைப் பாடியதும் எவ்வுண்மையை உணர்த்துகின்றனவென்றால், குருநாதர், முருகவேள், அடியார்கள் ஆகிய முத்திறத்தினரையும் அவர் சிவமாகக்கொண்டு தெளிந்தமை யையேயாகும்.

சிவபெருமானே சிவஞானியாகிய தம் குருநாதர் என்னும் உணர்வு சிவப்பிரகாசருக்கு இருந்ததுபோலவே அவர்க்கு முன்னர் வாழ்ந்த அருணகிரிநாதரும் எண்ணியிருந்தார். அதனால்தான், அவர் மயிலம் முருகப்பெருமானைத் தரிசித்துப் பாடிய ஒப்பற்ற ஒரு திருப்புகழில், முருகன்பால் உபதேசம் பெற்ற அடியாராகிய சிவஞானி முருகனை வணங்குவதைக் கண்டு சிவபெருமான் வந்து வணங்குவதாகவே எண்ணி,

'மதிமிஞ்சு போதக! வேலா! ஆளா
மகிழ்சம்பு வேதொழு பாதா! நாதா!
மயிலந்தண் மாமலை வாழ்வே! வானோர் பெருமாளே!'

(திருப்புகழ்-கொலைகொண்ட)

என்று துதித்துள்ளார். இப்பகுதியில், 'ஆளா மகிழ்சம்புவே தொழு பாதா' என்பது மேற்காணும் கருத்தை உணர்த்துவதாகும்.

அடியார் வணக்கம் சிவ வணக்கமே:

அடியார்தம் சிவவேடப் பொலிவு சிவனின் திருவுருவைக் காட்டுதலால். அவர்களைச் சிவமாகவே எண்ணி வணங்கவேண்டும் என்பது சாத்திரக் கருத்து.

'மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.'

(சிவஞானபோதம் - சூத்.12)

'அடியவர் வேறு; ஆண்டவன் வேறு என எண்ணுவது மிகவும் பேதைமை'2 என்று வேதம் கூறுவதாகக் கந்தபுராணம் கழறுகிறது. 'அடியார் நடுவண் இருப்பது, அம்மையப்பருடன் இருப்பதாகும்'3 என்று திருவாசகம் செப்புகிறது.

சிவபெருமான் அடியார்பெருமையைச் சுந்தரரிடத்து மொழிந்து அவர்களைக் குறித்துத் துதிநூல் பாடுமாறு அருள்செய்ததால் தான்,4 திருத்தொண்டத் தொகையும் அதனை அடியொற்றி, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம் ஆகிய அருள்நூல்களும் சைவவுலகிற்குக் கிடைத்தன.

இவ்வாறு அடியாரைத் துதிக்கும் அற்புத நெறியைக் காட்டிய சுந்தரரை வழிபடுவதற்குத் தமக்கு வாய்த்த பிறவியைச் சேக்கிழார் வணங்கி மகிழ்கின்றார்.

'நேசம் நிறைந்த உள்ளத்தால்,
நீலம் நிறைந்த மணிகண்டத்(து)
ஈசன் அடியார் பெருமையினை,
எல்லா உயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்.'

(பெரிய - சண்டீ - 60)

சைவ சமய குரவர் சிறப்பு:

சமயகுரவர் நால்வரும், அவ்ம்பெருக்கும் புல்லறிவின் அமண் முதலாம் பரசமயம், பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படவும், அலகில் கலைத்துறை தழைக்கவும், அருந்தவத்தோர் நெறிவாழவும் உலகில் வரும் இருள் நீக்கும் ஒளிவிளங்கு கதிர்போல் தோன்றித் தீதகன்று உலகம் உய்யத் திருவவதாரம் செய்தவர்கள்.

'சைவசமய மகிமையைப் பற்பல ஏதுக்களான் விளக்கினமையின் சைவ சமய குரவர் எனப் பெயர்பெற்று, தம்மை வழிபடுவார்க்கும் மேற்கூறிய சித்திகளை உளவாக்கிப் பரமுத்தியைப் பாவித்தது மன்றிப் பிற்காலத்தவரும் ஓர்ந்துய்வான், இறைவரை எய்துதற்கு உரிய சாதன வகைகளையும், அச்சாதன நெறிநிற்பார் எய்தும் பயன் வகைகளையும், வகுத்தருளி, இறைவர் திருவுளப்பாங்கின்படி வதிந்த ஆசிரியத் தலைமையுடையவர்களே'5 ஆவர்.

சுந்தரர்க்கு நிகரானவர் சிவப்பிரகாசர் :

சிவனடியார்களைத் துதிக்கும் நூலினை முதன்மையாகப் பாடியவர் சுந்தரர். அவருக்கு நிகராக, சமய குரவர் நால்வர்க்கும் துதிநூல் முதன்முதலில் பாடியவர் சிவப்பிரகாசர்.

சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடியதனை வழிகாட்டுத லாகக் கொண்டு, நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் முறையே அடியார் புகழ் கூறும் வகை, விரிநூல்களை அருளினர்.

அவ்வாறே சிவப்பிரகாசர் நால்வர் நான்மணிமாலை பாடிய தனை அடியொற்றி, சிவஞான முனிவர், வள்ளலார் ஆகியோர் சமய குரவர்களைப்பற்றி, தனிப்பாடல்களாகவும், ஒவ்வொருவர்க்கும் துதிநூல்களாகவும் பாடியுள்ளனர். பின்னர்த் தோன்றிய சமயநூல் ஆசிரியர்கள் தாம் எழுதும் நூலுக்குச் சமய குரவர் வணக்கப் பாடல் பாடும்நெறியும் இதனால் வளர்ந்துள்ளது.

அடியவர்க்குத் துதிநூல் பாடிய சுந்தரரைப் போற்றித் துதிக்கத் தமக்கு வாய்த்த பிறவியைச் சேக்கிழார் வணங்கி மகிழுமாறுபோலச் சுந்தரர்க்கு நிகராக, சமய குரவர் மீது துதிநூல் பாடிய சிவப்பிரகாசரை வாழ்த்த வந்த பிறவியாக ஒவ்வொருவரும் தமது பிறவியைப் போற்றிப் பயன் கொள்ளுதல் அறிஞர் கடனாகும்.

நூலுக்குக் கிடைத்த உரையும், உரையாளரும் :

மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் இரண்டாம் பட்டத்துச் சுவாமிகளை, ஞானாசிரியராகக் கொண்டு, தவவாழ்வு வாழ்ந்த சிவப்பிரகாசர், சைவர்க்குக் கோயில் எனப்பெறும் தில்லைத் திருத் தலத்திலிருந்து பாடிய இவ்வருள் நூலுக்கு, இதே ஆதீனத்தின் பதினான்காம் பட்டத்துச் சுவாமிகளை ஞானாசிரியராகக் கொண்டு, சிவஞான உபதேசம் பெற்றுத் துறவுபூண்டு, சிதம்பரம் ஈசானிய மடத்தில் இருந்துகொண்டு அரும்பெரும் விருத்தியுரை வரைந்தவர் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள். 'அனுபூதி உரை'6 என்னும் ஒன்று இந்நூலுக்கு உண்டு என்பதை இவர்தம் உரையால் அறியலாம்.

அவர்களைப் போலவே புலமைத் திறத்திலும்,உரையெழுதுதல் மற்றும் கற்பித்தல் திறத்திலும் சிறந்து விளங்கும் டாக்டர். வை. இரத்தின சபாபதி அவர்கள், இவ்வாதீனத்தின் 19-ஆவது பட்டத்துக் குருமகா சந்நிதானமாகத் தற்போது அருளாட்சி செய்து வரும் சுவாமிகள்பால் வீரசைவ தீட்சைகள் பெற்றுத் திகழ்கின்றவர்கள். இவர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணி புரிந்த காலை, இந்நூலுக்கு ஆய்வுரை எழுதி வெளியிட்டவர்கள்.

எனவே, நூலைத் தோற்றுவித்தவர்களும், உரை வரைந்தவர்களும், தில்லைத் திருத்தலத்துடனும், ஆதீனத்துடனும் தீட்சை பெற்ற நிலையிலும் தொடர்புள்ளவர்களாக அமைந்திருத்தல் திருவருட் செயலேயாகும்.

அடிக்குறிப்புகள்

1. நால்வர் நான்மணிமாலை விருத்தியுரை, சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள், ப.162, குமரன் செந்தமிழ் நூற் பதிப்புக் கழகம், சிதம்பரம், 1970.
2. கந்தபுராணம்-அசுர காண்டம்-மார்க்கண்டேயப் படலம்-244.
3. திருவாசகம் - கோயில் மூத்த திருப்பதிகம்-1.
4. பெரிய புராணம் - திருமலைச் சருக்கம் - தடுத்தாட்கொண்ட புராணம் - பாடல் 196,197.
5. நால்வர் நான்மணிமாலை விருத்தியுரை, சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள், ப.158, குமரன் செந்தமிழ் நூற் பதிப்புக் கழகம். சிதம்பரம், 1970.
6. முந்துநூல்-உரைச்சிறப்பு, க.வெள்ளைவாரணனார், ப.9.

இயல் மூன்று

சிவப்பிரகாசர் நோக்கில் 'திருஞான சம்பந்தர்'

'பரசமய கோளரியைப் பாலறா வாயனைப்பூம்
பழனம் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத்
தேயம் எல்லாம்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தம்
குலதீ பத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ இளங்களிற்றை
விரும்பி வாழ்வாம்.
- சிவஞான சுவாமிகள்

திருஞான சம்பந்தர்-சில குறிப்புகள்:

பன்னிரு திருமுறையாசிரியர்களுள் முதல்வர் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சீகாழித் திருத்தலத்தே அந்தணர் சிவபாதஇருதயர்க்கும், பகவதியார்க்கும் திருமகனாராக, வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க, திருவாதிரைத் திருநாளில் அவதரித்தவர். மூன்றாண்டகவையில் இறைவியின் ஞானப்பாலை உண்டு சிவஞானம் வாய்க்கப்பெற்று, அம்மையப்பரைத் தலங்கள் தோறும் சென்று தரிசித்து, பண்ணாரும் இன்தமிழால் பாடிப்பரவியவர். திருவருளால் அற்புதங்கள் பலநிகழ்த்தித் தமிழகத்தில் புறச்சமயச் செல்வாக்கினைப் போக்கிச் சைவத்துடன் தமிழைக்காத்து வளர்த்தவர். நால்வகை நெறிகளுள் கிரியை நெறிக்கு விளக்கமாகவும், இறைவன்பால் பக்தி செலுத்திய வகையில் மகன்மை நெறிக்கு (சத்புத்திர மார்க்கம்) விளக்கமாகவும் வாழ்ந்து காட்டியவர். சமய குரவர்களுள் இளம் பருவத்திலேயே இறையருள் பெற்றவர். ஏனையோரைக் காட்டிலும் இளைய பருவத்திலேயே முத்தி எய்தியவர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் பாடிய திருப்பதிகங்கள் 'தேவாரம்' எனப் பொதுவாகச் சொல்லப் பெறினும், அவர்கள் பாடியவற்றை முறையே திருக்கடைக்காப்பு, தேவாரம், திருப்பாட்டு என்னும் திருப்பெயர்களால் குறிப்பர் ஆன்றோர்.

இம்மூவராலும் பாடப்பெற்ற சிவத்தலங்கள் முடிவேந்தர்களை ஒப்பன என்றும், அவ்வாறு பாடல் பெறாதவை சிற்றரசர்களை ஒப்பன என்றும் குறிப்பிட்டு, மூவரின் உயர்வையும் புலப்படுத்துவார் சிவப்பிரகாசர். அப்பாடல் பின்வருமாறு:

'அளக்கிலாத் தமதுரைபூந் தொடைபு னைந்த
அரசுபோன் றல்லனபுன் குறும்பு போலக்
கொளக்குறையாப் பெருஞ்செல்வம் எமக்காம்; ஞானக்
கூத்தனுறு பதிகள்பல பாடியமூ வருமே.
(சிவஞான. பிள்ளை. காப்பு-8)

மூவர் பாடிய தேவாரமும், இசைப்பாடல்களாக அமைந்துள்ளன வாதலால். அவற்றைப் பாடிய மூவரையும் 'இசைப்புலவர்' என்று பிறிதொரு பாடலில் குறிப்பிடுகின்றார்.

'அருவாய் உருவாய் அவையன்றி
அறிவாய் நிற்கும் அவிர்சடிலத்(து)
அன்னல் பெருஞ்சீர் இசைப்புலவர்
அறைதல் பட்டாங் காதல்போல்
(சிவஞான. பிள்ளை. தால்-2)

தேவாரம் - திருக்கடைக் காப்பு:

இவரருளிய பாடல்கள் 16000 என்பர். தற்போது உள்ளவை 4158 பாடல்களைக் கொண்ட 384 பதிகங்களே. இவை முதல் மூன்று திருமுறைகளாக உள்ளன.

இப்பதிகங்கள் ஒவ்வொன்றும் 11 பாடல்களை உடையன. சில பதிகங்கள் 12 பாடல்கள் கொண்டவை. முதல் ஏழு பாடல்கள் பெரும்பாலும் சிவபிரானின் திருவுருவநலன், அருள் ஆற்றல்,

வருணனை அமையவும், எட்டாவது பாடல் இராவணனை அடக்கியாண்டமை அமையவும், ஒன்பதாவது பாடல் அடிமுடி தேடிய வரலாற்றை அடிப்படையாகக் கொண்டும், பத்தாவது பாடல் புறச்சமயத்தோர் வாழ்வும் வாக்கும் பொருத்தமற்றவை என்று அறிவுறுத்தும் வகையிலும் நெறியமைத்துப் பாடப்பெற்றுள்ளன.

பதிகத்தைப் படிப்பதால் வரும் பயனை, ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும் அமைந்த பதினொன்றாவது (அ) பன்னிரண்டாவது பாடல் விளக்காநிற்கும். ஒவ்வொரு பதிகமும் 'பனுவல்' என்றும், பதிகத்திலுள்ள ஒவ்வொரு பாட்டும் 'பனுவல்' என்றும் இவரால் சுட்டப்படுவதை நோக்க நூல் முழுவதும் படித்தால் பெறத்தக்க பயனை, இவை தருதால் 'திருக்கடைக் காப்பு' என்று இவர்தம் தேவாரம் சிறப்பிக்கப் பெறுகிறது.

தமிழிலக்கியத்துக்குத் கொடையாக, மூலமான மொழிமாற்று மாலை மாற்று. சக்கர மாற்று, வழிமொழி, மடக்கு, இயமகம் முதலிய நூல்களை மிறைக்கவியாகவும், சித்திர கவியாகவும தந்தருளிய சீர்சால் வள்ளல் அவர்.

திருஞானசம்பந்தர் சிறப்புகள்:

திருத்தொண்டத்தொகையில் 'எம்பிரான்' என்று சுந்தரரால் போற்றப்பெறுகின்ற இவர்மீது நம்பியாண்டார்நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் அந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்-கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்னும் ஆறு தோத்திர நூல்களைப் பாடியுள்ளார்.

சேக்கிழார் தாம் அருளிய 4286 பாடல்கள் கொண்ட பெரியபுராணத்துள், இவர்தம் வரலாற்றை 1256 பாடல்களால் பாடியுள்ளதால் அப்புராணத்துக்கே 'பிள்ளை பாதி; புராணம் பாதி' என்னும் பெயர் விளங்குகின்றது.

ஒட்டக்கூத்தர், அருணகிரிநாதர், வள்ளலார் ஆகியோர் இவரை 'முருகன் அவதாரமே' என்று எண்ணிப் போற்றியுள்ளனர். வள்ளலார் தம் குருவாகவே இவரைப் போற்றி உருகுகின்றார். இவ்வாறு சிவப்பிரகாசர் காலத்துக்கு முன்னும் பின்னும் அருளாளர்

களால் புகழப்பெற்றுள்ள ஞானசம்பந்தரின் வாழ்க்கைச் சிறப்புகள், திருமுறைப்பெருமை, அற்புதங்கள் முதலானவற்றைக் குறைவிலா வகையில் நிறைவாகவும், கோதிலா நெறியில் அமுதாகவும் வெளிப்படுத்துகின்ற சிவப்பிரகாசரின் செந்தமிழைச் சிந்திப்பது தக்கதாகும்.

முத்துபோலும் வெண்பா யாப்பில் ஞானசம்பந்தர் புகழ்:-

நால்வர் நான்மணிமாலையுள் ஞானசம்பந்தரைப்பற்றி வெண்பா யாப்பில் பாடப்பெற்றமைக்கான காரணத்தை நுண்மான் நுழைபுலமிக்க உரைப்பகுதி உணர்த்துகின்றது. ''வெண்பா உத்தம இலக்கணம் உடையது; வெண்சீரே வருதல் வேண்டும்; செப்பலோசையே அமைய வேண்டும் சைவ சமய உண்மையை நிலை நாட்ட முற்படுவதே திருஞானசம்பந்தர் தேவாரம். ஒரு பொருள் இருக்கின்றது என்பதை நிலைநாட்டவும் அதன் இலக்கணத்தை வரையறுக்கவும் முற்படுவது, முதற்காரியமாகக் கருதப்பெறும் உண்மையையும் இலக்கணத்தையும் செப்புதல் என்ற அடிப்படையில் சைவ சமயத்தை நிலைநாட்டப் புகுந்த திருஞான சம்பந்தரை வெண்பாவால் செப்பலோசையால் பாடிப்பரவினர்'' 1

''முத்து எனப்பெறுவது கறையில்லாத மழைநீர். ஆவணிச் சுவாதியில் சிப்பியின் வயிற்றிற் புகுந்து, கட்டித்தன்மையாக ஆன ஒருபொருள். கறையற்ற தெய்வநலம் ஒன்றே மனிதக்குழந்தையாகி தெய்வ அமுதமே உண்டு, தெய்வ இலக்கணத்தையே பேசியதாகலின், முத்து ஞானசம்பந்தப் பெருமானுக்கு இணைப் புடையதாயிற்று. இறைவன் ஞானசம்பந்தப் பெருமானுக்கு முத்துச் சிவிகையும், முத்துப் பந்தரும் அளித்தமையை ஈண்டு நோக்கி உணர்க.'' 2

இந்நூலின்கண் 1, 5, 9, 13, 17, 21, 25, 29, 33, 37 ஆகிய எண்களைக் கொண்ட வெண்பாக்கள் ஞானசம்பந்தர்க்குரியன.

திருஞானசம்பந்தரின் திருவடியே வீடு:

ஞானசம்பந்தர், தாம் உண்ட, ஞானப்பாலினை, உலக நலன் சேர்க்கும் திருமுறைகள் என்னும் செவியமுதமாக வழங்கியவர்.

இறையருட் பேற்றுக்கு உதவும், இவ்வமுதப் பாக்களை அருளிய தால் 'இவர் திருவடியே வீடு' என்று முதற் பாடல் மொழிகின்றது.

திருவடி - விளக்கம் :

இறைநினைவூட்டும் நூல்களால் பெறும் அறிவினை 'அபர ஞானம்' என்றும், இறையருள் அனுபவத்தால் பெறும் அறிவினைப் 'பரஞானம்' என்றும் நூல்கள் நுவல்கின்றன. அறிவால் அறிந்து இறைவன் இருதாள் இறைஞ்ச உதவும் இவ்வறிவு இரண்டினையும் 'உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்' என்னும் சேக்கிழார் வாக்கு செவ்விதின் உணர்த்தும்.

'யான்' என்னும் அகப்பற்றும், 'எனது' என்னும் புறப்பற்றும் நீங்கியவர்க்கே, இறைவன் திருவடியாகிய பேரின்பம் கிட்டும் என்பதனை,

'யான்என(து) என்னும் செருக்கறுப்பான் வானோர்க்(கு)
உயர்ந்த உலகம் புகும்.' (திருக்குறள்-346)

என்று பொதுமறை புகல்கின்றது.

'யான்என(து)என்(று) அற்ற இடமே திருவடியா' (கந்தர்கலி-34) என்பார் குமரகுருபரர்.

'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்பது ஆழ்வாரின் அமுதமொழி.

எருவானது தன் இயல்பிலிருந்து கெட்டுப் பயிருக்கு உரமாதல் போல, ஆணவத்தின் ஆற்றல் கெடுதலே பேரின்பம் துய்க்கும் வழியாகும்.

உயிரானது தனது நிலையற்ற, அறிவற்ற, இன்பமற்ற அளவுக்குட்பட்ட நால்வகைக் குறைகளையும் உணர்தலும், இறைவன் அளவிறந்தவன், உண்மை, அறிவு, இன்பவடிவினன் என்னும் நிறைத்தன்மையை உணர்தலும் ஞானம் எனப்படும். இத்தகைய மெய்யறிவைத் திருவடி ஞானம், சிவஞானம், குக ஞானம், குருஞானம், மெய்ஞ்ஞானம் முதலிய பெயர்களால் அழைப்பர் ஆன்றோர்.

அருவநிலையினனாகிய இறைவன், ஆன்மாக்களை உய்விப்பதற்காக அந்நிலையினின்றும் இறங்கி, அருவுருவத் திருமேனியினனாகவும், அதனின்றும் பேரருள் காரணமாக உருவத்திருமேனியினனாகவும் காட்சியளித்து ஆட்கொள்கின்றான். அவ்வகையில் ஞானமே வடிவமாகிய அவன்வேறு; அவன் திருவடி வேறு என எண்ணலாகாது. அவனது திருமேனி உறுப்பாகத் திருவடியைச் சொல்லுதல் உபசார வழக்கேயாகும்.

இறைவன் ஊனக்கண்ணால் காணலாகாத உயர்பெரும் பண்புகளையே தன் திருமேனியாகக் கொண்டவன் என்பதைப் பின்வரும் சான்றோர்களின் வாக்குகள் தெள்ளிதின் உணர்த்துகின்றன.

அன்பே திருமேனி :

'அன்பே சிவமாவது' (திருமந்திரம்)

கருணையே திருமேனி :

நம்முடைய 'கருமேனி கழிக்க வந்த கருணைத் திருமேனி'
(சிவஞான சித்தியார்)

அறிவே இறைவன், அறிவே திருமேனி :

1. 'அறிவு வடிவென் றறியாத என்னை
அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி' (திருமந்.2357)
2. 'அறிவறி யாமை இரண்டும் அகற்றிச்
செறிவறி வாய்எங்கும் நின்ற சிவனை' (திருமந்.2580)
3. 'திருவான்மி யூருறையும்
அறிவே! உன்னையல்லால் அடையாதென் ஆதரவே.'
(திருஞான.3-55:9)
4. 'அறிவே! உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே!'
(சுந்தரர், 7-திருமழபாடி-9)
5. 'அறிவே! உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே!'
(சுந்தரர், 7-திருக்காளத்தி-4)
6 'அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!
(திருவாசகம், சிவபுராணம்-40)
7. 'அற்ப சுக(ம்)மறந்தே அறிவைஅறி வாலறிந்து
கெற்பத்தில் வீழ்ந்துகொண்ட கேடறுப்ப தெக்காலம்?'
(பத்திரகிரியார், எக்காலக்கண்ணி-25)

8. ‘அகலிய புராண மும்ப்ர பஞ்ச
சகலகலை நூல்க ளும்ப ரந்த
அருமறைய நேக மும்கு விந்தும் அறியாத
அறிவும்அறி யாமை யும்க டந்த
அறிவுதிரு மேனி யென்று ணர்ந்துன்
அருணசர ணார விந்த மென்று அடைவேனோ?’
(திருப்புகழ்-குகையில்)

9. ‘அறிவை அறிவதுவே ஆகும் பொருளென்(று)
உறுதிசொன்ன உண்மையினை ஓரும்நாள் எந்நாளோ?’
(தாயுமானவர்-எந்நாட்கண்ணி-அறிஞுரை-14)

மந்திரமே திருமேனி :

‘வேத மந்த்ர ஸ்வரூபா நமோநம’ (திருப்புகழ்-நாதவிந்து)

அருவநிலைப் பொருளாக மேற்கண்ட சான்றுகளால் விளக்கப் பெறுகின்ற இறைவனை உருவநோக்கில் எடுத்துரைத்துப் போற்று கின்ற மரபும் உண்டு. ‘நின்னிற் சிறந்தவை நின்தாள் இணை யவை’ (பாடல் 4:62) என்னும் பரிபாடல்தொடர்க்கு. ‘வீடளிக்குங் கால் நின்னினும் சிறந்த நின்தாள் இணையை உடையை’ என்னும் உரை காணப்பெறுகின்றது.

ஞானசம்பந்தர் சிவபெருமானைத் ‘திருவடி’ என்றே போற்று வதும் எண்ணத்தக்கதாகும்.

‘செங்காட்டங் குடிமேய
திருவடிதன் திருவருளே பெறலாமோ திறத்தவர்க்கே’ (3-63:7)
என்பது அவர்தம் வாக்கு.

திருவடியின் சிறப்பினைத் திருவள்ளுவர் அருளிய கடவுள் வாழ்த்துப்பாடல்களால் அறியலாம். மாணிக்கவாசகரின் சிவபுராண மும், அப்பர்பெருமானின் திருவடித்தாண்டகமும், அருணகிரிநாத ரின் சீர்பாத வகுப்பும், வள்ளற்பெருமானின் திருவடிப்புகழ்ச்சியும் திருவடி வழங்கும் பேரின்பத்தைத் தெளிவுறுத்துகின்றன.

எனவே, தம் ஆன்ம ஈடேற்றத்துக்காக இறைவன் அம்மை வாயிலாகத் தமக்குத் தந்த ஞானப்பாலினைச் சமுதாய ஈடேற்றத்

துக்கு உதவும்வகையில் திருமுறைகளாக வழங்கிய ஞானசம்பந்தரின் திருவடியே வீடு என்று, இறைவனினின்றும் அடியார் வேறல்லர் என்னும் திருவருள்நெறிக்கேற்பப் பாடியுள்ள திறம் நினைந்து நினைந்து நெகிழத்தக்கதாகும்.

பதிகப் பெருவழி காட்டிய பாவலர்:

ஞானசம்பந்தர் காலத்துக்கு முன்னே திருமூலர், காரைக்காலம்மையார் முதலானோர் பாடல்கள் பாடியிருப்பினும், தமிழ்ச்சமுதாயம் புறச்சமய இருளில் மூழ்கித் தவித்த காலத்துப் பண்ணார்ந்த பைந்தமிழால் வழிபடும்நெறியை அமைத்துப் பதிகம் பாடிப்பணியும் திருநெறியாகிய பதிகப் பெருவழியைக் காட்டிய முதற்பாவலர் இவரே; அந்நெறியால் சைவப்பேரொளியை யாண்டும், எப்போதும் விளக்கமுறச் செய்தவர் இவரே; இவ்வுண்மையை நம்பியாண்டார் நம்பிகளின் வாக்குகள் நமக்குப் புலப்படுத்துகின்றன:

'பதிகப் பெருவழி காட்டப் பருப்பதக் கோன்பயந்த
மதியத் திருநுதல் பங்கன் அருள்பெற வைத்தஎங்கள்
நிதி' (பதினோராம் திருமுறை - ஆளு-பிள்-அந்தாதி-2)

'ஆற தேறும் சடையான் அருள்மேவ அவனியர்க்கு
வீற தேறும் தமிழால் வழிகண்டவன்'
(பதினோ-ஆளு.பிள்-சண்பைவிருத்தம்-5)

இதுவரை சிந்தித்தவற்றின் பயனாக, ஏதுக்களாலும், எடுத்த மொழியாலும், சாதனைகளாக நிகழ்த்திய அற்புதங்களாலும் உலக உயிர்கள் இறைவனை உணருமாறு செய்த / செய்கின்ற ஞானசம்பந்தரின் திருவடியே வீடுபேறு என்பது தெளிவாகின்றது.

ஞானப்பாலினை ஊட்டிய அன்னையும், அச்சிறப்பைக் கேட்ட அன்னையும்:

முன்னைத்தவத்தின் பயன்வந்து மூண்டதால், சீகாழித்தலத்துப் பிரமதீர்த்தக் குளக்கரையில் தோணியப்பரைப் பார்த்து 'அம்மையே! அப்பா!' என்று அழுது, ஞானப் பாலை உண்டதால் ஒப்பற்ற திருமுறைச் செல்வம் உலகுக்குக் கிடைத்தது. மன்னுயிர்க்குலங்கள் ஏங்கி அழவேண்டாமல், பேரின்பத்தில் திளைப்பதற்காக இவர்

அழுதார் என்றே கருதவேண்டியுள்ளது. இவ்வருட் செயல், இளங் குழந்தை உற்ற பிணிக்கு ஈன்ற தாய் மருந்துண்ணுதலை ஒக்கும்.

'பாலுண் குழந்தை பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு'3

'இளங்குழவிப் பிணிக்கு ஈன்ற தாய் மருந்து நுகர்வது போல'4 முதலான அருட்டொடர்களால், ஞானசம்பந்தர் அழுகையின் தியாகத்தை அறியலாம்.

இவர் அழுத நிலையைப் படிப்போர். கேட்போர். சிந்திப்போர் ஆகியோரின் ஊன் உருகுமாறு,உளம் உருகுமாறு சேக்கிழார் பாடிய பாடல் கல்லையும் கனிவிக்கும் திறமுடையது.

'கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை யொலிபெருக எவ்வுயிரும் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமி அழுதருளினார்.'
(பெரிய- திருஞான -62)

அருணகிரிநாதரும், இவர்தம் அழுகையால், உலகு பயன்கொண் டதை எண்ணி,

'அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த'
(சமரமுகவேல்-கதிர்காமம்)

என்று பாடிப் பரவுகின்றார்.

ஞானப் பாலுண்டதால் மெய்ந்நெறிப் பயிர் தழைத்ததாகச் சொல்லி, வள்ளலார் ஞானசம்பந்தரை வணங்குகிறார்:

'பயிலுமூ வாண்டில் சிவைதரு ஞானப்
பால்மகிழ்ந்(து) உண்டுமெய்ந் நெறியாம்
பயிர்தழைத் துறவைத் தருளிய ஞான
பந்தனென் றோங்குசற் குருவே!'
(திருவருட்பா-ஆளுடைய பிள்ளை-2)

மேலும், திருப்புகழ்ப் பாடல்களும்5 இவ்வாறே போற்றுகின்றன.

ஞானசம்பந்தர் பாலயில உதவிய பால்கிண்ணத்தையேனும் கழுவி, அந்நீரைத் தமக்கு வார்க்குமாறு அம்மையிடத்து உரைப்பா யாக' என்றும், இன்றேனில் 'சூலையையேனும் தந்து, பாடுமாறு

அருள் செய்வாயாக' என்றும் சிவப்பிரகாசர் உள்ளம் உருகச் சிவபெருமானிடம் வேண்டுவதும் சிந்திக்கத்தக்கதாகும்.

எவ்வாற்றானும் இறைவனின் பொருள்சேர் புகழைத் தமிழால் பாடவேண்டும் என்ற அவர்தம் தணியாத வேட்கையே இவற்றால் புலப்படுகின்றது. அப்பாடல்கள் வருமாறு :

'இழையெனத் தளர்சிற் றிடையுணா முலையாள்
எனக்குவண் . புகலிவேந் தயின்ற
கழுமணிப் பசும்பொற் குலாவுபால் கிண்ணம்
கழுவுநீர் வார்ப்பதற் குரையாய்!' (சோண-45)

'யாவுமாம் உமையுண் ணாமுலை முலைப்பால்
ஈந்துபா டச்செயா யெனினும்
மேவுமா துயர்செய் சூலைநோ யெனினும்
விடுத்துநிற் பாடுமா றருளாய்!' (சோண-32)

சிவப்பிரகாசர், தாம் இறைவனை வேண்டிப் பெறுவது பாலாயினும், பாற்கிண்ணம் கழுவுநீராயினும், கொடிய சூலையேயாயினும் அவற்றிடையே வேறுபாடு கருதாமல், அவற்றைப் பெறுவதனால் தாம் தருவதாகிய இறையருட்பாடல்களை எண்ணியே, இவ்வாறு வேண்டுகிறார். இவர்தம் எண்ணம், கறவைப்பசுவானது உண்ணும் உணவு யாதேயாயினும் அது சுரக்கும்பால் எத்தகைய வேற்றுமையுமின்றி வெண்மையும், தூய்மையும், ஊட்டமும், சுவையும் நிறைந்துப் பருகுவார்க்குப் பயன்தருதலைப் போலத் திகழ்கின்றது.

அம்மையார்களின் அன்புத்திறம் :

இறைவன் ஆணையிட்ட அளவில், 'எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி, 'உண் அடிசில்' என்று ஊட்டியருளிய உமையம்மை உயர்ந்தவரா? நின் இயல்பைக் கேட்ட அளவில் மகன்மைக் கேண்மையால் கொங்கை சுரந்த மங்கையர்க்கரசியார் உயர்ந்தவரா? என்று பட்டிமண்டபப் பாங்கில் ஞானசம்பந்தரை வினவுகின்றார் சிவப்பிரகாசர்.

'பிள்ளையின் இயல்பைக் கேட்ட அளவில் முலைசுரத்தல் தலையன்பு; கண்ட அளவில் முலைசுரத்தல் இடையன்பு; அழுதல்கண்டு பிறர் உரைக்க முலைசுரத்தல் கடையன்பு' என்னும் முறைமை கொண்டு, ஞானசம்பந்தர் அழுதல் கண்டு, இறைவன் ஆணையிட்ட

பின் ஞானப்பால் அளித்த அம்மையைக்காட்டிலும் சைவந்தழைக்கத் தழைத்த இவர்தம் பெருமையைக் கேட்டவளவில் முலைசுரந்த மங்கையர்க்கரசியார் தலையன்பினர் என்னும் கருத்தில் பாடப் பெற்றுள்ளது.

மங்கையர்க்கரசியாரின் தலையன்பைக் காட்டும் இந்நிகழ்வு, பெரிய புராணத்துள் காணப்பெறவில்லை. கீழ்க்காணும் சாத்திர நூலின் கருத்தே, சிவப்பிரகாசரின் இச்சிந்தனைக்கு வழிவகுத் துள்ளது எனலாம்.

'சுரந்த திருமுலைக்கே - துய்யதிரு ஞானம்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச் - சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையாள் அன்பிருந்த வாறு.' (திருக்களிற்று-54)

அம்மையார் பொற்கிண்ணங்கொண்டு பாலடிசில் ஊட்டிய தற்குக் கீழ்வரும் ஞானசம்பந்தர் பாடலே சான்று:

'போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்' (3-24:2)

உமையம்மையாரின் ஒப்பிலா நிகழ்ச்சி:

ஞானப்பால் உண்ட நிலையில் சிவஞானம் வாய்க்கப்பெற்ற திருஞானசம்பந்தர் 'அவன் அவள் அது' என்னும் சேய்மைப் பொரு ளாகச் சுட்டத்தக்க இறைவனைத் 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பாடலில், 'இவனன்றே' என்று அண்மைப் பொரு ளாகவே, தாம் தரிசித்த முறையில் பாடிக்காட்டுகின்றார். இவ்வாறு தம் எதிர்வந்து புகழ்ச்சியோடு பாடும் பாடல்களைக் கேட்டு, தந்தை யைக் காட்டிலும் மிக்க மகிழ்ச்சி தாய்க்கு உண்டு போலும்' என்று இப்பாடல் தெரிவிக்கின்றது.

தாயானவள், குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது, தன் உள்ளத்தில் கொள்ளும் எண்ணத்தின் பிரதிபலிப்பு, பாலுண்ணும் குழந்தையின் வாழ்வில் வெளிப்பட்டுத் தோன்றும். செந்தமிழ்ப் பாமாலை பாடவேண்டும் என்று எண்ணியே உமையவள் ஞானசம் பந்தர்க்குப் பாலூட்டியதாகத் திருப்புகழ் செப்புகின்றது.

'பலவித நற்கற் படர்ந்த சுந்தரி
பயில்தரு வெற்புத் தருஞ்செ ழுங்கொடி

பணைமுலை மெத்தப் பொதிந்து பண்புறு கின்றபாலைப்
பலதிசை மெச்சத் தெரிந்த செந்தமிழ்
பகரென இச்சித் துகந்து கொண்டருள்
பழநியில் வெற்பில் திகழ்ந்து நின்றருள் தம்பிரானே!'
(கலவியில்-பழநி)

இதே கருத்து சிவப்பிரகாசர்தம் திருவுள்ளத்திலும் இருந்தமையைக் கீழ்க்காணும் பாடல் தெரிவிக்கின்றது :

'முளைக்குந் தரள நகைவாயான்
முதிர்தீஞ் செய்யுள் அமுதூட்ட
முன்னம் பிள்ளைப் பெருமாளை
முலைப்பால் ஊட்டும் ஒருதாயே.'
(சிவஞான.பிள்ளை.காப்பு-3)

இவ்வாறு, அருணகிரிநாதர், சிவப்பிரகாசர் ஆகியோரின் பாடல்கள் தாய்மார்களின் உளவியற் பாங்குகளையும் புலப்படுத்துகின்றன.

கண்டாச்சிபுரம் அருட்கவிஞர் அ.முத்தையா அவர்கள் உமை கொடுத்த பாலால் விளைந்த திருமுறைப் பயனை நினைந்து போற்றுகின்றார். உபமந்யு முனிவர் இளங்குழந்தையாக இருந்த போது, இறைவன் பாற்கடலையே வழங்கினான். அதனைப் பருகித் தன் பசியை மட்டும் தீர்த்துக் கொண்டது அக்குழந்தை. ஆனால் உமையம்மை சிறிதளவே பால் கொடுத்தாள் சம்பந்தர்க்கு. அதை உண்டு, தம் பிறவிப்பிணி மட்டுமின்றிப் பாடுவோர், கேட்போர், சிந்திப்போர், தெளிவோர்தம் பிறவிப் பிணியெல்லாம் தீருமாறு திருநெறிய தமிழ் பாடியதாகப் போற்றுகின்றார். தந்தைகொடுத்த பாலினும், தாய் கொடுத்த பாலின் உயர்வு பற்றிய அவர்தம் கருத்தும் இவண் எண்ணத்தக்கதாகும்.

'அணியார் மதிற்கச்சி யப்பன் அருளுபால் ஆழியுண்டுத்
தணியாப் பசிதவிர்ந் தான்உப மந்யு;நீ சண்பையற்கு
மணியார் தனப்பால் சிறிதளித் தாய்;உண்டு, மாபிறவிப்
பிணிதீர் இசைபாடி னான்இந்தப் பாற்கிணை பேசின்உண்டே?'
(காமாட்சி அந்தாதி - 61)

அம்மையின் மகிழ்ச்சிக்குப் பிறிதொரு காரணமும் சிவப்பிரகாசர்தம்

சிந்தனைப் போக்கின் துணைகொண்டு கூறலாம்.

'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.' (திருக்-புதல்வரைப்-9)

என்னும் திருக்குறளுக்கு உரைவரைந்த பரிமேலழகர், 'கேட்ட தாய்' என்னும் சொற்றொடருக்குப் 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின்' என்று காரணம் காட்டினார்.

இவ்வுரைக் கருத்தை மறுத்துப் பெண்மையைப், 'பேரறிவின் பெட்டகம்' என்று பெண்ணின் பெருமையைப் பறைசாற்ற அன்றே முழக்கமிட்டவர் சிவப்பிரகாசர். அதனால்தான், திருமுதுகுன்றத்துப் பெரியநாயகியைக்,

'கற்றார் அறிகுவர் மக்கள்தம் பேறெனக் கட்டுரைத்த
சொற்றான் ஒருபெண் ணொழித்ததென் பாரொடு தொல்லுலகில்
நற்றாண் மகப்பெறு கென்றாசி சொல்பவர் நாணவுனைப்
பெற்றான் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே.'
(பெரிய.கட்டளைக்-12)

என்று துதிக்கின்றார்.

பிள்ளையைப் பற்றித் தக்கோர் புகழினும், தானே அறிந்தாலன்றி ஏலாத இயல்பினன் தந்தை. ஆனால் தாயோ, தன் பிள்ளையின் அருமை பெருமைகளை உள்ளுணர்வால் உணர்பவள்; அவ்வுணர்வைப் பிறர்வாயிலாகக் கேட்ட அளவில் மகிழ்வாள் என்பதே உண்மை. தாயின் எண்ணவூட்டத்திற்கேற்பவே பிள்ளைகள் அமைவர் என்பதைத்தான், 'தாயைப் போலப் பிள்ளை' என்னும் பழமொழி உணர்த்துகிறது. பண்டைக்காலத் தமிழ்த்தாயர்கள், தம் குழந்தைகளுக்குப் பாலோடு வீரத்தையும் சேர்த்தே ஊட்டினர் என்பதும், அவர்களின் எண்ணத்திற்கேற்பப் பிள்ளைகள் வீரம்விளைத்து விழுப்புகழ் எய்தினர் என்பதும் சங்கச் செய்யுள் (புறம்-278) கூறும் செய்திகளாகும். ஞானசம்பந்தர் அன்னையை முன்னிறுத்தியே, அவளுடன் அப்பன் இருப்பதாகப் பதிகங்கள் யாவற்றிலும் பாடியுள்ளார்.

அம்மையின் மகிழ்ச்சிக்கு அளவில்லை என்னும்இக்கருத்தினால் அருளாளர்களின் சிந்தனைகளையெல்லாம் நினைய வைத்துப் பெண்மையின் பெருமையைக் காட்டுவது இத்திருப்பாடல்.

திருமுறைப் பயன்காட்டும் திருப்பாட்டு :

ஞானசம்பந்தரின் திருப்பாட்டு நிகழ்த்திய அற்புதங்கள் நான்கினைப் 'பயனாகும் நல்லாண் பனைக்கு' என்னும் பாடல் விளக்குகிறது.

ஆண்பனையைப் பெண்பனையாக்கி அருளுதல் :

தொண்டைநாட்டுத் திருவோத்தூரை நண்ணிய ஞானசம்பந்த ரிடத்து, ஆண்டுவாழ்ந்த சிவனடியார் ஒருவர், 'அடியார் செய்யும் தொண்டுக்கு உதவும் பொருட்டுத் திருக்கோயிலில் தாம் வளர்த்த பனைகள் - காய்க்காமல் இருப்பதனையும், அவநெறியினராகிய சமணர்கள்,சிவநெறியைத் தூற்றமுயல்பவர்களாய்,'இவற்றை இக் காலத்து இறையருளால் காய்ப்பித்தல் இயலுமோ?' என்று எள்ளி நகையாடுவதையும் எடுத்துரைத்திறைஞ்சினார். அவர்தம் வேண்டு -கோளுக்கிணங்கப், 'பூத்தேர்ந் தாயன' என்னும் பதிகம் பாடி, 'குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்' என்று முடித்து, பனைகள் காய்க்கச் செய்தருளினார். இதனால் சமணர்கள், அவநெறியாகிய மருள் நெறியினின்றும் நீங்கிச் சிவநெறியாம் தெருள் நெறியைக் கைக்கொண்டனர் பனை மரங்கள் கால முதிர்வில் முத்தியெய்தின.

திருவோத்தூர்த் திருப்புகழும் இவ்வற்புதத்தை அழகாக மொழிகின்றது.

' பவமாய்த்(து) ஆண்அது வாகும் பனைகாய்த் தேமணம் நாறும்
பழமாய்ப் பார்மிசை வீழும் படி ' (தவர்வாள்)

பனைகள் வீடுபேறெய்திய திறத்தினைப்,

' பிள்ளை யார்தம் திருவாக்கில் பிறத்த லால்அத் தாலமுமுன்(பு)
உள்ள பாசம் விட்டகல, ஒழியாப் பிறவி தனையொழித்துக்
கொள்ளும் நீர்மைக் காலங்கள் கழித்துச் சிவமே கூடினவால்!'
(பெரிய-திருஞான-983)

என்ற பெரியபுராணப் பாடலும் விளக்குகின்றது. இவ்வகையில் ஆண்பனையைப் பெண்பனையாக்கிய அருளல்செயலை இப்பாட்டு உணர்த்துகின்றது.

விடத்திற்கு மயிலாகும் :

திருஞானசம்பந்தர் திருமருகல் தலத்துக் கோயிலுக்குச் சென்ற காலத்துப் பெண்ணின் அழுகுரலைக் கேட்டார். அருகிலுள்ள மடத்தில் வழிப்போக்காக வந்து தங்கியிருந்த வணிக மகள் ஒருத்தி, தன்னை மணக்க உடன் வந்த உறவினன், இரவில் துயிலும்போது அரவு தீண்டி இறந்தமையை எடுத்துரைத்து ஏங்கியழுதாள். அது கண்டு பொறாமல், 'சடையாய் எனுமால்' எனும் பதிகத்தைப் பாடி, அவனை உயிர்ப்பித்து எழவைத்தருளினார்.

இவ்வரலாற்றினால் விடத்தை அழிக்கும் மயில் போன்று ஞான சம்பந்தர் பாடல் விளங்கி அழித்தல் ஆற்றலைப் புலப்படுத்து கின்றது.

நோய்க்கு மருந்தாகும்:

திருஞானசம்பந்தர், மதுரையில் தங்கியிருந்த திருமடத்துக்குச் சமணர்கள் இட்ட தீயானது, 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று பாடியதால், அத்தீயின் வெப்பம், தென்னவன் உடலில் வெப்புநோயாய்ப்பற்றி வருத்தியது. இதனால் அருந்துயருற்ற மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளுக்கிணங்கி 'மந்திரமாவது நீறு' என்னும் திருநீற்றுப்பதிகத்தைப் பாடித் திருநீற்றை அவன் உடலில் பூசியருளினார். இதனால் பாண்டியனின் வெப்பு நோயும், பிறவிக்கூனும் நீங்கியது. மன்னன் சமண சமயம் நீங்கிச் சைவரான தால் நின்றசீர் நெடுமாறரானார்.

'மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே'

(எதிரிலாத-கதிர்காமம்)

என்று திருப்புகழ் இவ்வற்புதத்தை வியக்கின்றது. இது ஞான ம்பந்தர் பாடலின் காத்தல் திறத்தைக் காட்டுகிறது.

சிந்தும் எலும்புக்கு உயிராகும்:

மயிலாப்பூர் சிவநேசச் செட்டியார் என்னும் சிவனடியார் தம் அருமை மகள் பூம்பாவை, அரவந்தீண்டி இறந்ததனால் அவளு டைய என்புசேர் குடத்தினை, ஞானசம்பந்தர் முன்னிலையில்

வைத்துத் தாள்பணிந்து நின்றார். மண்ணோரும், விண்ணோரும் வியக்குமாறு, பூம்பாவையின் பேரைச் சொல்லி மயிலைத் திருக்கோயிலில் திங்கள் தோறும் நடைபெறும் திருவிழாக்களை உள்ளடக்கி இவற்றைக் காணாமல் போதியோ பூம்பாவாய் என்று விளித்து 'மட்டிட்ட புன்னையங்கானல்' என்னும் பதிகம் பாடினார். அவ்வகையில் என்பே பூம்பாவையாக உடலும் உயிரும் பெற்றுஎழுமாறு செய்தருளினார். இத்திருவருட் செயல் இவர்தம் பாட்டின் **படைப்புச் செயலைப்** புலப்படுத்துகின்றது.

இது குறித்த திருப்புகழ்:-

'அளவைவணி கோர்குலத்தில் வனிதைபுயிர் மீளழைப்ப
அருள்பரவு பாடல் பெற்ற குமரேசா!'

(களபமணி-திருமயிலை)

இறைவனேயன்றி, அவன் அடியரேயன்றி, அவ்வடியார் திருவாய் மலர்ந்தருளிய பாட்டுகளும் ஐந்தொழில் இயற்றும் ஆற்றல் பெற்றன. 6 என்னும் உண்மையை இத்திருப்பாட்டு வாயிலாகச் சிவப்பிரகாசர் உணர்த்துகிறார்.

என்பினை எழிலார் பெண்ணாக்கிய திறம்:

எலும்பினைப் பெண்ணாக்கிய இவ்வற்புதத்தை உணராமல், மால்மிக்கு இடுகாட்டுள் பிருந்தையின் என்பு மீது புரண்டு புரண்டு திருமால் அழுததனைப் பிறிதொரு பாட்டு (இடுகாட்டுள் - 9) எடுத்துரைக்கின்றது.

ஞானசம்பந்தர்; இறைவன் பெருமையைப் பதிகமாகப் பாடிய அளவில் எலும்பு பெண்ணானது. இது பெரிதன்று; இறைவனைப் பாடிய சைவ வடிவான சம்பந்தரின் பெருமையைச் சொன்னால், சுடுகாட்டுச் சாம்பல்கூட, தெய்வ வடிவம் பெறும் என்று வள்ளலார் ஞானசம்பந்தரின் பெருமையை மிக உயர்த்திப் பாடுகின்றார்.

'பண்ணாலுன் சீரினைச்சம் பந்தன்சொல் வெள்ளெலும்பு
பெண்ணான தென்பார்; பெரிதன்றே - அண்ணாஅச்
சைவவடி வாம்ஞான சம்பந்தர் சீருரைக்கின்
தெய்வவடி வாம்சாம்பர் சேர்ந்து.'

(திருவருட்பா)

'திருமுறைப் பாடல்கள் திருவருள் பதிவு என்றும் உள்ளவை; அதனால் அப்பாடல்கள் உயிருள்ளவை; உயிரூட்ட வல்லவை; அற்புதங்கள் நிகழ்த்தவல்லவை' என்னும் உண்மையை உலகம் அறிய வேண்டியே சிவப்பிரகாசரின் செந்தமிழ்ப்பாட்டுகள் உதவுகின்றன.

முத்துச் சிவிகை முதலியன பெறுதல்:

திருநெல்வாயில் அரத்துறை அண்ணலை வழிபடுவதற்குக் கொடிய வெயிலில் நடந்துசென்றார்; களைப்புமேலிட்டால் வழியிலுள்ள மாறன்பாடியில் கண்ணயர்ந்தார். அரத்துறை அந்தணர்கள் இறைவன் தம் கனவில் தோன்றி ஆணையிட்டவண்ணம், கோயிலிலுள்ள முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னங்கள் ஆகியனவற்றை ஞானசம்பந்தர் முன் வைத்து வணங்கி நின்றனர். அரத்துறை அண்ணலின் அருள்திறத்தை எண்ணி, 'எந்தை ஈசன் எம்பெருமான்' என்னும் பதிகம் பாடிச், சிவிகையை வலம்வந்து ஐந்தெழுத்தோதி உலகம் உய்ய ஏறியருளினார்.

மன்னுயிர்க்குலம் உய்யவேண்டும் என்னும் பெருங்கருணைத் திறத்தால் தாவில் சராசரங்கள் எல்லாம் சிவம்பெருக்கும் திருப்பணியைச் செய்வோர்க்கு, இறைவன் திருவருள்துணை என்றும் உண்டு என்னும் உண்மை, ஞானசம்பந்தர் வாழ்வினால் விளக்கமுறுகின்றது

'குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.' (திருக்குறள்-1023)

என்னும் திருக்குறள் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றது.

இறைவன் ஞானசம்பந்தர்க்காக நிகழ்த்திய இவ்வற்புதச் செயல், சிவப்பிரகாசரின் இளமைக் காலத்திலிருந்தே அவர்தம் நெஞ்சில் ஆழப் பதிந்திருந்தது என்பதனை, அவர் முதன்முதலில் பாடிய சோணசைலமாலைப் பாடல் செப்புகின்றது.

'முயங்குமா புகழ்பூம் புகலியந் தணர்க்கு
முத்துவெண் பந்தர்ஈந்(து) அகல்வான்
தயங்குமின் முத்துப் பந்தர்வாழ் சோண
சைலனே கைலைநா யகனே!' (சோண.28)

மக்களுக்கு அறிவிப்பினைச் செய்து, அவர்களை நன்னெறிப் படுத்தும்வகையில் இறைவனுக்கும், மன்னர்களுக்கும் பயன்படுத்தப் பெற்றுவந்த இப்பொருள்கள் யாவும் இறைவனால் சம்பந்தர்க்கு அளிக்கப்பெற்றன. சமயச்சான்றோர்கள், இறைவனுக்கும் மன்னர்க் கும் நிகராகக் கருதத்தக்கவர்கள். அவர்கள் இத்தகைய பொருளைப் பற்றி ஊரும் உலகமும் அறியத் தொண்டு செய்பவர்கள் என்பதை உணர்த்துவதற்காகத்தான் இறைவனே அச்சிறப்புகளை ஞானசம் பந்தர்க்குச் செய்து வழிகாட்டியாக விளங்குகிறான். எனவே, சமயச் சான்றோர்களால் சமுதாயம் உய்யும்; அவர்களுக்கு இறைவன் அருள்செய்வான்' என்னும் உண்மையை உலகுக்கு உணர்த்தவே சிவப்பிரகாசர் இவ்வற்புதத்தைத் தமது பாட்டின்வாயிலாகப் புலப் படுத்துகின்றார்.

இவ்வெண்ணத்தை வள்ளற்பெருமானும் கொண்டிருந்ததால் தான்

முத்தியற் சிவிகை இவர்ந்தருள் நெறியின்
முதலர சியற்றிய துரையே! [ஆளு. பிள். அருள்மாலை 6]

என்று ஞானசம்பந்தரைத் துதிக்கின்றார்.

ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் திருவருள் நெறி நின்று தொண்டு செய்யும் சமயச்சான்றோர்களுக்கு இந்நாளில் இத்தகைய சிறப்பினைச் சமுதாயமே முன்வந்து செய்ய வேண்டும் என்பது விழைவு. அருளாளர்க்கு இறைவன் செய்த சிறப்பினைச் சமுதாயம் செய்து உயர்வு பெறும் நாள் எந்நாளோ? என்ற ஏக்கமும் உடன் எழுகின்றது.

பலியேற்கும் இறைவனுக்கு உலகேத்தும் முத்துச் சிவிகை ஏது?

மகன்மைநெறி நின்று சமயத் தொண்டு செய்த சம்பந்தர்க்குத் தந்தை நிலையில் இருந்து சிறப்புச்செய்த இறைவனைப் புராண நோக்கில் அணுகுகிறது இப்பாடல். முத்துச் சிவிகை முதலாயின பெற்ற ஞானசம்பந்தப்பிள்ளையைக் காணப்பெற்றால், அவரிடத்து தாருகாவனத்து முனிவர் தம் மனைவியரின் இல்லங்கள்தோறும்

பலியேற்கும் நிலையிலுள்ள இறைவன் முத்தினாலாகிய இச்செல்வங்களை எவரிடத்துப் பெற்று உமக்குத் தந்தான்? எனக்கேட்போம் என்று சிவப்பிரகாசர் சொல்வதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இப்பாடல் கருத்தின் வாயிலாக உலகியலில் வாழும் பெற்றோர் -கள் தம் பிள்ளைகளுக்குத் தேவையானவற்றைச் செய்யும் உளவியல் பாங்கினை அறியலாம். மேலும், பெற்றோர்கள் தாம் எந்நிலையில் இருந்து இடர்ப்பட்டாலும், தம் பிள்ளைகள் நலமாக வளமாக வாழவேண்டும் என்னும் விழைவும், அவர்களால் சமுதாயம் பயன்பெறவேண்டும் என்னும் பொறுப்புணர்ச்சியும் கொண்டவர்களாக இருப்பார்கள் / இருக்கவேண்டும் என்னும் சிந்தனையும் தெளிவாகின்றது.

சிவிகை தாங்கிய சிவனடியார் சிறப்பு:

திருஞானசம்பந்தர் இவர்ந்து வந்த பல்லக்கினைத் திருநாவுக்கரசர் சுமந்த வரலாற்றுச் செய்தியினை கூறுவதன் வாயிலாக 'அறத்தாறிதுவென வேண்டா' என்னும் திருக்குறளின் ஒருபகுதிக் கருத்தினை மறுத்துரைப்பதாக ஒருபாடல் அமைகின்றது.

திருவள்ளுவரை 'என்னடிகள்' என்றும், திருக்குறளடியை 'உமையொருபாகனடி' என்றும், தம் நூற்பரப்பு யாவினும் ஏற்ற இடங்களில் திருக்குறட் கருத்துக்களை எடுத்தாண்டுப் போற்றிய சிவப்பிரகாசர், திருக்குறள் கருத்தை மறுப்பதாக அமையும் பாடல் திறனாய்வு நோக்கில் சிந்திக்கப் பெறுவதாகும்.

'அறம் செய்வோர் சிவிகையில் அமர்ந்து செல்லுதலும், அஃதற்றோர் சிவிகையைச் சுமந்து செல்லுதலும். காட்சியளவை நூலளவை ஆகியவற்றால் உணரப்படுவதாகும்' என்பது அத் திருக்குறள் கருத்து.

ஞானசம்பந்தரின் 'சிவிகையைச் சுமப்போர் சிறந்த தேவராய் உந்தும் சிவிகையினை ஊர்ந்து திரிகுவர்' என்று சொல்லிச் சிவிகையைச் சுமப்போர் பாவம் செய்தவர் என்னும் கருத்தை மட்டும் மறுத்துரைக்கிறார்.

இந்நிகழ்வினால் திருக்குறள் உணர்த்தும் அறநெறிகூட அருள் நெறி நோக்கில் பிழைபடும் என்றும், அறநெறி அருள்நெறிக் குட்பட்ட ஒருபகுதியே என்றும் உணர்த்தப்பெறுகின்றன.

அனல்வாத வெற்றிகாட்டும் அற்புதப் பாட்டு :

பாண்டிய மன்னன் உற்ற வெப்புநோயை நீக்கும் முயற்சியில் தோல்வியுற்ற சமணர்கள், வாதத்தால் வெற்றிபெற விழைந்து, ஞானச பந்தரை அனல்வாதத்துக்கு அழைத்தனர், தம்சமய உண்மையை ஓலையில் எழுதித் தீயில் இட்டனர். அவ்வேடு எரிந்து கரிந்து சாம்பராயிற்று. ஞானசம்பந்தர் எழுதிய 'போகமார்த்த பூண்முலையாள்' என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் எழுதிய ஏடு தீயிலிடப்பெற்றது. திருவருள் பதிவுள்ள காரணத்தால் எரியில் கருகியழியாமல், சைவத்தின் மாட்சியைத் தெரிவித்து வென்றது அவ்வேடு. இவ்வற்புதத்தைத் 'தேனுந்து' எனத்தொடங்கும் பாடலால் போற்றுகிறார் சிவப்பிரகாசர்.

புனல்வாத வெற்றியையும் வீடுபேற்றெளிமையையும் புலப்படுத்தும் திருப்பாட்டு :

அனல் வாதத்தில் தோற்று மனம் வெந்துபோன சமணர்கள் 'ஒன்று கெட்டால் மூன்று' என்னும் பழமொழிக்கேற்ப வெப்புநோய் நீக்குதல், அனல்வாதம் அகிய இரண்டிலும் தோற்றதால், மூன்றாவதாக, புனல்வாதத்தில் கலந்துகொள்ள ஞானசம்பந்தரை அழைத்தனர். தம்தம் சமயக் கருத்துக்களை ஓலையில் எழுதி வையையாற்றில் விடுவது என்றும் நீர்வழிச் செல்லாமல் எதிர்த்துக் கரையேறும் ஓலைக்குரிய சமயமே உயர்ந்தது என்றும், தோற்பவர்கள் கழுவேறவேண்டும்' என்றும் உறுதிசெய்யப்பெற்றது.

இம்முறையேனும் வெற்றிபெறலாம் என்ற நயப்புணர்வுடன் 'அஸ்தி நாஸ்தி' என்னும் தமது சமயக் கொள்கையை வடமொழியில் எழுதி அந்த ஏட்டினை, வையையாற்றில் இட்டனர். அவ்வேடு ஆற்று வெள்ளத்தில் எதிரேறமாட்டாமல், 'நட்டாற்றில் கைவிட்டது போல' என்னும் பழமொழிக்கு விளக்கமாகவும், தங்களுடைய நாஸ்தி என்னும் கொள்கையை உறுதிப்படுத்தும் வகையிலும் வெள்ளத்தோடே சென்று கடலில் மறைந்தது.

ஞானசம்பந்தர் 'மெய்ந்நெறி சிவநெறியே' என்று உணர்த்தும் வகையில் 'வாழ்க அந்தணர்' எனத்தொடங்கும் செந்தமிழ்ப்பதிகமாகப்பாடி, அப்பாடல் எழுதிய ஏட்டினை, ஆற்றில் இட்டார். பிறவியென்னும் பேராற்றை, அருந்தவர் உள்ளம் எதிர்த்து, எதிர்செல்வதுபோல, வெள்ளத்தை எதிர்த்துக் கரையேறியது. அவ் வேடு கரையேறிய இடமே 'திருவேடகம்' எனப்படுகின்றது

புனல்வாதத்தில் சமணர் தோற்றதை 'வெள்ளமிடும் ஏடு ஏறப் பால்குறைந்தது என்று அழுவரே, கழுவின் காடேறப் புக்க அருகர்' என்று பிறிதொரு பாடலும் உரைக்கிறது.

வீடுபேற்றற்புதம் :

தவநெறி நின்று சிவநெறி வளர்க்கத் தோன்றிய ஞானசம்பந்தர் பதினாறாண்டெய்திய காலத்து, அவர்தம் பெற்றோர்களின் விருப்பத்திற்கு இணங்கத் திருவருளை நினைந்து திருமணத்திற்கு உடன்பட்டார். திருநல்லூரில் வாழ்ந்த சிவநேயச் செல்வராகிய நம்பாண்டார் நம்பி என்பவரின் திருமகளை அவ்வூரிலுள்ள 'பெருமணம்' என்னும் திருக்கோயிலில் மணம் செய்துகொண்டார். மந்திர முறைமையால் வளர்க்கப்பெற்ற எரியினை வலம்வந்தார். அப்பொழுது பிறவிப் பாசம் தீர்தலைப் பொருளாக எண்ணினார்.

'நாதனை நல்லூர்ப் பெருமணம் மேவிய வேதனின் தாள்தொழ வீடு எளிது' (3-125-10) என்று உணர்ந்தார். வீடுபெற 'வம்மின் வம்மின்' என்று அடியார்களை அழைத்தார். 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' என்னும் காதல் மெய்ப்பதிகம் பாடினார். சிவபெருமான் அவ்விடத்துச் சோதியைத் தோற்றுவித்தருளினான். 'காதலியும் சுற்றமும், காணவந்தோருமாய்ச் சோதியில் கலந்திடுமின்' என்று அருள் செய்தான்.

ஞானசம்பந்தர் 'காதலாகிக் கசிந்து' என்னும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடினார். தீ வலம் வந்தார், திருநீலநக்கர் முதலாம் அடியவர்களும், மற்றும் சுற்றத்தினர், காணவந்தோர் யாவரும் சோதியுள் கலந்தனர். எல்லோரும் எளிதில் வீடுபேறு எய்துமாறும் உலகம் உய்யுமாறும் தோன்றிய ஞானசம்பந்தர் தம் துணைவியாரின் திருக்கரம் பற்றி வலம்வந்து, அச்சோதியுள் புகுந்து சிவபெருமானுடன் ஒன்றி உடனானார்.

இவ்வருள்நிகழ்ச்சியைப் பாட விழைந்த சிவப்பிரகாசர்,

'கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளும் திருஞான சம்பந்தா!' என்று

போற்றிப் பரவுகின்றார்.

சிவப்பிரகாசர், வள்ளலார் ஆகியோர்தம் ஏக்க வெளிப்பாடுகள்:

ஞானசம்பந்தரின் திருமணத்தில் விருந்தினுக்குதவும் வகையில் கலந்துகொண்டிருந்தாலும் வீடுபேறு பெற்றிருக்கலாமே' என்னும் ஏக்கம் சிவப்பிரகாசர்க்கு இளமையிலேயே இருந்தது என்பதனைப் பின்வரும் பாடலால் அறியலாம்:

'வினையரும் புகலிக்(கு) இறைமணப் பந்தர்
விருந்தினுக்(கு) உதவிலேன் முந்திற்(று)
உனைஇரந் திடுவான் வந்தனன் பதம்நீ
உதவியென் துயர்ஒழித் தருளாய்!' (சோண.26)

'அத்திருமணவிழாக் கூடத்துப் பொருட்சுமை தூக்கும் ஆளாக இருந்திருந்தாலும் பிறவிப்பயனாம் வீடுபேற்றை எய்தியிருக்கலாமே' என்று ஏங்குகின்றார் வள்ளலார். இவர்தம் ஏக்கங்களையெல்லாம் ஏட்டில் எழுதிக் காட்டொணாமையின் அவர்தம் பாடற் கருத்தை உணர்ந்து உணர்ந்து, உள்ளம் கசிந்து உருகுதலே நாம் உய்யும்நெறியாகும். அவர்தம் பாடல் வருமாறு:

'எங்கோவே! யான்புகலி எம்பெருமான் தன்மணத்தில்
அங்கோர் பொருட்சுமையாள் ஆனேனேல்-இங்கேநின்
தாள்வருந்த வேண்டேன்; தடைபட்டேன் ஆதலின்இந்
நாள்வருந்த வேண்டுகின்றேன் நான்.' (சிவநேச.42)

இவர்களின் ஏக்கப் புலப்பாடுகளெல்லாம் பயில்வோரின் வாழ்விற்கு ஆக்க வெளிப்பாடுகளாக அமைதல் நன்றாகும்.

திருஞானசம்பந்தரின் சேவடிச் சிறப்பு:

துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் வழங்கிச் சமுதாயத்தை உய்விக்கத் திருவுளம் பற்றிய சிவபிரான், மானைக்காட்டி மானைப் பிடித்தல்போல, மனித வடிவில் ஞானசம்பந்தரைத் தோற்றுவித்து உயிர்களுக்கு அருள்செய்தான்.

தெள்ளிய நீரோட்டம் போலத் தொடக்கம் முதற்கொண்டு திருவருளில் கலக்கின்ற வரையில் ஞானசம்பந்தரின் வாழ்வியலும் வாக்கியலும் ஒருநெறியாகும் திருநெறி சார்ந்து விளங்கின.

சிவப்பிரகாசர், இந்நூலில் ஞானசம்பந்தரைப் புகழும் பத்து வெண்பாக்களுள், முதல் வெண்பாவில் 'அவர்தம் திருவடியே வீடு' என்றார். அவ்வாறே நிறைவுப் பாடலில், அவர்தம் திருவடித் தொடர்பு உயிர்களுக்கு இகபர நலன்களை அளிக்கவல்லதாகும் என அருளிச்செய்துள்ளார்.

வண்மை, நலம், கல்வி, நல்லாதரவு, இன்பம், ஞானம் ஆகிய யாவும் ஞானசம்பந்தரின் திருவடியே என்று உணரும் உணர்வாளர் யாவரும் பிறப்பையறுத்துப் பேரின்ப வாழ்வுறுவர் என்று இப் பாடலில் அருளியுள்ளார்.

இத்தகைய ஞானமே, முத்திநிலை எய்த முடிவாக அமைந்த சாதனம் என்று ஆன்றோர் உரைப்பர்.

'சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் முறையே அரும்பு, மலர், காய், கனி போன்றன என்பார் தாயுமானவர். சிவப் பிரகாசரும் 'ஞானம் ஒன்றே முத்திக்கு ஏது; ஏனைய சரியை முதலான மூன்றும் ஞானம் மருவுதற்கு ஏது' (பிரபுலிங்க லீலை, சித்தராம-66) என்பார்.

அருளாளர் புகழாரம்:

ஞானசம்பந்தரைப், 'பொருளென என்னைத் தன் பொற்கழல் காட்டியாண்டார்'7 என்றும், அவர்தம் திருவடியைக்,

'கவிக்குத் தகுவன: கண்ணுக் கினியன; கேட்கில்இன்பம்
செவிக்குத் தகுவன; சிந்தைக் குரியன' 8

என்றும், ஞானசம்பந்தர் அருளிய திருமுறையாகிய ஞானத்தமிழ்,

' பிறவியென்னும பொல்லாக் கருங்கடலை நீந்தத்
துறவியென்னும் தோற்றோணி'

என்றும் நம்பியாண்டார்நம்பி நவின்றேத்துகின்றார்.

'பேரார் ஞானசம்பந்தப் பெருமானே! நின் திருப்புகழைப் பேசுகின்றோர் பெருஞ்செல்வத்தில் பிறங்குவரே!' (திருவருட்பா) என்று வள்ளற்பெருமான் மொழிவதும் உளங்கொள்ளத்தக்கதாகும்.

இவ்வாறு ஞானத்தின் திருவுருவாய், நான்மறையின் தனித் துணையாய், மண்ணில்வளர் மதிக்கொழுந்தாய், கொன்றைச் சடையார் சீர்தொடுக்கும் கானத்தின் எழுபிறப்பாய்த் தோன்றிய ஞான சம்பந்தரின் வாழ்வு, வாக்கு ஆகிய யாவும் சமயத்தோடு ஒட்டிய சமுதாய வாழ்விற்கும், தீந்தமிழ் இலக்கியத்திற்கும், திருவருட் புலப்பாட்டிற்கும் விளக்கமாகத் திகழ்கின்றன.

ஞானசம்பந்தரைப் பற்றிய சிவப்பிரகாசரின் சிந்தனைத் தொகுப்பு:

'சீகாழிப் பொய்கைக் கரையில் ஞானப்பாலுண்டு, எம்செவியமுதாம் தேவாரத்தை அருளியது; மங்கையர்க்கரசியார், பாண்டி நாட்டு மதுரையில், ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டசெய்திகேட்டு முலை சுரந்தது; இறைவனைச் சுட்டிக்காட்டிய பெருமை; தந்தையினும் பால் கொடுத்த தாய்க்கு மகிழ்ச்சி மிகுமாறு எதிர்வந்து பாடியது, ஆண்பனையைப் பெண்பனையாகவும், பாம்புகடித்திறந்த செட்டியை எழுப்பவும், பாண்டியன் நோயைப் போக்கவும், எலும்பைப் பெண்ணாக்கவும் பாடிய செயல், திருமணக்காலத்து கொள்ளை கொள்ளையாக வந்தவர்க்கெல்லாம் முத்தியை வழங்கியது; மதுரையில் சமணரை வீழ்த்தச் செய்த அனல்வாத, புனல் வாதச் செயல்கள், இறைவனிடம் முத்துச்சிவிகை முதலாயின பெற்றது, அவருடைய சிவிகையைத் தாங்குவோர் சிறப்பு; அவர் திருவடியை வணங்குவோர் பெறும் பயன்'10 ஆகியவைகளைச் சிவப்பிரகாசர் செந்தமிழ் வெண்பாப் பாக்கள் திறமாக எடுத்துரைக்கின்றன.

சிவப்பிரகாசரின் சிந்தனைகள், மக்களைச் சமயநெறியில்இயங்க வைக்க வல்லன; அந்நெறி நிற்போர்க்கு ஊக்கமும், ஆக்கமும் வழங்கி அவர்களின் இருமை வாழ்வையும் உயர்த்தவல்லன என்பதை அருளாளர்களின் ஒத்த சிந்தனைகளோடு உணர்வது அறிஞர் கடனாகும்.

''வெம்பந்தம் தீர்த்(து)உல(கு)ஆள் வேந்தன் திருஞான
சம்பந்த னைஅருளால் சாரும்நாள் எந்நாளோ''

(தாயுமானவர் - எந்நாட்கண்ணி)

அடிக்குறிப்புகள்

1. நால்வர் நான்மணிமாலை - உரை, டாக்டர். வை. இரத்தின சபாபதி, ஆராய்ச்சி முன்னுரை, ப.17, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1984.
2. முந்துநூல், ப. 19.
3. சிதம்பர மும்மணிக்கோவை, குமரகுருபரர், பாடல்-2 : 14,15.
4. திருவானைக்காப் புராணம், கடவுள் வாழ்த்து-7
5. திருப்புகழ் முதற்குறிப்புகள் :

   (1) பொருப்புறும்-திருப்பரங்குன்றம்; (2) மூலமந்திரம்-பழநி; (3) குன்றும் குன்றும்-பழநி; (4) குறித்தமணி-பழநி ; (5) அகல்வினை-பழநி; (6) கருகி-பழநி
6. நால்வர் நான்மணிமாலை - உரை, டாக்டர். வை. இரத்தின சபாபதி, ப.158, குமரன் செந்தமிழ் நூற்பதிப்புக் கழகம், சிதம்பரம், 1984.
7. நம்பியாண்டார்நம்பிகள், பதினோராம் திருமுறை - ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, பாடல் 84.
8. முந்துநூல், பாடல் 32.
9. நம்பியாண்டார் நம்பிகள், பதினோராம் திருமுறை-ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை, பாடல் 11.
10. நால்வர் நான்மணிமாலை - உரை, டாக்டர். வை. இரத்தின சபாபதி, ஆராய்ச்சி முன்னுரை, ப.34. மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1984.

சிவப்பிரகாசர் நோக்கில் 'மாணிக்கவாசகர்'

எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லில் கங்குல்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேல் ஏறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.

- பரஞ்சோதி முனிவர்

மாணிக்கவாசகர் வாழ்க்கைக் குறிப்பு:

சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாந் திருமுறையாக இலங்கும் திருவாசகம், திருக்கோவையார் என்னும் பைந்தமிழ் அருளாரமுதப் பனுவல்களைப் பாடியருளியவர், அறிவாற் சிவனே யாகிய மாணிக்கவாசகர் ஆவார். இவர் தென்பாண்டி நாட்டுத் திருவாதவூரில் ஆமாத்திய அந்தணர் மரபில், சம்புபாதாசிருதர், சிவஞானவதியம்மை ஆகியோர்க்குத் திருவருள் நலத்தால் தோன்றிய தவப்புதல்வர். வாதவூரரெனப் பெற்ற இவர் இளமையிலேயே கற்பன கற்றுக் கலை நலம் பெற்றுச் சீரிய ஒழுக்கத்துச் சிறந்தோங்கியவர். இவரது மேன்மைத்திறம் அறிந்த பாண்டிய மன்னன் அரிமர்த்தனன் 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டத்தை இவருக்குத் தந்து, தன்னாட்டுத் தலைமை அமைச்சராக ஆக்கிக் கொண்டான். கடல்நீரைத் தன்னுள் சேர்த்துக்கொள்ளாமல் கடல் மேல் நிற்கும்/இயங்கும் கப்பலைப்போல உலகியல் உணர்விலிருந்து விடுபட்டு உலகில் வாழ்ந்தவர். ஆலவாய்ப் பெருமானிடத்து ஆராத காதல்பூண்டு வாழ்ந்தவர். நற்குருவை நாடிய சிந்தையராய் எப்போதும் இருந்து வந்தவர்.

அரசனின் வேண்டுகோளுக்கிணங்கக் குதிரைகள் வாங்கிவரும் பொருட்டுப் பெரும்பொருளுடன் வீரர்கள் தொடர்ந்துவரப் புறப்பட்டார். இவர்தம் உள்ளப்பக்குவத்தைக் கண்டு இவரை ஆட்கொள்ள விரும்பிய அருபரத்தொருவனாம் சிவபெருமான் திருப்பெருந்துறையில் குருந்தமர நிழலில் குருபரனாகத் தோன்றினார். சிவகணங்களைச் சீடர்களாக்கித் தான் சிவஞான யோகியாய் அமர்ந்து மெய்ஞ்ஞானப் பொருள்களை விளக்கிக்கொண்டிருந்தார்.

தன் திருவடியில் வீழ்ந்து வணங்கி இறைஞ்சிநிற்கும் வாதவூரரைத் திருக்கண் நோக்கி முடிமுதல் அடிவரை தொட்டு ஞானதீக்கையைப் புரிந்தருளினார். அஃறே தம் ஆவியும், உடலும், உடைமை எல்லாமும் குருவிற்கு உரிமையாக்கி ஆட்கொள்ளப் பெற்றார் வாதவூரர்.

குருநாதரின் பெருங்கருணைத் திறத்தினை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீரதனால் உடம்பு நனைந்துநனைந்து மாணிக்க மனைய சொற்களால், ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாகிய தேனினைச் சொரியும் திருவாசகமாகப் பாடிப்பரவினார்.அதுகேட்டு உவந்த குருநாதர் 'மாணிக்கவாசகன்' என்னும் தீட்சைப் பெயரை இவருக்குச் சூட்டியருளினார்.

குதிரைகள் வாங்குவதற்காகக் கொண்டு சென்ற பொருள்கள் அனைத்தையும், குருநாதரின் அருளாணையின்வண்ணம் திருப் பெருந்துறைக் கோயில் திருப்பணியைச் செய்தார். திருவிழாக்கள் செய்தல், திருமடங்கள், திருநந்தவனங்கள் அமைத்தல், அடியார் களுக்குத் திருவமுது படைத்தல் முதலான சிவப்பணிகளுக்கே பொருள் முழுவதையும் செலவு செய்தார். இதனையறிந்த மன்னன் ஏவலரை அனுப்பி, வாதவூரரை வருமாறு அழைத்தான். அரசனின் ஆணையை ஏற்றுச் செல்ல முற்படுமுன் பெருமானிடத்து வேண்டி னார். 'ஆவணி மூலத்தன்று குதிரைகள் வரும்' என்று பெருமான் கூறிய வண்ணமே மன்னன்பால் கூறினார். மேலும் பெருமான் தம்மிடம் தந்து அனுப்பிய மாணிக்க மணியைக் காணிக்கையாக மன்னனுக்குத் தந்தார். சொன்ன சொல்லைக் காப்பாற்றுவான் வேண்டிப் பெருமானே குதிரைச் சேவகனானான். சிவகணங்களைக் குதிரை வீரர்களாக்கிக்கொண்டான். காட்டில் உள்ள நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டான். குறித்த நாளில் குதிரைகளைக் கொற்ற வன் மகிழுமாறு ஒப்படைத்துச் சென்றான்.

அரசன், மாணிக்கவாசகரிடத்துத் தான் சிறையிட்டுச் செய்த கொடுமைகளைப் பொறுத்தருளுமாறு வேண்டி நின்றான். ஆனால் அன்று இரவே, பரிகள் யாவும் நரிகளாகி ஊளையிட்டு ஓடிப் போனமை அறிந்து, மீண்டும் மாணிக்கவாசகருக்குத் தண்டனை யளித்தான். வையையாற்றுச் சுடுமணலில் நிற்கவைத்துச் செய்த

தண்டனைகளைப் பொறாமல், இறைவனிடத்து முறையிட்டதால், இறைவன் வையையாற்றில் வெள்ளம் பெருகச் செய்தான். உடைப்புற்ற வையைக்கரையை அடைக்கும் பணியில் ஒருபகுதியை அரச ஆணையால் பெற்ற, பிட்டு விற்கும் வந்தியென்னும் தன் அடியவளுக்காக அப்பணியை ஏற்றும், கூலியாக அவள் தந்த பிட்டினை ஏற்றும், ஏற்றபணியை ஆற்றவில்லை என்பதற்காகப் பொன் மேனியில் பிரம்படி பட்டும்,விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும் மன்னனுக்கும், மக்களுக்கும், மாணிக்கவாசகரின் பெருமையைப் புலப்படுத்தினான்.

உண்மையை உணர்ந்த மன்னன் மாணிக்கவாசகரை வணங்கி னான்.அவர் அவன்பால் அமைச்சர் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுத் தவவேடம் தாங்கித் திருப்பெருந்துறைக்கு வந்து குருநாதரை வணங்கினார். திருக்கயிலை செல்லப் புறப்பட்ட குருநாதரைப் பின் தொடர்ந்தபோது பலதலங்களையும் வழிபட்டபின் 'கோலமார்தரு பொதுவினில் வருக' என்று கூறி மறைந்தார்.

குருநாதர் உரைத்தவண்ணம், குருந்தமர நிழலில் ஏனைய அடியார்களுடன் தாமும் குருநாதரின் திருவடியைத் தெய்வபீடம் ஒன்றில் அமைத்து வழிபட்டு வந்தார்.குருநாதர் முன்னமே அடியார் களுக்கு உரைத்தவண்ணம், பொய்கையில் தோன்றிய தீப்பிழம்பில் அவர்கள் ஐந்தெழுத்தோதி மூழ்கினர். அரன் கழல் சேர்ந்து சிவ கணங்களாயினர். கொன்றைமர நிழலில் சிவயோகத்திருந்த மாணிக்கவாசகரின் அகக்காட்சியில் இவையாவும் தெரிந்தன. அடியார்களின் பிரிவைத் தாங்கமாட்டாமல் குருநாதரை நினைந்து அழுது முறையிட்டுப் பாடல்கள் பலவற்றைப் பாடினார்.

பின்னர், உத்தரகோச மங்கை, திருவிடைமருதூர், திரு-வண்ணாமலை, திருவேகம்பம், திருக்கழுக்குன்றம் முதலிய தலங் களை வழிபட்டுச்சென்றார். திருக்கழுக்குன்றத்தில் பெருமான் இவர்க்குக் கணக்கில்லாத் திருக்கோலம் காட்டியருளினான். முன்பு உலகியல் நிலையில் இவர்தம் ஊனை நாடகம் ஆடுவித்த பெருமான் பின்பு அருளியலில் இவர்தம் உயிரை ஞான நாடகம் ஆடுவித்தான். இறுதியில் தில்லைக்கு வந்தார் மாணிக்கவாசகர்.

தென்பாண்டி நாடே சிவலோகம் எனப் பாடிப் பரவிய இவருக்குத் தில்லைத்திருத்தலமே சிவலோகமாகத் தோன்றியது. அத்தலத்தில் எல்லையில்லா ஆனந்தத் தாண்டவத்தை இயற்றுகின்ற பெருமானின் சேவடியைத் தொழுதார். பாமாலைகள் பலவற்றைப் பாடினார் பாவை பாடிய வாயால் கோவையும் பாடினார்.

புத்தருடன் வாதம்செய்தும் ஊமைப் பெண்ணைப் பேசச் செய்தும் சைவ சமயத்தை நிலைநிறுத்தினார்.

இறைவனே, அடியவர்கோலத்தில் எழுந்தருளி, திருவாசகப் பாடல்களை இவர்பால் கேட்டு எழுதிக்கொண்டான். திருவாதவூரடிகள் சொல்லத் திருச்சிற்றம்பலமுடையான் எழுதியது எனக் கையொப்பமிட்டுத் திருக்கோயில் திருக்களிற்றுப்படியில் வைத்து மறைந்தருளினான். அப்பாட்டுகளின் பொருள்வினவிய தில்லைவாழ் அந்தணர்களுக்கு விடையாக, ‘ பாட்டின் பொருள் ஆடலரசனே ’ என்று கூறிக்கொண்டே மாணிக்கவாசகர், வான்வெளி காட்டும் தில்லைப் பெருவெளியின் உள்ளே நுழைந்து, ஆங்குத் தோன்றிய திருவருட்பேரொளியில் கலந்து இறைவன்பால் ஒன்றிஉடனானார்.

அவர் வாழ்ந்துகாட்டிய நெறி, ஞானநெறியாம் சன்மார்க்க நெறியாகும். அதனால் இறைவனுடன் கலத்தல் என்பதாகிய சாயுச்சியம் என்னும் பரமுத்தியை அடைந்தார். இறைவன் ஐம்பூத வடிவினன் என்னும் கொள்கைக்கு விளக்கமாகத் திகழும் சிவத்தலங்களுள் வான் என்னும் பூதத்திற்குரித்தாகிய தில்லையில் இறைவனுடன் கலந்த இவர்தம்மை, ‘வான்கலந்த மாணிக்கவாசகர்’ என்று போற்றித் துதிக்கின்றார் வள்ளற்பெருமான்.

மாணிக்கவாசகரின் வாழ்வியலையும் வாக்கியலையும் எடுத்து -ரைக்கும் நூல்கள் பலவாகும்.

திருவாலவாயுடையார் பாடியருளிய திருவிளையாடற்புராணம், பரஞ்சோதி முனிவர் பாடியருளிய திருவிளையாடற்புராணம், திருவுத்தரகோசமங்கைப் புராணம், திருப்பெருந்துறைப் பழைய புராணம், திருப்பெருந்துறைப் புதிய புராணம், திருவாதவூரர் புராணம் முதலிய நூல்கள், தாம் தோன்றிய காலத்தால் வேறுபட்டு விளங்குதல்போலவே, மாணிக்கவாசகரைப் பற்றிய கருத்துகளாலும் தமக்குள் சிற்சில வேறுபாடுடையனவாய் விளங்குகின்றன.

‘தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை இருபோதும் இறைஞ்சிடுவேன்.’
-செவ்வந்திப் புராணம்.

ஓதற்கு எளிதாய், உணர்தற்கு அரிதாய் உள்ள திருவாசகம், பேரின்பக் காதல்நெறியைப் புலப்படுத்தும் திருக்கோவையார் ஆகிய இரண்டும் சைவத்திருமுறைகளுள் எட்டாந் திருமுறையாகத் திகழ் கின்றன. சிவஞானபோதம் என்னும் தலையாய சைவசித்தாந்த சாத்திர நூலின் எட்டாம் சூத்திரம், இந்த எட்டாந்திருமுறையை அடியொற்றிப் பாடப்பெற்றதோ என எண்ணுமாறு இத்திருமுறை அமைந்துள்ளது.

மாணிக்கவாசகருக்கு இறைவன் குருவாக வந்து ஆட்கொண்ட நிலையில், உலகியல் வாழ்க்கை,பதவி முதலானவற்றை விடுத்து, அருளியலில் திளைத்தார். வேடர்குடும்பத்தில் தன் உண்மைநிலை அறியாது வளர்ந்துவரும் அரசிளங்குமரனுக்கு மன்னன் உண்மை யினை உணர்த்தி அழைத்துச் சென்று அரசனாக்குதல் போல, பக்குவமுள்ள ஆன்மா உலகியல் சார்பில் மயங்கியிருப்பது கண்டு, இறைவன் குருவாய் வந்து உண்மையை உணர்த்தி ஐம்புலத் தொடர்பிலிருந்து விடுவித்துத் தன் அருட்கழலில் சேர்த்துக்கொள் வான் என்னும் கருத்துடைய அச்சூத்திரம், மாணிக்கவாசகரின் அருள்வாழ்க்கைக்குப் பொருத்தமாக அமைகின்றது.

திருவாசகம் என்னும் தெய்வப்பனுவல், சிவபுராணம் முதலாக ஐம்பத்தொரு திருப்பதிகங்களைப் பெற்றுள்ளது; அறுநூற்று ஐம்பத் தெட்டு பாடல்களைக் கொண்டுள்ளது.

‘தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!!’ (போற்றி-164-165)

‘நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே?’ (குழைத்த-7)

‘வேண்டத் தக்க(து) அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ’ (குழைத்த-6)

'மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே'
(திருப்பாண்டி-5)
'அவனரு ளாலே அவன்தாள் வணங்கி (சிவபுராணம்-18)
'தந்த(து)உன் தன்னைக் கொண்ட(து)என் தன்னை'(கோயில்-9)

முதலான திருவாசகத் தொடர்கள் சிவநேயச் செல்வர்களின் சிந்தையில் நிறைந்தவையாகும்.

இப்பாடல்கள் யாவும் அன்புநிலையையும் அருள்நிலையையும் புலப்படுத்தி இறையருள் இன்பத்தில் ஆழ்த்தவல்லன. திருக்கோவையார்ப் பாடல்களும் இவ்வாறே தூய இன்பத்தை வழங்க வல்லனவாகும்.

'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.'

என்னும் வெண்பாப் பாட்டு, திருக்கோவையார், திருவாசகம் ஆகியவற்றை அருள்நெறி காட்டும் பிற நூல்களோடு சேர்த்துச் சொல்லி இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றது.

போற்றப்பெறுபவரைப்பற்றிய செய்திகள் பாயிரமாக அறிதல் வேண்டுதலின், மாணிக்கவாசகர், அவர்தம் காலம், சமயம், அருளிச் செயல்கள் ஆகியன பற்றி ஆய்வு உலகம் கொண்டுள்ள கருத்துகள் ஓரளவேனும் இக்கட்டுரையில் வெளிப்படுத்தப்பெறுதல் இன்றியமையாததாகும். மற்றொன்று விரித்தலாக எண்ணுதல் தேவையன்று.

திருவாசகம் - வீரசைவ நூல் என்னும் கருத்து:

பேராசிரியர் ஆ.சிவலிங்கனார் அவர்கள் எழுதிய மாணிக்கவாசகர் காலமும் சமயமும்' என்னும் நூல், தமிழ் ஆய்வு உலகிற்கு ஓர் ஒப்பரிய கொடையினதாக, வரவினதாக அண்மையில் வெளிவந்துள்ளது. அதனுள், இருபத்திரண்டு கட்டுரைகள் அமைந்துள்ளன. மாணிக்கவாசகர், தேவார மூவர்க்கும் முற்பட்டவர் என்றும், வீரசைவக் கோட்பாடுகள் திருவாசகத்தில் விளக்கம்பெறுதல்கொண்டு அது வீரசைவ நூல் என்றும், மாணிக்கவாசகர் வீரசைவர் என்றும்

திருவாசகப் பாடல்களை அகச்சான்றுகளாகக் காட்டி இந்நூல் விளக்குகின்றது.

மாணிக்கவாசகரின் காலம், மரபு பற்றிய சிக்கல்கள் :

'மாணிக்கவாசர் காலமும் ஆராய்ச்சியும்' என்னும் நூலின்கண் மறைமலையடிகளார், 'பொய்யடிமையில்லாத புலவர்' என்று சுந்தரர், தாம் பாடிய திருத்தொண்டத்தொகையில் குறிப்பிடுவது, மாணிக்கவாசகரையே என்றும், அவர் வடக்கிலிருந்து வந்த வீர சைவ மரபிற்கு உரியராய் அம்மரபினரால் தலைமையாசிரியராக வைத்துப் போற்றப்பட்டுவந்தமை கண்டே, தமிழ்நாட்டுச் சைவ சமயத் தெய்வ ஆசிரியரான சுந்தரமூர்த்தி நாயனார், தாம் அருளிச் செய்த திருத்தொண்டத்தொகையில், அவர்பெயரை வெளிப்படக் கிளந்து ஓதாது, 'பொய்யடிமையில்லாத புலவர்' என அவ்வரைக் குறிப்பால் ஓதினர்' என்பார்.

இவர்தம் இவ்விருகருத்துகளையும் மறுத்துரைப்பார் அறிஞர் க.வெள்ளைவாரணனார். அவர்தம் மறுப்புரை வருமாறு:

பொய்யடிமையில்லாத புலவர் யார்?

'பொய்யடிமை இல்லாத புலவர் எனத் திருத்தொண்டத் தொகையில் போற்றப்பெற்றவர், மறைமலையடிகள் முதலியோர் கருதுமாறு தனியடியாராகிய ஒருவர் அல்லர். மெய்ம்மை நெறிநின்று இறைவனைப் போற்றிப் பரவும் பெருங்கூட்டத்தினராகிய பலரையும் இத்தொடர்குறித்து நிற்பதென்னும் உண்மையைத் திருத்தொண்டத் தொகைக்கு வகைநூலாகத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பிகளும், விரிநூலாகத் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழாரடிகளும் தெளிவாகக் கூறியுள்ளார்கள். குடந்தை நகருக்கு அருகே இப்பொழுது, தாராசுரமென மருவி வழங்கும் இராசராசேச்சுரத் திருக்கோயிலிற் சோழமன்னரால் அமைக்கப்பட்ட திருத்தொண்டத் தொகையடியார்களைக் குறிக்கும் சிற்பங்களில், பொய்யடிமையில்லாத புலவரைக் குறித்த சிற்பத்தில் அடியார் பலர் குறிக்கப்பட்டிருத்தலைக் காண்கின்றோம். ஆதலால் பொய்யடிமையில்லாத புலவர் என்னும் தொடர், தனியடியார்

ஒருவரைக் குறித்ததன்றென்பதும் தொகையடியார்களையே குறித்ததென்பதும் நன்கு தெளியப்படும். சிவபெருமானார் வலிய வந்து வழக்குப் பேசித் தடுத்தாட்கொள்ளப்பெற்ற வன்றொண்டர் மாணிக்கவாசகர் பெயரை வெளிப்படக் கிளந்தோதும் மனவலியின்றிப் பொய்யடிமை இல்லாத புலவர் எனக்குறிப்பாலுணரவைத்தாரென்னுங்கூற்று, வன்றொண்டரது மனவியல்புக்கு முற்றும் முரணாகும். சுந்தரர் காலம் முதல் இன்று வரை பொய்யடிமையில்லாத புலவரைத் தொகையடியாராக வைத்து வழிபட்டுவரும் தொன்னெறி வழக்கிற்கும் இது முரண்படுகின்றது. அன்றியும் பாண்டி நாட்டுத் திருவாதவூரிற் பிறத்தருளிச் சைவசித்தாந்த மெய்ந்நூல் இலக்கியமாகத் திகழும் திருவாசகச் செழுமறையைத் திருவாய் மலர்ந்தருளிய மணிவாசகப் பெருமானை வடக்கிலிருந்து வந்த வீரசைவ மரபினரெனத் துணிந்து கூறுதல் சிறிதும் ஏற்புடையதன்றாம்.

டாக்டர் தமிழண்ணல் அவர்கள் தாம் எழுதியுள்ள 'புதியநோக்கில் திருவாசகம்' என்னும் ஆய்வு நூலில் 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்னும் தொடர் யாரைக்குறிக்கிறது? என்பதைத் தெளிவுறுத்தும் வகையில் தம்கருத்துகளை முறைப்படுத்திக் காட்டுகின்றார்.

திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார்நம்பி,

'தரணியில் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க மதில்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயும் திருவால வாய்அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே'. (49)

என்று, பொய்யடிமையில்லாத புலவரைக்குறித்துப்போற்றுகின்றார்,

தமிழண்ணல் அவர்கள் 'சிவன் வழிபாடு சங்க காலத்தில் இருந்ததுண்மையே. ஆயின் அரன் சேவடியை நாற்பத்தொன்பது சங்கப் புலவரும் பாடினர் என்பது பிற்காலப் புராணக்கதைகளின்படி சரியே தவிர, சமூக இயல்படியும், வரலாற்றின்படியும், கிடைத்துள்ள இலக்கியங்களின்படியும் முறையாகுமா?

கபிலர், பரணர், நக்கீரர் சிவனைப் பாடிய பாடல்கள் யாவை? கதைகளேனும் முழுமையாக உளவா?

பொய் கூறாத புலவர் என்றால் பொருந்தும். ,பொய்யாச் செந்நா, 'பொய் கூறேன்' 'மெய்கூறுவல், போன்ற தொடர்களால் பொய்யறியாப் புலவர் எனலாம். பொய்யடிமையில்லாத என்ற சமய வழிபட்ட சொல் சங்கப் புலவர்களுக்குப் பொருந்துமா?' என்று வினவுகின்றார்.

இவ்வினாக்களின் வாயிலாகப் பொய்யடிமையில்லாத புலவர்எனப் படுவோர் சங்கப்புலவர் அல்லர் என்னும் கருத்தைக் கூறி,அத்தொட ரால்போற்றப் பெறுவோர் மாணிக்கவாசகரும், அவருள்ளிட்ட திருப் பெருந்துறை அடியார்களுமே' என்பதைத் திருவாசக அகச்சான்று களைக் கொண்டு நிறுவுகின்றார். அவ்வடிப்படையில், முடிபாக.

1) 'மாணிக்கவாசகருக்கு இறைவன் திருப்பெருந்துறையில் நேரில் வந்து ஞானாசிரியனாக உபதேசித்துப் பிரிந்து சென்றான்.

2) பிரிந்து சென்றபோது பல அடியார்களை வானுலகிற்கு அழைத்துக் கொண்டான்; திருத்தம் என்ற திருக்குளத்தில் நெருப்புப் பிழம்பு தோன்றும்போது, அதில் புகுந்து பூதவுடல் நீத்துப் போதவுடல் பெற அருளினான்.

3) மாணிக்கவாசகரை மட்டும் தனித்து 'உலகில் இருக்க' என்றும் இறுதியில் 'தில்லை வருக' என்றும் பணித்தான். அவர் பல காலம் உலகிலிருந்து சோதனைகட்கு ஆளாகித் தில்லை சென்று இறைவெளியிற் கலந்து இன்புற்றார்.

மாணிக்கவாசகரை அன்று இறைவன் 'இவ்வுலகில் இருத் தியது' கண்ணகியைக் கோவலன் 'இருந்தைக்க' என்பதற்கு நிகராகும்.

மன்னன் தந்த அரசின் பொருளைச் செலவிட்ட தவற்றுக்கு முதற் காரணமான மணிவாசகரும், துணைக்காரணமாக நின்ற பிற அடியார்களோடு இறையருளிற் கலந்திருப்பாராயின் இவர்கள் அனைவரும் செய்தது, பொய்ம்மையே அன்றோ? என உலகம் எள்ள நேரும். எனவே சோதனைகளுக்கு ஆட்பட்டு, பொய்ம்மை அன்று என மன்னனே ஏற்கும்வரை சோதனைகளை ஏற்றுப் பிறகு மாணிக்கவாசகர் தில்லை சென்றதே ஏற்புடைய செயலாகும்.

எங்ஙனம் கண்ணகி தலையாய கற்பு என எண்ணக் கணவனுடன் உயிர் நீத்துவிடாது பின்னும் இருந்து கணவன் குற்றமற்றவன் என உயிர்நீத்ததே கற்புடையாள் ஒருத்தியின் பொற்புடைய செயலாகும். மாணிக்கவாசகரும், அன்றே இறையருளில் கலந்துவிட்டவர்களைத் தலையாய அன்பினர் என ஓரிடத்தில் குறிக்கின்றார். தாமும் தலையாய அன்பினர் என்பதை அவர் நிலைநாட்டக் கருதி, பிற அனைவருடனும் ஒருசேர மாய்ந்து விடாமல், பல காலம் இருந்து, நலிந்து வருந்தினார். அங்ஙனம் அவர்க்கு ஏற்பட்ட அனுபவமே சிவ அனுபவமாக அமைந்தது. 'உலகம் பொய்யடிமை இல்லாத புலவர்' என்று போற்ற வாய்ப்பேற்பட்டது.

எனவே 'பொய்யடிமையில்லாத புலவர்' என்னும் திருத்தொண்டத் தொகைத் தொடர், மாணிக்கவாசகரை மட்டுமின்றி, அவரோடு துணைநின்ற அனைத்து அடியார்களையும் பொதுவாகவும், அவர்க்கெல்லாம் தலைநின்று, தவற்றை முழுவதும் தன்மேலிட்டுக் கொண்டு, அத்தவற்றுக்குத் தீர்வுகண்ட தலையாய அடியாராம் மாணிக்கவாசகரைச் சிறப்பாகவும் குறிக்கும் என்பதே பொருத்தமாகும்.'5

இவ்வாய்வுச் சிந்தனைக்கு ஆதரவாக அவர்களால் காட்டப் பெறும் திருவாசகப் பாடல் இதுவே.

'நாயி னேனை நலமலி தில்லையுள்
கோலம் ஆர்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை ஈங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியில் பாயவும்
மாலது ஆகி மயக்கம் எய்தியும்
பூதலம் அதனில் புரண்டுவிழ்ந் தலறியும்
கால்விசைத்(து) ஓடிக் கடல்புக மண்டி
நாத நாத என்றழு(து) அரற்றிப்
பாதம் எய்தினர் பாதம் எய்தவும்'

(கீர்த்தி-127-137)

இச்சிக்கலின் முடிபாகச் சிந்திக்கும்போது, 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்னும் தொடர் மறைமலையடிகளின் கருத்து அடிப்படையில் மணிவாசகரைக் குறிப்பதாகவும், வெள்ளைவாரண னாரின் 'பலரை உணர்த்துதல்' என்னும் கருத்து அடிப்படையில் மாணிக்கவாசகருடன் இருந்த அடியார் பலரையும் குறிப்பதாகவும் அறிகிறோம். திருவாசகப் பாடற்சான்றுகளாலும், தாராசுரச் சிற்பக் குறிப்புகளாலும் விளக்கமும் தெளிவும் வெளிப்படுகின்றது. இக் கருத்தே பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

நம்பியாண்டார்நம்பிகள், மாணிக்கவாசகரை வெளிப்படப் பாடாததேன்?

நம்பியாண்டார்நம்பிகள், தாம் பாடிய கோயில்திருப்பண்ணியர் விருத்தத்தில் வரும் பாடலொன்றில் மணிவாசகரையும், அவரருளிய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் பற்றித் தெள்ளத்தெளி வாக விளக்கியுள்ளார். அப்பாடல் வருமாறு:

'வருவா சகத்தின் முற்றுணர்ந் தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண் டேயுமற் றப்பொருளைத்
தெருளாத உள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே!'

(பதினோராம்திருமுறை-கோயில்பண் - 58)

இவரே, சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகை நூலுக்கு வகை நூலாகத் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில், 'பொய்யடிமையில்லாத புலவர்' என்பதற்குத் தாம் நன்கு தெரிந் திருந்த மாணிக்கவாசகரைப் பற்றிக் குறிக்காமல், கபிலர், பரணர், நக்கீரர் முதலியோராகிய சங்கப் புலவரைக் குறிக்கவேண்டிய காரணம் என்ன என்பது ஆய்தற்குரியதாகும்.

சுந்தரர் காலத்துக்குப் பின்னும், நம்பியாண்டார் நம்பிகளின் காலத்துக்குமுன்னும் மாணிக்கவாசகர்தோன்றியவராதல்வேண்டும். அதனால்தான் சுந்தரர் எழுதிய குறிப்பிட்ட பாடல் தொடர்க்கு மாணிக்கவாசகரைக் குறிப்பிடுதல் பொருத்தமின்று என்று கருதிச் சங்கப் புலவரைக் குறிக்க வேண்டியதாயிற்று என்றும், அதே சமயத் தில் மாணிக்கவாசகர் அருளிய திருச்சிற்றம்பலக்கோவை நூலில்

தாம் கொண்டிருந்த பெருமதிப்பினைப் புலப்படுத்தும் வகையில், கோயில் பண்ணியர் விருத்தத்தில் மாணிக்கவாசகரையும், அவர்தம் அருளிச்செயல்களையும் போற்றியுள்ளார் என்றும் எண்ணவேண்டிய தாகின்றது.

மாணிக்கவாசகர் காலம்:

'மாணிக்கவாசகர் காலத்தைப் பற்றிய ஆராய்ச்சியாளர் பல்வேறு கருத்துக்களைக் கொண்டுள்ளனர். ஒவ்வொருவரும் தாங்கள் எழுதிய கருத்துக்களை நிலைநாட்டுவதற்குப் பல்வேறு ஆதாரங்களைக் காட்டுகின்றனர். எல்லோருடைய ஆராய்ச்சியும், அடிகளார் கடைச்சங்க காலத்துக்குப்பின் தொடங்கி 11 ஆம் நூற்றாண்டுவரை உள்ள காலங்களில் ஏதேனும் ஒரு காலம் மாணிக்கவாசகர் வாழ்ந்த காலம் என முடிவு செய்கின்றது. இக்கால ஆராய்ச்சிகளைத் தொகுத்து ஆராய்ந்து மாணிக்கவாசகர் காலம் கி. பி. 3 ஆம் நூற்றாண்டு என முடிவுசெய்து தருமை ஆதீனத் திருவாசக நூல் வெளியீட்டில் மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

திருமலைக் கொழுந்துப் பிள்ளை அவர்கள் முதல் நூற்றாண் டாகவும், பொன்னம்பலப் பிள்ளை அவர்கள் இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டாகவும், மறைமலை அடிகளார் அவர்கள் மூன்றாம் நூற்றாண்டாகவும், வில்சன்வுட் என்பவர் ஏழாம் நூற் றாண்டு என்றும், ஜி. யு. போப் ஏழு. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டு என்றும், சூலின் வின்ஸன் ஒன்பது அல்லது 10 ஆம் நூற்றாண்டு என்றும் மிஸ்டர் கௌடி என்பவர் எட்டிலிருந்து 10 ஆம் நூற்றாண்டுக்குள் என்றும் டாக்டர் ரோஸ்ட்டு என்பவர் பதின்மூன்று அல்லது 14 ஆம் நூற்றாண்டு என்றும் நெல்சன் என்பவர் ஒன்ப தாம் நூற்றாண்டு என்றும், கே. ஜி. சேஷையர் மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டு என்றும், சீனிவாசப் பிள்ளை ஒன்பதாம் நூற் றாண்டு என்றும் சி. கே. சுப்பிரமணிய முதலியார் மூவர்க்கும் முந்தியவர் என்றும் கூறுகின்றனர்.

மூவர்க்கும் முந்தியவர் மாணிக்கவாசகர் என்ற கருத்தே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. மாணிக்கவாசகர் காலத்தில் நம் நாட்டில் தலையெடுத்திருந்த புறச்சமயம் பௌத்தம் ஒன்றே

எனத்தெரிகிறது. மூவர் காலத்தில் பௌத்தம் ஓரளவிலும், சமணம் சிறப்புற்றும் இருந்தன. மாணிக்கவாசகர் வாக்கில் சமண சமயக் குறிப்பேதும் காணப்பெறவில்லை. திருவாசகத்தில் விநாயகரைப் பற்றிய குறிப்பு ஏதும் காணப்பெறவில்லை. இன்ன பல காரணங் களால் மாணிக்கவாசகர் மூவர்க்கும் முந்தியவர் என்று கொள்ளலாம்.''6

'மாணிக்கவாசகர் ஆசீவக மதத்தவர்களுடைய வீடுபேற்றுக் கொள்கையைப் பலவிடத்தும் மறுத்துள்ள காரணத்தால் அம்மதத் தவர் செல்வாக்கு மிகவும் பரவியிருந்த கி.பி. 3ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனலாம்.'7

'மறைமலையடிகள், கா. சுப்பிரமணியபிள்ளை, சி.கே. சுப்பிர மணிய முதலியார் ஆகிய மூன்று பேரறிஞர்களும் முறையே தங்கள் 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்', 'மாணிக்கவாசகர் சரித் திரம்' 'மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை' என்ற உரை நடை நூல்களில் தாபித்துள்ளார்கள். அடிகள் ஏனைய மூன்று சமய குரவர்க்கும் முற்பட்டு கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் இருந்தவ ரென்பதே ஆராய்ச்சியில் துலங்கும் முடிபாகும்.'8

பேராசிரியர் ஔவை. சு.துரைசாமிபிள்ளை அவர்கள்,மாணிக்க வாசகரின் காலம் பற்றி எடுத்துரைக்கும் அறிஞர்களுடைய கருத் துகளின் வன்மை மென்மைகளை ஆய்ந்து 'திருவாதவூரடிகள் திருஞானசம்பந்தர் முதலிய மூவருக்கும் காலத்தால் முற்பட்டவரல் லர்; பிற்பட்டவரே என்பதும், அவரால் சிறப்பிக்கப்பெற்ற வரகுண மகாராசன், இரண்டாம் வரகுணனல்லன்; முதல் வரகுணனே என் பதும், எனவே அவர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி யில் இருந்து சிறந்தவர் என்பதும் தெளிவாய் விளங்குகின்றன என்று அறுதியிட்டுரைக்கிறார்.

அறிஞர் T. P. பழநியப்ப பிள்ளையவர்கள் தில்லையம்பலத்தில் திருமால் கிடந்த கோலமாய் விளங்குவதை,

'புரங்கடந் தான்அடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாய்என் றிரப்பத்தன் ஈரடிக் கென்இரண்டு
கரங்கடந் தான்ஒன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றில்அம் மாயவனே'

(திருக்கோவையார்-86)

என்று மாணிக்கவாசகர் பாடியுள்ளார். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சேரமான் பெருமாள் முதலியோரும், திருமழிசை ஆழ்வாரும் தில்லையில் திருமால் இருக்கும் இருப்பைக் குறிக்க வில்லையென்றும், தில்லைக் கோயிலுள்ள திருமால் கோயிற் பகுதியாகிய திருச்சித்திர கூடம் அவர்கள் காலத்துக்குப் பின்னே தோன்றியது என்றும், திருமங்கையாழ்வாரும், குலசேகர ஆழ்வாரும் தில்லைத் திருச்சித்திர கூடத்தைப் பாடியிருக்கும் திறத்தினை எடுத்துக்காட்டி, அவர் பாட்டுகளால் அச்சித்திரகூடம் அவர்கள் காலத்தே புதுவதாக எடுக்கப்பட்டதெனத் தெரிகிறதென்றும் திருமங்கையாழ்வார் காலத்தவனான நந்திவன்ம பல்லவனே இச்சித்திரக்கூடத்தைக் கட்டியிருக்கவேண்டுமென்றும் அவன்காலம் கி. பி. 710-775 என்றும், எனவே அடிகள் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டுக்குப்பினபேயாம்' என்றும் கூறுகின்றார்.'10

பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் அவர்கள் 'மாணிக்க வாசகர், தேவார மூவர்க்கும் முற்பட்டவர் என்றுரைப்போர்தம் கருத்துக்களைத் தக்க காரணங்களுடன் மறுத்துப் பிற்பட்டவரே என்பதற்கான கருத்துகளைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளா.

'தேவார மூவரும், தம் காலத்துக்கு முன்னே வாழ்ந்தவர்களான சண்டீசர், காரைக்காலம்மையார், கண்ணப்பர் முதலானோரைப் பாடல்களில் குறிப்பிட்டுத் துதிக்குமாறு போல மாணிக்கவாசகரை எங்கேனும் ஒரு பாடலிலேனும் குறிப்பிடாத காரணத்தால் அவர், மூவர்க்கும் காலத்தால் பிற்பட்டவர் என்றும், பிற்பட்டவர் எனக் கருதப்பெறுகின்ற மாணிக்கவாசகர் ஏன் தமக்கு முன்னே தோன்றிய மூவரைப் பற்றியும் பாடவில்லையெனில், ஏனைய மூவரைப்போல பிறருடைய வரலாற்றில் அவர் ஈடுபட்டுப் பாடியதாகவே (கண்ணப்பரைத் தவிர) அறியக்கூடவில்லை என்றும் தம் கருத்தை விளக்குகின்றார் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள்.

மேலும் அவர்கள், ஞானசம்பந்தர் காலத்திய வழிபாட்டுமுறைக் கும், மாணிக்கவாசகர் காலத்தியவழிபாட்டு முறைககும், வேறுபாடு நிரம்ப உண்டு என்றும், மூவர் காலத்தில் ஆகமங்கள் மாணிக்க வாசகர் காலத்துப் பெற்ற சிறப்பைப் பெறவில்லை என்றும்,

மாணிக்கவாசகர் இறைவியின் குழற்சிறப்பு, அணிச்சிறப்பு, இடையழகு என்பதைப் பற்றி 47 இடங்களில் பாடுதல் இவர் காலத்தால் பிற்பட்டவர் என்று அறிவுறுத்துவதாவும் கூறுகின்றார், மூவரும் குறிப்பிடாத பல திருவிளையாடல்களை அடிகள் குறிப்பதும்இதற்கு அரணாக உள்ளதென்பார். தளவாய்புரச் செப்பேடு குறிப்பிடும் வரகுணனைப் பற்றி விளக்கி, அச்செய்திகள் உறுதிப்படுமானால் மணிவாசகர் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தார் என்று கொள்வதில் தவறில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

இராசராசனுடைய தேவாரப் பதியக் கல்வெட்டிலோ, அதற்கு முந்தைய கல்வெட்டுகளிலோ மூவர் பெயருடைய தேவாரம் பாடுவார் காணப்படுகின்றனரேயன்றி, திருவாதவூரன் என்னும் பெயரையோ, மாணிக்கவாசகன் என்னும் பெயரையோ உடைய பதியம் பாடுவார் யாரையும் காணமுடியாததால், அடிகள் பிற்காலத்தவர் என்ற கட்சிக்கு வலுவினைத் தருகின்றன என்பது காரைக்குடி சா. கணேசனாரின் கருத்தாகும்.

சமய குரவர் நால்வருள் தேவார மூவர், திருவவதார நிலையிலும் திருவடிப்பேற்று நிலையிலும் மாணிக்கவாசருக்கு முற்பட்டவர்களாகத் திகழ்ந்தமையால்தான் பின்னர்த் தோன்றிய அருளாளர்கள் யாவரும். தேவார மூவர்க்குப் பின்னரே மணிவாசகரைப் போற்றும் வரிசைமுறை கொண்டணர். திருமுறைகளிலும் மூவர் தேவாரமாகிய ஏழு திருமுறைகளுக்குப் பின்னரே திருவாசகம், திருக்கோவையார் எட்டாம் திருமுறையாக இடம்பெறலானமை அறியற்பாலதாகும். பட்டினத்தடிகள்,

'வித்தகப் பாடல் முத்திறத்(து) அடியரும்
திருந்திய அன்பின் பெருந்துறைப் பிள்ளையும்'

(திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, 98:30,31)

என்று மேற்கண்ட முறைவைப்பிலேயே பாடியுள்ளார்.

சிக்கலுக்குத் தீர்வு அருளும் சிவப்பிரகாசர்:

எனவேதான், திருத்தொண்டத்தொகை நூலுக்கு விரிநூலாகத் திருத்தொண்டர்புராணம் பாடிய சேக்கிழார், வகைநூல் செய்திக்கு ஏற்பப் பாடவேண்டிய இலக்கிய மரபுக்கு இலக்காகினாலும் வகைநூலில் குறிப்பிட்டவாறு சங்கப் புலவர்களைக் குறித்துப் பாடாமல்,

பொதுநிலையில் புலவர்பெருமக்களைச் சுட்டுவதாகப்பாடியுள்ளார். இருப்பினும்அப்பாடல்கள் மாணிக்கவாசகரையும், அவர்தம் அருளிச் செயல்களையும் குறிப்பாகப் புலப்படுத்துவன போலத் தோன்று கின்றன.

‘செய்யுள்நிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே எனத்துணிந்து விளங்கியொளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமை யில்லாத புலவர்எனப் புகழ்மிக்கார்.’

(பெரிய. பொய்யடிமை-1)

இப்பாடலில் இடம்பெற்றுள்ள செய்யுள், புலவர் என்னும் சொற் -களைச் சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலையில் மாணிக்க வாசகரைத் துதிக்கும் பாடலில் எடுத்தாண்டுள்ளார். அப்பாடல் வருமாறு:

‘நல(ம்)மலி வாதவூர் நல்லிசைப் **புலவ!**
மன(ம்)நின்(று) உருக்கும் மதுர வாசக!
....
ஆயினும் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் **செய்யுள்** எழுதினன் அதனால்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி யறியா என்(பு)அணி வானே.’ (நால்வர். 24)

இதுவரை கண்ட ஆய்வுகளின் முடிபாகத் திருத்தொண்டர் திருவந்தாதியில் குறிப்பிட்டுள்ளவாறு, ‘பொய்யடிமை யில்லாத புலவர்’ என்பார் சங்கப்புலவர்கள் அல்லர்; மரியாதைப் பன்மையடிப் படையில் கருதுவதானால், மாணிக்கவாசகரையே அத்தொடர் குறிக் கும் என்றும் பலர்பால் அடிப்படையில் கருதுவதானால், அவரையுள் ளிட்ட அடியார்களையும் குறிக்கும் என்றும் தெரியலாகிறது. வகை நூலின் கருத்திற்கேற்ப விரிநூல் அமைதல்வேண்டும்என்னும்நியதிக் கேற்பவும், ஆனால் அதேசமயத்தில் தாம் அறிந்த உண்மைச்செய்தி களைக் குறிப்பாக வெளிப்படுத்தவேண்டும் என்னு நோக்கில் அத்தொடர்க்கு மாணிக்கவாசகரை மனத்தில்இருத்தியும் சேக்கிழார் பாடியுள்ளார் என்றும் தெரியலாகிறது; மாணிக்கவாசகர், தேவார மூவர்க்கும் பிற்பட்டவர் என்றும் உறுதிசெய்யப்பெறுகிறது.

திருவாசகப் பாடல்களில் யாண்டும் மாணிக்கவாசகர் தம்மைப் பொய்யன் என்றும், தம் அன்பு பொய்யானது என்றும், தாழ்வு எனும் தன்மையோடுபடியிருக்கும் திறங்களை உள்ளுணர்ந்த சிவப்பிரகாசர் 'பொய்யடிமையில்லாத புலவர்' மாணிக்கவாசகரே எனத்தெளிந்து, அத்தெளிவிற்குச் சான்றாகச் சேக்கிழார் பாடல்களையும் நினைவு கூர்ந்து, **புலவர், செய்யுள்** முதலானசொற்களை நால்வர் நான்மணிமாலையுள், மாணிக்கவாசகரைத் துதிக்கும் பாடலில் வைத்துப் போற்றியுள்ளார் என்பதும் புலனாகின்றது. **பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவர்** என்று மாணிக்க வாசகரைச் சிவப்பிரகாசரின் சமகால அருட்புலவரான குமரகுருபரர் ஏத்துதலும் மேற்கண்ட உண்மைக்கு உரமூட்டுவதாகும்.

தமிழகத் தொன்மைச் சமயம் சைவமும் வீரசைவமுமே:

பாண்டியநாட்டுத் திருவாதவூரிற் பிறந்தருளிச் சைவசித்தாந்த மெய்ந்நூல் இலக்கியமாகத் திகழும் திருவாசகச் செழுமறையைத் திருவாய் மலர்ந்தருளிய மாணிக்கவாசகப் பெருமானை, வடக்கிருந்து வந்த வீரசைவ மரபினரெனத் துணிந்து கூறுதல் சிறிதும் ஏற்புடையது அன்று,' (14) என்று மறைமலையடிகளாரின் கருத்து மறுக்கப் பெறுகிறது.

வீரசைவம், வடநாட்டிலிருந்து தமிழகத்துக்கு வந்த சமய மன்று; தமிழகத்தின் தொன்மைச் சமயமே என்பதற்கான கருதுகோள்கள் இவண் காண்பதற்குரியனவாகும்.

புதைபொருளாராய்ச்சியாளர் சர். ஜான்மார்ஷெல் என்னும் மேனாட்டறிஞர், மொஹஞ்சதாரோ, ஹாரப்பா, முதலிய சிந்துநதிப் பகுதிகளை அகழ்வாராய்ச்சி செய்து, அங்குக் கிடைத்த சிறுசிறு சிவலிங்கங்களைக் கொண்டு, தம் கருத்துகளைக் கீழ்க்காணும் வகையில் விளக்குகின்றார்:

'சிந்துசமவெளி பிரதேசத்தில் ஒன்றேகால் அங்குலத்திலிருந்து, பெரிய இலிங்கங்கள் வரை இருந்ததாகவும், அஷ்டபந்தனத்தால் போர்த்தப்பட்ட சிறிய இலிங்கங்களைத் தங்கள் உடலில் தரித்த மக்கள் அங்கு வாழ்ந்திருந்தனர் என்றும், அங்கு மட்டுமன்று; எகிப்திலும், இத்தாலி தேசத்திலும் அப்பொழுது வாழ்ந்து வந்தனர் என்றும் அறுதியிட்டுச் சொல்லுகின்றார்.'15

'முதன்முதலாக மனித இனம் தோன்றியதே தமிழகத்தில்தான் என்றும், பண்டைத் தமிழர்தம் சமயம், சிவ வழிபாட்டுச் சமயமே என்றும், பண்டைத் தமிழர் இந்தியா முழுவதும் மிகப் பழங்காலந் தொட்டே பரவி, விரவி வாழ்ந்தனர் என்று வரலாற்று நூல்கள் விரிவாக விளக்குகின்றன.'16

மேற்கூறிய ஆதாரங்களால் பண்டைத் தமிழர்தம் சமயமாகிய சைவ சமயம் தமிழகத்தே இரு நெறிகளில் இருந்தமை/வளர்ந்தமை தெளிவாகிறது. ஒன்று சிவலிங்கத்தைத் தரையில்பீடமமைத்து நிறுவி வழிபடும் சைவ நெறி; பிறிதொன்று அதனை உடலில் அணிந்து வாழும் வீர சைவ நெறி.

தமிழகத்திருக்கோயில்களில் வழிபடப்பெறும் சண்டீசர்முதலான தெய்வத் திருவுருவங்களின் திருநெற்றியின் மேற்பரப்பில் சிறு சிவ லிங்கங்கள் வடிவமைக்கப்பெற்றிருப்பதை நோக்கச் சிவலிங்கத்தை உடலில் தரித்து வாழும் சிவநெறி தமிழகத்தில் தொன்றுதொட்டே இருந்துவருவதை அறியலாம்.

முதன்முதலாகக் கற்கத்தொடங்கும் பள்ளிப்பருவப்பிள்ளைக்குக் கூட்டல்கணக்கைக் கற்பிக்கும் ஆசிரியர், தாமே விரல்விட்டு எண் களை என்றோடு ஒன்று கூட்டிக் கற்பிக்குமாறு போலவும், திருநீற் றின் தெய்வநலத்தைப் போற்றி மக்கள் பயன்கொள்ளவேண்டும் என்பதற்காகவே, 'இறைவன் தன் திருமேனியில் திருநீறு பூசியிருப் -பதைச்'17 சொல்வதுபோலவும், அடியார்கள் இலிங்கத்தைத் தம் உடலில் அணிந்து வழிகாட்டுவதாக எண்ணுதல் வேண்டும்.

''இலிங்கதாரணம் 'சரஸ்தலம்', 'உரஸ்தலம்', 'சிரஸ்தலம்' என்று மூன்று இடங்களில் தத்வரீதியாக அணிவது உத்தமம்.''18 இவ்விடங்கள் முறையே கழுத்து, மார்பு, தலை ஆகியனவாகும்.

வீரசைவத் தொன்மையைக் காட்டும் விளக்கங்கள் :

"சிவதாரணம் வீரசைவத்தின் முக்கிய அனுஷ்டானம். இலிங்க வழிபாடு ஆத்மார்த்தமாகவோ, யதார்த்தமாகவோ மிகத் தொன்மை யானதாக வந்துள்ளது. **காமிக ஆகமத்தில்** கூறப்பட்டுள்ள அஜாமிளர் சரித்திரத்தில் அவர்தம கழுத்தில் லிங்கமாகத் தமது

ஆபரணங்களை அணிந்துகொண்டதால் மித்ரகுப்தன் அவரை வீரசைவர் என மதித்து அடிபணிந்து வணங்கினான் என்று கூறப் படுகிறது. **மகாபாரதத்தில்** அனுசாசன பர்வதத்தில் தர்ம ராஜருக்கும் பீஷ்மருக்கும் நடந்த சம்பாஷணையில் அக்காலத்தில் வீரசைவ மதம் இருந்ததாகத் தெரியவருகிறது. மேலும் **மகா ஸ்கந்தபுராணத்தில்** சங்கர சம்ஹிதையில் ஸ்வேதனின் குமாரனான பிங்கலன் என்ற ஓர் அந்தணன் சதானந்த முனிவரால் வீரசைவனாயினான் என்பதோர் கதை காணப்படுகிறது. ஆதிசங்கர பகவத்பாதரின் தாயார், சிவபிரானை ஜங்கம ரூபத்தில் வணங்கி மகப்பேறு பெற்றார் என்ற கதை **சங்கர விஜயத்தில்** கூறப்படுகிறது. **மகா சிவபுராணத்தில்** பரமேசுவரன், தன்னை லிங்க ரூபமாக வழிபடுபவனையே மிகப் பிரியப்படுவதாகக் கூறப்படுகிறது. இலிங்கத்தை அங்கத்தில் தரிப்பது புதிய வழக்கம் அல்ல. பிரம்ம விஷ்ணுக்களும், லக்ஷ்மியும், கௌதமர் முதலிய ரிஷிகளும் இலிங்கத்தை சிரசில் தரித்தார்கள் என்று **இலிங்க புராணம்** கூறுகிறது.

விஷ்ணுப் பிரம்ம தயோ தேவா முனயோ கௌதமாதய:
தார யந்தி சதாலிங்க முத்த மாங்கே விசேஷத:

பாசுபதந்திரம், காசி காண்டம், ஸ்ரீசைவ காண்டம் முதலியன அகத்தியர், கௌதமர், காசிபர், உபமன்யு முதலியோர் லிங்க தாரணம் செய்து பஞ்சாட்சர ஜெபம் செய்தார்கள் எனக் கூறுகின் றன. நளன், காகிஸ்தன், புரூரவன் என்ற அரசர்களும் இலிங்கா யதர்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. பரமேசுவரன் பரமார்த்த மாகத் திருவையாற்றிலும், உமை யதார்த்தமாகக் காஞ்சியிலும் சிவலிங்க பூசை செய்து உலகத்தவர்கட்கு வழிகாட்டினர் என்று புராணங்கள் கூறுகின்றன.”19

தமிழத்தில் சைன, பௌத்த மதங்களாகிய புறச்சமயங்களைத் தடுத்து, சைவ நெறி வளர்க்க அருளாளர்கள் தோன்றி, பக்தி இயக் கம் உருவாகிய அச்சூழலில், தமிழகத்தை ஆண்ட மன்னர்கள், வட நாட்டு ஆரியர்க்குத் தமிழகத்து அரசவையில் குருமார்களாகவும், ஆலயங்களில் அருச்சகர்களாகவும் இருக்க வாய்ப்புகளை நல்கிப் போற்றினார்கள். ஆதலால் ஆலயங்களில் வடமொழியிலேயே

அருச்சனைகள் நடைபெறலாயின. கடவுள் வழிபாடு வணிக நோக்கிலாயிற்று; சாதி வேறுபாடுகள் வளரலாயின. இதே சூழல் கன்னட நாட்டிலும் இருந்தது.

அங்கு 'வருணாச்சிரமம், சூதகங்கள் முதலியன இலிங்கத்தை அங்கத்தில் அணிவதற்கு இடையூறாக அமைந்தன. ஆராத்யர் என்பவர்கள் இலிங்கதாரணம் செய்துகொண்டும் வருணாஸ்ரமங்களை அனுஷ்டித்தார்கள். காயத்தூய்மை செய்யமாட்டாத இலிங்க தாரணம், பயனில்லையாகையால், நிஷ்பேந்திரரான பசவதேவர் வருணாசிரமத்தை நிராகரித்து, யாராயினும் அங்கத்தில் இலிங்க தாரணம் செய்துகொண்டு உய்வடையலாம் என்ற கொள்கையை ஸ்தாபித்தார். எனவே லிங்காயதர்களெல்லாம் வீரசைவர்கள் அல்லர்; ஆனால் எல்லா வீர சைவர்களும் லிங்காயதர்களே.'[20]

இவ்வாறு கன்னட நாட்டில், பசவதேவரால் வீர சைவம் மறுமலர்ச்சி பெற்றது. அதனால் வீரசைவர்களின் இலிங்க வழிபாடு மீண்டும் புத்துயிர் பெற்றுத் தழைக்கலாயிற்று.

தமிழுக்கு இலக்கணம் எழுதி, அம்மொழியை வளர்த்த அகத்தியரைத் தமிழையே தோற்றுவித்தவர் என்றும், சைவம் வைணவம்முதலானஆறு சமயக்கடவுளர்க்கும் பக்திப்பாமாலைகளைப் பாடியருளிய ஆதிசங்கரர் ஆறு சமயங்களையும் தோற்றுவித்தவர் என்னும் பொருளில் அவர்தம்மை 'ஷண்மத ஸ்தாபனாச்சாரியர்' என்றும் பிழையாகச் சொல்வதுபோலவே, தமிழகத்தில் தொன்மைக் காலந்தொட்டு இருந்துவரும் வீர சைவ நெறி, கன்னட நாட்டில் இடைக்காலத்தில் பசவரால் புத்தொளிபெற்றுப் பரவியதுகொண்டு அவர் காலத்துக்குப்பிறகே தமிழகத்துக்கு அச்சமயம் வந்ததென்றும் அது வடநாட்டு நெறி என்றும் சொல்லுவது அமையும்.

'எல்லா சைவசமயங்களும் ஸ்ரீ நந்திரகேசுவரப்பெருமானை அகச் சந்தான முதற்குரவராகக் கொண்டுள்ளன. புறச்சந்தானத்தில் பிரபு தேவர் அல்லமரை முதற்குரவராகக் கொள்வது வீரசைவ மரபு. வீரசைவம் முன்போந்த எல்லா அருளாளர்களையும் புராதனர்கள் அல்லது சாரணர்கள் என்று ஏற்றுக்கொள்ளும் பசவபுராணத்தில், சைவ நாயன்மார்கள் சரிதங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

சிவசரணர்கள் கன்னடம், தெலுங்கு, மகாராஷ்டிரம் தமிழ்ப் பிரதேசங்களில் விளங்கினர். தமிழ்நாட்டில் பல வீரசிங்காதனங்கள் வீர சைவத்தை வளர்த்து வந்தன. இவ்வாதீனங்களில் விளங்கியபல ஞானிகள் சித்த புருஷர்களாகவும் விளங்கினார்கள். ஆதிசிவப்பிரகாச சுவாமிகள், சிவஞான பாலய சுவாமிகள், சாந்தலிங்க சுவாமிகள், குமாரதேவர், சாரங்கதேவர் முதலானோர் பரம ஞானிகள், பலஞான நூல்களையும் இயற்றினார்கள். 21

மேலும் திருவாசக மூல ஓலைச்சுவடியைக் கொண்டுள்ள புதுமை அம்பலத்தாடும் ஐயர் திருமடம், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் திருமடம், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் திருமடம் முதலானவைகளும்வீரசைவத் திருமடங்களாகும். இத்திருமடங்களில் தோன்றிய ஞானியர்கள் பேச்சாற்றலிலும், எழுத்தாற்றலிலும் வல்லவர்களாக விளங்கிவருதலும் அவர்தம் ஞானநூல்களின் பெருக்கமும் உடன் எண்ணத்தக்கனவாகும்.

இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்போது, வீரசைவ நெறி சைவநெறி போலவே பழங்காலம் முதற்கொண்டு பின்பற்றப் பெற்றுவந்த வாழ்க்கை நெறியாகும். வீரசைவ சமயதத்துவ நெறி கள் இன்றியமையாமை காரணமாகப் பிற்காலத்தில் உருவாக்கப் பெற்றன.

சைன, பௌத்த சமயங்களின் வருகையால், தமிழகத்தில் பக்தி இயக்கம் தோன்றிச் சைவத்திருமுறைகள், வைணவத் திவ்யப்ரபந் தங்கள் கிடைத்தன. அவ்வாறே, ஆதிசங்கரர் தமிழகத்துக்கு வருகை தந்து பிரம்மசூத்திரத்துக்கு அத்வைத நிலையில் தத்துவ உரை வரைந்து பரப்பினார். அதனால் சைவத்திருமுறைகளின் உட்பொரு ளாக விளங்கும் சைவசித்தாந்த தத்துவங்கள் சந்தான குரவர்களால் உருவாக்கப்பெற்றன. வீரசைவ சமய இலக்கணம் குறித்துப் பேராசி ரியர் ஆ. சிவலிங்கனார் அவர்களின் கருத்துகள் ஏற்கத்தக்கனவே. அவர் கூறுவன :

'வீரசைவ நெறியை விளக்கும் இலக்கண நூல்கள் தமிழில் பழையனவாக ஒன்றும் இல்லை. மாணிக்கவாசகருக்குப் பிற்காலத் தில்தான் தமிழகத்தில் இலக்கண நெறியோடு வீரசைவம் பரவலா

யிற்று. எனவே மாணிக்கவாசகர் காலமானது வீரசைவ சமயத் தொடர்பான அட்டாவரணம் சடுத்தலம் போலும் கோட்பாடுகள் தமிழகத்தில் பரவுவதற்கு முற்பட்டகாலம்.22

விரசைவர்களுக்கு விதிக்கப்பட்ட விதிகள் (1) பஞ்சாசாரங்கள் (ஐவகை ஒழுக்கம்) (2) அஷ்டாவரணம் (எண்வகைக் காப்பு) (3) ஷட்ஸ்தல யோகம் (அறுவகை சம்பந்தம்) ஆகிய மூன்றுமாகும்.

சிவாச்சாரம், இலிங்காசாரம், சதாசாரம், பிருத்யாசாரம் கணாசாரம் என்னும் பஞ்சாசாரங்களில் பெரும்பாலானவை சைவர் களால் மேற்கொள்ளப் பெற்றுவரும் ஒழுக்கமாகும். திருவைந் தெழுத்து, திருநீறு, உருத்திராக்கம், குரு, லிங்க, சங்கமபத்தி, பாதோதகம், பிரசாதம் என்னும் எண்வகைக் காப்புகள் சைவர்களால் போற்றப்பெற்று வருவதனைப் பெரியபுராண அடியார்களின் வரலாறுகள் உணர்த்துகின்றன.

ஷட்ஸ்தலயோகம் : 'பரம் பொருள் பெயர், வடிவம், செயல் என்ற தன்மைகளில் யாதுமில்லாமல் இது என்று உணர அரியது. இந்தப் பொருள் (பரசிவத்தலம்) தன்னுள் கூடிய சக்தியினாலே உலக உய்வு காரணமாக இலிங்கம், அங்கம் என்று (அதாவது இலிங்கத்தலம், அங்கத்தலம்) இரண்டாகின்றது.

அவை ஒவ்வொன்றும் மூன்றாகின்றன அவை 1இஷ்ட, 2பிராண, 3பாவலிங்கங்கள்; 1தியாகாங்கம், 2போகாங்கம், 3யோகாங்கம், பின்னர் அவையே ஆறாகின்றன. அவையாவன:

(1) ஆசாரலிங்கம், (2) குருலிங்கம், (3) சிவலிங்கம் (4) ஜங்கமலிங்கம் (5) பிரசாதலிங்கம் (6) மகாலிங்கம். அதுபோல அங்கமும் (1) பக்தன் (2) மகேஸ்வரன் (3) பிரசாதி (4) பிராணலிங்கி (5) சரணன் (6) ஐக்கியன் என்று ஆறாகின்றது.

ஒவ்வொரு லிங்கத்துடன் அங்கம் ஐக்கியப்படுதலே ஸ்தலம் எனப்படுகிறது 23 இவற்றுக்கு இணையாக சைவத்தில் யோகநெறி யில் மூலாதாரம் முதலாக ஆறு ஆதாரங்கள் சொல்லப்பெறுகின்றன.

இவ்வாறு தமிழகத்தின் தொன்மைச் சமயமாகிய சைவசமயத்தினுள் அடங்கித் தமிழ்நாட்டுச் சைவத்தினின்றும் சில அனுட்டான முறைகளாலும், தத்துவ முறைகளாலும் சற்று வேறுபட்டுத் தனித்து நிற்கும் வீரசைவம் தமிழகத்தின் தொன்மைச் சமயமேயாகும். ஒரு மரத்தின் இரு கிளைகள் போல, சைவமும், வீரசைவமும் அமைகின்றன.

நிறைவாக, வீரசைவம் தமிழகத்தின் தொன்மைச் சமயமெனக் குறிப்பதற்கு மேலும் ஒரு சான்றினைக் காணலாம். வீரசைவநெறியில் ஒழுகியவர் அகத்தியர் எனக்காட்டும் கீழ்க்காணும் நுட்பமான விளக்கத்தால், அச்சமயத்தின் தொன்மையை வரையறுத்துத் தெரிந்து கொள்ளலாம்.

'ஒருவன் வலிமையையோ, ஆற்றலையோ, வரங்களையோ பெற்று,வெற்றிபெறுவதற்கு இரண்டு முறைகள் கையாளப்பெற்றன. யாககுண்டம் அமைத்துத் தீவளர்த்து முறையான மந்திரங்களுடன் பலியுணவை அத்தீயில் பெய்து, தவமியற்றினால், எந்தக்கடவுளை நோக்கி மந்திரம்கூறிப் பலியுணவு கொடுக்கப் பெற்றதோ அந்தக் கடவுள் நேரே வருவார். அவரிடம் தனக்கு வேண்டிய வலிமைகளையெல்லாம் தேவைகளையெல்லாம் வரங்களாகப் பெற்றுக் கொள்ளுதல். இம்முறை 'புலத்தீ முறை' என்று கூறப்படும். இந்நெறியில் வந்தவன் இராவணன் என்பதனையே 'புலத்தியன்' என்னும் அவனது மரபுப்பெயர் சுட்டுகிறது.

அந்நெறிக்கு மாறாக, தன்னுடம்பிலேயே அமைந்திருக்கும் வலிமையை வெளிப்படுத்த தானே யாககுண்டமாக நின்று,தன்னுள் அமைந்த தீயை வளர்த்து, யோகம் செய்து வலிமையைப் பெறுதல் 'அகத்தீ நெறி' யாகும். அகத்தியர் இம்மரபினரே.''24

மாணிக்கவாசகர் வீரசைவர் எனல்:

'மாணிக்கவாசகர் வீரசைவர் என்பது வீரசைவ உலகம் கூறும் உண்மையாகும். அதற்கு ஆதாரம் மாணிக்கவாசகர் பாடல்களில் சமயச் சார்பான கருத்துகள் காணப்படுவதே என்பர். பேராசிரியர் சு. துரைசாமி அய்யர், பேராசிரியர் திரு. அடிகளாசிரியர், பேராசிரியர் வீ. குமாரசாமி அய்யர் எனும் மூதறிஞர்களும், வீரசைவம்

பற்றித் தமிழ் உலகுக்கு விளக்கம் தந்த டாக்டர் வை. இரத்தின சபாபதி போல்வாரும் மாணிக்கவாசகர் பாடலுக்கு வீரசைவ சமயச் சார்பாகப் பொருளுரைப்பர்.'25

பேராசிரியர் திரு. அடிகளாசிரியர் அவர்கள் திருவாசகத்துள் இடம்பெற்றுள்ள 'கோயில் திருப்பதிக ஆராய்ச்சி' பற்றிய நூலில் குறிப்பிடும் செய்திகளால் திருமந்திரம், திருவாசகம் முதலானவை வீரசைவ சமய நூல்கள் என்பதை விளக்குகின்றார்.

திருமூலர் வீரசைவர் :

'தாவர லிங்கம் ஒரேயிடத்தில் நிலையாயிருப்பது; இதற்கு அண்ட லிங்கம் என்றும் பெயர். சரலிங்கம் அடியவர் திருமேனியில் அணியப்பட்டு இயங்கி நிற்பது; இதற்குப் பிண்டலிங்கம் என்றும் பெயர். திருமூலர் 'சரலிங்கம்' என்னும் வடமொழிச் சொல்லை 'நடமாடுங் கோயில்' என்று அழகான தமிழ்ச் சொல்லால் குறிப்பிடு கின்றார். நடமாடுங் கோயில் அடியவரின் இயங்கும் உடம்பு; நம்பன்-இலிங்கம். எனவே இலிங்கதாரணமுடைய அடியவரின் திருமேனி கோயிலென்றே வழங்கப்படுகின்றது.

வீரசைவ சமயத்தவர் தூல உடம்பிலே, உருவமாகிய இட்ட லிங்கத்தையும் சூக்கும உடம்பிலே அருவுருவமாகிய பிராணலிங்கத் -தையும், காரண டஉம்பிலே அருவமாகிய பாவ(ஞான)லிங்கத்தை யும் ஆசிரியன் அருளால் பெற்று வழிபாடு செய்பவராவர். இதனை,

> 'மூன்றுல மாளிகை மூவர் இருப்பிடம்
> மூன்றினில் முப்பத் தாறும் உதிப்பன
> மூன்றினின் உள்ளே முளைத்தெழும் சோதியை
> காண்டலும் காயக் கணக்கற்ற வாறே.' (திருமந்.2379)

என்று திருமூலர் கூறுகின்றார். மேலும் அவர் இட்டலிங்கம் கையில் எழுந்தருளச் செய்து வழிபாடி செய்யப்பெறுவதாலும், பிராணலிங்கம் மனத்தில் எழுந்தருளச் செய்து வழிபாடு செய்யப் பெறுவதாலும், பாவலிங்கம் காரண உடலில் வழிபாடு செய்யப் பெறுவதாலும்,

'கண்காணி யாகவே கையகத் தேயெழும்
கண்காணி யாகக் கருத்துள் இருந்திடும்
கண்காணி யாகக் கலந்து வழிசெய்யும்
கண்காணி யாகிய காதலன் தானே.' (திருமந். 2072)

என்று கூறுகின்றார்.

கோயில் திருப்பதிகத்துள் கூறப்படும் தீட்சா முறைகளிற் சில:

'வீரசைவ தீட்சா முறைகளுள் இலிங்காயதம் என்பது ஓர் தீட்சா முறையாகும். அது 'அருச்சனை செய் சிவலிங்கம் ஆசான் (317) என்று கூறியவாறு, ஆசான் மாணவனுக்குத் தரும் ஆன்மார்த்த இலிங்கத்திற்குச் செய்ய வேண்டிய சமஸ்காரங்களை யெல்லாம் செய்து பூசித்து,அவ்விலிங்கத்தைமாணவனுக்குத்தரிசிப்பிக்க அவன் தரிசித்ததாகும். தரிசித்தபின் சீடனின் உயிரை அச்சிவலிங்கத்தில் தாபித்து, அச்சிவலிங்கத்திலுள்ள சிவகலையைச் சீடனின் உயிரில் தாபித்து, இவ்வகை ஏகபாவம் செய்தபின், அச்சிவலிங்கத்தை ஆசிரியன் மாணவன் கையில் தருவன். அதனை மாணவன் தன் கையில் ஏற்றுக்கொள்வான்.இதற்கு 'அத்தத்தாற் பிடித்தல்' என்று பெயர். பிடித்த சிவலிங்கத்தைத் தன் உடம்பினுள் சிரம், கண்டம், நெஞ்சு முதலான உத்தம அங்கத்தில் மாணவன் அணிந்து கொள்வான். இதற்கு 'இலிங்க சுவாயதம்' என்று பெயர்.

கோயில் திருப்பதிகத்து ஆறாம் பாட்டில் 'கரந்ததோர் உருவே! களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டு' என்பது, ஆசிரியன் தரிசிப்பிக்கத் தரிசித்தலாகிய இலிங்காய தீட்சையாம். அடுத்து, ''கொண்டு இன்றே களித்தனன்' என்பது, அத்தத்தால் பிடித்த லாகும். பிடித்த பத்தில் 'சிக்கெனப் பிடித்தேன்' என்று கூறுவதை யும் நோக்குக. திருமூலரும்''அத்தத்தினாலே அணையப் பிடித்தலும் அத்தத்தில் தம்மை அடைத்து நின்றாரே'' என்பர்.

ஏக பாவம் செய்த முறையினை மாணிக்கவாசகர்,

'தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்' (கோயில் 10)

என்ற பாடலால் குறிப்பிடுகின்றார். மேலும், அடிகளாசிரியர் 'இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க' என்னும் சிவபுராணத் தொடரைத் தொடரும் 'ஆகமம் ஆகிநின்று அண்ணிப் -பான் தாள் வாழ்க என்னும் தொடர், வீரசைவர் ஒருவர் வீட்டி லிருந்து கிடைத்த ஓலைப்பிரதியில், 'ஆகமும் ஆகிநின்று அண்ணிப் பான் தாள் வாழ்க' என்று இருப்பதாகக் குறிப்பிடுகின்றார். இத் தொடர் இமைப்பொழுதும் என்னும் தொடருக்கு அடுத்து அமைவ தால் 'சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் ......எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்' என்னும் பாடல் தொடர்க்குச் செய்தி யாலும் முறைவைப்பாலும் ஒத்திருந்பதாக எடுத்துரைக்கின்றார்.26

சிக்கல்களைத் தெரிவது :

இக்காரணங்களால் திருமந்திரம், திருவாசகம் முதலானவை வீரசைவ சமயக் கருத்துகள் நிறைந்தவை என்று உறுதிபடுத்து கின்றார், அடிகளாசிரியர் அவர்கள். தமிழ் வீரசைவ நூல்களிலிருந்து 'வீரசைவ சமய சாத்திரத் திரட்டு' என்ற நூலையும், 'திருமூலரும் வீரசைவ நெறியும்' என்ற நூலையும் எழுதிவைத்துள்ளதாகவும், அவை அச்சிடப் பெறாமல் உள்ளனவாகவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

வீர ஆகமம், காமிக ஆகமம், வாதுள ஆகமம் ஆகியவை வீர சைவ நெறி விளக்கும் ஆகமங்களாகும். இவற்றைப் போற்றுகின்ற வீர சைவர் தம் கொள்கை, 'செந்தமிழ் ஆகமமாகத் திகழும் திருமந் திரத்தில் காணப்பெறுவதும் ஏற்கத்தக்கதாகும். அவ்வாறே ஆன்ம உருக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு, சித்தமலம்அறுவித்துச் சிவமாக்கி ஆட்கொள்ளப்பெற்ற மாணிக்கவாசகர் வாழ்வும், அவர் தம் திருவாசகமும் வீரசைவ விளக்கமாகப் போற்றப் பெறுவதும் ஏற்கத்தக்கதேயாகும்.

புறச்சமயத்தவர் ஒவ்வொருவரும் தம்தம் சமயப் புனித நூலைப் போற்றுவதுபோல, வீரசைவர்கள் திருவாசகத்தைப் பயிற்சியில் கொண்டிருப்பதும். அவர்களுக்கு உரிய நூலென்று சிந்திக்கத்தக்க தாகும். திருநாவுக்கரசர்தம் பாடலில் வைப்புத்தலமாக இடம் பெற்றுள்ள திருப்பெருந்துறை, மாணிக்கவாசகரின் உலக வாழ்க்கைக்குத் திருப்புமையமாக அமைந்து, அருளியல் வாழ்வுக் குத் தொடக்கமாகத் திகழ்கிறது. திருவாசகத்தின் பல பகுதிகள்,

திருப்பெருந்துறை சுட்டப்பெறும் பாடல்களையே கொண்டுள்ளன. திருப்பெருந்துறைக் கோயில், மாணிக்கவாசகர் திருத்தொண்டினால் உருவானது. தமக்கு அருள் செய்த குருநாதர் உணர்த்திய வழியில் கட்டப்பட்டதாதல் வேண்டும். எனவேதான், ஏனைய சைவத்திருக் கோயிலினின்றும் பெருந்துறைக் கோயில் அமைப்பு முறையிலும், வழிபாட்டு முறையிலும் வேறுபடுகின்றது. அத்தலத்துப் பெருமானை ஆத்மநாதர் எனச் சொல்லுதலும், மாணிக்கவாசகர்க்கே விழா எடுக்கப் பெறுதலும், வீரபத்திரர் வழிபாடு அத்திருக்கோயிலில் அமைந்திருப்பதும் வீரசைவச் சார்பாக எண்ணவேண்டுவதாகும். தமிழ்நாட்டுச் சிவத்தலங்களைப் பற்றித் தெரிந்திருந்தாலும் (கீர்த்தித்திருவகவல், போற்றித்திருவகவல்) திருப்பெருந்துறையில் குருநாதர் உரைத்து அருளியவாறு சிற்சில தலங்களுக்கே மாணிக்கவாசகர் சென்றிருக்கின்றார் என்பதும் அங்கெல்லாம்கூடத் திருப்பெருந்துறை நினைவிலேயே பாடல்கள் பாயுள்ளார் என்பதும் சிந்திக்கவேண்டுவனவாகும். பதிகங்களிலும் சிற்சில பாடல்கள் விடுபட்டுள்ளன.

இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து ஆய்வுசெய்யும்போது, 'திருப்பெருந்துறையில் இறைவன் வீரசைவ குருநாதராகக் காட்சி தந்து மணிவாசகரை ஆட்கொண்டிருக்கலாம்; அந்நெறியைச் சார்ந்த குருமார்கள் தங்கியிருந்த ஒரு சில திருத்தலங்களுக்கே இவர் சென் -றனராதல்வேண்டும். அங்கெல்லாம் சென்றபோதும், ஆங்குள்ள இறைவனையும் குருமார்களையும் தரிசித்தபோதெல்லாம் திருப் பெருந்துறை நினைவிலேயே பாடியிருக்கலாமென்றும் வீரசைநெறி சார்ந்த பாடல்கள் விடுபட்டிருக்கக்கூடுமோ? என்றும் எண்ணத் தோன்றுகின்றன.

இவ்வாறு ஐயங்கள் தோன்றுகின்றன; தெளிவு தேடப்படுகின் றது; உண்மை புலப்படவில்லை; மேன்மேலும், கிடைக்கப் பெறும் தரவுகளைக்கொண்டு நடுநிலை பிறழாத ஆராய்ச்சியொளி, ஆய்வுகளில் பாய்ச்சப்பெறுதல்வேண்டும்.

தீர்வு காண முயலுவது:

திருமுருகாற்றுப்படை, அது தோன்றிய காலச்சூழலைக் கருத் தில் இருத்திச், சங்க இலக்கியப் பத்துப்பாட்டுள் ஒன்றாகவும், சமயப் பொருண்மை கருதிச் சைவத் திருமுறைகளுள் பதினொன்றாம் திரு

முறையாகவும் விளங்குகின்றது. அவ்வாறே திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகவும், திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும் கொண்டு சைவத்திருமுறைகளுள் போற்றப் பெறினும் அவற்றிலுள்ள நுட்பமான கருத்துகள் வீரசைவநெறிக்கு அரணாக இருப்பதையும் ஏற்றுப் போற்றிக்கொள்ளுதல் வேண்டும்.

மேலும், இவ்விருவகைச் சமயத்துக்கும் சிவபெருமானே வழிபடு தெய்வமாக விளங்குகின்றான். அவ்வாறே சிவப்பிரகாசர்தம் வாழ்வியலும், அருளிச்செயல்களும் இருநெறிக்கும் ஏற்றம் தருகின்றன; விளக்கம் வழங்குகின்றன; வளர்ச்சியூட்டுகின்றன. கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாகவும், எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமாகவும் அமைந்துள்ள சிவப்பிரகாசர், இருநெறிக்கும் வேறுபாடு கருதாதவகையில் திகழ்கின்றார். அதனால் தான், மாணிக்கவாசகரை, சைவசமய குரவருள் நாலாமவராக எண்ணி நால்வர் நான்மணிமாலையிலும், பிரபுலிங்கலீலை நால்வர் வணக்கப் பாடலிலும், சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ்க் காப்புப் பாடல்களிலும் போற்றியுள்ளார். வீரசைவ ஆசாரியர்களுள் ஒருவராக அவரை எண்ணிப் போற்றாமையும், நால்வர் நான்மணி மாலைக்கு உரைவரைந்த சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் தம் உரையில் யாண்டும் குறிப்பிடாமல் இருப்பதுவும் எண்ணிப்பார்க்க வேண்டுவனவாகும்.

மாணிக்கவாசகரின் காலம், சமயம், மரபு முதலானவற்றை ஆய்வது தேவையென்றாலும், அதனைவிட அவர்தம் அருளிச் செயல்களைப் படிப்பவர்களாகவும், அவற்றில் படிபவர்களாகவும் திகழ்தல் இக்காலத்து இன்றியமையாத தேவையாகும்.

'திருவாசகம் பக்திநூல் என்ற முறையில் பலராலும் பாராயணம் செய்யப்பெறுகின்ற சிறப்பைப் பெற்றுள்ளதாயினும், அதனிடம் உள்ள பிற சுவைகளைக் கண்டு அனுபவிப்பவர்கள் தொகை அருகி விட்டது. இறுதிக் காலத்தில் பாடவேண்டிய பாடல்களின் தொகுப்பே திருவாசகம் என்ற எண்ணத்தில் இருந்து வருகின்றது இளைஞர் உலகம். இத்தவறான எண்ணத்தைப் போக்கவேண்டும் என்ற முறையில் முதிய சமுதாயம் எவ்வகை முயற்சியும் செய்வதாகத் தெரியவில்லை.'27

அறிஞர்களின் இத்தகைய எதிர்பார்ப்புகளைக் கருத்தில் கொண்டு,

'சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்'
(திருவா-போற்றி, 32, 33)

என்னும் திருவாசகத் தொடர்களின் செஞ்சொற் பொருளுக்கு இலக்காகாமல், சிவப்பிரகாசர் இருநெறி போற்றும் இயல்பினை உணர்ந்து, அவர்தம் நெறியையே பொன்னெறியெனக் கொண்டு மயிலம்-பொம்மபுர ஆதீனம் இருநெறியையும் வளர்ப்பதைப் போற்றிப் பயன் கொள்ள வேண்டுவது சமுதாயத்தின் முதன்மைக் கடனாகும்.

'ஆர் ஒருவர் உள்குவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற திறமும் தோன்றும்'
(திருநா. 6 திருப்பூவணம். 9)

என்று இறைவன் விளக்கப் பெறுதல் போலவும், தொல்காப்பியம், திருக்குறள் முதலான நூல்கள் அவற்றில் தோய்பவர்களின் அறிவு, அனுபவம், உட்கோள் ஆகியவற்றுக்கேற்ப விளக்கப்பெறுதல் போலவும் அறிவாற் சிவனேயாகிய மாணிக்கவாசகர் வாழ்வும் திருவாசகச் செழுப்பொருளும் அமைந்துள்ளன.

தம் உள்ளம் உரைப்ப தொன்றையே உண்மை எனக் கொள்ளும் அறிவினால் வரும் இடர்ப்பாடுகள் எண்ணற்றவையாகும். மாணிக்கவாசகர் கூறும் கல்வியெனும் பல்கடல் பிழைத்ததுபோல, இத்தகைய தளைகளைக் கடந்து திருவாசகத்தின் உருக்கத்தை உணர்தற்கும், அதனைத்துய்ப்பதற்கும் அதனுள் திளைப்பதற்கும் மக்கள் முயல வேண்டும் என்பதே சிவப்பிரகாசரின் திருவுள்ளக் கிடக்கையாகும். அதுதான், நால்வர் நான்மணிமாலையில் மாணிக்க வாசகரைக் குறித்த ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படுகின்றது.

'புகழ் மிக்க, பழம் பெரும் இலக்கியம் ஒன்று, நின்னால் சுவைக்கப்பெற இயலாமற் போகுமாயின் அது நின் குற்றமேயாகும்; கால வெள்ளத்தைக் கடந்து, நிலைபெற்றுக் கற்றோரெல்லாம் புகழ்ந்து போற்றச் சிறந்து விளங்குகின்ற அவ்விலக்கியத்தின் குற்ற

மன்று' என்னும் ஆங்கில ஆசிரியர் ஆர்னால்ட் பென்னட் (ARNOLD BENNET) என்பவரின் கூற்று நாம் கருதி உணர்வதற்கு ஏற்ற தாகும்.

மாணிக்கவாசகரைப் போற்றும் பாக்கள்; பாவமைப்பு:

இந்நூலின்கண் 4, 8' 12, 16, 20, 24, 28 32, 36, 40 ஆகிய எண்ணுள்ள பாக்கள், மாணிக்கவாசகரைப் புகழும் அகவற்பாக்களா கும். இப்பாவமைப்பில் இவர் போற்றப்பெறுவதற்கான ஆய்வுச் ஆய்வுச்சிந்தனை அறியத்தக்கதாகும்.

'அகவல் ஞான நினைவை வெளிப்படுப்பது; மயிலின் ஓசையே அகவலோசை எனப்பெறும். நினைவின் முதிர்ச்சியே மயிலுக்குக் கருவாக அமையும். அதனாலேயே முருகப் பெருமான், அதனை வாகனமாகக் கொண்டார். நினைப்பற நினைக்கும் நினைவின் தன்மையை வழியாகக் கொண்டு, இறையருள் இன்பம் துய்த்த மாணிக்கவாசகப் பெருமானை அகவல் ஓசையால் அமைத்துப் பாடினார்.

திருவாசகச் சிறப்புகளுள் சில :

திரு,வாசகம் என்னும் இருசொற்களால்அமைந்தது திருவாசகம் என்னும் சொற்றொடர். 'திரு' என்னும் சொல்லுக்குப் பல பொருள் உண்டு இங்கு அச்சொல் செல்வக்களிப்பால் மையலுறுதலும், அல்லல் மிகுதியால் சோர்வடைதலும் இன்றி. எக்காலத்தும் ஒரு தன்மையராய் வாழ்வதற்குரிய உள்ளத்தின் நிறைவாகியபேரழகினைக் குறிக்கும். வாசகம்-சொல்; எனவே திருத்தகவிற்றாகிய மனச் செம்மையினை வழங்கும் ஆற்றல் நிறைந்த சொற்களால் இயன்ற மையின், இந்நூல் திருவ சகம் என்னும் பெயர்த்தாயிற்று என்பர் பெரியோர்.

மிக முக்கியமாகப் போற்றத்தக்க நூல்கள் நான்கனுள் ஒன்று திருவாசகம். 13 இதனைத் தம்வழிபடு நூலாகக் கொண்டவர் வள்ளலார். தோத்திரங்களிற் சிறந்தது திருவாசகம்; ச த்திரங்களிற் சிறந்தது திருமந்திரம என்பது அவர்தம் கருத்து. வீரசைவக்கருத்து களுக்கு விரிந்த இடம் கொடுக்கும் இந்நூல்களைப் போற்றுகின்ற

வள்ளலாரின் திருவருட்பாவிலும் அச்சமயத் தத்துவம் பொதிந் திருக்க வாய்ப்பு உண்டு. நாலாயிரதிவ்வியப்ரபந்தத்திற்கு ஈட்டு ரைகள் அமைந்தமை போலவும், சிவஞானபோதத்திற்குத்திராவிடமா பாடியம் அமைந்தமை போலவும், திருவாசகத்தின்உருக்கப்பெருக்கத் திற்கு விளக்கமாக திருவருட்பா அமைந்துள்ளது. 'திருவருட்பா விற்கு' உருகாதார் திருவாசகத்திற்கும் உருகார்' எனச் சொல்லும் அளவிற்குத்திகழ்வதுதிருவருட்பா என்றால்அக்கருத்து மிகையன்று; திருவாசகத்தை மூல நூல் என்றால் திருவருட்பாவை அதன் விளக்க வுரை நூல் எனலாம்.

திருவாசகம் எளிமையும் இனிமையும் உருக்கமும் உணர்வுப் பெருக்கமும் உடையது. அனைத்து எலும்பும் உள்நெகுமாறு ஆனந்தத்தேன் சொரிவது, எவ்வளவு காலங்கடந்தாலும் பதப் படுத்தி வைக்கப்பெற்ற தேனானது. தானும் கெடாமல் தன்கண் சேர்ந்த பொருளையும் கெடவிடாதது போல, திருவாசகம் தன்கண் சேர்ந்தாரின் பிறவிப் பிணியைத் தீர்த்துப் பேரருள் இன்பச்சுவையில் திளைக்கச் செய்வதாகும். தன்னைக் கேட்ட அளவில் பொல்லா விலங்குகளும், பறவைகளும்கூட மெய்ஞ்ஞான நாட்டம் கொள்ளச் செய்ய வல்லது. நாடு, மொழி, மதம் இவற்றால் வேறுபட்ட அருள் தந்தை ஜி.யூ. போப் அவர்களின் நெஞ்சை உருகவைக்கச் செய்தது; கண்ணீர் பெருக வைக்கச் செய்தது. சிவஞான போதத்து எட்டாஞ் சூத்திரத்தின் கருத்துக்குக் கருவாக உள்ள பொருணிலையுற்று, எட்டாந் திருமுறையாகத் திகழ்வது. பேரின்பக் காதல் நெறியைப் புலப்படுத்தும் திருக்கோவையாரையும் தன்னுடன் கொண்டது.

ஆரண மொழியும் வாசகத் தேனும்:

உலகம் உய்யச் செந்தமிழ்ப் பனுவல்கள் இயற்றும் தனிப் பெரும் பிறவி பெற்ற சிவப்பிரகாசர் காலத்தே, தமிழகத்தில் பிற நாட்டார் ஆட்சி, ஆலயங்களின் பிறமொழிச் செல்வாக்கு, மக்கள் வாழ்க்கையில் பிறர்தம் நாகரிகப் பண்பாட்டுக் கலப்பு, சமயவாழ்வில் பிறநாட்டார் சமயத்தலையீடு ஆகியவை செல்வாக்குச் செலுத் தின. சிவநெறி போற்றும் திருவருள் நூல்களைக் கற்றும், அந்நெறி நின்ற ஞானாசிரியரின் உபதேசத்தைப் பெற்றும், அந்நெறியில் வாழ்ந்தும், அருள் நூல்களைப் படைத்தும் அருளிய செந்தமிழ்ச்

சிவப்பிரகாசருக்குத் தாய்மொழியொன்றினாலேயே மக்களைத் திருத்தவியலும் என்ற எண்ணம் தோன்றியது. அதிலும் உருக்கம் தரும் சமயநெறி சார்ந்த திருவாசகம் முதலான அருள் நூல்களே இத்தகைய நன்மாற்றத்தை உருவாக்கும் என உணர்ந்தார். அதனால்தான் வடமொழியினும் திருவாசகம் உயர்ந்தது என்னும் கருத்தமைந்த இந் நூலில் மாணிக்கவாசகரைப் பற்றிய முதல் பாட்டு தோன்றியது.

வேதத்தை அருளியவன் இறைவன்; திருவாசகத்தை அருளியவர் இறைவன் புகழைப் பரவிய மாணிக்கவாசகர்; வேதத்தைக் 'காரணன் உரையெனும் ஆரண மொழி' என்றும், திருவாசகத்தை 'வாதவூரண்ணல் மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேன்'' என்றும் மொழிந்து, வேதத்தினும் திருவாசகம் உயர்ந்தது; என்பதை உணர்த்துகிறார். மேலும் வேதத்தைப் பலகால் ஓதினும் அன்பராகு -நர் இலர் என்றும், திருவாசகத்தை ஒருமுறை ஓதினாலும், ஓதக் கேட்டாலும் அன்பர் ஆகாதவர் ஒருவரும் இலர் என்று இரண்டு எதிர்மறைச் சொற்களைப் பெய்து உடன்பாட்டுப் பொருளை உணர்த்துகின்றார்.

திருவாசகத்தை ஓதிய அளவில். நெஞ்சில் நிறைதல், மனத்தை உருக்குதல், பக்தியுணர்வின் மெய்ப்பாடரகக் கண்ணீர் அரும்புதல் மெய்ம்மயிர் பொடித்தல், விதிர் விதிர்ப்பு எய்துதல் முதலியன நிகழ அன்பராவர் என்று விளக்குகின்றார்.

இவ்வாறு, பக்தியுணர்வின் மெய்ப்பாடுகளைப் படம்பிடித்துக் காட்டும் திருவாசகமும் இங்கு நினையத் தக்கதாகும்.

'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக் கண்டுகொள்ளே.'

(திருச்சதகம், மெய்.1).

'திருவாசகத்தின் கனிவையும்உருக்கத்தையும்,பயிலும் உள்ளத் திற்கு இன்பம் வழங்கும் பான்மையினையும் திருவருட்பாப் பாடல் -கள்'31 எழிலாக எடுத்துரைக்கின்றன.

வாசகமும் வாச்சியமும்:

மாணிக்கவாசகரைப் போற்றும் இரண்டாவது திருப்பாடல், திருவாசகச் சிறப்பையும், அதன் பொருள் சிவபெருமானே என்னும் உண்மையையும் உரைக்கின்றது.

பாதுகாப்பமைந்த துறைவழியாக இறங்கிஆற்றில் நீராடுவோர் போலப் பத்தித் துறையிழிந்து ஆனந்த வாரியில் படிவோர் அருட் சான்றோர். பெருந்துறையில் குருநாதனாகத் தோன்றிச் சிவபிரான் அருள்செய்த அக்கணத்தே, அவனது பெருங்கருணைப் பெற்றி நோக்கிக் கரைந்து கரைந்து இருகண்ணீர் மழைவாரத் துரியநிலை கடந்துநின்ற நிலையில் மாணிக்கவாசகர் பாடியதுவே திருவாசகம். அதன் பொருள் உமையவளை இடப்பாகமாகக் கொண்ட சிவபெருமானே என்று இப்பாடல் மொழிகின்றது.

இறைவன், மாணிக்கவாசகர்க்குப் பத்திநெறி அறுவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம், சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி ஆட்கொண்டான். இவ்வாறு மலமாசு நீங்கப்பெற்று, தன் திருவருளில் தோயும் அடியார்களின் அகத்தும் புறத்தும் சூழ்ந்துநின்று அவர்களை இயக்குகிறான்; பாடவும் வைக்கிறான். அவ்வாறு பாடிய அருளாளர் அனைவரும், தாம் ஒரு கருவி என்பதனையும், தம்மை இடமாகக்கொண்டு இறைவனே தன்னைப் பாடுவித்துக் கொண்டான் என்பதனையும் தம் பாடல்களால்உணர்த்துகின்றனர்.

'எனதுரை தனதுரையாக' என்னும் ஞானசம்பந்தரின் கானமும் 'பன்னிய செந்தமிழ்மாலை பாடுவித்து என் சிந்தைமயக்கு அறுத்த திருவருளினானை' என்னும் அப்பரின் ஒப்பிலா வாக்கும், 'என்னை நினைந்து அடிமைகொண்டு இரங்கி என் இடர்கெடுத்துத் தன்னை நினையத் தருகின்றான்' என்னும் நம்பியாண்டார் நம்பிகளின் செஞ்சொல்தொடரும், 'நானுரைக்கும்வார்த்தையெல்லாம் நாயகன் தன் வார்த்தை' என்னும் வள்ளலாரின் வாய்மொழியும் இவ்வுண்மையை உரைக்கின்றன.

இவ்வாற்றால், வாசகத்திற் சிறந்தது திருவாசகம் என்றும், அதனைப் பாடச் செய்த இறைவனே பாட்டின் பொருளானவன் என்றும் சிவப்பிரகாசர் உணர்த்துவது செப்பமான கருத்தாகும்.

மேலும், அம்மையப்பரின் 'தொன்மைக் கோலத்தைப் பாடிய மாணிக்கவாசகரின் உணர்வைத் தாமும் பெற்றிருந்ததால்தான் சிவப்பிரகாசர்' திருவாசகத்தின் பொருளாக உள்ளவன் 'உமையை இடப்பாகம் கொண்ட பெருமான்' என்று போற்றலானார்.

சிவப்பிரகாசர் பாடிய இப்பாடல், திருவாசகப் பொருளாவான் தில்லைப் பெருமான் என்றும், அவனருளில் கலந்த மாணிக்கவாசகரின் பெருவாழ்வு பற்றியும் உணர்த்துகின்றது. இருமையில் ஒருமையை உணர்த்துவது அத்வைதம்; ஒருமையே இருமையாய் ஆகப்பின்னர் இணைவது வீரசைவதத்துவம். முன்னே குறிப்பிட்டுள்ளவாறு போலப் பரசிவமே அங்க, லிங்கமாக ஆகியது.

மாணிக்கவாசகரின் ஆன்மாவை அங்கமாகக் கொண்டு, குருநாதர் ஆகிய இறைவன் எழுந்தருளி அவர்தம்மைப் பாடச்செய்து, நிறைவில் தில்லையில் தன் பேரொளியில் பாலோடு நீர்சேர்ந்தாற் போல அவரைச் சேர்த்துக் கொண்டான் என்பதன் வாயிலாக 'ஒருமையில் இருமை' என்னும் வீரசைவ தத்துவத்திற்கு விளக்கமாக அவர் வாழ்வு அமைகிறது என்பதுவும், அவரும் அறிவாற் சிவனே என்பதுவும் உணரவைக்கின்ற உயரிய ஞானக்கருவூலமாக இத்திருப் பாடல் திகழ்கின்றது.

பக்குவமுள்ள அடியார்கள் இறையருள் வேண்டுமெனில், குரு, அவர்காட்டும் நெறிநிற்றல், இறையருள் பெற இடையறாது ஏங்கும் சத்விசாரமாகிய சஞ்சலம் ஆகிய இவை தேவை. அவர்கள், அருளைப் பெற இறைவனே குறியாகவும் நெறியாகவும் உள்ளான் என்பது சமயம் காட்டும் உண்மையாகும். இந்த வகையில் இறையருள் மயமாகவே திகழும் திருவாசகத்தைப் பயன்கொண்டு அருள்பெற விழைவோர்க்கு, மேற்கண்ட எதுவும் தேவையில்லை என்பதாகச் சொல்லித் திருவாசகத்தைப் பரவுகின்றார் வள்ளலார்:

'வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் உடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில்இனிச் சாதகமேன்; சஞ்சலமேன்;
குருமொழியை விரும்பியயல் கூடுவதேன் கூறினியே.'

(திருவருட்பா. ஆறு. அடிகள். 8)

திருவாசகச் சிறப்புரைக்கும் முற்றுருவகப் பாடல்:

உவமையையும், பொருளையும் வேற்றுமையின்றி உவமையே பொருள்; பொருளே உவமை என்னும் வகையில் ஒன்றுபடுத்திக் கூறுவது உருவக அணியாகும். அவயவ, அவயவிகளை ஏற்ற இடத்தோடும், பிறவற்றோடும் முற்ற உருவகம் செய்து உரைப்பது முற்றுருவகமாகும்.

காணற்கரிய இறைவனின் கருணைவெளிப்பாடே மழையாகும். அதனால்தான் திருக்குறள்நூல், கடவுள் வாழ்த்து அதிகாரத்துக்கு அடுத்து வான் சிறப்பைக் கொண்டுள்ளது. அந்நூல், வான் நின்று உலகம் வழங்கப் பெறும் மழையை அமுதமாகப் போற்றுகிறது. அம்மழை, விசும்பினின்று வீழ்தல் இல்லையேல் ஓரறிவாகிய தாவர இனத்தின் மெல்லியபசும்புல்லின் நுனிகூடப் பூமியில் காணஇயலாது என்றும் உரைக்கிறது.

அதுபோலவே, இறைவனருளாகிய மழையும் இம்மண்ணுலகில் வாழ்வோர்க்கே எளிதில் கிட்டுகின்றது. தேவர்களும் இறையருள் பெறுவதற்கு மண்ணுலகில் போய்ப்பிறக்கவில்லையே என்று ஏங்குவதாகத் திருவாசகம் செப்புகின்றது.

‘புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மே;யிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற ஆ(று)என்று நோக்கி’

(திருப்பள்ளி. 10)

எனவே திருவாசகத்தால் தாம் உணர்ந்த அருட்பயனை நினைந்த சிவப்பிரகாசர், ‘யான்பெற்றஇன்பம் பெறுகஇவ்வையகம்’ என்னும் நோக்கில் மாணிக்கவாசகரை மேகமாகவும், அவர் அருளிய திருவாசகத்தை மழையாகவும் அதனால் உயிர்களுக்கு விளையும் மெய்ப்பயனாகிய முத்தியையும், இன்னபிறவற்றுடன் தொடர்ச்சியாக முற்றுமாக உருவகப்படுத்திப் பாடியுள்ளார்.

உலகியலுக்கு மழையின்றியமையாததுபோல் அருளியலுக்குத் திருவாசகப் பெருமழை தேவை என்பது இப்பாடலால் உணர்த்தப் பெறுகிறது. இதனை ஓதுவதால், இறைவனுடன் இரண்டறக்

கலத்தல் என்னும் சாயுச்சியமாகிய பரமுத்தியையெய்தலாம் என்றும் உரைக்கப்பெறுகிறது.

வேதம்-மட்கலம்;திருவாசகம்-பொற்கலம்:

சிவப்பிரகாசர் வீரசைவ நெறி வந்த ஈர நெஞ்சினர். மேலும் சாதி சமய வேறுபாடு கருதி எவரையும் இழிக்காத/பழிக்காத திருமுறை வழிவந்த அறநெறிச் சான்றோர். அவர் வாழ்ந்த காலத்தே அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூவகை வருணத்தார் சிற்சில பகுப்புகளடிப்படையில் வேதம் ஓதற்குரியவர் என்றும், வேளாளர் மற்றுமுள்ளோர் வேதம் ஓதத் தகுதியற்றவர்கள் என்றும், அவர்கள் ஓதினால் வேதத்தூய்மை கெட்டுவிடும் என்பதாகவும் நம்பிக்கையும் நடைமுறையும் இருந்து வந்தது.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்னும் உயர் பெருங் குறிக்கோளுடன் உலகைக் காணும் சிவப்பிரகாசர்க்கு இந்நிலை வெறுப்பினையும், வேதனையையும் தந்தது. ஆனால் அதே சமயத்தில் வேதத்தைத் தமிழால் விரித்ததெனச் சொல்லப்பெறும் தேவார, திருவாசகத் திருமுறைகள் எல்லோராலும் ஓதப்பெறவும், உயர்நிலை எய்தப் பெறவும் வழிவகுத்திருப்பதை உணர்ந்தார்.

எனவேதான், தானும் மாசுபடாமல் தன்கண் சேர்ந்தார்க்கு உய்வுப் பயன் தரும் திருவாசகத்தைப் 'பொற்கலம்' என்றும் அந் நீர்மையற்ற வேதத்தை 'மட்கலம்' என்றும் உரைத்துத் திருவாசகச் சீர்மையைநிலைநிறுத்துகின்றார். மேலும் அவர், வேதத்தை ஓதினால் பிறப்புக்கு வழிவகுக்கும் அறன் ஒன்றுமே கிட்டும் என்றும் திருவாசகம் பிறவாப்பெருநெறியாகிய முத்தியைத் தரும் என்றும், இப்பாடல் வாயிலாக சிவப்பிரகாசர் அறிவுறுத்துகின்றார்.

திருவாசகப்பெருமை காட்டும் திருப்பாடல்:

பால் என்றால் ஆவின் பால்; பழம் என்றால் வாழைப்பழம்; புகழ் என்றால் திருப்புகழ்; மந்திரம் என்றால் திருமந்திரம்; அருட்பா என்றால் திருவருட்பா; என்று குறிக்குமாறு போல மாணிக்கவாசகரைப் போற்றும் நிறைவுப்பாடலில் இவர்தம்மை முன்னிலைப்படுத்திப் 'பாவெனச் சிறப்பித்துச் சொல்லப்படுவது தேவரீர் அருளும் திருவாசகமே; பூவெனப் படுவது திருமகள் வாழும் தாமரையே' என்று பாடிப் பரவுகின்றார்.

ணர்வினால் கவர்ந்த ஏனைய திருமுறைகளையெல்லாம் தெரிந்து,தெளிந்து போற்றுகின்ற சிவப்பிரகாசரின் சிந்தனையைப் பெரிதும் உருக்கத்தால் கவர்ந்தது திருவாசகம் ஒன்றே.

பக்குவமுள்ள ஆன்மா, தன் குறை நினைந்து நெகிழ்தலும் ஆன்மாவின் குறையைப் பொருட்படுத்தாமல் ஆட்கொள்ளும்இறைவனின் நிறைபண்பினை நினைந்து உருகுதலும் திருவருள் பெறுவதற்கு அடிப்படையாகும். அதனால்தான் அருணகிரிநாதர்,

'நெஞ்சக் கனகல் லு(ம்)நெகிழ்ந் துருகத்
தஞ்சத்(து) அருள்சண் முகனுக்(கு) இயல்சேர்
செஞ்சொற் புனைமாலை' (கந்.அநுபூதி.காப்பு)

என்று பாடுகின்றார்.

இவ்வுணர்வுகளுக்கு விளக்கமாக மாணிக்கவாசகர், 'நாயிற் கடையவன்' என்று தம்மை இறப்ப இழித்தும் (மிக இழித்தும்) தமக்கு அருள்செய்யும் சிவபெருமானைத்'தாயிற்சிறந்த தயாவான தத்துவன்' என்று இறப்ப உயர்த்தியும் பாடுதலைச் சுட்டலாம். (திருவா.சிவபு.60,61)

நெருப்புக்கட்டையைக் கீழ்நோக்கிப் பிடித்தாலும் மேல்நோக்கி ஒளிவீசுவது நெருப்பின் இயல்பு.அவ்வாறே எவ்வளவு மேட்டிலிருந்தாலும் பள்ளம் நோக்கிப் பாய்வது நீரின் இயல்பு.

நீர், பெருக்கெடுத்துப் பள்ளம்நோக்கி ஓடும்போது, மேட்டில் இருக்கும், தன்னிலும் வலிய கற்கள், மரங்கள் முதலானவற்றை அடித்துக்கொண்டு சென்று பள்ளத்தில் ஆழ்த்திவிடும். தான் பள்ளத்தில் நிறைந்து,மேலே வரவியலாமல்அங்குக்கிடக்கும் தன்னிலும் மிக மெலிய தூசு வைத்தூறு முதலியவற்றைப் பூமியின் மேற்பரப்பில் கொண்டுவந்து சேர்த்துவிடும். அதுபோல அருளைப் பெறுவதற்குத் தகுதியான அடியார்களை விடுத்து, ஒன்றுக்கும் தகுதியற்ற எளியவனாகிய தன்னை இறைவன் ஆட்கொண்டான் என்பதை உருக்கம் தோன்றப் 'பள்ளந்தாழ் உறுபுனலிற் கீழ்மேலாகப் பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்'33 என்று பாடுகின்றார்.

' திருவாசகத்தின் தனிச்சிறப்பு யாதெனில், ஒவ்வொரு மனிதனும் தன்னை மாணிக்கவாசகர் இடத்தில் அமைத்துக்கொண்டு மாணிக்க

வாசகராகவே. தன்னை பாவித்துக் கொண்டு, அவருடைய சொற்களைத் தனதாக்கிக் கொண்டு, தன் நெஞ்சத்தின் அடித்தளத்திலிலிருந்து ஓலக்குரல் எழுப்பி, இறைவனை இறைஞ்சி நம்பிக்கை மிளிரும் கண்களால் அவனை ஏறெடுத்துப் பார்த்து அவன் முகத்தில் அன்பு, அருள், அமைதி நிலவுவதைக் கண்டு, களிகூர்ந்து கடைத்தேறலேயாகும்'. 34

இவ்வாறு ஆன்ம உருக்கமும் ஞானப்பெருக்கமும் திருவாசகம் வழங்குவதால்தான் 'பாவெனப்படுவது திருவாசகமே' என்றுதமது முடிந்த முடிபினைச்சொல்லித் துதிக்கின்றார் சிவப்பிரகாசர்.

திருவாசகத்தை இறைவன் எழுதிய சிறப்பு :

'நலம் மலி வாதவூர் நல்லிசைப் புலவ' எனத் தொடங்கும் பாடலின் முதன் மூன்றடிகளில் சிவப்பிரகாசர், மாணிக்கவாசகரின் மனம், மொழி, மெய் ஒன்றிய ஒருமைப்பாட்டுணர்வைப் புலப்படுத்துகின்றார். அப்பாடலில் அம்பலத்து ஆடும் பெருமானின் திருக்கோலத்தைப் பழிப்பது போலும் பான்மையில் புகழ்கின்றார். தன் வடிவக்குறைபாட்டினை எண்ணி இகழ்ச்சியுறாத இறைவன், புகழ்ச்சி விருப்பன் ஆதலினால், அடியார் வடிவில் வந்து, மாணிக்கவாசகரை வணங்கித் திருவாசகத்தைக் கேட்டுத் தானே கைப்பட எழுதித் திருச்சிற்றம்பலமுடையான் எனக் கையொப்பமிட்ட திறத்தையும் நினைந்து பாடுகின்றார்.

கடையூழிக் காலத்தில் எல்லாவற்றையும் தன்னுள் ஒடுக்கிக் கொண்டு தான் மட்டும் தனித்திருக்கும் அத்தனிமையைப் போக்கிக் கொள்ளத் தனக்குத் துணையாக உதவும் என்று கருதியே இறைவன் திருவாசகத்தைத் தன் திருக்கையால் எழுதிவைத்துக் கொண்டதாக பேராசிரியர் சுந்தரம் பிள்ளை குறிப்பிடுகிறார். அப்பாடல் தொடர்:

'கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே.'
(மனோன்மணியம் - தமிழ்த்தெய்வ வணக்கம்)

'சிவப்பிரகாசர், பிறிதொரு நூலிலும், இறைவன் செய்த இவ்வெழுத்துப்பணியைப் பாராட்டி, மாணிக்கவாசகரைக் கற்பகம் என்று புகழ்கின்றார்.

'விரிந்தமறை யொருநான்கும் எழுதுகில மெனவோர்
வீறுடைப்பொற் கொன்றைபுனை விரிசடையோன் எழுதத்
திருந்துதமிழ்க் கோவையொரு நானூறும் உரைத்த
திருவாத வூரனெனுந் செழுமலர்க்கற் பகமே

(சிவஞான. பிள்ளை. காப்பு - 9)

'வடமொழி வேதங்களைத் தம் திருக்கரத்தால் எழுதிக் கொள்ளாத சிவபெருமான், திருக்கோவையாரிலுள்ள நானூறு திருப்பாடல்களையும் எழுதிக் கொள்ளுமாறு உரைத்தருளிய மாணிக்கவாசகரைச், 'செழுமலர்க் கற்பகம்' என்று இப்பாடல்வாயிலாகத் துதிக்கின்றார்.

மேலும் திருவாசகம், திருக்கோவையார் ஆகியவற்றிலுள்ள திருப்பாடல்கள் யாவும் 'என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க் குன்றாத செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்களாகவும் அவற்றையருளிய மாணிக்கவாசகர், 'செழுமலர்க் கற்பக தரு' வாகவும் உருவகிக்கப் பெற்றுள்ளமை போற்றற்குரியதாகும்.

சாதனை கண்ட தொண்டரும், சோதனை கொண்ட இறைவனும் :

சிவப்பிரகாசர் 'கடனிற வண்ணன்' எனத் தொடங்கும் பாடலில் செயற்கருஞ்செயல்கள் செய்து இறையருட் பேறாகிய சாதனையைக் கண்ட பெரியபுராண அடியார் பதினால்வரை முதற்கண் போற்றுகின்றார். அவர்களின் தொண்டுத்திறங்கள் கீழ்வருமாறு விளக்கப் பெறுகின்றன.

'கணம்புல்லர், அரிவாட்டாயர், திருக்குறிப்புத் தொண்டர் ஆகிய மூவரும் தமக்கு வரும் உயிரழிவையும் கருதாது, கொண்ட விரதத்தை முடித்த நெறியாளர்.

இயற்பகையார், மாணிக்கவாசகர், கழற்சிங்கர், சண்டேசுரர், சிறுத்தொண்டர், கோட்புலியார், செருத்துணையார் ஆகியோர் எழுவரும் உலகியலைக் கடந்து அருளியலில் நின்று தொண்டாற்றியவர்கள். இவர்கள் நெறி வல்வினையாகும்.

இளையான்குடிமாறர், அதிபத்தர், ஆகியோர் இருவரும் எத்தகைய துன்பம் நேரினும் மேற்கொண்ட நியதியில் வழுவாதவர்.

அமர்நீதியார், திருநீலகண்டர் இருவரும் வாய்மை குன்றாத் தவவொழுக்கினர்.

ஆனால், மாணிக்கவாசகரைத் தன் தொண்டராக ஆக்கிக் கொள்ளவும், பாடும் பணியில் அவரைக் கூட்டுவிக்கவும், இறைவன் குதிரை சேவகனாகியும் திருமுடிமிசை மண்சுமந்தும், திருமேனியில் பிரம்படி பட்டும் பல சோதனைகளைச் சந்தித்தமையை இப்பாடல் மேலும் தெரிவிக்கிறது.

இறைவன் சோதனை கொண்டமையைக் காட்டும் திருவாசகப் பாடல் இதற்கு சான்றாகும்.

'பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் ....
.... ,.......... கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.'

(திருவம்மானை-8)

மேற்காணும் திருவிளையாடல்களைக் கீழ்க்காணும் திருப்புகழ் பாடல்கள் அழகுற விளங்குகின்றன.

'வாசி வாணிகனெ னக்குதிரை விற்றுமகிழ்
வாத வூரனடி மைக்கொளுக்கு பைக்கடவுள்
மாழை ரூபமுக மத்திகைவி தத்தருண செங்கையாளி'

(ஆசை - பழமுதிர்சோலை)

'வாத வூரனைம தித்தொருகு ருக்களென
ஞான பாதம்வெளி யிட்டுநரி யிற்குழுவை
வாசி யாமெனந டத்துவகை யுற்றரசன் அன்புகாண
மாடை யாடைதர பற்றிமுன கைத்து வைகை
யாறின் மீதுநட மிட்டுமணெ டுத்துமகிழ்
மாது வாணிதரு பிட்டுநுகர் பித்தன்'

(சீதவாசனை - மதுரை)

அழுது அடிஅடைந்த அன்பராதல் :

'அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்து பின்னர் இன்புருவம் ஆயினவர் எழில் வாதவூரர்' என்று தெள்ளுதமிழ் வள்ளலார் துதிக்கும்வண்ணம் இறைவனருளைப் பெற்றவர் மாணிக்கவாசகர். ஆயினும் அவர், திருவாசகத்துள் தாழ்வெனும் தன்மையோடு,

'யானே பொய்;என் நெஞ்சும் பொய், என் அன்பும்பொய்,
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே.'
(திருச்சத. 90)

என்பதுபோலும் பல பாடல்களைப் பாடி அழுது அழுது அருள் பெற்றவர்.

இந்நிலையை எடுத்துரைக்கு முகமாக, சிவப்பிரகாசர் மாணிக்க வாசகரை முன்னிலைப்படுத்தி 'அம்பலக் கூத்தன்' அருளாற் பெற்ற அன்பினில், ஒருசிறிது அடியனேற்கும் அருளல் வேண்டும், நீயே கோடல் நின் அருட்பெருக்கிற்கு ஏற்றதன்று' என்று வேண்டு கிறார்.

இப்பாடலில் இறைவனை வேண்டும்போது 'அருள்' என்னும் சொல்லை ஒருமுறை பயன்படுத்துகின்றார். மாணிக்கவாசகரை வேண்டும்போது அச்சொல்லை இருமுறை கையாளுகின்றார். இவற்றைச் சிந்தித்தால், இறைவனைக் குருவாக மாணிக்கவாசகர் போற்றியது போலவே, அவர்தம்மைக் குருவாக சிவப்பிரகாசர் போற்றியுள்ளார். மாணிக்கவாசகரின் அருள் கிடைத்தால் அதுவே ஆண்டவன் அருளாகும் என்று சிவப்பிரகாசர் உணர்ந்து, உணர்த்து வதைத்தெரிவதால் அடியாரின் பெருமை புலனாகின்றது.

மேலும் இப்பாடல் இடபம் ஏறிவரும் இறைவனைப் பரிமேல் வரச் செய்தவர்; பெருந்துறைக் குருந்தமர நிழலில் வேத சிரப் பொருளை உபதேசமாகப் பெற்றவர் என்னும் திருவருட் செய்தி களையும் தெரிவிக்கின்றது.

இவ்வாறு, உபதேசம் பெற்றதை நினைவுகூரும் வகையில் அருணகிரிநாதர் திருப்பெருந்துறையை, 'ஞானப்ரசங்கத் துறை' என்பார். அப்பாடல் வருமாறு :

'செகத்தி னிற்குரு வாகிய தந்தைக்
களித்தி டுங்குரு ஞானப்ர சங்கத்
திருப்பெ ருந்துறை மேவிய கந்தப் பெருமாளே.'

(திருப்பெருந்துறை. இரத்தமும்)

மாணிக்கவாசகர் வரவு நோக்கி, இறைவன் குருவாக வந்து காத்திருந்ததையும், அவர்க்குத் தீக்கைகள் செய்து மலத்தை நீக்கியதால் பரம ஞானம் வாய்த்த அவர் பாடத் தொடங்கியதையும் கீழ்க் காணும் பாடல்களால் அறியலாம்:

'பரிந்து மாணவர்கள் சூழப் பத்தனார் வரவுபார்த்துப்
பெருந்துறைக் குருந்தநிழல் இருந்தனன் பெரிய ஆசான்.'

'நோக்கினால் பாவ கத்தால் நுவலரும் பரிச னத்தால்
காக்குமின், உடலடக்கங் கமடம்;ஒண் பறவை யென்ன
ஆககினான், ஆக்கு முன்னர் அடைந்தது பரம ஞானம்
வாக்கியல்நா மடந்தை சேர்ந்தாள்;அகன்றன மலங்கள் மூன்றும்'

(திருவாலவாயுடையார் புராணம்-27 -42,48)

நன்று அறிவாரின் கயவர் திருவுடையர்:

மாணிக்கவாசகர் இறையருள் பெற்றிருந்தும், பெறாதவர் போல, நெஞ்சம் நெக்குருகிப் பாடினார் என்றும், ஆனால் தாமோ, இறையருள் பெறாதிருந்தும் பெற்றவர் போலக் களிகூர்ந்து, உள்ளக் கவலை தீர்ந்திருந்ததாகவும் எடுத்துச் சொல்லி 'நன்மை தீமைகளை ஆராய்ந்து அறிபவர்களைவிட,அறிவிலாக் கயவர் சிறந்தவர் எனக் கூறும் திருக்குறட்பொருளைத் தாம் தெரிந்துகொண்டதாக, மிகுந்த தன்னடக்கத்தோடு இப்பாடலில் சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார்.

திருவாசகத்தில் தோய்ந்து, அதிலுள்ள தாழ்வெனும் தன்னடக் பண்பை மிக அதிகமாகப் பெற்றவர் சிவப்பிரகாசர். அப்பண்புதான், மாணிக்கவாசகரைப்போலத்தமக்கு இறையருள் கிடைக்கப்பெற்றும் தமக்கு இல்லாதது போலப் பாடச்செய்தது. மேலும் அவர், எஞ்ஞான்றும் திருக்குறளில் தோய்ந்த நெஞ்சினராதலின் மாணிக்க வாசகரையும், தம்மையும் இணைவுபடுத்தியே, 'நன்றறிவாரில்' என்னும் திருக்குறளுக்கு இப்பாடலால் விளக்கம் தருகின்றார்.

மணிவாசகப் பேறு:

சிவபெருமான், மாணிக்க வாசகரை மனத்தாற் பிணிக்க வல்லார்க்குத் தானே முன்வந்து முத்தியை அளிப்பான் என்று 36 ஆவது பாடலைக் கொண்டு விளக்குகின்றார் சிவப்பிரகாசர். ' மாணிக்கவாசகர் ஒருவர்தாம் பூனைக்குட்டி வகையைச்சார்ந்தவர். இறைவனே வந்து ஆட்கொண்டு முத்திகொடுத்தான். ' தானே வந்தென்னைத் தலையளித்து ஆட்கொண்டருளினான்.

என்று மாணிக்கவாசகரே கூறுகின்றார். இது மாணிக்கவாசகருக்கு மட்டுமே கிடைத்த பேறு. ஆதலினால் இராமலிங்க சுவாமிகள், இவ்வாறு இறைவனே முந்திக்கொண்டு வந்து அருள் செய்ததை 'மணிவாசகப் பேறு' என்று பெயரிட்டுக் குறிப்பிட்டார். இதனையே 'நானேயோ தவம் செய்தேன்' சிவாய நம எனப்பெற்றேன்' என்று மணிவாசகர் கூறுகிறார். எனவே மாணிக்கவாசகப் பெருமானை நினைத்தால், இறைவன் தானே வந்து முத்தியைத் தருகுவன்.'36

இறைவன், மாணிக்கவாசகரைச் சிவமாக்கி ஆட்கொண்ட திறம்,முன்னமே திருவாசகப் பாடல்களால் தெரிவுறுத்தப்பெற்றது.

எனவே சிவமாக்கப் பெற்ற மாணிக்கவாசகரை நினைவோர் சிவபிரானால் முத்தியளிக்கப்பெறுவர் என்னும் கருத்துக்கு ஒப்பாக அருணகிரிநாதரின் சிந்தனையை இணைத்துப் பார்க்கலாம்.

'விநாயகப் பெருமானை நினைவோர்க்கு,முருகன் தானேவந்து அருள் செய்வான். இவ்வாறு அருள்பெற்ற முருகனடியார்களைத் தேவர்கூட்டம் தேடிவந்து வணங்கும் என்பதே அச்சிந்தனையாகும்.

'அடன்மிகு கடதட விகடித மதகளி
றனவர தமுமக
லாமாந்தர்கள் சிந்தையில் வாழ்வாம்படி செந்திலில்
அதிபதி யெனவரு பொருதிறல் முருகனை
அருள்பட மொழிபவர்
ஆராய்ந்து வணங்குவர் தேவேந்திர சங்கமே.'

(தேவே. சங்க. வகு. தரணியில்)

விநாயகப்பெருமானும், முருகப்பெருமானும் உலகியல் மாந்தர்களுக்குப் பக்தியுணர்வு வரவேண்டும் என்பதற்காக அண்ணன் தம்பி என்னும் உறவுமுறை சொல்லி, சிவபெருமானின் புதல்வராகப் பேசப் பெறுகின்றனர். தத்துவ நிலையில் பரம்பொருளே உலக நன்மைகருதி இத்திருவுருவங்கள் எடுத்ததாகலின் சிவபெருமானின் வேறல்லர் விநாயகர், முருகர் என்பது உணரத்தக்கதாகும்.

அவ்வாறே சிவபெருமான் வேறு, அவனருள் பெற்ற மாணிக்க வாசகர் வேறு என்று வாழ்வியல் நிலையில் சொல்லப்பட்டாலும் சித்தமலம் நீக்கிச் சிவமாக்கி மாணிக்கவாசகரை ஆட்கொண்டான் என்னும்போது முன்னமே குறிப்பிடப்பெற்ற ஒருமையில் இருமை எனும்விரசைவநெறியை உளங்கொண்டு நோக்கின் பரம்பொருளே குருநாதராகவும் மாணிக்கவாசகராகவும் முறையே இலிங்க அங்கமாக அமைந்தும்,அந்நெறியின் முடிபுநிலை காட்டும் வகையில், திருவருட் பேற்றுடன் இணைதலாகிய ஆன்ம ஈடேற்றம் /கடைத்தேற்றம் காட்டுவதாகவும் எண்ணலாகிறது.

இத்தகைய நிலையில் இறையருள் வாய்த்தோரை நினைந்து துதித்தால், அருள்கைகூடும் என்னும் வகையில் அடியார் பெருமை பேசப்படுகிறது.

இறைவனைத் துதித்தலே முத்திபெற வழி என்று நூல்கள் கூறினாலும், இறைவனிலும் அடியார் வேறல்லர் என்னும் தமது உட்கருத்தை வெளிப்படுத்தவும், மாணிக்கவாசகர் செயலெல்லாம் இறைவன் செயலாகவே அமைதலின், இவரை வழிபாடு செய்வோர்க்கு அவ்விறைவனே முத்தியளிப்பன் என்னும் உண்மையைப் புலப்படுத்தவும் சிவப்பிரகாசர் இவ்வாறு பாடியுள்ளார்.

தொகுப்புச் செய்திகள்:

• கேட்டவர்களையெல்லாம் அன்பராக்குவதால் வேதத்தினும் உயர்ந்தது திருவாசகம்; அனைவருக்கும் உரிமையுடைமையால் பொற்பாத்திரம் போன்றது திருவாசகம்; அதுவே வாசகம்; அதுவே பாட்டு; அதற்கு வாச்சியம் இறைவனே. அடியார் பலரும் அரும் பெருஞ்செயல்கள் செய்து இறைவனுக்குத் தொண்டராயினராக, மண்சுமந்தும், பிரம்படி பட்டும் இறைவன் இவருக்குத் தொண்டா

யினானே என்ற சிறப்பு;மாணிக்கவாசகமாம்மேகம்;திருவாசகத்தைப் பொழிந்து முத்தியை விளைத்தது; எருதேறியைக் குதிரையேறியாக செய்த வித்தகச் செயல்; பெருந்துறையிடத்துக் குருந்தமர நீழலில் வேத சிரப்பொருள் உபதேசம் பெற்றது; இறைவனே வந்து திரு வாசகத்தை எழுதியது; நெஞ்சம் நெக்குருகி நிற்கும் மாணிக்க வாசகரின் அன்புநிலை; வாதவூரரைக் கடிவில் மனத்தால் கட்ட வல்லார்க்கு இறைவனே முத்தி தருகுவன்' என்ற செயல்கள் தொகுத்தளிக்கப்பெற்றவையாகும்.' 37

முடிப்புரை:

இறைவன் திருவருளைப் பெறுவதே, மனிதப் பிறவியெய்தியோரின் குறிக்கோளாக இருக்கவேண்டும். எவ்வுயிரும் பராபரன் சந்நிதி என உணர்ந்து, எத்துணையும் பேதம் உறாது, எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணியொழுகி, அத்தகைய ஆன்மநேயத்தால் ஆன்மலாப மாகிய இறையருளைப் பெறவேண்டும். அதனை இலிங்க, குரு, சங் கம வழிபாட்டினால் எய்தமுடியும். அவ்வகையில் சித்தம் சிவமாக்கப் பெற்ற சமய குரவர்கள், இறையருளை உலக மக்கள் அனைவரும் பெற்றுஇன்புறும் வண்ணம் சரியை முதலான நால்வகை நன்னெறி களில் ஒழுகிக் காட்டினர். மக்களின் வினைகளை வேரறுத்து, வீட்டின்பம் பெறச்செய்யும் அருமருந்தாக தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களைப் பாடியருளினார். சமய குரவர் நால்வரையும் அவர்கள் அருளியுள்ள நூல்களையும் உலக மக்கள் உணர்ந்து ஏத்தி உய்வு பெற வேண்டுமென்று உருக்கம் தோயப் பாடியுள்ள சிவப்பிர காசரின் செந்நெறித் தொண்டினைப் போற்றிப் பயன்கொள்ளுதல், அவர்கள் அருளிய ஞான நூல்களை ஓதித் தெளிதல் முதலானவை இறையருள் பெற வாய்ப்பானவையாகும். அவனருளாலே அவன் தாள் வணங்குவோமாகுக.

'ஞானநூல்தனை யோதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை.'

(சிவஞான சித்தியார்)

'போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூர் ஐயன் அன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ.'

என்னும் தாயுமானவரின் ஏக்கச் சிந்தனை / எதிர்பார்ப்புச் சிந்தனை நம் வாழ்க்கைக்குஆக்கந்தரும் சிந்தனையெனப்போற்றிப் பயன்கொள்வோமாகுக.

'தெய்வம் தெளிமின்! தெளிந்தோர்ப் பேணுமின்!!'
(சிலம்பு. வாழ்த்துக்காதை)

சிவப்பிரகாசர் வணக்கம்

'புனையெழில் வடிவி னாளோர் பொதுமகட் கண்ட மைந்தர்
மனமெனப் புலவர் நெஞ்சம் மருளும்இன் தமிழ்ப்பா மாலை
சினவிடை யவற்கே சாத்தும் சிவப்பிர காசன் என்னும்
முனைவன்எம் அடிகள் பாத முளரிகள் சென்னிசேர்ப்பாம்.'
(சீகாளத்திப் புராணம்-பாயிரம் 17)

அடிக்குறிப்புகள் :

1. மாணிக்கவாசகர் காலமும் சமயமும் (நூல்), பேராசிரியர் ஆ.சிவலிங்கனார் அருள்-சுடர் பதிப்பகம், சென்னை-87, 1991
2. பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாவது பகுதி, வித்துவான் க. வெள்ளை வாரணன், பக். 86, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம். 1967.
3. முந்து நூல், பக். 87.
4. புதிய நோக்கில் திருவாசகம், டாக்டர். தமிழண்ணல், பக். 130 131, மீனாட்சி நூலகம், மயிலம் 1987.
5. முந்து நூல், பக். 150, 151.
6. திருவாசகம் திருக்கோவையார், நூல், வாதவூரடிகள் வரலாறு வித்துவான் வி. சா. குமாரசாமி தேசிகர், பக். 17, 18. தருமை யாதீனம். 1966.
7. மாணிக்கவாசகர் காலமும் சமயமும், பேராசிரியர் ஆ.சிவலிங்க னார். பக். 13, அருள், சுடர்பதிப்பகம், சென்னை. 87-1991.
8. திருவாசகம், ஆராய்ச்சிக் குறிப்புகள், பக். XII சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை-4. 1992
9. சைவ இலக்கிய வரலாறு, கி. பி. 7 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரை) ஔவை. சு. துரைசாமி பிள்ளை, மாணிக்கவாசகர் (கட்) பக். 319. அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 1978.
10. முந்து நூல், பக். 320.
11. பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி, வித்துவான் க. வெள்ளைவாரணன், பக். 30, 104, அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 1967.
12. மணிவாசகர், பேராசிரியர். அ. ச. ஞானசம்பந்தன், பக். 32, 37, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974.
13. சிதம்பர மும்மணிக்கோவை, குமரகுருபரன், 22ஆவது பாடல்.
14. பன்னிரு திருமுறை வரலாறு, இரண்டாம் பகுதி, வித்துவான். க. வெள்ளைவாரணன், பக். 87 அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 1967
15. இலிங்க வழிபாடு, (நூல்) வித்துவான் சி. சோமசுந்தரம் பக். 3 பசவர் இல்லம், கீரம்பூர். 15—2—1976
16. இழந்த லெமூரியாக் கண்டம்,பன்மொழிப் புலவர். அப்பாதுரை சிந்து சமவெளி தரும் ஒளி, டாக்டர். க. த. திருநாவுக்கரசு பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம், மறைமலையடிகள்.
17. கங்காளன் பூசுங் சவகத்திருநீறு (திருமந். 1666)

18. வீரசைவமும் சைவமும் (நூல்) நல். முருகேச முதலியார் பக். 6
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1987
18. முந்து நூல், பக். 5, 6
20. முந்து நூல், பக். 6, 7
21. முந்து நூல், பக். 3
22. மாணிக்கவாசகர் காலமும் சமயமும், பேராசியர் ஆ. சிவலிங்கனார், பக். 3, 4, அருள் சுடர் பதிப்பகம், சென்னை-87 1991.
23. வீரசைவமும் சைவமும், நல். முருகேச முதலியார், பக். 36.
சை. சி. நூ. ப. கழகம், சென்னை. 1987
24. வீரசைவமும் தமிழும் (கட்டுரை) தெய்வத்தமிழ்க் கருவூலம் (நூல்) பக். 250 தெய்வத் தமிழ்க் கல்வி, கலை, பண்பாட்டு அறக்கட்டளை, சென்னை. 1992
25. மாணிக்கவாசகர் காலமும் சமயமும் பேரா. ஆ. சிவலிங்கனார் பக். 1. அருள் சுடர் பதிப்பகம், சென்னை-87. 1991
26. கோயில் திருப்பதிக ஆராய்ச்சி (நூல்) பேரா்சிரியர். அடிகளாசிரியர், முன்னுரை பக். 7, 10.
27. மணிவாசகர் (நூல்) பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் முன்னுரை, பக். 3 அண்ணாமலை நகர், சிதம்பரம், 1974
28. சைவசித்தாந்தம் (நூல்) ந. ரா. முருகவேள், பக். 271 சேக்கிழார் பதிப்பகம், குன்றத்தூர். 1984
29. நால்வர் நான்மணி மாலை, 'உரை, டாக்டர் வை. இரத்தின சபாபதி, ஆராய்ச்சி முன்னுரை, பக். 18. மணிவாசகர் நூலகம் சிதம்பரம். 1984
30. இறைவன் மனிதனுக்கு உபதேசித்தது — பகவத்கீதை
மனிதன் இறைவனிடம் அழுது முறையிட்டது — திருவாசகம்
மனிதன் மனிதனுக்கு உரைத்தது — திருக்குறள்
அருளாளன் அருளாளனுக்கு உரைத்தது — திருவருட்பா
31. திருவருட்பா, ஆளுடைய அடிகள் அருண்மாலை பாடல்கள் 6, 9
32. திருவாசகம், திருக்கோத்தும்பி, 18 ஆவது பாடல் (தோலும்)
33. திருவாசகம், திருச்சதகம், சுட்டறுத்தல், 1. (வெள்ளந்தாழ்)
34. மாணிக்கவாசகர் (நூல்) கோ. வன்மீகநாதன், முன்னுரை சாகித்திய அகாதமி, புதுதில்லி. 1983
35. நால்வர் நான்மணி மாலை உரை, டாக்டர் வை. இரத்தின சபாபதி, பக் 119, 120.
36. முந்து நூல், பக். 239, 241
37. முந்து நூல், ஆராய்ச்சி முன்னுரை. 37, 38

பயன்படுத்தப்பெற்ற நூல்கள் :

ஆளுடைய அடிகள் அருண்மாலை
ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி
ஆளுடைய பிள்ளையார் அருண்மாலை
ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை
ஆளுடைய பிள்ளையார் சண்பை விருத்தம்
இலிங்க வழிபாடு
கந்தர் அநுபூதி
கந்தர் அலங்காரம்
கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பாடல்
காமாட்சி அந்தாதி
கோயில் திருப்பதிக ஆராய்ச்சி
கோயில் பண்ணியர் விருத்தம்
சமயம்
சிதம்பரத்தலத்துப் பாடல்
சிலப்பதிகாரம்
சிவஞான சித்தியார்
சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத் தமிழ்
சிவஞான போதம்
சிவஞான போதமும் பன்னிரு திருமுறையும்
சிவநேச வெண்பா
சிவானந்த மாலை
சீகாளத்திப் புராணம்
சுந்தரர் தேவாரம்
செவ்வந்திப் புராணம்
சைவஇலக்கிய வரலாறு
சைவ சித்தாந்தம்
சோணசைல மாலை
தமிழ்க் கல்வி இயக்கக் கட்டுரைகள்
தாயுமானவர் பாடல்கள்
திருக்களிற்றுப்படியார்
திருக்குறள்
திருக்கோவையார்
திருஞானசம்பந்தர் தேவாரம்
திருத்தொண்டர் திருவந்தாதி

திருநாவுக்கரசர் தேவாரம்
திருப்புகழ்
திருமந்திரம்
திருமுறைத்தெளிவே சிவஞான போதம்
திருவாசகம்
திருவாசகம் திருக்கோவையார்
திருவாய்மொழி
திருவாலவாயுடையார் புராணம்
திருவானைக்காப் புராணம்
திருவிடைமருதூர் மும்மணிக் கோவை
திருவிளையாடற்புராணம்
திருவெங்கைக் கலபகம்
திருவேசம்பம் குப்பாபிடேக மலர்
தெய்வத்தமிழ்க் கருவூலம்
தொல்காப்பியம்
நால்வர் நான்மணிமாலை - உரை
நால்வர் நான்மணிமாலை - விருத்தியுரை
பத்திரகிரியார் பாடல்கள்
பரிபாடல்
பன்னிரு திருமுறை வரலாறு
பிரபுலிங்க லீலை
புதியநோக்கில் தமிழிலக்கிய வரலாறு
புறநானூறு
பெரியநாயகியம்மை கட்டளைக் கவித்துறை
பெரியபுராணம்
மகாதேவ மாலை
மணிவாசகர்
மனோன்மணீயம்
மாணிக்கவாசகர்
மாணிக்கவாசகர் காலமும் சமயமும்
வீரசைவமும் சைவமும்
CHAMBERS
ENCYCLOPADIA

சிவப்பிரகாசர் நோக்கில் 'திருநாவுக்கரசர்'

திருமுறை நூல்களிடத்தும் திருமுறைச் சான்றோர்களிடத்தும் ஈடுபாடும் போற்றிப் புகழ்தலும் அருளாளர்களாகிய அவர்கட்குப் பின்வந்த சான்றோர்களிடத்துப் பெரிதும் காணப்பெறுகின்றன. அவற்றினும் குறிப்பாகச் சமய குரவர் நால்வர் முதன்மையிடம் பெறுகின்றனர். பக்தி இயக்க காலத்தில் சைவத்தின் மேன்மையை நிலைநிறுத்திய அவர்களின் அருட்பாக்களும் அருட்செயல்களும் படித்தும் கேட்டும் அறிந்தவர் ஈடுபாடு கொள்ளாமல் இருக்கவியலாது. அவர்களின் பதிகப் பெருவழி சமுதாயத்தில் சமூக-பொருளாதார-சமய-அரசியல் பேரியக்கமாகவே விளங்கியது. அத்தகைய அருளாளர்களின் பாடல்களிலும் வரலாறுகளிலும் தோய்ந்த அனுபவம் உள்ளவர் சிவப்பிரகாசர். அவர்களைப் போற்றும் பெருவிருப்புடன் தன்னை ஈடுபடுத்தித் தோய்ந்து ஆழ்ந்த அனுபவத்தில் எல்லோரும் திளைக்குமாறு சிலவற்றை நால்வர் நான்மணிமாலை எனும் இந்நூலில் அமைத்துப் பாடுகிறார்.

நால்வர் நான்மணிமாலை எனும் இந்நூல் நாற்பது பாடல்களைக் கொண்டதாக விளங்குகிறது. சமய குரவர் நால்வர்க்கும் பப்பத்துப் பாடல்கள் அமைந்துள்ளன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற வரிசைமுறையில் அவை அமைந்துள்ளன. திருமுறை தொகுத்த தொகுப்பின் முறையையே இவரும் பின்பற்றியிருக்கிறார். திருமுறைத் தொகுப்பு கால அடிப்படையிலோ வயதுஅடிப்படையிலோ தொகுக்கப்பெறவில்லை. கால அடிப்படையாயின் திருமுலர் பாடல்களும் காரைக்கால்அம்மையார் பாடல்களும் முன்னதாக இடம்பெற்றிருக்கும். வயது அடிப்படையாயின் நாவரசர் பாடல்கள் முன்னதாக அமைந்திருக்கும். இருவகையிலும் இல்லை. அதற்குக் காரணங்கள் பலவற்றை அறிஞர் கூறுவர். பன்னிரு திருமுறை வரலாற்றாசிரியர் க. வெள்ளைவாரணன் அவர்கள்,

"ஒன்று முதல் ஏழு வரையமைந்த இத்தேவாரத் திருமுறைகளின் வரிசைமுறை, அவ்வாசிரியர்களின் காலம், வயது முதலிய உலகியல் முறையினை ஒருசிறிதும் கருதாமல் அப்பெருமக்கள் இவ்

வுலக வாழ்வினைத் துறந்து இறைவன் திருவருளிற் கலந்து வீடு பெற்ற கால அடைவினை உளத்திற் கொண்டு அமைக்கப் பெற்ற தாகும்'' 1 என்று கூறுகிறார்.

மேலும் இவர், தஞ்சை ஸ்ரீநிவாசப் பிள்ளை அவர்களின்,

''.....திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர். சுந்தரர், மாணிக்க வாசகர் என இவ்வாறு வரிசைப்படுத்தி எண்ணுவதற்கு இப்பெரு மக்கள் நால்வரும் ஒருவர்பின் ஒருவராகச் சிவபதம் அடைந்த கால முறையே காரணமாகும்.'' 2 என்னும் கருத்தை எடுத்துக்காட்டி யுள்ளார்.

இதுவன்றியும் பிற காரணங்களையும் காட்டலாம். திருஞான சம்பந்தர் இளமை முதற்கொண்டு முழுக்க முழுக்கச் சிவப்பணியில் ஈடுபட்டவர். மேலும் அவர் முற்பிறப்பினும் சிவப்பணியிலும் சிறந் திருந்ததாகக் கூறுவதும் உண்டு. திருநாவுக்கரசர் வழிவழிச் சைவ ராயினும் சமணம் சார்ந்து பின்னர் சிவப்பணியில் ஈடுபட்டவர். சுந்தரர் உலகவாழ்க்கையில் நாட்டங்கொண்டு இருமனைவியருடன் வாழ்ந்தவர். இம்மூன்று தகுதிகளின் அடிப்படையில் அவர்களின் வரிசைமுறை அமைந்ததாகக் கொள்ளலாம்.

பெரும்பான்மையான தலங்களைப் பாடியவர்களில் முதன்மை யாக நிற்பவர் திருஞான சம்பந்தர். அதுமட்டுமன்றிக் கிடைத்த பாடல்களில் மிகுதியான எண்ணிக்கையில் இருப்பன திருஞானசம் பந்தர் பாடல்களே. திருஞானசம்பந்தரைமுதலாமவராகக்கருதுதற்கு இவற்றையும் காரணம் காட்டலாம்.

அவ்வகையில் அறிஞர்களின் கருத்திற்கு இயைகின்ற நிலையி லேயே சிவப்பிரகாசர் முதலில் திருஞானசம்பந்தரையும்அடுத்தடுத்து திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரையும் போற்றிப் பாடுகிறார்.

சமய குரவர் நால்வரையும் பாடுதற்கு மாலை எனும் இலக்கிய வகையைப் பயன்படுத்தியுள்ளார். மாலை தொடுத்தல் என்ற வகை யில் ஒரே வகை அல்லது ஒரே இனமான மலர்களாலும் தொடுக்க லாம்; அல்லது வெவ்வேறுவகையான மலர்களாலும் தொடுக்கலாம்; முன்னது மல்லிகை மாலை அல்லது ரோசா மாலை போன்றது;

பின்னது கதம்ப வகையைச் சார்ந்தது; அதுபோல ஒரேவகையான பாவாலும் அல்லது பலவகைப் பாவாலும் பாடித் தொடுக்கலாம். மலர்களின்தொகுப்பில் நார் இணைப்பாவது போல மாலை இலக்கிய வகையில் அந்தாதி இணைப்பாகிறது. பாட்டியல் நூல்களில் மாலை நூல்கள் பல குறிக்கப்பெற்றுள்ளன.

அவ்வகையில் மணிமாலை, இணைமணிமாலை, இரட்டைமணி மாலை, நான்மணிமாலை, நவமணிமாலை, பன்மணிமாலை எனும் வகையின எண்ணாற் பெயர் பெற்று விளங்குகின்றன. வெட்சி மாலை, காஞ்சி மாலை, வஞ்சி மாலை, உழிஞை மாலை, நொச்சி மாலை, வாகை மாலை, தானை மாலை முதலிய மாலைகள் புறப்பொருள் பற்றியன.

அனுராக மாலை, கைக்கிளை மாலை, வேனில்மாலை, வசந்த மாலை, புகழ்ச்சி மாலை முதலிய மாலை நூல்கள் அகப்பொருள் பற்றியன.

அங்க மாலை, உற்பவமாலை, கடிகைமாலை, காப்புமாலை ஆகிய மாலைகள் கடவுளோடு தொடர்புடைய மாலைகள். தாண்டக மாலை யாப்பினால் பெயர்பெற்ற மாலை இலக்கியமாகும்.

இம்மாலைஇலக்கிய வகையின் வளர்ச்சியில் எந்தப் பொருள் மேலும் பாடலாம்; எவ்வகைப் பாவாலும் பாடலாம் எனும் நெகிழ்ச்சி யுண்டாகியது.

இக்காலப் புலவர்களும் இவ்வகை இலக்கியத்தைப் படைத் துள்ளனர். இந்நூற்றாண்டில் அண்ணா மணிமாலை, அண்ணா இரட்டை மணிமாலை, அண்ணா மும்மணிமாலை, அண்ணா நான்-மணிமாலை, பெரியார் இரட்டை மணிமாலை, புலவர் நான்மணி மாலை என்பன தோன்றியுள்ளன. இவ்வகை இலக்கியங்களை அறிய சிலம்பொலியாரின் ஆய்வேடு துணைசெயும். 3 பக்தி இலக்கிய காலத்து திருநாவுக்கரசரின் அங்கமாலைகுறிப்பிடத்தக்கஒன்றாகும். திரு அங்கமாலையில் செவி, மூக்கு, வாய், நெஞ்சு முதலிய நமது உறுப்புகளுக்கு ஆணையிடும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. இவ்வகையில் மாலை இலக்கியங்கள் சிவப்பிரகாசரை ஈர்த்திருக்க லாம். சிவப்பிரகாசரும் மாலை இலக்கிய வகையில் இந்நூலோடு

கைத்தலமாலை, சோணசைலமாலை எனும் பல நூல்கள் இயற்றி யுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூல் அந்தாதித் தொடையால் மாலையாக இணைக்கப் பெறுகிறது. இம்மாலையின் பாமலர்களாக வெண்பாவும், கலித் துறையும், விருத்தமும், அகவலும் விளங்கி மிளிர்கின்றன.

'வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல்
பின்பேசு மந்தா தியினாற் பதுபெறி
னான்மணி மாலை யாமென நவில்வர்' 4

எனும் இலக்கணவிளக்கப் பாட்டியல்நூற்பாவுக்குப் பொருந்துகிறது. சமய குரவர் நால்வரின் பெருமையும் பாடுபொருளாகின்றது. அவற்றுள் இக்கட்டுரை சிவப்பிரகாசர் கண்ட திருநாவுக்கரசரை இனம் பிரித்துக் காட்டுகின்றது.

திருநாவுக்கரசர் வரலாறு :

சிவனடியார்களின் வரலாறு அறிதற்குப்பெருந்துணை செய்வன சுந்தரரின் திருத்தொண்டத்தொகையும் அதன் விரிவாகிய நம்பி யாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் அதன் விரிவாகிய சேக்கிழார் திருத்தொண்டர்புராணமும் ஆகும். விரிவஞ்சி வரலாறு இங்கே சுருக்கித் தரப்பெறுகிறது. விரிவு வேண்டுவோர்க்கு க. வெள்ளைவாரணன் அவர்களின் பன்னிருதிருமுறை இலக்கிய வரலாறு எனும் நூலின் இருபாகங்களும் பெருந்துணை புரியும்.

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் எனும் திருத்தலத்தில் சைவவேளாளர் மரபில் குறுக்கையர்குடியில் புகழனாருக்கும் மாதினி யாருக்கும் பிறந்து பேறுபெற்றவர்தான் இந்நாவுக்கரசர். பெற்றோ ரிட்ட பிள்ளைமைப்பெயர் மருள்நீக்கியார் என்பது. அருந்தவப் புதல்வியாம் திலகவதி இவரின் தமக்கையாவார். திலகவதியார்க்குப் பனிரெண்டு ஆண்டுகள் நிறைவெய்தியபோது பெற்றோர், கலிப் பகையார் எனும் படைத்தலைவர் ஒருவருக்கு மணம்பேசி முடித்த னர். ஊழ்வினையின் வலியால் கலிப்பகையார் அக்காலை நடை பெற்றதொரு போரில் மாய்ந்தார். இது நிகழ்ந்த சின்னாளில் தந்தையார் சிவபதம் அடைய, தாயாரும் உடன்கட்டை ஏறினார். தாயின் கொள்கையைப் பின்பற்றிடத் துணிந்தபோது - மணம்பேசி

முடிந்தாலும் மணம்முடிந்ததுபோல்தானே என்று இறக்கத் துணிந்த போது-தம்பியாரின் பெருவேண்டுதலால் மனம் மாறினார். திலகவதி யொடு மருணீக்கியாரும் திருத்தொண்டில் ஈடுபட்டுவந்தனர். இவர்கள்காலத்தில் சமணசமயம் வேரூன்றிக் கிளைபரப்பிய காலம். அச்சமய வல்லாரொடு கொண்ட தொடர்பு இவரையும் சமணசமயத் -தாராக மாற்றிவிட்டது. சமண சமயக் கருத்துக்களில் வல்லமை பெற்றதால் தருமசேனர் பட்டமும் இவரைத் தேடிவந்தது. ஆனால் இவரால் உளரான தமக்கையாரின் உள்ளம் நொந்தது; இறைவ னிடம் முறையிட்டது. சூலைநோய் தந்து விரைவில் ஆட்கொள்வ தாக இறைவன் உறுதி கூறினான். மருணீக்கியார் சூலைநோயால் தாங்கொணாத் துன்பத்திற்கு ஆளானார். சமணர்களால் இச்சூலை நோயின் கொடுமையைத் தணிக்க இயலவில்லை, தமக்கையா ருக்குத் தெரிவிக்க, சமண சமயத்தார் இருப்பிடத்து வருதல்இல்லை என்பதை உணர்த்த, தாமே தமக்கையார் இருப்பிடத்துக்கு வருகி றார். திருநீற்றைப் பூசி, ஐந்தெழுத்தை ஓதி, அதிகை வீரட்டான ரிடம் அழைத்துவருகிறார். தமக்கையின் செயலின்போதே சூலை நோயின் வேகம் குறைகிறநிலையை உணர்ந்தார். திருவதிகை வீரட்டானத்தில் 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' எனும் பதிகம் பாட, சூலைநோய் நீங்கியது. அப்போது இறைவன் அசரீரியாக 'நாவுக்கரசு' எனும் நாமத்தை இவர்க்குச் சூட்டினான். தவறு உணர்ந்து சமண்சமயம்விட்டு மீண்டும் சைவராகித் திருத்தொண் -டில் ஈடுபட்டார்.

சமண சமயத் தலைவர்கள் மகேந்திரவர்ம பல்லவனை அணுகி, மருணீக்கியார் ஏமாற்றியதாகக் குறிப்பிடுகின்றனர் அவரை அழிக்க அரசனின் துணையை உருவாக்கிக்கொண்டனர். பல்லவ மன்னனின் ஆணையால் நீற்றறையில் இடப்பட்டார். ஒரு வாரம் கழித்து, திறந்தபோது முன்னிருந்தவாறே இருந்தார். அதற்கடுத்து சமணர் களின் கொடுமைகள் பால்சோற்றில் நஞ்சாக, மதயானை ஏவுதலாக வந்தன; ஆயினும் அவரை ஏதம் செய்ய இயலவில்லை. இறுதியாக கல்லில்கட்டிக்கடலில்போட்டனர். திருவைந்தெழுத்தாம் நமச்சிவாயப் பதிகம் பாடினபோது கல் தெப்பமாகி மிதந்துவர மேல் அமர்ந்து மீண்டார். உண்மையுணர்ந்த பல்லவனும் சைவ சமயத்திற்கு மாறினான்.

திருநாவுக்கரசர் திருத்தலச் செலவு மேற்கொண்டார். திருப் பெண்ணாடகத்தில் இடபக் குறியும் சூலக்குறியும் பெற்றார். தொடர்ந்த செலவில் சீகாழியடைந்தார். ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தரைப்பற்றி அறிந்து, பார்க்கப் பெருவிருப்புற்றார். நாவுக்கரசர் வந்திருப்பதைச் சம்பந்தமும் அறிந்தார். சம்பந்தரை நாவுக்கரசர் கண்டபோது ஒருவரையொருவர் வணங்குகின்றனர். சம்பந்தர் நாவுக்கரசரை அப்போது அப்பரே என அழைத்தார். மீளவும் திருச்செல்வு தொடர்ந்தது. நல்லூரில் இறைவன் திருவடி பொருந்தியது திங்களூர்சென்றார்; தண்ணீர்ப்பந்தலை அடைந்தார்; தம் பெயரில் இருப்பதை அறிந்து விளக்கம் பெற்றார். அப்பூதி எனும் அவரடியாரின் இல்லம் அடைந்தார். தெளிவுக்குப்பின் திரு வமுது செய்யுமுன் அடியாரின் மூத்த மகன் மூத்ததிருநாவுக்கரசு திருவமுது படைப்பதற்காக வாழையிலை பறிக்கச் சென்றபோது அரவம் தீண்டி இறந்ததை அறிகிறார். பதிகம் பாடி விடம் நீக்கி அவர்களோடு திருவமுது செய்கிறார். மீளவும் திருப்புகலூர் ஞான சம்பந்தரை சந்திக்கிறார். இருவரும் இணைந்தே திருத்தலச் செலவு மேற்கொள்கின்றனர். அப்போது திருவீழிமிழலையில் பஞ்சம் நிலவி யது. அக்கொடிய பஞ்சம் நீங்குமாறு படிக்காசு பெற்றனர். வாசி உடைய காசு திருஞானசம்பந்தரும் வாசியில்லாக் காசு திருநாவுக் கரசரும் பெற்றனர். பின்னர்த் திருஞானசம்பந்தர் பதிகம் பாட வாசி தீர்ந்த காசு நல்கினார். அவர்கள் தொடர்ந்த திருத்தலச் செலவில் திருமறைக்காடு வந்தமைந்தது திருமறைக்காட்டு மூடிக் கிடந்த கதவைத் திறந்தருளினார் திருநாவுக்கரசர். திரும்ப மூடியருளினார் திருஞானசம்பந்தர்.

வழிச்செலவில் நாவுக்கரசர் பழையாறை வடதளியில் சிவலிங்கம் சமணர்களால் மறைக்கப்பட்டிருந்ததை அறிந்து, உண்ணா நோன் பிருந்து மீண்டும் சிவலிங்கத்தைப் பெற்று மகிழ்ந்தார். தொடர்ந்த செலவில் திருப்பைஞ்ஞீலியில் இவரின் நீர்த்தாகத்தையும், பசிக் கொடுமையையும் இறைவன் போக்கினார். இவருக்காகப் பொதி சோறு கொணர்ந்தார் பெருமான். திருக்கயிலாய செலவும் தொடர்ந் தது. ஊன் தேய, உடம்பழிய, குருதி சிந்தத் தொடர்ந்து, சிவபெரு மானால் தடுக்கப்பெற்று, அங்கிருந்த குளத்தில் மூழ்கித்திருவையாறு வந்தடைந்தார். திருத்தலச்செலவு மீண்டும் தொடர்ந்தது. திருப்பூந்

துருத்தியில் திருமடம் அமைத்துத் தங்கியிருந்தார். பாண்டிய நாட்டிலிருந்து ஞானசம்பந்தரும் திருப்பூந்துருத்திக்கு வந்தார். அவரை வரவேற்கச் சென்ற நாவுக்கரசர் அவரின் பல்லக்கைச் சுமந்து வந்தார். 'எங்குற்றார் அப்பர்' என்று சம்பந்தர் வினவ, 'உம்மடியேன் உம்மடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு பெற்றேன்' என்று நாவுக்கரசர் மறுமொழி கூறினார். ஞானசம்பந்தர் உளம்பதைத்து நாவுக்கரசரை வணங்க, அவரும் ஞானசம்பந்தரை எதிர் வணங்கி மகிழ்ந்தார். அதன் பின்னும் திருத்தலச் செலவு தொடர்ந்தது. இறுதியில் நாவுக்கரசர் ஒரு சித்திரை மாதத்துச் சதயத் திருநாளில் புகலூரில் திருவடிப்பேறு எய்தினார்.

இவ்வரலாற்றில் இன்றியமையா நிகழ்ச்சிகளை வரிசைப் படுத்தலாம்.

1. சூலை நீங்கப்பெற்ற செய்தி
2. சமணர்களின் கொடுமைகள் :
    1) நீற்றறையில் இட்டது
    2) பாலடிசிலில் நஞ்சு கலந்து கொடுத்தது
    3) யானைகொண்டு தலையை இடறச் செய்தது
    4) கல்லிற் கட்டிக் கடலில் போட்டது என்பன
3. இடபக்குறி, சூலக்குறி பெற்றது
4. திருவடி சூட்டப் பெற்றது
5. அப்பூதியெனும் அடியாரைப் பெற்றது
6. வீழிமிழலையில் படிக்காசு பெற்றது
7. மறைக்காட்டுக் கதவம் திறந்தது
8. பழையாறை வடதளி சிவலிங்கத்தைப் பெற்றது
9. திருப்பைஞ்ஞீலியில் பொதிசோறு பெற்றது
10. திருக்கயிலைக் காட்சி பெற்றது
11. திருஞானசம்பந்தர் சிவிகை தாங்கியது
12. திருவடிப்பேறு எய்தியது

திருநாவுக்கரசர் வரலாற்றில் உள்ள இச்செய்திகளில் சிவப்பிரகாசரின் ஈடுபாட்டைப்பெற்றவை யாவை எனக்காணுதல் வேண்டும்.

இவற்றுள்,

(1) சூலை நோய் பெற்று நீங்கியது
(2) கல்லில் கட்டிக் கடலில் போட்டும் கடந்து வந்தது
(3) சமணத்திலிருந்து நீங்கியது
(4) பஞ்சம் தீர்க்கப் படிக்காசு பெற்றது
(5) அப்பூதி எனும் அடியாரைப் பெற்றது
(6) மூத்த திருநாவுக்கரசின் விடம் நீக்கியது

ஆகிய நிகழ்ச்சிகள் இவரின் இப்பத்துப் பாடல்களில் இடம் பெற்றுள் ளன. எனவே இந்நிகழ்ச்சிகள் சிவப்பிரகாசரின் உள்ளத்தைத் தொட்டதை உணர முடிகிறது. இவையல்லாமல் சம்பந்தர் சிவிகை தாங்கியது சம்பந்தர் பற்றிய பாடலிலும், கடல் கடந்தது சுந்தரர் பற்றிய பாடலிலும் காணப்பெறுகின்றது. அவ்வரலாற்று நிகழ்ச்சிகள் சிவப்பிரகாசரின் அனுபவத்தில் தோய்ந்து அருள் பாடலாக வெளி வந்துள்ளன.

திருநாவுக்கரசர் பற்றிய பத்துப் பாடல்கள்:

இந்நூலின்கண் 2, 6, 10, 14, 18, 22, 26, 30, 34, 38 என்னும் எண்கொண்ட பாடல்கள் திருநாவுக்கரசரைப் பற்றியன. அவற்றை,

1. நாவுக்கரசரின் பெருமை
2. வரலாற்று நிகழ்ச்சிகள்
3. பொருள் அடிப்படை
4. சிவப்பிரகாசரின் பொருள் புலப்பாட்டு நுட்பம் என்னும் வகைகளில் அமைத்துக் காணலாம்.

1. நாவுக்கரசரின் பெருமை எனும் அடிப்படையில் அவற்றைப் பகுத்துக் காண்கையில் திருநாவுக்கரசரின் பெருமையைத் தனி யாகக் கூறுவனவாக ஏழு பாடல்கள் (6, 14, 18, 26, 30, 34, 38) உள்ளன. பிறரோடு ஒப்பிட்டு அவரின் பெருமையைக் கூறுவன வாக இரண்டு பாடல்கள் (2, 10) உள்ளன. அவர் செய்கைகளை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுக் கூறுவதாக ஒருபாடல் (22) உள்ளது.

வரலாற்று நிகழ்ச்சிகள் அமைதல் என்ற அடிப்படையில் அப்பூதி அடிகளோடு இணைத்துக்காணும் நிகழ்ச்சிகள் மூன்று பாடல்களிலும் [6, 26, 38] கடல் கடந்த நிகழ்ச்சி இரு பாடல்களிலும் [18, 22] படிக்காசு பெற்ற செய்தி [10] சூலைநோய் நீங்கிய செய்தி [2] மறைக்காட்டுக் கதவம் திறந்த செய்தி [14] ஆகியன ஒவ்வொரு பாடலிலும் பொது நிலையில் அவரின் பிறப்பு மேம்பட்ட நிலையை [30] ஒரு பாடலிலும் சமணத்திலிருந்து சைவம் மாறிய செய்தி [34] ஒரு பாடலிலும் அமைந்து சிறந்துள்ளன.

பொருள் அடிப்படையில் பகுத்துக் காணுகையில் திருவடிப் பேற்றினைப் புகழ்ந்ததாக[38]ஒரு பாடலும் திருப்பாடலைப் புகழ்ந் ததாக சில தொடர்களும், திருநாவுக்கரசரின் அருட்செயல்களைப் புகழ்ந்ததாக [2, 6, 10, 14, 18, 22, 26] ஏழு பாடல்களும் பொது நிலையில் அமைந்ததாக [30] சைவம் திருநாவுக்கரசரால் கூர்ந்து மிளிர்தருவதாக [34[ஒரு பாடலும் உணர்த்துகின்றன.

சிவப்பிரகாசரின் பொருள் புலப்பாட்டு நுட்பம் என்ற அடிப் படையில் பகுத்துக் காணுகையில்,

திறனாய்வாளராக விளங்குதலை ஐந்து பாடல்களும் [2,10,22 26, 34] தன்னிலை கண்டு இரங்குதலை ஒரு [6] பாடலும் யாதா யினும் வினவித் தெளிபவராக [6, 10, 22] மூன்று பாடல்களும் தத்துவ விளக்கம் கூறுபவராக ஒரு பாடலும் [14] வாழ்வியல் உண்மை கூறுபவராக மூன்று [13, 26, 30] பாடலும் காரண காரி யத்தை விளக்குபவராக ஒரு [2] பாடலும் உள்ளன.

இவ்வாறு அப்பத்துப் பாடல்களும் வெவ்வேறு வகையில் பகுத்துக் காணக்கூடிய நிலையில் விரிந்து இடம் கொடுக்கின்றன.

வீட்டிற்கு வாயில் எனும் தொடை :

திருநாவுக்கரசருடைய தேவாரப் பதிகங்களாகிய நான்கு, ஐந்து ஆறாம் திருமுறைகள் வீட்டு நெறிக்கு வாயிலாக விளங்குவன என்று சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார். முதலாவதாகத் தேவாரத் திருப் பதிகங்களைத் 'திருமுறை' என்று பெயரிட்டதன் விளக்கம் அறிதல் வேண்டும். அறியின் தெளியும்.

' திரு + முறை - திருமுறை; திரு-கண்டோரால் விரும்பப்பெறும்

தன்மை, நோக்கம், அழகு என்பார் பேராசிரியர். இங்குத் தெய்வத தன்மை. 'திரு' என்ற சொல் உபகாரமாக உலகியல்செல்வங்களைக் குறித்தாலும், இங்குச் சிவபோகமாகிய மோட்சச் செல்வத்தைக் குறிக்கின்றது.' 5 என்பார் பட்டுச்சாமி ஓதுவார். மேலும் இவர்,

'இறைவன் திருவருளால் சிவபோகமாகிய திருவினை அடைந் துய்ய அருளாளர்களால் வெளிவரப் பெற்ற சிறந்த மெய்ந்நூலே திருமுறை எனப்படும்' 6 என்ற விளக்கத்தையும் தந்துள்ளார். மிகச் சுருக்கமாக 'திருமுறை' 'திருவைப் பயக்கும் உயர் நூல்' 7 என்கி றார் க. வச்சிரவேல் முதலியார். இவர் திருவெனக் குறிப்பிடுவது இறையருளையே ஆகும்.

''அருளோடு கூடிய சிவ பரம் பொருளே திரு. அதாவது பெறத் தக்க செல்வம்..................முறை என்னும் சொல், நூல் என்னும் பொருள் கொண்டு நிற்கின்றது திருமுறை என்பது நிலையாய செல்வத்தை மக்கள் எளிதாக அடைதற்கு வழிகாட்டும் நூல்'' 8 என்ற வே.சுப்பிரமணியம் அவர்களின் கருத்தும் குறிப்பிடத்தக்கது.

மேலும், 'முறை' என்பது நூல் என்ற பொருளில் வந்துள்ளது. ஆகவே திருமுறை என்பது அருட்செல்வத்தை வழங்கும் அழியாத பெருமை வாய்ந்த உயர்ந்த நூல்கள் என்ற பொருளைத் தரும்.' 9 என்ற தண். கி. வேங்கடாசலம் அவர்களின் கருத்தும் மேற்கருத் தோடு பொருத்தமாகக் காணப்பெறுகிறது.

மேற்கண்ட அறிஞர்களின் கருத்திற்கு விளக்கமாகவும் சுருக்க மாகவும், செறிவாகவும் சிவப்பிரகாசரின் 'வீட்டிற்கு வாயில் எனும் தொடை' என்ற தொடர் அமைந்து சிறக்கின்றது. அறிஞர் கூற்றும் அருளாளர் சிவப்பிரகாசரின் அருள்மொழியும் மட்டுமன்றி, தேவாரத் திருப்பதிகங்களிலும் அதற்கு அரண் செய்யும் இடங்கள் உள்ளன.

''...............தமிழ்மாலை
பற்றி என்றும்இசை பாடிய மாந்தர் பரமன் அடிசேர்ந்து
குற்றமின்றிக் குறைபாடொழியப் புகழ்ஓங்கிப் பொலிவாரே''10

''பாட வல்லார் குளிர் வானத் துயர்வாரே'' 11

''பண்இயல் பாடவல்லார்கள் இந்தப்பாரொடுவிண் பரிபாலரே''12

''வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் மற்றிதற் காணையும் நமதே'' 13

என்று திருஞான சம்பந்தர் பாடல்களும்

''பாரும் விசும்பும் தொழப் பரமனடி கூடுவரே'' 14

''சீரார் சிவலோகத் திருப்பர் தாமே'' 15

''இறந்து போக்கில்லை வரவில்லையாகி இன்ப
வெள்ளத்துள் இருப்பார்கள் இனிதே'' 16

என்று சுந்தரர் பாடல்களும், தேவார திருப்பதிகங்கள் வீட்டிற்கு வாயிலாதலைப் புலப்படுத்துகின்றன. சேக்கிழாரும்,

''பித்தாபிறை சூடிஎனப் பெரிதாந்திருப் பதிகம்
இத்தாரணி முதலாம்உல கெல்லாம்உய்ய எடுத்தார்'' 17

என்று குறிப்பிடுகிறார்.

தேவாரத் திருப்பதிகங்களிலே குறிப்பிடப்பெறுகின்ற, அறிஞர்களால் எடுத்துரைக்கப்பெறுகின்ற கருத்துக்கு அரண்செய்யக்கூடியதாக விளங்குகிறது இத்தொடர்.

சிவப்பிரகாசர் இக்கருத்தைத் திருநாவுக்கரசரைப் பாடும் பாடல்களில் மட்டுமல்லாமல் சமய குரவர் நால்வர் பாடல்களிலும் குறிப்பிடுகிறார்.

''தண்டை வெறித்தண் கமலமே வீடு'' 18 எனவும்

''வல்லார் பிறப்பறுப்பர்.........ஒருஞான சம்பந்த முற்று'' 19

எனவும் திருஞானசம்பந்தரைப் பற்றிய பாடல்களிலும்

''வீட்டிற்கு வாயிலெனுந் தொடை'' 20 எனவும்

''என்றும் துன்பில்பதம் பெற்றான்'' 21 எனவும்

திருநாவுக்கரசரைப் பற்றிய பாடல்களிலும்

'' பாவாய்ப் பொழிந்த வானமுதப்
பவளத் திருவாய் நம்பி'' 21(அ)

என்று சுந்தரர் பற்றிய பாடலிலும்

''விலங்குறு முத்தி மெய்ப்பயன் தருமே'' 22 எனவும்

''மதுர வாசகம் ஓதின் முத்தி உறுபயன்'' 23 எனவும்

''தானே முத்தி தருகுவன்'' 24 எனவும்

மாணிக்கவாசகர் பற்றிய பாடல்களிலும் சிவப்பிரகாசர் இக்கருத்தை வலிமையுறச் செய்கிறார்.

திருமுறை நூல்கள் யாவுமே அவற்றினும் குறிப்பாகத் தேவார, திருவாசகங்கள் வீடுபேற்றிற்கு வழிகாட்டக்கூடிய நூல்கள்என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்து தம் பாடல்களில் அமைத்துப் போற்றியுள்ளமை புலப்படுகிறது.

சிவப்பிரகாசர் திருநாவுக்கரசரை விளிக்கும் முறை :

இப்பத்துப் பாடல்களில் திருநாவுக்கரசரை முன்னிலையாக்கிப் பாடியன ஆறு (2,6,10,22,30,34) பாடல்களாகும். படர்க்கையில் அமைத்துப் பாடியன நான்கு (14,18,26,38) பாடல்களாகும். முன்னிலையாக்கி அழைக்கும்போதும் படர்க்கையில் அவரைக் குறிப்பிடும்போதும் நாவுக்கரசரை எவ்வாறு குறிப்பிடுகிறார் எனக் காண வேண்டும். சிவப்பிரகாசர் அவரை,

1. சொல்வேந்த
2. திருத்தாண்டக வேந்த
3. நாவரசாய பெருந்தகையோய்
4. நோயிலியாகிய சொல்லிறை
5. சொல்லிறைவனை
6. சொல்வேந்த
7. திருநாவுக்கரசினை
8. பாவலனே
9. நாவரசே
10. நாவுக்கரசு

என்று குறிப்பிடுகிறார். இப்பத்து குறிப்புகளுள் திருத்தாண்டக வேந்த, பாவலனே என்ற இரு குறிப்புகள் மட்டுமே வேறுபட்டன. அவை அவரின் புதிய யாப்பின் மன்னர் என்பதை உணர்த்துவன. பிற எட்டு குறிப்புகளும் நாவுக்கரசர் என்றே உள்ளன. பெற்றோர் இட்ட பெயர் மருணீக்கியார் என்பதோ. திருஞானசம்பந்தர் இட்ட பெயர் அப்பர் என்பதோ சிவப்பிரகாசரால் ஆளப்பெறவில்லை. சிவபெருமான் இட்ட பெயராகிய திருநாவுக்கரசு என்பதே மிகுதியும் ஆளப்பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

''பாவுற்றலர் செந்தமி ழின்சொல்வளப்
 பதிகத்தொடை பாடிய பான்மையினால்
நாவுக்கரசு என்றுல கேழினும்நின்
 நன்னாமம் நயப்புற மன்னுகவென்

றியாவர்க்கும் வியப்புற மஞ்சுறைவா
னிடையே ஒருவாய்மை எழுந்ததுவே'' 25

என்ற சேக்கிழாரின் பாடல் இறைவன் இட்ட பெயர் திருநாவுக்கரசு என்பதைக் குறிப்பிடக் காணலாம். திருநாவுக்கரசர் என்ற பெயரே வடமொழியில் 'வாகீசர்' எனப்பெறுகிறது. இன்னும் நாவுக்கரசு என்பது செந்தமிழில் 'சொல்லிறை' என்று சிவப்பிரகாசரால் அழைக்கப்பெறுகின்ற மாட்சியையும் காணமுடிகிறது.

சிவனால் தரப்பெற்ற திருப்பெயர் என்ற பெருமை நிலையிலும் அப்பூதியடிகளுக்கு மந்திரமாகி முத்தி தந்த திருப்பெயர் என்ற பயன் நிலையிலும் திருநாவுக்கரசு எனும் திருப்பெயர் விளங்குகிறது.

''நீலகண்டன், முக்கண்ணன் என்ற பெயர்கள் உறுப்பின் அடிப்படையில் உடையானுக்கு அமைந்த பெயர்கள். வாலின் பெயரால் சிறப்பு பெற்ற வாலி, கழுத்தின் அழகால் சிறப்பு பெற்ற சுக்ரீவன் போன்ற பெயர்களையும் காணலாம். அறங்கரை நாவர், நான்மறை நாவர் என்பன நாக்கின் அடிப்படையாக அமைந்த பெயர்கள்...... அப்பெயர் நாக்கின் சிறப்பை உணர்த்தும் முறையில் அமையாமல், 'நாவுக்கு அரசு' என்று நாக்கை நல்வழியில் செலுத்தி, பணிகொண்டு ஆளுந்தன்மையிற்சிறப்பாகப்பணியாற்றியமையால் அப்பரடிகளையே உணர்த்துவதாய் அவர்தம் பெருமையே விளக்குவதாக அமைந்தது'' 26 என்றும் வை. இரத்தின சபாபதி அவர்களின் கருத்தும் குறிக்கொள்ளத்தக்கது.

இத்திருப்பெயரையே வை. இரத்தின சபாபதி அவர்கள் சொல் வன்மைக்கும் கொள்கிறார். வேறொருவகையில் தொண்டு நிலைக்கும் கொள்கிறார். அவர்,

'' சிவன் எனச்சொல்லும் நாக்கு, நாக்குடையவர் நமக்கு அரசு' என்ற பொருள் அடிப்படையில் 'நா நமக்கு அரசு' என விளக்கம் அமைத்து இவ்வகை செயற்பாட்டு முறைகளை அமைத்துக் கொள்கிறார்.

1. சிவன் எனப்பேசும் நாக்கு நாக்குடையவர் தம்மை ஆளும் அரசு எனக்கொண்டு அடிமை பேணுதல்.
2. சிவத்தின் பெருமையே பேசுமாறு தம்முடைய நாக்கைச் செயற்

படுத்தி அந்நாக்கையும் தமக்கு அரசு எனக் கருதிப் பணி செய்தல்'' 27 என்று அமைத்துக்காட்டுகிறார்.

இத்திருப்பெயர் வானில் எழுந்த காலந்தொட்டு இந்நாள் வரையில் யாராலும் வழங்கப் பெறவில்லை. திங்களூரில் அப்பூதியடிகளே இத்திருப்பெயரை மந்திரமாகக் கொள்வது மட்டுமல்லாம் உயிருள் பொருள்களுக்கும், உயிரில் பொருள்களுக்கும் இட்டுத் திரும்பத் திரும்பப்பேசுமாறும்,எழுதுமாறும் வாழ்வை அமைத்துக்கொண்டார். அவர் வாழ்வில்தான் திருப்பெயரே பெருமையுறுகிறது. அதற்கடுத்த நிலையில் இத்திருப்பெயரை மிகுதியான இடங்களில் ஆண்டபெருமை சிவப்பிரகாச சுவாமிகளைச் சாரும்.

நோயிலியாகிய சொல் இறை :

சொல்லை இவர் நோயிலியாகிய சொல் என்று குறிப்பிடுவதைக் காணல்வேண்டும். சொல் என்றாலே அது பொருள் உணர்த்த வேண்டும் என்பதில் யாருக்கும் ஐயம் இருக்காது. இருப்பினும் ஒரு சொல் குறிப்பிட்ட ஒரு சரியான பொருளைத் தர இயலாத நிலை பெற்றதனால் அது குறையுடையதாகிறது. அது நோய்ச் சொல் என்று கூறலாம். ஆனால் இச்சொல் வேந்தரின் சொற்கள் குறையுடையன அல்ல. மேலும் அவை நிறைவுடையன. அதைத்தான் 'நிறைமொழி' என்கிறோம். அத்தகைய சொற்கள் பொருளை விளக்குதலோடு-பொருட்பயன் தருதலோடு மறைமொழியாகவும் ஆகும் பெருமையுடையது.சொல் வேந்தனால்தான்-நாவுக்கரசனால் தான் நோயாலியாகிய சொல்லிறையாக முடியும்.

'' திருநாவுக்கரசர்' 'நோயிலியாகிய சொல்லிறை' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். சொல்லாற் பொருளை உணர்த்துதல் மரபு என்ற முறையில் ஒலிகளின் கூட்டுஎன நிற்கும். சொல்லானது தனக்கென வரையறுத்த பொருளைக் கேட்பவன் உள்ளத்தில் உணர்த்துதல் வேண்டும் சொல்லானது அதன் பொருளைக்கேட்பவன் உள்ளத்தில் உணர்த்தும் நிலையில் குறைபடுமானால் அச்சொல்லை 'நோய்ச் சொல்' எனக்கூறலாம். நொய்தாம் சொல் என்பது பொருள். நொய் தாம் நிலை(நொய்யும் நுறுய்கும் ஆகிய நிலைகளைக்) கொள்ளாமல் முழுமை (நிறைவு) என்ற நிலையில் நிற்கும் சொல்லை, 'நோயிலி யாகிய சொல்' என்பது அறிஞர் வழக்கு. திருநாவுக்கரசர்

4 ''நோயிலியாகிய சொல்லிறை''என்ற சிறப்பு பெற்றவர்''28 என்று வை. இரத்தினசபாபதி அவர்கள் விரிந்த விளக்கத்தைத் தருகிறார்.

''மலங்கெடுத்து முத்தரான மாண்புடையோரே பிறரையும் மல முத்தராக்குதற்கு உரியராதலின், 'நோயிலி' என்றும், அப்பர் சொல்லவரனே பிறரை முத்தராக்க வல்லுநர் என்பார் 'சொல்லிறை' என்றார்' எனும் ஜி.சுப்பிரமணியம் அவர்களின் கருத்தும்' 29 மனங் கொள்ளத்தக்கது. இக்கருத்தையே இராமலிங்கத் தம்பிரான் அவர்களும், இராமலிங்க சுவாமிகளும், புன்னைவனநாத முதலியார் அவர்களும் தங்கள் உரையில் குறிப்பிட்டுள்ளனர்.

திருத்தாண்டக வேந்தர்

பக்தி இயக்கம் மொழியுணர்வினை உணர்த்தியதோடுஅல்லாமல் பலவகையான புதிய புதிய இலக்கிய வடிவங்களைத் தமிழில் கொணர்ந்து, சங்க காலத்திற்குப்பின் சமய உணர்வே பல்வேறு இலக்கியங்களையும் படைக்க உந்திற்று எனல் வேண்டும். பன்னிரு திருமுறை ஏறக்குறைய முப்பத்தாறு வகை இலக்கியங்களைக் கொண்டு விளங்குகிறது. தொல்காப்பியம் கூறிய நால்வகைப் பாக்களால் மட்டுமே நடைபோட்டுக்கொண்டிருந்த தமிழிலக்கியம் உலகில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியது. பாவினங்கள் வளர்ச்சி பெற்றன; புதுப்புது சந்தங்களை ஆண்டனர்.

''பத்தி மார்க்கம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஒரு முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.'' 30 என்னும் அருணாசலம் அவர்களின் கூற்றும் அதைத் தெளிவு செய்கிறது.

தனிநிலைப் பாடல்களாகவும் தொடர்நிலைச் செய்யுட்களாகவும் விளங்கிய இலக்கிய உலகம் புதுப்புது இலக்கிய வடிவங்களைக் கண்டது.இவற்றுக்கு இலக்கியக்கூறுகள் சங்க காலத்தில் இல்லாமல் இல்லை. இவ்விலக்கியத்திற்கு முன்பு சிற்றிலக்கியக் கூறுகள் இருந்தாலும் பெரும்பாலும் இக்காலத்திலேயே சிற்றிலக்கிய வகைகள் எல்லாம் தோன்றின எனலாம்.

''இத்திருமுறையில் உள்ள பிரபந்தங்களில் கலம்பகத்தைத் தவிர மற்ற பாட்டுகள் எல்லாம், அந்தந்த பிரபந்த வகையில் முதன் முதலாக ஆக்கப் பெற்றவை என்பது கவனிக்கத்தக்கது'' 31 எனும்

ஏ.வி.சுப்பிரமணிய அய்யர் அவர்களின் விளக்கம் மேலதைத் தெளிவு படுத்துகிறது.

''பதிக வடிவம் பொது உருவாக அமையினும், பல பிரபந்த வகைகளின் முதல் முயற்சிகள் இவற்றின் கண் அமைந்து, புதிய இலக்கிய வகைகளையும் வடிவங்களையும் தமிழனுக்கு அறிமுகம் செய்தன'' 32 எனும் ச வே.சுப்பிரமணியன் அவர்களின் கருத்தும் அஃதே. அவ்வகையில் திருநாவுக்கரசரின் 'திருத்தாண்டகம்' எனும் வடிவமும் புதியதே.

'' தமிழ்ச் செய்யுள் வகையாகிய தாண்டகம் என்னும் யாப்பிற்கு மூல இலக்கியமாகவிளங்குவன திருநாவுக்கரசர்அருளிய திருத்தாண்டகப் பதிகங்களே ''33 என்னும் க. வெள்ளைவாரணன் அவர்களின் கருத்து இவ்விலக்கிய வகை புதியது எனத் தெளிவாக்குகிறது.

மெ. சுந்தரம் அவர்கள்,

''சங்கத்துச் சான்றோரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி புதிய இலக்கிய மரபினை உருவாக்கினார். அதுதான் அவர் சமயத்துறையில் அமைத்துக்கொடுத்த பக்தி-அகப்பொருள் துறை, ஆடல் பாடல் மூலம் ஆண்டவனை வழிபடலாம் என்று கண்ட இலக்கணத்திற்கு இலக்கியம் அவருடைய திருத்தாண்டகம். திருத்தாண்டகப் பாமுறையே அவர் புதியது புகுத்தியதுதான். ஆண்டவனைப் பாட, தாண்டகம் என்ற புதிய மரபை உருவாக்கியவரே அப்பர்தான்'' 34 என்று குறிப்பிடுவதும் அஃதே.

" அவர் 'தாண்டகம்' என்று கூறப்பெறும் புதிய யாப்புவகை பாடியதால் 'தாண்டக வேந்தர்', 'தாண்டகச் சதுரர்' என்று சிறப்பாக அழைக்கப்பெறுகிறார்.

''தாண்டகம் என்ற பாட்டியல் வகையை அடிகள் கையாண்டு வெற்றிபெற்றுள்ளமையாலேயே 'தாண்டகச் சதுரர் 'என்ற சிறப்புப் பெயருக்குரியவரானார்'' என்னும் சிங்காரவேலனாரின் கருத்தும் அஃதே.

மறை. திருநாவுக்கரசு அவர்களும்

''திருக்கோயிலை, மாந்தர் நடமாடும் வீதியினைத் தம் கையால் உழவாரப் பணிபுரிந்த அவ் 'வள்ளலார்' மன்பதை உய்யத் 'தமிழ்

மொழித் தலைவராகி', 'மொழி வேந்தராகி' முக்காலத்தவரும் உய்யுமாறு 'தாண்டகச் சதுரராக'வும் திகழ்ந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். 36 க. வெள்ளை வாரணன் அவர்களும் இதைக் குறிப்பிடுகிறார். 37

''நாவுக்கரசர் பாடிய திருக்குறுந்தொகையும் திருத்தாண்டகமும் அவருக்குத் தனிப் பெருமையைத் தருகின்றன. தாண்டகத்தின் அழகையும் பெருக்கத்தையும் பாராட்டி, அப்பர் பெருமானைத் 'தாண்டக வேந்தர்' என்றும் 'தாண்டகச் சதுரர்' என்றும் போற்றுவாராயினார் என்பார் கருத்தும் மேலதே.'' 38

இத்தாண்டகப் பாவின் இயல்புகளைக் க. வெள்ளைவாரணன் அவர்களும்,

'' தன்னொப்பாரில்லாத் தலைவனாகிய இறைவனுடைய அருட்குணங்கள் எல்லாவற்றையும் அப்பெருமான் திருமுன்னிலைப் பரவுதலாக எடுத்துரைத்துப் போற்றுதற்கும் உலக மக்களுக்கும், தமது நெஞ்சத்திற்கும் தெளிவாக விரித்துரைத்தற்கும் ஏற்றவாறு விரிந்த சொல்நடையும் எல்லார்க்கும் எளிதில் பொருள்விளங்கும் தெளிவும் பெற்றுத் திகழ்வன திருத்தாண்டகப் பதிகங்களாகும்'' 39 எனக் கூறுகிறார்.

திருநாவுக்கரசரின் ஆறாம் திருமுறை முழுவதும் தாண்டக யாப்பிலேயே அமைந்துள்ளது. இத்தாண்டகம் வடமொழி இலக்கணம்பற்றி வந்த செய்யுள் என்றும் இது தமிழ் யாப்பே என்றும் வெவ்வேறான சிந்தனைகள் உண்டு.

''யாப்பருங்கல விருத்தி 2 ஆம் சூத்திர விளக்க உரையிலிருந்து (1) அளவியல் தாண்டகம் (2) அளவழித் தாண்டகம் என்ற இரு வகைகள் அறியப்படும். பன்னிரு பாட்டியல் நூலிலிருந்தும் அதன் அதன் உரையிலிருந்தும் அறியப்படும் வகைகள் (1) குறுந்தாண்டகம் (2) நெடுந்தாண்டகம் என இரண்டாம். ஒவ்வோர் அடியினும் அறுசீரேனும் எண்சீரேனும் வகையாக அமைத்து இயற்றப்பட்ட நான்கடிச் செய்யுளான் ஆடவரையும் கடவுளரையும் புகழ்வது, 'தாண்டக இயல்' என்பது பன்னிரு பாட்டியல் கருத்தாகும். இவற்றுள் அறுசீரடிப் பாக்களால் ஆயது குறுந்தாண்டகம்; எண்சீரடிப் பாக்களால் ஆயது நெடுந்தாண்டகம்.''

''மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளரைப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
அறுசீர் குறியது நெடியதெண் சீராம்'' (110)

என்பது பன்னிரு பாட்டியலார் கூற்று.

''அறுசீர் எண்சீர் அடிநான்கு ஒத்தங்கு
இறுவது தாண்டகம் இருமுச் சீரடி
குறியது; நெடிய(து) இருநாற் சீரே''

என்பது பல்காயனார் வாக்கு.

''மங்கள மரபின் மானிடர் கடவுளர்
தம்புகழ் உரைப்பது தாண்டக வகையே''

''தாண்டகம் மானிடர் கடவுளர்க் குரித்தே''

என்பன மாபூதனார் நூற்பாக்கள்.

''அடிவரை நான்கும் எழுத்தெண்ணி
நேரடி வருவது தாண்டகம் ஆகும்''

என்பார் சித்தலையார். இருபத்தேழு எழுத்து முதலாக உயர்ந்த எழுத்தடியினவாய் எழுத்தும் குருவும் லகுவும் ஒத்து வருவன் அளவியல் தாண்டகம் எனவும், எழுத்து ஒவ்வாதும் எழுத்தலகு ஒவ்வாதும் வருவன அளவழித் தாண்டகம் என்வும் பெயர்பெறும் என்பது யாப்பருங்கல விருத்தியுரைகாரர் விளக்கம் ஆகும். 40

''அப்பரடிகள் அருளிய தாண்டக அமைப்பு ஒற்றும் குற்றியலுகரமும் நீக்கி எழுத்தெண்ணி வகுக்கப்பட்ட ஐவகைஅடிகளுள் கழிநெடிலடிக்கு மேலெல்லையாகிய இருபது எழுத்து என்னும் அளவினைக் கடந்து இருபத்தேழெழுத்திற்கு உட்பட்டு வருவது. ஆனால் யாப்பருங்கல விருத்தி கூறும் இலக்கணம் இதனினும் வேறுபட்டது என்பது மேலே காட்டப்பட்டது. யாப்பருங்கல விருத்தி உரையின் கருத்துப்படி இந்த யாப்பு அமையவில்லை என்பது அறிந்துஉணரத் தக்கது' 41 என்கிறார் சொ. சிங்காரவேலன் அவர்கள்.

வடமொழி இலக்கண அடிப்படையில் அமைந்த தாண்டகப்பா வேறு; தமிழ்ச்செய்யுள் இலக்கண அடிப்படையில் எழுந்த தாண்டகப்பா வேறு.

பன்னிரு திருமுறை இலக்கிய வரலாற்றாசிரியரும் மேற் கருத்தையே குறிப்பிடுகிறார். தமிழ்ப் பாவகையில் திருத்தாண்டக யாப்புக்கு மூல இலக்கியமாக விளங்குவன திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகப்பதிகங்களே ஆகும் என்கிறார் அவர். வை.இரத்தின சபாபதி அவர்களும் இக்கருத்தையே குறிப்பிட்டுள்ளார்.

''தாண்டகம் என்பது தொல்காப்பியச் செய்யுளியலின்படி எண் சீரான் வந்த கொச்சக ஒருபோகு எனக் கூறப்படும் அடிதோறும் நான்காம் சீரும் எட்டாம் சீரும் தேமாவாக நிற்ப, மூன்றாம் சீரும் ஏழாம் சீரும் பெரும்பான்மை தேமாவாகவும் ஒரோவழி புளிமாவாக வும அமைய இவையொழிந்த ஒன்று, இரண்டு, ஐந்து, ஆறாஞ்சீர் கள் பெரும்பாலும் காய்ச்சீர்களாகவும் சிறுபான்மை மாச்சீர் விளச் சீர்களாகவும் வருதல் தாண்டகம் என்னும் பாவின்இயல்பாகும்.''42 மேலும்,

எண்சீரான் வந்த இத்தாண்டகப் பாவில் அடிதோறும் மூன்று, நான்கு, ஏழு, எட்டாம் சீர்களை விலக்கிவிட்டு, ஏனைய நான்கு சீர்களையும் இணைத்து நோக்கினால் அப்பாடல் கொச்சகக் கலிப்பா என்னும் யாப்பு உருவில் அமைதலைக் காணலாம். எனவே நாற் சீரடியால் வரும் கலிப்பா அடிதோறும் இடையிலும் ஈற்றிலும் இவ் விரண்டு மாச்சீர்களைப் பெற்றுவருதலால் அமைந்த எண்சீரடியாப்பு இத்தாண்டகப் பாவுக்கு உரியது என்பது நன்கு புலனாகும். இவ் வகையில் பாடல் புனைதல் மிகக் கடினமான ஒன்று. அருளாளர் ஆகையால் அவரால் வெற்றி காண இயன்றது. இத்தாண்டகம் கழி நெடிலடிக்கு உரிய மேலெல்லையாகிய இருபது எழுத்து என்னும் வரையறையை மீறி வருகிறது. திருப்பதிகங்களில் இவ்வகையன பிற உளவெனினும் அவை பண்ணொடு கூடிய இசைப்பாடல்களாக உள்ளன. இசைப் பாடல்களாதலால் இயல்வகையில் அமைந்த இப் பெயர் அவற்றுக்குப் பொருந்தாது. 43

மேற்கண்ட விளக்கங்களைக் காணுகையில் தாண்டக வேந்தர் என அப்பரடிகளைக் கூறல் பெரிதும் பொருத்தமானதே. கி.பி.7ஆம் நூற்றாண்டில் இப்புதுவகையாப்பு பெருஞ்செல்வாக்கைப் பெற்றிலங் கியது. மிக அரிய, பிற வகையில் வெற்றி கண்ட இந்த யாப்புவகை சிவப்பிரகாசரின் சிந்தனையை எழுப்பி வியக்கவைத்திருக்கும்.

அதனால்தான் இவர் 'தாண்டக வேந்தர்' எனத் திருநாவுக்கரசரை அவர் பாடிய பாவகை அடிப்படையிலும் சிறப்பிக்கின்றார்.

ஒரு நம்பி அப்பூதி எனும் பெருந்தகை :

திருநாவுக்கரசரின் அருள்செயல்களைக் கேட்டு அவரைக் காணாமலேயே குருவாகக் கொண்டு, திங்களூரில் அப்பூதியடிகள் எனும் நாயன்மார் ஒருவர் வாழ்ந்துவந்தார். தம் தலைவன் செய்யும் நல்லறங்களை-தண்ணீர் பந்தல் வைத்தல்-நிழல்தரும் சோலை அமைத்தல்-அடியார்க்கு அமுதூட்டல் முதலான நல்லறங்களைச் செய்துவந்தார். தம்மைச் சார்ந்துள்ள உயிருள்ள பொருள்களுக்கும் உயிரில் பொருள்களுக்கும் தம் தலைவன் நாமமாகிய திருநாவுக்கரசு எனும் பெயரையே இட்டார். தண்ணீர்ப் பந்தலுக்கும் திருநாவுக்கரசு தண்ணீர்ப் பந்தல் என்று பெயர். அவர்தம் மகனுக்கும் திருநாவுக்கரசு என்று பெயராகும். திருநாவுக்கரசர் தம் திருச்செலவில் ஒருமுறை திங்களூர் வருகிறார்; தண்ணீர்ப் பந்தலை அடைகிறார்; விளக்கங்களை அறிந்து வியக்கிறார். அப்பூதியடிகளின் இல்லம் அருகிலிருப்பதால் அங்கேயே எழுந்தருளுகிறார். தண்ணீர்ப் பந்தல் முதலானவற்றிற்கு அப்பூதியடிகளின் பெயரை எழுதாமல் வேறொரு பெயர் ஏன்? என வினவுகிறார். சமணர்களின் கொடுமைகளிலிருந்து திருத்தொண்டின் உறைப்பாலே வென்ற அவரை யார் என்றா கேட்பீர்? எனச் சினந்தார் அப்பூதியடிகள். நாவுக்கரசர் தம்மை அறிமுகம் செய்ய, அடிபணிந்து மகிழ்ந்து அமுதுசெய்தருள வேண்டுகிறார். உண்பதற்காக வாழையிலை பறித்துவர மகன் மூத்த திருநாவுக்கரசனைப் பணிக்கிறார். அவனோ வாழைமரத்திலிருந்த பாம்பொன்றால் இறந்துபடுகிறான். அதை மறைத்து அடியார்க்கு அமுது படைக்கின்றார். அமுதுசெய்தருளுதற்குமுன் அவர் இல்லத்தார் யாவரையும் வரப் பணிக்கிறார். அப்போது மூத்த திருநாவுக்கரசு வர இயலாது என அப்பூதியடிகள் சொல்ல, பிறகு காரணம் அறிகிறார்; 'ஒன்றுகொலாம்' எனும் பதிகம் பாடி, விடம்நீக்கி, இறந்தவனை உயிர்ப்பிக்கிறார். அதற்குப் பிறகு அவரையும் அவர் இல்லத்தாரையும் உடன் அமரச் செய்து அமுதுசெய்தருளுகிறார். திருநாவுக்கரசு எனும் திருப்பெயரை மந்திரமாகக்கொண்டு மாண்புற்றார் அவ்வடியார்.

அகச்சான்றுகள் :

திருநாவுக்கரசரே,

''வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பறந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியார் கோடியையே.'' 44

எனத் தாம் பாடிய திருப்பதிகப் பாடலில் வைத்துப் பாராட்டிய பெருமை அப்பூதியடிகள் பெற்ற பெரும்பேறாகும்.

இதனால் திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடத்துக்கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் தெள்ளத்தெளிவாகப் புலனாகிறது.

மேலும் அப்பூதியடிகளைச் சுந்தரர்'ஒருநம்பி அப்பூதி யடியார்க்கும் அடியேன்' 45 என்று குறிப்பிடுகின்றார். சேக்கிழாரும் 'செப்பருஞ்சீ ரப்பூதி யடிகள்' 46 என்றே பாராட்டுகின்றார். இத்தொடருக்குச் சி.கே.சு. அவர்கள் உரை காணும்போது.

''ஒருநம்பி யப்பூதி என்று ஆளுடை நம்பிகள் ஏத்திய அரிய சிறப்பும், நாயனார் தேவாரத்தில் வைத்து ஏத்தநின்ற சிறப்பும் அவரது புராணத்தில் காணப்படுகின்றபடி அவரது அன்பின்திறமான சிறப்பும் செப்பற்கரியன'' 47 என்பது குறிப்பிடத்தக்கது. அரிய சிறப்பாகவும், நிலைநின்ற சிறப்பாகவும் அமைந்ததை இதன் மூலம் உணரவியலுகிறது.

சுந்தரர் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் 'நம்பி' என்ற சிறப்பு அடைமொழி கொடுத்து ஏழு அடியார்களைக் குறிப்பிடுகிறார். அவர்களுள் ஒருவராக அப்பூதியடிகள் விளங்குகிறார். சுந்தரரால் ஒரு நம்பி என்ற சிறப்பு பெறுதல் இயல்பானதா? அதுவும் சிவனையல்லாது சிவனடியாரையே வணங்கிய அப்பூதிக்கு இயலுமா? மேலும்' திருநாவுக்கரசு' எனும் திருப்பெயரைப் பேசியும் எழுதியும் வந்தவர்க்கோ அது கிடைக்கும்? என்ற வினாக்கள் தொடர்வது உறுதி. ஆமாம், சிவபெருமானிடம் தோழமை கொண்டவர் சுந்தரர்.சிவனையும், சிவனை மட்டுமே வழிபடும் சிவனடியார்களையும் தவிரப் பிறர் யாரையும் வணங்காதவர்.சிவனுக்கு என்றுமே அன்பு செய்யாத ஒருவரை வணங்கார்.அத்தகைய அவர் 'ஒருநம்பி

அப்பூதி' என்று சிறப்பிக்கிறார். எத்தகையராயினும் ஏனையர்பால் அன்புசெய்யாத 'சிவநேச முறுமினர்க் சன்புசெய் நம்பியாரூரன் பாராட்டி விட்டார். அதுவும் அப்பூதிக்கு அடியன் என்னாது 'அப்பூதி அடியார்க்கும் அடியேன்' என்னும்போது அப்பூதியடிகளை மிக உயர்வாகக் கருதிப் போற்றுகிறார் என்பதை உணர இயலு கிறது. சிவனடியார்களை வழிபடுவார் பெறும் சிறப்பு அனைத்தும் திருநாவுக்கரசரை வழிபடுவார்க்கும் உண்டு என்ற உண்மையையும் இதன் மூலம் அறிய முடிகிறது. அதனாலேயே சிவப்பிரகாசர் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் பயன்படுத்திய 'ஒரு நம்பி யப்பூதி' என்ற தொடரையே தம் பாடலினும் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்று.

திருநாவுக்கரசு எனும் திருப்பெயரே திருமந்திரமானது:

மருள் நீக்கியார், தருமசேனர் எனும் பெயர்கள் மறைந்தே போயின. அப்பர் என்பது'ஓரளவு வழங்கப்பெற்றது. திருநாவுக்கரசு எனும் திருப்பெயரே நின்று நிலவும் பெயராயிற்று. அத்திருப்பெயர் அப்பூதியடிகள் வாழ்வில் திருமந்திரமாக நிலைநின்று பெருமை பெற்றது.

''அப்பூதி அடிகள் வாழ்க்கையானது 'திருநாவுக்கரசு' என்பது மந்திரமே என நிறுவிக்காட்டிய வாழ்க்கையாக அமைகிறது.''48 எனும் வை. இரத்தின சபாபதி அவர்களின் கூற்றும் அதை அரண் செய்கிறது.

திருநாவுக்கரசர் வழியே பலவறங்கள் செய்தார். அதற்குமேல் அவ்வறங்களைத் திருநாவுக்கரசர் பெயராலேயே அமைத்தார். அசையக் கூடியன, அசையாதன, உயிர் உள்ளன, உயிர் இல்லன ஆகிய எதுவாயினும் 'திருநாவுக்கரசு' எனும் பெயரிலேயே அவரில்லத்தில் விளங்கின.

''............... மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமம் சாற்றுப் அவ் வொழுக லாற்றார்''49

என்ற சேக்கிழார் பாடல்அடிகள் அதைப் புலப்படுத்தக் காணலாம்.

அதே சேக்கிழாரே அத்திருப்பெயரின் சிறப்பை,

''............வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணாமை உணராதேன்'' 50

என்று கூறுகிறார். சிவனடியார்கள் திருவைந்தெழுத்தாகச் 'சிவாய நம' என்பதைக்கொள்ள அப்பூதியடிகளோ 'நாவுக்கரசு' எனும் ஐந்தெழுத்தைத் திருவைந்தெழுத்தாகக் கொள்கிறார்.

'பெருநாமச்சீர்' என்றது அப்பூதியார், பெருமான் திருப்பெயரையே இடையறாது ஓதியும் வணங்கியும் உயர்ந்த அருமையைக் குறித்துநின்றது' 51 என விளக்கம் தருகிறார் மறை. திருநாவுக்கரசு அவர்கள்.

'திருநாவுக்கரசு' என்னும் திருப்பெயர் மட்டுமன்று.சமய குரவர் நால்வர் பெயருமே ஐந்தெழுத்தாக விளங்குதலைக் காணமுடிகிறது.

''நமச்சிவாய'என்னும் இறைவனின் ஐந்தெழுத்து மந்திரத்தைப் போலவே ஞானசம்பந்தர், நாவுக்கரசு, சுந்தரர், மணிவாசகர், அருணகிரி என்னும் அருளாளர்களின் திருப்பெயர்களும் (ஒற்றெழுத்து நீங்கலாக) ஐந்து எமுத்துகளாக அமைந்த குரு பஞ்சாட்சரமாக,பக்த பஞ்சாட்சரமாக நின்று நம்மை ஈடேற்றும்''52 என்கிறார் வ. ஞானப்பிரகாசம்.

''ஞானசம் பந்தர் என்னும் நாமமந் திரமுஞ் சொல்ல'' எனும் வகையில் குலச்சிறையார் அத்திருப்பெயரைக் கூற, அது கூன்பாண்டியன் செவியில் விழ, அவன் அயர்வு நீங்கி நல்லறிவு பெற்றான்.

இத்திருப்பெயர்களைப் பற்றி,

''இறைவன் அருள்வழியே சென்று,சித்தாந்த சைவத்தைப் பற்றினார் யாவருக்கும் நல்ல சாதனமாய் நின்று பயனளிப்பது திருவைந்தெழுத்து மந்திரம் ஆகும். அஃது இறைவனுடைய திருநாமாகும். அதுபோன்று அவனுடைய சிறந்த முதன்மை அடியார்களாகிய நம் சைவ சமய குரவர் நால்வர் பெயர்களும் ஐந்தெழுத்திலேயே அமைந்து நாம் நாநவின்றேத்தி உய்வதற்கு உதவுவனவாய் உள்ளன. ....அப்பெயர்கள் இறைவன் திருவருளாலேயே

அவர்களுக்கு வந்து வாய்த்தன. வேறு தவமின்றி அப்பெயர் களையே நாம மந்திரமாகக் கொண்டு ஓதியும் வழுத்தியும் உய்தி பெற்றார் பலர்'' 53 என்று திரு. சுப்பிரமணிய பிள்ளையும் குறிப்பிடுகிறார். இவரும் தண். கி. வேங்கடாசலம் அவர்களும் நாவுக்கரசரைப் பற்றிய தம் நூல்களுள் சிவப்பிரகாசரின் 'உற்றான் அலன்' என்னும் பாடலை எடுத்துக்காட்டுகின்றார்.

''...........திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியும் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே''54

என்கிறார் சிவப்பிரகாசர்.

தொண்டின் திறம்:

சிவகாமியாண்டாரும், புகழ்ச்சோழரும், தண்டியடிகளும், குங்குலி யக்கலயரும் முதலிய நாயன்மார் செய்த தொண்டுகள் மென்றொண் டாகும். எறிபத்தர், கோட்புலியார், செருத்துணையார், சத்தியார் முதலிய நாயன்மார் செய்த தொண்டு வன்றொண்டாகும். தம்மைச் சார்ந்தவர்களை வருத்தி, இறையருள்பெற்றோர் சிறுத்தொண்டர் கலிக்காமர், சண்டேசுரர் முதலானோர். இவர்கள் தொண்டுகளை யெல்லாம் கேள்விப்பட்ட சிவப்பிரகாசர் அப்பூதியார் அவர்களின் வேறுபட்ட முறையைக் கடைபிடித்ததைக் கண்டு வியப்படைகிறார். அடியார்க்கு அடியாராய் அவர் தொண்டின் வழிநின்று அவரையே வழிபட்டுப் பேறுபெறுதல் வியப்பினும் வியப்பாயிற்று.

மாணிக்கவாசகரும்,

''அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்'' 55 என்றே வேண்டுகிறார்.

''அடியார் அடியார் அடியார் அடிமைக்கு
அடியனாய் நல்கிட்டு அடிமையும் பூண்டேன்
அடியார் அருளால் அவனடி கூட
அடியான் இவனென்(று) அடிமைகொண் டானே.'' 56

எனத் திருமூலரும் சான்றாகிறார்.

இத்தகைய அடியார்க்கு அடியார்க்கு அடியாராக வாழும்

பேற்றினை விரும்புபவர் திருநாவுக்கரசர்.

''அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டு வீற்றிருக் கும்கருத் தொன்றிலோம்
வண்டு சேர்மயி லாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே.'' 57

எனவும்

''பொய்யன் பிலாஅடித் தொண்டர்க்குத் தொண்டராம்
புண்ணியமே'' 58

எனவும் அவர் கூறுவதிலிருந்து விளக்கப்படுகிறது. பிற உயிர்களுக்குத் தொண்டுசெய்யும்போது அது மகேசனுக்குச்செய்ததாகவே ஆகிறது. நடமாடும் கோயில் நம்பர்க்குச் செய்யின், படமாடும் கோயில் பகவற்கும் ஆகும் என்பது யாவரும் உணர்ந்ததே. சிவனடியார்கள் எல்லாம் சிவனாகிய கடவுள் உறையும் திருக்கோயில்கள் என்ற உண்மை விளங்கவேண்டும். அதனால்தான்,

'' மடங்கள் - தண்ணீர்ப்பந்தர்கள் - சாலை - இளம்சோலை முதலியவை பசு புண்ணியங்களாகிச் சுவர்க்காதி போகங்களைப் பயப்பித்துப் பின்னும் பிறவிக்கு ஏதுவாவன. ஆனால் இங்கு அவை வாகீசராகிய குரு வழிபாட்டின்பாற்பட்டுச் சிவனடிமைத் திறத்தினிற் செய்யப்பட்டமையால் அவ்வாறு ஏனையோர் செய்வன போலப் பசுபுண்ணியங்களாக மாறி ஒழியாது பதி புண்ணியங்களாக மாறி முத்திக்கு ஏதுவாயின என்கிறார்'' 59 சி.கே.சு. அவர்கள்.

''நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
சோர்சடை தாழச் சுடரோம்பி - ஊரடையார்
கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
வானகத் துய்க்கும் வழி '' 60

எனும்நெறிமுறைகளில் எதுவும்பின்பற்றாமலேயே முத்திபெற்றான். ஆகையால் தவஞ் செய்யவில்லை; தீயில் நிற்கவில்லை; உணவாக நீரைத்தவிர பிற எதுவும் கொள்ளவும் இல்லை. ஆனால் நாவுக்கரசு எனும் பெயரைப் பேசியும், எழுதியுமே துன்பில் பதம் பெற்றான் என்கிறார் சிவப்பிரகாசர்.

நட்பாங் கிழமை :

''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்'' 61

என்னும் திருக்குறள் விளக்கமாகச் சங்க காலத்தில் கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் கொண்ட நட்பு விளக்கியது. ஒருவரை ஒருவர் காணாமலேயே, கேள்வியளவிலேயே அவர்கள் நட்பு செழித்தது; உறுதிப்பட்டது; பெருமைப்பட்டது. திருநாவுக் கரசரின் கேண்மையும் பக்தி இயக்க காலத்தில் திருத்தொண்டின் உறைப்பாலே வென்றமையைக் கேள்வியளவிலேயே அறிந்து ஒரு முறையும் காணாமலேயே அப்பூதி அவர்மீது பக்தி கொண்டார். சங்ககாலத்திற்குப் பிறகு இத்தகு அருமை நட்பு பத்தி நிலையில் அமைந்ததைப் பக்தியியக்க காலத்தில்தான் காணவியலுகிறது.

சாதி வேறுபாடுகளைக் களையும் சரித்திரம்

''இறைவன் எல்லாஉயிர்களிடத்தும் தங்கியிருப்பவன். அவனுக்குப் பாரபட்சம் கிடையாது. இறைவனுடைய சந்நிதியில் எல்லோரும் ஒன்றுதான். சாதி வேறுபாடு இல்லை தீண்டாச் சாதியார் என்ற பகுப்பு அர்த்தமற்றது. அனைவரும் ஒற்றுமையாக, உடன்பிறந்த சகோதரர்களாகவாழக் கடமைப்பட்டவர்கள் என்பது பக்திஇலக்கியக் கோட்பாடு'' 63 இதையே திருமுறைச் சான்றோர்கள் கொள்கை யாகக் கொண்டனர்; தங்கள் செயல்முறைகளில் இதைக் காட்டினர்.

''அக்காலச் சிவனடியாருள் சாதி வேற்றுமை காணப்பெறவில்லை என்பதும் பக்தி ஒன்றுக்கே மதிப்பு தரப்பட்டது என்பதும் தெரி கின்றது. அனைவரும் கலந்து ஒன்றாய்ப் பழகுதல், பாடுதல், உண் ணுதல், உறங்குதல் சமய வளர்ச்சிக்கு தேவையானது என்று கருதப் பட்டது'' 64

''பக்திஇயக்கச் சான்றோர்களில் அரசர் ஐவர்; சிற்றரசர் நால்வர்; படைத்தலைவர் நால்வர்; பிராமணர் பதினால்வர்; வணிகர் அறுவர்; பறையர் ஒருவர்; சான்றோர் ஒருவர்; பரதர் ஒருவர்; சாலியர் ஒருவர்; பாணர் ஒருவர்; மாமாத்திரர் ஒருவர்; இன்னும் மரபு குறிக்கப்பெறாத நால்வர் இடம்பெற்றுள்ளனர். தெளிவாக மா. இராசமாணிக்கனார் அவர்களின் ''சைவ சமய வரலாறு'' எனும் நூலுள் காணலாம்.

சாதி வேறுபாடுகள் சிவனடியார்களால் காட்டப்பெறவில்லை. பக்தி ஒன்றுக்கே மதிப்பு தரப்பெற்றது.

''வேளாளராகிய அப்பரும், பிராமணராகிய சம்பந்தரும் அன்பினால் தந்தைமைந்தன் முறைமைகொண்டதும்அந்தணராகிய அப்பூதியடிகளும் வேளாளத் திருநாவுக்கரசரும் ஒருங்கிருந்து அமுதுண்டதும் தீண்டா வகுப்பைச் சார்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் கவுணிய கோத்திரப் பிராமணராகிய திருஞான சம்பந்தர் பக்கத்திலிருந்து தேவாரத்தை யாழிலிட்டு வாசித்ததும்........... இன்ன பிறவும் சாதியினும் சமயமே பெரிதென நாயன்மார் போற்றி வந்திருப்பதற்குப் போதியசான்றுகளாம்.''66 நாவுக்கரசர் இக்கருத்தை

'' அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே'' 67

என்று தெளிவாக்குதலைக் காணமுடிகிறது.

அந்தணர் குலத்தில் தோன்றிய அப்பூதியடிகள் அதேகாலத்தில் வாழ்ந்தருளிய அந்தணராம் திருஞானசம்பந்தப் பெருமானைக் குருவாகக் கொள்ளாமல் வேளாளர் மரபில் தோன்றிய திருநாவுக்கரசரைக் குருவாகக் கொண்டமைக்கு அவரது திருத்தொண்டின் உறைப்புதான் காரணமாயிற்று.

''மாபெரும் அருஞ்செயல்களைச் செய்தவரும் முதல் சத்தியாக்கிரகியும் சமநோக்கில்திளைத்தவரும் ஆகிய திருநாவுக்கரசர் போன்றோர் வாழ்க்கை எவ்வளவு தூரம் சமுதாய மக்களைத் தாக்கியது என்பதை அறியக்கூட ஆதாரங்கள் கிடைக்கவில்லை...... அந்நாளில் போக்குவரவு சாதனங்களும் செய்திப் போக்குவரத்தும் மிகவும்குறைவாகவே இருந்தன என்பதில் ஐயமில்லை. எனவே இவர்கள் அருளிச் செயல்களை அது நடைபெற்றஇடத்திலும் அதைச்சுற்றியுள்ள இடத்திலும் அறிந்திருக்க முடியுமே தவிர தொலைதூரத்தில் உள்ளவர்கள் அறிந்திருத்தல் கடினம் என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே. முந்நூறு கி.மீ. அப்பால் உள்ள திங்களூரில் வாழ்ந்த அப்பூதியடிகள் என்பவர் அறிந்து அவரிடம் ஆட்பட்டார் என்றால் அதில் ஆழமான சில

உண்மைகள் உள்ளன எனக் கொள்ளலாம். சாதி வேறுபாடுகள் நிறைந்திருந்த அந்த நாளிலும் வேளாளராகிய நாவரசர் பெருமையை அந்தணராகிய அப்பூதி அறிந்து, தம்மையும் தம் குடும்பத்தையும் நாவரசரிடம் சரணம் அடைவித்தார் என்பது வியப்பிற்குரிய ஒன்றாகும் என்ற'' 68 என்ற அ. ச. ஞானசம்பந்தன் அவர்களின் கூற்றும் அரணாக விளங்குகிறது.

''திருநாவுக்கரசரின் இரண்டுபக்கங்களிலும் அப்பூதியாரும் அவர் மைந்தர்களும் அமர்ந்து அன்பினால் மகிழ்ந்து விருந்துண்கிறார்கள். இங்கே சாதிக்கிடமில்லையே. ஆகவே சிவநெறித் தலைவராக உள்ள அப்பர் சாதி வேற்றுமையை தகர்த்தெறிந்தார். அந்தணராம் அப்பூதியடியார், சாதிச் செருக்கை அறவே ஒழித்து வேளாளராம் அப்பரடிகளுடன் அமர்ந்துண்பதைத் தம் பேறாகக் கருதினார்'' 69 என்ற மறை. திருநாவுக்கரசு அவர்களின் கருத்தும் மேலதே.

அழலோம்பும் அப்பூதி:

அந்தண மரபுகளையும் மீறிய அருளாளர் இவர். ''சாவு நிகழ்ந்த மனையில் ஆசௌச முறைகள் கையாளப்படுதலின் இவ்வாறு நல்விருந்து அமுது செய்வித்தல் முதலியவை கூடா என்பது ஒழுக்க நூலுள் விதித்த மரபு. ''அழலோம்பும் அப்பூதி'' என்றும் அந்தணரின் மேம்பட்ட அப்பூதி என்றும் சிறப்பிக்கப்பட்ட வைதிக அந்தணர்பெருமகனார் அப்பூதியார். இவ்வாறு அன்று அந்நிலையில் அடியவரை அமுது செய்விக்கத் துணிந்தமை அவ்வொழுக்கத்திற்கு மாறுபாடன்றோ? எனின் அன்று. என்னை? அவ்விதிகள் எல்லாம் உலக நிலை நிறுத்தல் என்றும் பயனளவே தருவன. இங்கு மேற்கொண்டது உலகிறந்த நிலையில் அவற்றின் மேம்பட்டனவாய் உயிர்க்குறுதிதரும் சிவனடிமைத்திறத்தில் நிகழ்ந்தன'' 70 எனும் சி. கே. சு. அவர்களின் தருக்கம் அப்பூதியார் வரலாற்றில் வேறு ஒரு காரணத்தைக் காட்டுகிறது.

நம்பியாரூரன் ஏத்தும் ஒரு நம்பி:

திருநாவுக்கரசரும், சுந்தரரும், சேக்கிழாரும் பாராட்டும் அப்பூதி அடிகளின் வரலாறு ஆய்வுக்கண் கொண்டு நோக்குகிறபோது பல் கோணமாகப் பரந்து விரிகிறது. திருநாவுக்கரசு எனும் திருப்பெய

ரையே முத்தி தரும் மூல மந்திரம் ஆனது ஒருபுறம்; காணாமலேயே கேண்மை கொண்ட அன்பு ஒருபுறம்; சாதி வேறுபாடுகளைக் களையும் சரித்திறம் ஒருபுறம்; அழல் ஓம்பும் அப்பூதி அந்தணரின் மேம்பட்டது ஒருபுறம். இறைத்தொண்டினும் இறையடியார் தொண்டே உயர்ந்தது என்று பல்வகையிலும் நாயன்மார் வரலாற்றில் செப்பரும் சீர் பெற்றதாகவே விளங்குகின்றது. இவர் வாழ்வியலை அறிந்தும் கேட்டும் அளந்தும் தம் புலமைத்திறத்தால் போற்றுகிறார் சிவப்பிரகாசர். திருநாவுக்கரசர் பற்றிய பத்துப் பாடல்களில் மூன்று பாடல்கள் 71 அப்பூதியடிகளோடு தொடர்பு கொண்டதாக விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. அதனால்தான் சிவநேசம் உறும் இனர்க்கு மட்டுமே நேசம் உறும் நம்பியாரூரன் போற்றும் அப்பூதி அடிகளிடத்து ஈடுபாட்டைக் கண்டும் தனக்கும் அந்த ஈடுபாடு வர வேண்டும் என்று வேண்டுகிற அமைப்பில்,

''எனக்கன்பு நின்பொருட்டு எய்தாதது என்கொல்''

என்ற பாடல் தொடங்குகிறது. நாவுக்கரசர் எனுமோர் சொல்தான் எழுதியும் கூறியும் வியப்பதாக மற்றொரு பாடல் மலர்கிறது. விடம் நீக்கிய பெருமை வேறொரு பகுதியில் விளக்கம் பெறுகிறது. இவ்வகையில் சிவப்பிரகாசர் அப்பூதியடிகளின் வரலாற்றைப் பல்வகைக் கோணங்களில் திறனாய்வு மேற்கொண்டு அவரைப் போற்றுகின்ற பான்மையில் தம் நூலுள் மூன்றில் ஒருபங்கு இடம்தந்து முதன்மைப் படுத்தியது இங்குக் கருதத்தக்கது. அதனாலேதான் அப்பூதி அவருக்குப் பெருந்தகையாகக் காட்சி அளிக்கிறார்.

கடல்கடந்தேறிய பாவலன் :

திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து மீண்டும் சைவ சமயம் சார்ந்தபோது பல்லவமன்னன்ஆணையால் பலவகைக்கொடுமைக்கு ஆளானார். நீற்றறையில் இட்டும் நஞ்சு கலந்த பால்அடிசில் உண் -பித்தும், யானைகொண்டு இடற முயற்சிசெய்தும் நிமலன் அருளால் நிலைநின்றார். இவையெல்லாம் அரண்மனைப் பகுதியிலும் அதைச்சார்ந்த பகுதிகளிலும் நிகழ்ந்தவையாகும். ஆனால் சமணர்கள் ஒரு கல்லிலே கட்டிக் கடலிலே பாய்ச்சினர். இந்நிகழ்ச்சி கடல் பகுதியில் வெளிப்படையாக நடந்ததால் உலகெங்கும் மிக விரைவில் பரவியது. இந்நிகழ்ச்சியின்போதும் நாவுக்கரசர் அயர்ந்தார் அல்லர்.

'சொற்றுணை வேதியன்' எனும் பதிகம் பாடினார். அந்தக் கல் தெப்பமாக மாறி அவரைக் கரையேற வைத்தது. இந்நிகழ்ச்சி தமிழகம் எங்கும் பரவியது. பல்லவ மன்னனும் மதம் மாறினான். இந் நிகழ்ச்சி நாவுக்கரசர் வரலாற்றை உலகறியச் செய்தது. சமுதாயத் தில் மீண்டும் சைவ மறுமலர்ச்சி ஏற்பட ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இந்த நமச்சிவாயப் பதிகம் மட்டும் தான் இவ்வரலாற்று நிகழ்ச்சிக்குச் சான்று என் எண்ணவேண்டியதில்லை. நாவுக்கரசரின் வேறொரு பாடலும் அகச்சான்றாகி அருமை பகர்கிறது.

''கல்லி னோ(டு)எனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடிஅரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேனன்றே.'' 73

என்ற தேவாரப் பாடலும் அகச்சான்றாகிறது. இக்கடல்கடந்த நிகழ்ச்சி திங்களூர்வரை பரவி ஒருநம்பி அப்பூதியையும் உருவாக் கியது. கடல்நீரில் கல் மிதக்க வேண்டுமென்றால் இயற்கைக்கு மாறான ஆற்றல்வேண்டும். இல்லையென்றால் அக்கல் மிதப்பதற்கு வழியே இல்லை. ஏதோ ஒரு ஆற்றல்தான் நாவுக்கரசருக்குத் துணையாக அக்கல்லைத் தாங்கிக்கொண்டு மிதக்கவிட்டிருக்கவேண் டும். அவ்வாற்றல் சிவபெருமானின் ஆற்றல்தான். ஆனால் அது வெளிப்படையாகத் தோன்றிய துணையாக இல்லாமல் தோன்றாத் துணையாக உள்ளது. ஒருபுறம உப்புநீர்க்கடல் சோதனையாகிச் சாதனை படைத்தது இன்னொருபுறம் அருகக்கடல் ஒன்று அழுத்து கிறது. சமணசமயத்தினர் தருகின்ற சோதனைகளை முறியடித்துச் சாதனைகளாக மாற்றிய வரலாற்று நிகழ்ச்சிதான் அருகக்கடல் கடந்ததாகும். இந்த இரண்டையும் ஒப்பிட்டுக் காண்கிறார் சிவப்பிர காசர். அவர் உள்ளத்திலே நாவுக்கரசர் உப்புக்கடலைக் கடந்தது அரிதா? அருகக்கடல் கடந்தது அரிதா? என்ற வினா எழுகிறது. அந்த எண்ணச்சிதறலே,

''அருகக் கடல்கடந் தேறியதோ''

என்ற பாடலாக வளர்ந்தது. இந்த ஒப்பீடு நாவுக்கரசரின் வரலாற் றில் நிகழ்ந்தநிகழ்ச்சிகளில் இரண்டை ஒன்றோடொன்று ஒப்பிட்டுக் காணுகிற ஒப்பீட்டுத் திறனாய்வாக விளங்குகிறது. இவ்வனுபவங்

களைப் பெற்ற நாவரசரையே வினவுகின்ற முறையில் இப்பாடல் அமைந்துள்ளது. சமணசமயம் கடலாக இங்குஉருவகிக்கப்படுகிறது. இன்னொரு கடல் உப்புநீர்க்கடல். இவை இரண்டையுமே வெற்றி கண்டுள்ளார் நாவுக்கரசர் என்று காணுகையில் ஒன்றுபோலத் தோன்றுகிறது. ஆயினும் சற்று நுட்பமாக ஆய்கின்றபோது இவற்றுள் ஒன்று அரிதான ஒன்றாக இருக்கவேண்டும் என்று புரிகிறது. இவ்வாறு ஒப்பிடுகிற பாடல்களிலெல்லாம் அதற்கான விடையையும் நுட்பமாகப் பொதிந்து வைத்திருப்பார். அவையெல்லாம் ஐய வினாக்கள் அல்ல; அறிவினாக்களே ஆகும்.

உள்ளத்தைக் கிளறி உண்மையைச் சேர்ப்பதாக விளங்கும் சான்றாக ஞானசம்பந்தர் அமுதபிறகு பால் கொடுத்த அம்பிகை சிறந்தவளா?அமுதார் என்று கேட்ட உடனே பால்சுரந்த மங்கையர்க்கரசி உயர்ந்தவரா? எனக் கேட்பதாக அமைந்தாலும் அப்பாடலில் மங்கையர்க்கரசியாரைப்பற்றிப் பாடும்போது அருள்கோமகள் என்று அருளை அடைமொழியாக்குகின்றார். அந்த அருள் என்ற அடைமொழிதான் இச்சிக்கலை உருவாக்குகின்ற கருவியாகிறது. அதுபோலவே சிலைஅம்பி என்ற தொடர் எது அரிது?என்ற வினாவிற்கு விடையாக அமைகின்றது. உப்புநீர்க் கடலில் கட்டிப்போட்ட கல் தோணியாகி ஆதாரமாகத் தாங்கி வருகிறது. ஆனால் அருகக்கடலில் அத்தகையது ஏதுமில்லை. எனவே அருகக்கடல் கடந்ததுதான் அரிது என்ற விடையை நாம் பெறுகின்றோம். அருகக்கடல் அடைந்தபோது அடைந்த துன்பமும் உப்புநீர்க்கடலைக் கடந்தபோது அமைந்த துன்பமும் ஒப்பிட்டுக்கண்டால் உண்மை புரியும். உப்புநீர்க்கடலைக் கடக்கிறபோது நாவுக்கரசர் நமச்சிவாயப் பதிகம் பாடினாரே தவிர எவ்விதத் துன்பமும் அடைந்த்தாக நமக்குச் சான்றுகள் இல்லை. ஆனால் அருகக்கடல் கடந்தபோது ஒன்றா? இரண்டா? அடுக்கடுக்கான துன்பங்கள் நீற்றறையாக, நச்சாக, மதயானையாக, கல்லில் பூட்டிக் கடலாக சோதனைகள் வந்தன. அதனினும் கொடிது சூலைநோய் என்ற ஒன்று. சூலைநோய் நீக்கம் என்பது சமண சமயத்திலிருந்து மாற்றம் என்பதாகியது. '' கூற்றாயினவாறு '' என்ற பதிகத்தை ஆய்ந்து உணருங்கால் குடரோடு துடக்கி முடக்கித் துன்புறுத்தியதைக் காணமுடிகின்றது. அதுமட்டுமல்லாமல் அவரே ''காத்தாள்பவர் காவல் இகந்தமையால்'' எனும்

பாடலில் 75 ஆழந்தெரியாமல் காலைவிட்ட கதையானது புலனாகிறது. வழிக்கொள்ளும் துறைமில்லாத நீர்நிலையாக சமணசமயத்தினை அவர் காட்டுகின்றார். அதன் விரிவே அருகக்கடலாகிறது. அதுமட்டும் அன்று. அனுபவங்களைப் பெற்றவரிடத்திலேயே அவ்வனுபவங்களைக் கேட்டறியும் முறையில் இப்பாடல்கள் உள்ளன.

'' இவ்விருவகைக் கடல்கடந்த நிகழ்ச்சிகளில் உயர்வுடையது எது? வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்றாற்போல் சொல்வேந்தராகிய நாவுக்கரசருக்குத் தோணியாய் இருந்துதவியது கல். மேலும் தன்னைச் சார்ந்தோரை எல்லாம் அழிக்க வேண்டும் என்ற எண்ணம் கடலுக்கில்லை. ஆனால் வஞ்சகத் தன்மையையே அடிப்படையாகக் கொண்ட சமணக்கடலை எத்தகைய துணையுமின்றிக் கடந்ததே சிறப்புடையது என்று பாடி இந்நூலாசிரியரே சிலையம்பி என்ற தொடர் நயத்துடன் எடுத்துக்காட்டுகிறார்.''76 எனும் வை. இரத்தினசபாபதி என்பாரின் உரை அரணாகிறது.

ஐந்தெழுத்தின் பெருமை:

கடல்கடக்க நற்றுணையானது நமச்சிவாயவே என்பதை வரலாற்றுவழி உணரமுடிகிறது. இந்த 'ஐந்தெழுத்து' ஒரு மந்திரமொழியாகும். நிறைமொழியும் இதே; மறைமொழியும் இதே. இவ்வுலக வாழ்க்கையில் ஏற்படும் இன்பதுன்பங்களிலிருந்து உய்வதற்காக ஏங்கித் தவிக்கின்றபோது ஓங்கிய துணையாக உடன் காப்பாற்றக் கூடியது. இந்த ஐந்தெழுத்தின் பெருமை நாவுக்கரசரின் நமச்சிவாயப் பதிகம் மட்டுமல்லாமல் திருமுறைகளில் பல்வேறு இடங்களில் பரக்கக் காணலாம். வடலூர் வள்ளலார் வழங்கியருளிய நமச்சிவாயப் பதிகத்திற்கும் அப்பர் அருளிய நமச்சிவாயப் பதிகமே மூலம் எனக் கூறலாம் உண்மைவிளக்கம் என்ற தத்துவநூலில் ஐந்தெழுத்தின் அருமையைக் காணலாம்.

''அஞ்செழுத்தே யாகமமு மண்ண லருமறையு
மஞ்செழுத்தே யாதிபுரா ணம்மனைத்து-மஞ்செழுத்தே
யானந்தத் தாண்டவமு மாறாறுக் கப்பாலா
மோனந் தவாமுத்தி யும்.'' 77

என்பது.

இந்த ஐந்தெழுத்துதான் தோன்றிய துணையாகித் தோன்றாத் துணையை அழைத்தது.

பல்லோரும் போற்றும் பாங்கானது:

திருநாவுக்கரசர் வரலாற்றில் அப்பூதி அடிகள் வரலாறு முதன்மை இடம்பெற்றதை முன்னர்க் கண்டோம். அதற்கு அடுத்த நிலையில் விளங்குவது இக்கடல் கடந்த நிகழ்ச்சியாகும். சிவப்பிர காசர் இந்நிகழ்ச்சியை இரண்டு பாடல்களில் அமைத்துக் கூறு கின்றார். நம்பியாண்டார் நம்பி,

''தெண்கடலிற் பிணியன கல்மிதப் பித்தன......
நாவுக்கரசர் பிரான்றன் அருந்தமிழே'' 78

எனவும்

''நற்றுணையின் மறவாமல் கற்றுணையில் வரும் ஆதி''78(அ)

எனவும் குறிப்பிடுகிறார்.

அருட்பிரகாச வள்ளலாரும் இதைக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் மட்டுமல்லாமல் புராண வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இந்நிகழ்ச்சி யைத் தத்தம் நூல்களில் போற்றுதலைக் காணமுடிகிறது.

''அறப்பெருஞ் செல்வி பாகத்(து)
அண்ணல்அஞ் செழுத்தால் அஞ்சா
மறப்பெருஞ் செய்கை மாறா
வஞ்சகர் இட்ட நீல
நிறப்பெருங் கடலும் யார்க்கும்
நீந்துதற்(கு) அரிய ஏழு
பிறப்பெனும் கடலும் நீத்த
பிரானடி வணக்கம் செய்வாம்.''

- திருவிளையாடற்புராணம்.

''பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றோணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம்.''

-கந்தபுராணம்.

''ஆலநிழ லமர்ந்தபிரான் அருளி னாலே
யன்றொருகற் புணையாக வாழ நீந்தி
ஞாலமுழு துய்ந்தருள நவையி லாத
நறுந்தமிழின் பலமினிது நாளு நல்கிச்
சாலமிகு பாவமுது வேனில் வெம்மைத்
தழலாற வாகமநூற் றருமஞ் சான்ற
சீலநிறை சைவநெறி நிழல்ப ரப்புந்
திருநாவுக் கரசினடி சிந்தை செய்வாம்.''

-திருவாரூர்ப் புராணம்..

''பெருநாவ லிருநிழற்கீழ்க் குளிர்புனற்குண் முளைத்தெழுந்த
பெம்மான் செம்மை
தருநாவுக் கிசைத்தமிழா லலைகடலி னிடைபிணித்த
தனிக்கற் றூணன்
றொருநாவா யெனமிதப்ப வீற்றிருந்தங் கைந்தெழுத்தி
னுண்மை யோது
திருநாவுக் கரசிரு பிரசமலர்ச் சேவடியைச்
சிந்தை செய்வாம்.''

- மச்ச புராணம்.

''தொலையாத பவக்கடல்யாங் கடத்துமெனப் பிறர்க்குணரச்
சொல்வார் போல
நிலையாத புறச்சமயக் குறும்பரிறு குறப்பிணித்த
நெடுங்கல் லோடு
மலையாடு பெரும்பரவை யழுந்தாதக் கல்மிதப்பா
யாழி நீந்தித்
தலையாய பொருளுணர்ந்த வாகீசர் மலர்ச்சரணஞ்
சரண மாதோ.''

- உத்தரகோசமங்கைப் புராணம்

''அற்படு மிடற்றின னருளி னாலொரு
கற்புணை யாகமாக் கடல்க டந்தவன்
நற்பெயர் தன்னையே நவிறி வுள்ளநீ
பற்பல பிறவியாம் பரவை நீந்தவே.''

- சாந்தகணேச புராணம்.

''சூழிமால் யானை தாழப் பிணித்தகற் றூணந் தாழா
தாழிவாய் மிதப்ப மேலா மைந்தெழுத் துணர்வி னோங்கிக்
காழிவாழ் ஞானம் பூத்த கவுணியர் கொழுந்தை நட்ட
வாழிவா கீசர் வாச மலர்ப்பதம் வணங்கல் செய்வாம்.''

- கருவூர்ப்புராணம்.

''புல்லோடுந் தழையோடும் பூசிப்பார் தமக்கெதிரே
வல்லோடுந் தனத்துமலை மகளோடு வருவானைச்
சொல்லோடும் பொருளோடுந் துயரோடும் படிபாடிக்
கல்லோடு மிதந்தானைக் கருத்தோடும் பணிகுவமாம்.''

- திருச்சுழியற்புராணம்.

''கருநீத்தாய் கடப்பவொரு கற்றோணி யுகைத்தானைக்
கருத்துள் வைப்பாம்.''

- திருக்குற்றாலப் புராணம்.

''எழுபது வெள்ளஞ் சேனை யெடுத்திடு பலகற் கொண்டு
செழுமணிப் பரவை யொன்றே கடந்தவெஞ் சிலையோ னாண
வழுவம ணிடுகல் லொன்றால் மறிகடல் பிறவி வேலை
முழுவதுங் கடந்த வெங்கண் முதல்வனுக் கன்பு செய்வாம்.''

- திருநாகைக்காரோணப் புராணம்.

''இருளென்று சொலத்திரிவார் மனம்வேவ நீற்றறையு
ளிருந்து முற்றேம்
வெருளென்று துயர்க்கடலு ளவரழுந்தக் கருங்கடற்கண்
மிசைமி தந்து
மருளென்று மாறாத வெண்ணீறுங் கண்மணியு
மைந்தெ ழுத்தும்
பொருளென்று தெரிவித்த புண்ணியவா கீசர்பதம்
போற்றி வாழ்வாம்.''

- திருக்குறுக்கைப் புராணம்.

''........குண்டர்
செறித்தகல்லான் மிதந்துவருந் திருநாவுக் கரசுநிழற்
சேர்ந்து வாழ்வாம்.''

''.........ஞானம் பழந்தினை யொருகற் றூணா
வத்தியைக் கடந்த நாவுக் கரசினை வணங்கு வோமே.''

- செவ்வந்திப் புராணம்.

''கற்றூணைப் பிடித்துவளை கடல்கடந்தோ னிருபாத
கமல மென்னும்
பொற்றூணைப் பிடித்துநம திடராழி கடந்துகதி
புகுத லாமே.''

- திருவெண்காட்டுப் புராணம்.

''விஞ்சை கற்பன வேறிலை விடையவன் பதங்க
ளஞ்சு மேயென வறியவெவ் வுலகுங்கற் புணையா
நெஞ்சு துட்கெனு நெடும்புனல் வேலையும் பிறவி
வஞ்ச வேலையு நீந்திய மன்னனைப் பணிவாம்.''

- பேரூர்ப் புராணம்.

''திரையேற விட்டகற்றூண் புணர்ப்பறச்சொற் றுணைப்பதிகந்
திருந்தப் பாடி
விரையேற விட்டநறை யிதழிமுடி யரனருளால்
வென்றி மேவ
விரையேற விட்டசம ணறவுயிர்கள் பவக்கடனின்
றென்று மேறக்
கரையேற விட்டபிரான் புகழ்விளைத்த நாவரசைக்
கருதி வாழ்வாம்.''

- திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்.

இவ்வாறு மிகுதியான பாடல்கள் நாவரசரைத் துதிசெய்வன வாக எழுந்துள்ளன. இத்தோத்திரப் பாக்கள் கடல்கடந்தேறிய நிகழ்ச்சிக்கு எத்துணை பெருமை தந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்க ஒன்று. இத்தோத்திரப் பாக்கள் யாவும் சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் உரையமைந்த 'அப்பர்சுவாமிகள் புராணம்' எனும் தருமபுர ஆதீன வெளியீட்டில் முன்சேர்க்கையில் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. 79

தத்துவ விளக்கமாகச் சேக்கிழார் :

நாவுக்கரசர் கடல் கடந்த செய்திக்குத் தத்துவ விளக்கம் கொள்கிறார்.

''இருவினைப் பாசமும் மலக்கடல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத்து அரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?'' 80

என்கிறார் அவர். நல்வினை, தீவினைகளாகிய இருவகைக் கயிற்றினால் மும்மலமாகிய கற்களுடன் பிணிப்புண்டு பிறவிப்பெருங்கடலில் வீழ்ந்து கரை காணாது வருந்தும் மக்களை அத்துன்பக் கடலினின்றும் எடுத்து இறைவன் திருவடிகளாகிய இன்பக் கரையில் சேர்க்க வல்லது திருவைந்தெழுத்து என்ற விளக்கம் காணலாம்.

கடலில் வீழப் போதுவன் ஒருவன் :

கடல்கடந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு இரண்டாவதாக ஒருபாட்டு உறுதிப்பாட்டை விளக்கும்வகையில்அமைந்துள்ளது. திருநாவுக்கரசு 'நமச்சிவாய' எனும் ஐந்தெழுத்தின் அருமையால் கடல் கடந்தார். இந்தக் கடல் கடந்த செய்தி அவர் தம்மைக் காத்துக்கொள்ள நிகழ்ந்த ஒன்று. இவ்வகையில் தம்மைக் காத்துக் கொள்ளல் தன்னலமாக இருப்பினும் முழுமையும் தன்னலத்திற்காக அன்று. இதில் பொது நலம் மிகவுண்டு. கல் மிதக்கவில்லை எனில் நீற்றறை நிழலாகவில்லை எனில் - நஞ்சு அமுதாக மாறவில்லை எனில் இடற வந்த களிறு பணியவில்லை எனில் இழப்பு நாவுக்கரசு எனும் ஒருவரைச் சாரும் எனக் கருதலாகாது. இவை திருநாவுக்கரசருக்கும் சமணத்திற்குமான போராட்டமல்ல; சைவத்திற்கும் சமணத்திற்குமான பொதுநிலைப் போராட்டமே. அதுவும் மக்கள் மன்றத்தின் முன்னிலையிலேயே. எந்த ஒன்றும் மேலோட்டமாகப் பார்த்தால் தெளிவாகாது. சிந்தனையில் மீளமீளப்பதிவுசெய்துமெய்ப் பொருள் காணல்வேண்டும் நேர்விளைவுகள் சமுதாயத்தை ஈர்க்காதன. அதாவது நீற்றறையில்இறத்தல். நஞ்சால்இறத்தல்போன்றன. ஆனால் முரண் விளைவுகள் சமுதாயத்தை உடனடியாக ஈர்ப்பன. ஈர்ப்பு என்ற நிலையுண்டாக்கி அவையும் மாற்றத்தைச் செய்வன

வாகும். அதனால்தான் நாவுக்கரசர் கடலைக் கடந்தபோது கண்ட மகிழ்ச்சி அவர்க்கு மட்டும் தன்மகிழ்ச்சியனுபவமாக விளங்குகிறது. வேறொருவன் அவரைப் போலவே கல்லையும் கட்டிக்கொண்டு கடலுக்குச் சென்று விழப்போதல் என்பது பிறர் மகிழ்ச்சிகண்டு மகிழ்தல் என்ற நிலைக்குச் செல்லும். அதுமட்டுமன்று. நமச்சிவாய எனும் ஐந்தெழுத்து அவரைக் கடலினின்றும் காத்தவாறே நாவுக்கரசு எனும் மந்திரமும் காக்கும் எனும் உறுதிப்பாட்டையும் நிலை நிறுத்துகிறது. இவ்வாறெல்லாம் நினைவுமாத்திரமாக இல்லாமல் செயல்களாக அவையெல்லாம் நம்பிக்கை அடிப்படையில் நிகழ வேண்டும் என்பதையும் உணர்த்துகிறது. அவர் தந்த நம்பிக்கை, உறுதிப்பாடுஆகியனவற்றுக்கு அவரே சான்றாகிறார். மேலும் கடல் கடந்து பெற்ற வெற்றி - வெறும் நீர்க்கடல் கடந்தது மட்டுமன்று; வஞ்சனை சமண்கடலையும் கடந்து பெற்ற வெற்றியாகும். ஆனால் கடலில் விழப்போகும் இவனுக்கு உப்புநீர்க்கடல் மட்டும்தான் சோதனை. அவர்க்குத் தோன்றாத்துணை இவனுக்குத் தோன்றிய துணை ஆகிறது. அதனால்தான் நாவுக்கரசர் மனமகிழ விழப்போகிறேன் என்கிறான். கடல்கடந்த அனுபவம் அவருக்கு உண்டாகையாலும் உடன்வந்து காத்தருள்வார் என்ற நம்பிக்கையும் இங்கு இழையோடுதலைக் காணவியலுகிறது. இக்கருத்தைச் சிவப்பிரகாசர்,

''வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பன்எனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே.'' 81

என்று குறிப்பிடுகிறார்.

என் பாட்டிற்கு நீயும் அவனும் ஒப்பீர் :

இறைவன் அருளிய முதல் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சிவப்பிரகாசரின் சிந்தனையின் விளைவு இப் பாடல்.

சம்பந்தர் வரலாற்றிலும் நாவுக்கரசர் வரலாற்றிலும் நடந்த முதல் நிகழ்ச்சி எது எனக் காணல்வேண்டும் சீகாழி பிரமதீர்த்தக் கரையில் ஞானப்பால் கொடுத்து சம்பந்தரை இறைவன் ஆட்கொண்டார். திருவதிகை வீரட்டானத்தில் சூலைநோய் கொடுத்து

தடுத்து நாவுக்கரசரை இறைவன் ஆட்கொண்டார். இந்நிகழ்ச்சியிரண்டின் இயல்புகளாக (1) மென்மையாக எடுத்தாளுதல் (2) வன்மையாகத் தண்டித்து ஆளுதல் எனும் இரண்டைக் கொள்ளலாம். முதல் நிகழ்ச்சியில் ஞானம் அமுதாகிறது. உடலும் உள்ளமும் உயிரும் சிவமாம் தன்மை பெறுகிறது. இரண்டாம் நிகழ்ச்சியில் சூலைநோயாகிறது. உடலும் உள்ளமும் உயிரும் மாசு நீங்கப்பெற்ற நிலையில் சிவமயமாந் தன்மை பெறுகிறது. இறைவன் ஒரு உயிரை எடுத்தாளுகிறான்; ஒரு உயிரைத் தடுத்தாளுகிறான். இறைவன் பொதுவில் ஆடுகிறவன். பொதுவாக ஆட்டுகின்றவன் பொதுவில் இருந்தும் பொதுவாகி இருந்தும் ஒருவற்கு நன்மையும் ஒருவற்குத் தீமையும் ஏன்? இறைவன் ஆட்கொள்ளும் தன்மையில் வேறுபாடு வெளிப்படையாகவே தெரிகிறது.

''சமய அனுபவம் என்று கூறியவுடன் ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான அனுபவமே கிடைத்திருக்கும் என்று முடிவுகட்டுவதும் சரியன்று. சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்தவம், இசுலாம் முதலிய எல்லாச் சமயங்களிலும் சமய அனுபவம் சேர்ந்த பலரிடம் கூட ஒரே மாதிரியான அனுபவம் கிடைப்பதில்லை. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் என்ற மூவரும் தேவாரம் பாடியவர்கள்தாம். சமய அனுபவமும் இறைவன் அருளும் பெற்ற வர்கள்தாம் என்றாலும் இவர்கள் மூவர் அனுபவமும் ஒரே மாதிரி யானவை என்று கூறுவது பொருந்தாது. இந்த அனுபவத்தின் வேறுபாடுகளில் உயர்வுதாழ்வு என்பது கடுகளவும் இல்லை.'' 82 எனற அ. ச. ஞானசம்பந்தம் அவர்களின் கூற்று இவ்விரண்டும் உயர்வுதாழ்வு அற்றவை; சமநிலையில் அமைந்தனவே என்பதை உணர்த்துகிறது. அவரே,

''சமய அனுபவத்தின் வேர்கள் எண்ணிலடங்காதவை. அவை ஒவ்வொரு தனிமனிதரையும் தாக்கும் அளவுக்கு ஏற்ப ஒன்றற்கு ஒன்று பெரிதும் மாறுபட்டிருக்கும். எனவே இம்மாறுபட்ட அனுபவங்களை ஒரு தொகுப்பினுள் அடக்க முயல்வது இயலாத காரியம்''83 என்றும் கூறுகிறார். அவரவர் அனுபவங்களை அவரவர் நிலையில் நின்று காணவேண்டுமேயொழிய ஒரே வகையினதாகக் கருதி ஒப்பிட்டுக் காணல் கூடாது என்கிறார் அவர்.

இக்கருத்துகள் யாவும், ஒப்பிடலாகாது; ஒரு தொகுப்பினுள் அடக்கலாகாது எனும் வரையறுத்த விதியைத் தருகின்றன. ஆனால் விளக்கத்தைத் தர இயலவில்லை. இவ்வகையில் விளக்கத்தைத் தருபவராகச் சிவப்பிரகாசர் விளங்குகிறார். ஆராய்ந்து முடிவும் கூறுகிறார். ஞானவமுது. சூலைநோய் என வெளிப்படையாக வேறுபாடு தெரிந்தாலும் 'என் பாட்டிற்கு நீயும் அவனும் ஒப்பீர்' என முடிவும் கூறுகிறார். அதற்கான காரணம் அவரவர்களின் நெறிதான்.

''எவ்வாற்றால் அளந்து நோக்கினும் ஆட்கொள்ளும்தன்மையில் வேறுபாடு மேற்பார்வையில் தோற்றினும் விளைவை நோக்கும் போது, விளைவை நன்றாக ஆராய்ந்து உணர்ந்து பாட நான் முற்படும்போது இருவரும் ஒத்த நிலையினராகவே அமைகின்றீர் என்பதால் ஆட்கொள்ளுதலும் விளைவும் ஒன்றே. ஆட்கொள்ளுவதற்கு இறைவன் மேற்கொண்ட வழிகள் வேறாக உள்ளன. பொருளின் அறியும்நெறியை ஞானசம்பந்தரும் அடையும்நெறியை நாவுக்கரசரும் அமைத்தார்கள். ஆதலின் எவ்வாறு அளந்துநோக்கினும் இருவரும் ஒரே முடிவை எதிர்நோக்கிய இரு பணிகளை விளக்குகிறவர்களாகத் தோன்றுவதால் என்னுடைய ஆராய்ச்சிக்கு நீவிர் இருவரும் ஒத்த நிலையினரே'' 84 எனும் வை. இரத்தின சபாபதி அவர்களின் விளக்கவுரை அதைத் தெளிவுபடுத்தக் காணலாம்.

இப்பாடலுக்கு விளக்கம் கூறும் புன்னைவனநாத முதலியார் அவர்கள்,

''இது ஆட்கொண்ட முறையிற் பேதம் கற்பிப்பார் போன்று இருவர் பாடலுக்கும் உள்ள வேற்றுமையின்தன்மையைப் புலப்படுத்தியதாகக் குறிப்பிடுகிறார். 85 தேவார ஆசிரியர்களின் அனுபவங்கள் அவரவர் மேற்கொள்ளும் நெறிகளின் திருப்பாடல்கள் யாவும் மூத்திநெறிக்கு வாயிலாக விளங்கும் விளைவு அடிப்படையில் சமமான தகுதி உடையனவே.

சூலைநோய் கொடுத்ததும் நாவுக்கரசர் சமணசமயக் குழியினின்றும் விரைந்து மீளுதற்கேயாகும். இஃது அருளில் முறையே,

''தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொ லாற்றின்
வந்திடா விடிலு றுத்தி வளாரினா லடித்துத் தீய
பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்.'' 86

என்னும் சிவஞான சித்தியார் பாடலால் உணரலாம்.

படிக்காசு - ஏன் வாங்கினை?

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் மேற்கொண்ட திருத்தலச்செலவில் இந்நிகழ்ச்சி குறிப்பிடத்தக்க ஒன்று. திருவீழிமிழலையில் மிகக் கொடிய பஞ்சம் நிலவியது. மக்கள் பசியால் வாடினர். இவ்வருளாளர் இருவரும் நெஞ்சம் நெகிழ்ந்தனர். அப்போது இறைவாக்கொன்று வானில் எழுந்தது. கீழைத் திருக்கோபுர வாயிலில் திருஞானசம்பந்தருக்கும் மேலைத் திருக்கோபுர வாயிலில் திருநாவுக்கரசருக்கும் படிக்காசு வைப்பதாகவும் அதுகொண்டு மக்கள் வாட்டத்தைத்தவிர்ப்பீராக எனவும் கூறியது. அவ்வண்ணமே காசு வைத்தாலும் நாவுக்கரசருக்கு வாசியில்லாக் காசும் ஞானசம்பந்தருக்கு வாசியுள்ள காசும் வழங்கப்பெற்றன. வாசியுள்ள காசிற்குத் தரம்குறைவாகையால் திருத்தொண்டிற்குக் காலதாமதம் ஆயிற்று. பிறகு வாசி தீரப் பாடிப் பெறுகிறார். அத்தகு நிலைமை திருநாவுக்கரசருக்கு இல்லை. ஏனெனில் அவர் பெற்றதெல்லாம் வாசியில்லாக் காசு.

இவ்வாறு தரப்பெறுவதற்கான காரணம் பல அறிஞர்களாலும் விளக்கப்பெற்றுள்ளது.

மறை. திருநாவுக்கரசு அவர்கள்,

''அருட்குழந்தையோ மெய்யுழைப்பில்லாது இன்பமாய் இறைனைப் பாடுகின்றது. மேலும் அவருக்கு ஞானப்பால் கொடுக்கப் பட்டுமிருக்கின்றது. ஆகவே, அவர்க்கு வாசியுள்ள காசை வீழியார் தந்தார். மேலும் மகன் முறையில் உள்ள அவர்க்குக் குறைத்துக் கொடுக்கலாம். பிள்ளையாருக்கும் வாசியில்லாக் காசு மிழலைப் பிரான் வழங்கினால் என்ன? அவரிடம் வாசியில்லாக் காசுக்குப் பஞ்சமா? என்ற கேள்வி மூண்டெழுதல் இயல்பே. ஞானச் சிறுவர் பால் குறைகாட்டல்வேண்டும் என்பதன்று. திருநாவுக்கரசர் கைத் தொண்டின் சிறப்பைக் காட்டவேண்டும் என்பதே இறைவன் கருத்தாம்'' 87 என்று குறிப்பிட்டுள்ளார்.

அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள்,

''மனம், மொழி, மெய் என்றமூன்றில்பிள்ளையார் உடல்தொண்டு செய்யவில்லையாகலின் தலைமகனாகி இருப்பினும் தந்தையார் வாசியுடன் காசு தந்தார். நாவரசர் தொண்டால் பெறுங்காசு வாசி யில்லாக் காசு என்று பிள்ளையாரே உணர்ந்து பேசுகிறார்'' 88 என்று குறிப்பிடும் கருத்தும் ஒப்புநோக்கத்தக்கது.

சேக்கிழார் இந்நிகழ்ச்சியினை,

''........திருமா மகனா ராதலினாற்
காசு வாசி யுடன்பெற்றார்; கைத்தொண் டாகு மடிமையினால்
வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்.'' 89

என்கிறார். இதன் விளக்கமாகவே அறிஞர்களின் கருத்துகள் காணப்பெறுகின்றன.

பெரியபுராண உரையாசிரியர் சி.கே.சு. அவர்களும் ஆறுமுகத் தம்பிரான் என்பவரின் உரைக்குறிப்பை மேற்கோளாக்கி மேற் கருத்துகளுக்கு அரணாகும்வகையில்அதையேவலியுறுத்துகிறார்.90

''ஞானப்பால் அளித்துக் காத்த அன்புக்குரிய பிள்ளையாயினும் உழைப்பின் அடிபபடையில் மாற்றுக்குறையாத படிக்காசைத் திரு நாவுக்கரசருக்கும் மாற்றுக் குறைந்த படிக்காசைச் சம்பந்தருக்கும் கொடுக்கும் நிலையை உண்டாக்கிய பெருமை'' 91 என அக் கருத்தையே வை. இரத்தினசபாபதி அவர்களும் குறிப்பிடுகின்றார்.

இவ்வறிஞர்களின் கருத்துகளையெல்லாம் உள்வாங்கியதாகச் சிவப்பிரகாசரின்,

''கொள்ளைக் கதிர்முத்தின் பந்தரும் சின்னமும் கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதகும்''

எனும் பாடலடிகள் அமைந்துள்ளமை பெருஞ்சிறப்புக்குரிய ஒன்று. இனி,

''...........நாவர சாய பெருந்தகையோய்!
கள்ளைக் குவளை யுமிழ்வீ ழியிற்படிக் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே.''92

எனும் பகுதிக்கு விளக்கம் தேடவேண்டும்.

இத்தொடருக்கு உரையெழுதிய புன்னைவனநாத முதலியார், இராமலிங்க சுவாமிகள் ஆகியோர் சேக்கிழார் கருத்தை மேற்கோளாக்கியே உரைகண்டுள்ளனர்.93

''கால நிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீரெனினும்
ஏல உம்மை வழிபடுவார்க் களிக்க வளிக்கின்றோம்.'' 94

எனும் தொடரை அடிப்படையாகக்கொண்டு, படிக்காசு இவ்விருவருக்கும் அன்று; பசியால் உழன்ற சமுதாயத்திற்குத்தான் என்ற திருக்குறிப்பு இறைவன் திருவாக்கினில் வெளிப்படுகிறது. ஆகவே இந்நிலையில் இறைவன் ஆணையை மறுப்பதற்கு அஞ்சியே நாவுக்கரசு பெற்றதாக உரைகண்டுள்ளனர்.

''மெய்வருத்தக் கூலிதரும்' என்றபடி கைத்திருத்தொண்டு செய்பவர் பெறும் காசு வாசிபடுமாயின், வாசியினளவுக்குக் குறைவுபடும் ஆதலின் அவ்வளவுக்குக் குறைந்த கூலியாகி, ஏற்ற கூலி தராது வேலைவாங்கும் தலைவர் என்ற குறை இறைவர்பாற் சாரும்'' 95 எனும் சி. கே. சு. அவர்களின் கருத்து மறுக்கப்பட வேண்டிய ஒன்று. தொண்டு, பணி ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. கைம்மாறு கருதாமல் - பயன் எதிர்பாராமல் - எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி உழைப்பது தொண்டாகும்; கூலிக்காக உழைப்பது பணியாகும். கைத்திருத்தொண்டு செய்யும் கடப்பாட்டினர் நாவரசர். அவர்தம் உழைப்பு கூலி எனும் பயன் எதிர்நோக்கியதன்று. எனவே இக்கருத்து பொருந்தாத ஒன்றாகும்.

இதுவரையில் மறுத்தற்கு அஞ்சியே வாங்கப்பெற்றது எனும் கருத்தே நிறுவப்பெற்றது. இவ்வகையில் இக்கருத்தை மேலும் ஆய்ந்தவர் வை. இரத்தினசபாபதி அவர்கள். அவர்,

''முத்துப்பந்தர், முத்துச்சிவிகை முதலியவைகளைப் பெற்று வாழும் பிள்ளையென்னும் முறையில் ஞானசம்பந்தர் படிக்காசு பெறலாம். 'ஆவிற்கு நீர் என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்தது இல்' என்ற திருக்குறளின்படி, நாவுக்கு அரசராகிய நீர் நாவிற்கு இழிவைத் தேடும் முறையில் படிக்காசு பெற்றது ஏன்? என்று வினவுவாராகி, ஆண்டவன் படியளப்பானேயாயினும் அவன் மனைவியும் அறம்வளர்த்த நாயகியேயாயினும் அவன் கையால் தொட்டுக் கொடுத்தால்தான் அறவாழ்வும் ஞானமும் சிறக்கும்

என்று கருதினான். ஆதலின் 'தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால் வான்சிறிதாப் போர்த்துவிடும்' என்ற அறத்தை உளங் கொண்டும், மணிமேகலை தவத்தினளே ஆயினும் ஆதிரை கையால் அளித்தமையாலேயே அறம் சிறந்தது என்பதை எண்ணியும் உம் திருக்கரத்தால் தொட்டுக் கொடுக்குமாறு செய்தான்'' 96 என்று சிறந்த விளக்கம் ஒன்றை நல்குகிறார்.

திருத்தொண்டையே வாழ்வின் விளக்கமாகக் கொண்ட நாவுக் கரசரின் திருக்கையால் இத்தொண்டு நிகழவேண்டுமென்பதற்காகத் தந்தமையால் நாவுக்கரசர் மறுக்க இயலாமல் அதைப் பெற்றார். இதற்குச் சிவப்பிரகாசரின் இன்னொரு பாடலையும் சான்றாக்க லாம். தேனுந்து இதழியோன்சீர் பொருந்திய ஏடு அழலில் வீழ்ந்து கரியாகவில்லை. ஆனால் கரியாய் மொழிகிறது. அதற்குக் காரணம் இதழியோன் சீர் மட்டுமல்ல. அச்சீர்மை பொருந்திய அந்த ஏடு, வானும் புகழ்புகலி மன்னனாகிய திருஞானசம்பந்தரின் திருக்கை பட்டதும் ஆகும். இன்னும் கூறப்புகின் அதுவே முதன்மைக்காரணமு மாம். திருஞானசம்பந்தர் திருக்கையின் சிறப்பு அப்பாடலில் கரியாய் மொழிகிறது. அதுபோலவே திருநாவுக்கரசரின் திருக் கையும் இப்பாடலால் சிறப்புறுகிறது. இவ்விளக்கங்களை உள்ளடக் கியே சிவப்பிரகாசரின் பாடல் சீர்பெறுகிறது. சமுதாய நலம் சார்ந்த - திருத்தொண்டின் சிறப்பு கொண்ட இந்நிகழ்ச்சி சிவப்பிர காசரால் சீர் பெற்றது பொருந்துவதே.

ஆணவமாகும் கபாடமும் திறந்தவன் :

திருவீழிமிழலையில் நிலவிய பஞ்சத்தைப் போக்கியபின் திரு மறைக்காட்டுக் கோயில் கதவு திறந்த நிகழ்ச்சி நடைபெற்றது. திறக்கப் பாடியவர் அரசர்; அடைக்கப் பாடியவர் பிள்ளையார். இவர்களின் திருச்செலவு திருக்கோயில்களை வணங்கிச் செல்லுத லாக மட்டும் இல்லாமல் சமுதாயநலம் சார்ந்ததாகவும் விளங்கிய ஒன்று.

''........மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே.'' 97
''சதுரம் இக்கதவ திறப் பிய்ம்மினே.'' 98

''திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தா ருந்நின்றார்'' 99

என்ற திருப்பாடல்கள் அந்நிகழ்ச்சியைக் குறிப்பிடும் அகச்சான்றுகளாக விளங்குகின்றன.

திருநாவுக்கரசர் மறைக்காட்டுக் கதவம் திறந்த செய்தியைச் சிவப்பிரகாசர்,

''தாயிலி யாகும் சிவபெரு மான்தனைத் தானெனுமோர்
கோயிலி னாரறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னாணவ மாகும் கபாடமு மன்திறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவன் நோக்குதற்கே.'' 100

என்ற பாடலில் குறிப்பிடுகிறார்.

ஆணவமாகும் கபாடம் திறந்தது என்ற குறிப்பு தத்துவ விளக்கம் கொண்ட குறிப்பு. சிவப்பிரகாசர் இந்நூலுள் சுந்தரர் முதலை வாயிலிருந்து மகனைக் கக்கவைத்த செய்தியையும் மணிவாசகரின் திருவாசகம் முத்தி மெய்ப்பயன் தரும் என்ற செய்தியையும் தத்துவ விளக்கம் கொண்டதாக அமைத்துப் பாடியுள்ளார். இவர் நூல் நிகழ்ச்சிகளுக்கு தத்துவ விளக்கம் தரும் நிலை காண வியலுகிறது. வெளிப்படையாகப் பார்க்கையில் மறைக்காட்டு இறைவனைக் காணவியலாது மூடிக் கிடக்கின்ற கோயிற் கதவினைத் திறந்ததாகவே கூறப்பெறும் ஆனால் சிவப்பிரகாசர் உம்மையினால் ஆன்மா உயிருக்குயிராய் விளங்கும் இறைவனைக் காணவியலாமல் மறைக்கின்ற ஆணவமாகிய கதவினையும் திறந்தவன்; திறந்து காணுமாறு காட்டியவன் என்றும் குறிப்பிடுகிறார்.

''மருக்கு லாவு மறைவனத் தொன்றிய
திருக்க பாடந் திறந்தசொல் வேந்தனை
யருட்கு லாவு மறிவினை மூடிய
விருட்க பாடந் திறக்கவு மேத்துவாம்.'' 101

என்ற திருக்கூவப் புராணப் பாடலுக்குப் பயனாகச் சிவப்பிரகாசரின் இப்பாடல் விளங்குகிறது.

திருமறைக்காட்டுக் கதவு திறந்துவிட்டாலே போதும். மறைக்காட்டு இறைவனை மக்கள் தாங்களே காண நுழைவர்; கண்டு

திளைப்பர். ஆனால் உயிரின் அறிவை மறைக்கும் ஆணவமாகிய கதவைத் திறப்பது மட்டுமன்று; காணுமாறும் செய்யவேண்டும். ஆணவக்கதவைத் திறப்பது அரிய செயல். அத்தகைய செயற்கரிய செயலையும் செய்தார் நாவரசர்.

''திருநாவுக்கரசு நாயனார் திருமறைக்காட்டுக் கதவைத் திறந்தது பெரிதல்ல; தானெனும் ஓர் கோயிலின் ஆர் அறிவாகிய வாயிலின் ஆணவமாகும் கபாடத்தை மன் திறந்து தாயிலியை நோக்குதற்குக் காட்டும் வன்மையுடையவர்'' 102 எனும் வை. இரத்தினசபாபதி அவர்களின் கருத்து மேலதற்கு அரண்செயக் காணலாம்.

மேலும் கதவு திறக்கக் காலந்தாழ்த்தியதற்குக் காரணமாக இதையே குறிப்பிடுகிறார் அவர்.

''கதவு திறந்தால் மட்டும் போதாது. காணும்நிலையினை மக்கள் பெறுமாறும் செய்யவேண்டும்......உயிர்கள் இறைவனைக் காணுமாறு செய்யாமல் தடைசெய்யும் திண்ணிய ஆணவக் கபாடம் திறக்கவேண்டும் என்பது வேண்டுகோளாக அமைந்துவிட்டது. இறைவன் திருவுள்ளம் வெற்றுக் கதவம் திறத்தல் என்பதே. நோயிலியாகிய சொல்லிறைவர் அப்பரடிகள் என்றமையால் அவரது வாக்கின் வன்மை, ஆணவக் கபாடத்தையே திறக்குமாறு பணித்ததை உடன்கொண்ட செயலாதலின் காலந்தாழ்ந்தது'' 103 என்கிறார் அவர்.

'நாவுக்கரசரும் மாணிக்கவாசகரும்' என்னும் நூலில் ஸ்ரீசுப்பிரமணியப் பிள்ளையவர்கள் சிவப்பிரகாசரின் இப்பாடலை எடுத்துக் காட்டி விளக்குவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

''நம் சைவசமய குரவர்களின் உயர் இயல்புகளை உள்ளவாறு கண்டு போற்றிய சிவஞானச் செல்வராகிய சிவப்பிரகாசர், ஒரு நடமாடுங்கோயிலாய் அப்பர் எவ்வாறு திகழ்ந்தார் என்பதை ஓர் அழகான பாடலில் தெரிவிக்கின்றார். திருமறைக்காட்டில் திருக்கோயிற் கதவினைத் திறப்பித்து, நேர் வாயிலாக இறைவனை எல்லாருக்கும் காட்டினாற்போல பிறப்பறுத்த பெரியராகிய அந்நாவேந்தர் தமது உடம்பாகிய கோயிலின் உயிரறிவு எனும்

வாயிலை அடைத்துக் கொண்டிருக்கும் ஆணவமலம் என்கின்ற கதவினை நன்றாகத் திறந்து, தாயே இல்லாதவராகிய சிவபெருமானை எல்லோரும் காணக் காட்டுவார் என்று சிவப்பிரகாசர் காட்டுகிறார்'' 104 என்பது அது.

ஆணவமலம் சைவசித்தாந்தம் கூறும் மும்மலங்களுள் ஒன்று. அது மூலமலம், இருள்மலம் எனவும் படும். இஃது உயிரின் அறிவை மறைக்கக்கூடியது.

''.........செம்பின்உறு களிம்பேய்ந்து நித்த
மூலமல மாய்அறிவு முழுதினையும் மறைக்கும்
பாகமாம் வகைநின்று திரோதான சத்தி
பண்ணுதலான் மலமெனவும் பகர்வர்'' 105

எனச் சிவப்பிரகாசம் எனும் தத்துவநூல் அதைக் குறிப்பிடக் காணலாம்.

''ஒருபொருளுங் காட்டாது இருள்உருவங் காட்டும்
இருபொருளுங் காட்டா திது.'' 106

எனும் திருவருட்பயன் பாடலும் இந்த இருள்மலத்தின் கொடுமையைக் காட்டுகிறது. இம்மூலமலத்தை நீக்கி உயிரின் அறிவை மறைத்துக் கொண்டிருக்கும் ஆணவமாகிய கதவையும் திறந்த பெருமை திருநாவுக்கரசருக்கு உரியது.

நினைப்பெற்றவர் போல் பெறலும் நினைப்போல் பிறப்பதும் நல்ல கண்டாய் :

சிவப்பிரகாசர் இப்பிறவியில் திருநாவுக்கரசராகத் தாம் பிறக்கக் கூடாதா? தமைப் பெற்றவர்க்கு அப்புகழ் சென்று சேராதா? என்று எண்ணி ஏங்கியதன்விளைவே இப்பாடல். கிடைத்தற்கரிய மானிடப் பிறவியில் சிவப்பிரகாசர் பிறப்பும் மன்னாஉலகத்து மன்னிய புகழை நிலைநிறுத்திய பிறப்புதான். இருப்பினும் ஆணவச் செருக்கற்ற நிலையில் திருநாவுக்கரசரின் பிறப்பைப் போற்றும் வகையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

''பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.'' 107

எனும் திருக்குறளின் பொருளாக விளங்கியவர் நாவுக்கரசர். மக்கட்பேறு என்பதன் விளக்கமாகியவர். அதுமட்டுமல்ல.

''மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.'' 108

என்று திருக்குறள் குறிப்பிடும்வகையில் வாழ்ந்தவர் அவர்.

இவரைப் பெற்றார் தகுதியானவர் என்பது எச்சத்தாற் காணப்பெற்ற ஒன்றாகியது.

''தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.'' 109

என்ற வகையில் எச்சமாக இவர் நின்று புகழ்பெற்று தந்தை தாயரோடு தமக்கையாரையும் தக்காராக்கினார். தமக்கையாரே தந்தையும் தாயுமாய் விளங்கினார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

நடைவாய்ப் பிணமெனப்பட்டார் பெறுகிலர் :

அப்பூதியடிகள் வரலாற்று நிகழ்ச்சியில் ஒரு பகுதி இது. திருநாவுக்கரசருக்கு அமுது படைக்க வாழையிலை பறிக்கச்சென்ற மூத்த திருநாவுக்கரசு அரவு தீண்டி இறந்தான். அவன் உடலை மறைத்து வைத்துவிட்டு, திருநாவுக்கரசர்க்கு அமுது படைத்தனர். அவர் அப்பூதியார் மகனை அழைக்க, அவன் இறந்ததை அறிந்து 'ஒன்றுகொலாம்' எனும் பதிகம் பாடி விடம் நீக்கி உயிர்ப்பிக்கிறார். இவ்வரலாறு சிவப்பிரகாசரின் சீரிய நெஞ்சில் சிறந்து நின்றது. உலகியலையும் காண்கிறார். பெண் இன்பத்தை துறந்து, துறவு பூண்ட பெருந்தகையாளர் சிவப்பிரகாசர். உலக மக்களில் பெரும்பாலோர் பெண்ணின்பமாகிய சிற்றின்பத்திலே அழிந்து போவதைக் காண்கிறார். பெண்ணின்பத்தை விடமாகக் கருதுகிறார். இப்போது அவர் சிந்தனை இருவகை விடங்கள்; இருவகை அரவுகள் கற்பனையில் விரிகின்றது. பிணமான பெருமகனை விடம் நீக்கிப் பிழைக்க வைத்தவர் நாவுக்கரசர். விடம் நீக்குகின்ற ஆற்றல் அவரிடத்திருப்பது தெள்ளத் தெளிவாகிறது. மேலும் சிற்றின்பங்களை வெறுத்து ஒதுக்கிய துறவியும் ஆவார். உலக மக்கள் தங்களை இழி காம விடத்தில் தோய வைத்ததால் நடைப்பிணமாக உலா வருகின்றனர். இவர்கள் திருநாவுக்கரசரை அடைந்தால் உயிர்ப்பிப்பார். அவருக்கு

இது முன்னதினும் எளிது. முன்னையதில் உடல் உள்ளது; உயிர் இல்லை. அத்தகைய சூழலிலேயே உயிரை அந்த உடலுக்கு ஊட்டியவர். ஆனால் இரண்டாவதில் உடலும் உள்ளது; உயிரும் உள்ளது. ஆனால் நல் உணர்ச்சியில்லை; நடைப் பிணமாகிறது. இதற்கு உயிரூட்டவேண்டிய அவசியம் இல்லை. உணர்த்தினாலே போதும் உயிரின் உணர்வு உயிர் பெறும்; எளிதாகப் பெறும்.

இன்னும் சிந்திக்கலாம். முன்னையதில் உடல் தானாகஅவரைத் தேடிப்போக இயலாது. இவர்தான் தேடிச் செல்ல வேண்டும். பின்னையதில் இவரைத் தேடிப்போக இயலாது. இவர்தான் தேடிச் செல்ல வேண்டும். பின்னையதில் இவரைத் தேடி வருதல் மிக எளிதானது. தேடி வருதலை எண்ணுவது மட்டுந்தான் இங்கே தேவை. இவ்வகையில் ஆய்ந்து காணுகையில் பெண்ணின்பமாம் சிற்றின்பத்தால் நடைப்பிணமாக ஆகிறவர்கள் திருநாவுக்கரசரைத் தியானித்தாலே போதும். அவ்வழிக் காமம் விலகும். உணர்ச்சி பெற்ற உயிர் பெறும்.

சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் குறிப்பிடும் 'ஒரு நம்பி அப்பூதி' என்பதைப் பயன்படுத்தும் நிலையில் அதைப் படித்தறிந்தவர் சிவப்பிரகாசர் என்பதைத் தெளிகிறோம். அ:துபோலவே நம்பியாண்டார் நம்பியின்,

''குழிந்துசுழி பெறுநா பியின்கண்மயிர் நிரையார்
குரும்பைமுலை யிடையே செலுந்தகைநன் மடவா
ரழிந்தபொசி யதிலே கிடந்திரவு பகனீ
யளைந்தயரு மதுநீ யறிந்திலைகொல் மனமே
கழிந்த கழிகிடுநா ளிணங்கிதய நெகவே
கசிந்திபிய மெழுநூ றரும்பதிக நிதியே
பொழிந்ததருளு திருநா வினெங்களரசினையே
புரிந்துநினை யிதுவே மருந்துபிறி திலையே.'' 110

எனும் திருநாவுக்கரசு தேவர் திரு ஏகாதச மாலைப் பாடலைப் படித்து அறிந்திருக்க வேண்டும். மனமே! அறிந்திலை. எங்கள் அரசினை நினை. மடவாரால் அழிதலுக்கு மருந்து அதுவன்றிப் பிறிதில்லை எனும் கருத்து அவர் மனதில் ஆழப் பதிந்திருக்கிறது. அதன் விளைவாகத்தான் இப்பாடல் தோன்றியிருக்க வேண்டும்.

நாவுக்கரசர் விடம்தீண்டி இறந்த பிறகும் ஒருவனை எழுப்பிய வரலாறு அறிந்தும் நம்பியாண்டார் நம்பியின் அறிவுரை கேட்டும் மடவாரால் அழிவார் இன்னும் திருநாவுக்கரசரை பெறுகிலரே என நெஞ்சம் நெக்குருகுகிறார்.

இவ்வகையில் இருவகை அரவினையும் ஒப்பிட்டுக்காணுகையில் மடவார் அல்குல் பாம்பு முன்பு கூறிய வாழைமேலிருந்த பாம்பைக் காட்டினும் கொடியது.

''தீண்டிய உரகத்தினும் தொட்ட பாம்பு மிகவும் வலிமை உடையது. தீண்டிய உரகமும் தொட்ட பாம்பும் மறைந்து இருந்து தன்னிடம் வந்தோரைத் தாக்கிய தன்மையில் ஒத்திருந்தனவாயினும் தீண்டிய உரகம் தன் தன்மையை வெளிப்படையாகக் காட்டும் இயல்புடையது. பார்வையில் அச்சத்தைக் கொடுத்து, நஞ்சினால் உயிரை மாய்த்தல் வெளிப்படையாகவே தெரிந்தவை. ஆனால் அல்குலாகிய தொட்ட பாம்பு இன்பம் தருவதுபோலக் காட்டி, இன்பத்தைத் தொட்டு ஆண்மையின் குணங்களாகிய பெருமையையும் வலிமையையும் இழக்கச்செய்து, அவ்வுயிர் மானமிழந்து திரியுமாறு செய்துவிடுகிறது. அவ்வுயிரை அழிக்காது மானமிழந்து திரியுமாறு செய்வதற்குக் காரணம் மீண்டும் தன்னிடமே வந்து அடங்கிக் கிடக்கவேண்டும் என்ற எண்ணமே'' 111 என்று கூறும் வை. இரத்தினசபாபதி அவர்களின் கூற்றும் அதை விளக்கக் காணலாம்.

உணக்கே வரும் சைவநலம் கூர்ந்து மிளிர்தரும்:

சமய குரவர் நால்வர் வரலாற்றையும் திறனாய்வு செய்யும் சிவப்பிரகாசருக்குத் திருத்தொண்டின் உறைப்பாலே வென்ற நிலையும், திருத்தொண்டின்நெறிவாழ வாழ்ந்தநிலையும் தெற்றென விளங்குகிறது. சமய குரவர் நால்வருள் மாணிக்கவாசகருக்கும் சுந்தரருக்கும் சைவசமயத்தை வளர்க்கவோ நிலைநிறுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ளவோ தேவை ஏற்படவில்லை. அவர்கள் காலத்தில் மறுமலர்ச்சி பெற்று உயர்ந்த காலம். ஆனால் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் வாழ்ந்த காலம் பக்தி இயக்க காலம். புறச்சமயங்கள் செல்வாக்கு பெற்றிருந்த காலம்.

சைவசமயத்தை மீண்டும் உயர்நிலைகளுக்குக் கொணரவேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. இருவரும் அதற்கென வாழ்ந்தனர். ஆயினும் அவரவர் நெறிகள் வேறு; வாழ்க்கை அமைந்தவிதம் வெவ்வேறு. திருஞானசம்பந்தர் இறையுண்மையை நிலைநாட்டிச் சென்றார். திருநாவுக்கரசரோ கைத்திருத்தொண்டின் கடப்பாட்டில் வாழ்ந்தார். அவற்றினும் குறிப்பிடத்தக்கது சமண் சார்ந்ததும் சமண்விட்டு உயர்ந்ததுமாகும். சமண் சார்ந்திருந்தபோது தருமசேனர் எனும் அளவு உயர்ச்சி; சமண்விட்டபோது அதனினும் உயர்ச்சி. ஆனால் இரண்டாவது உயர்ச்சியை எட்ட அவர் பட்ட பாடுகள் மிகப்பல; அறிந்ததே. நேர் விளைவுகளைவிட முரண்விளைவுகளே சமுதாயத்தைப் பெரிதும் ஈர்க்கும் என்பது முன்னரே கூறப் பெற்றது. அக்காலத்தில் நாவுக்கரசரின் வாழ்க்கை முரண்விளைவுகளால் சமுதாயத்தால் கவனிக்கப்பட்டன என்பதையும் கண்டோம். இவருடைய ஒவ்வொரு செயலும் ஈர்ப்புக்கு உரியதாகி மக்களைச் சென்றடைந்தது. அவ்வகையில் சைவசமயம் மக்கள்சமயமாக மாற ஏதுவாயிற்று. சமணசமயம் பற்றியும், சைவத்தின் உயர்ச்சி பற்றியும் மாணிக்கவாசகர் கூறுவதினும் - சுந்தரர் கூறுவதினும் - ஞானசம்பந்தர் கூறுவதினும் திருநாவுக்கரசர் கூறுவது உண்மையானது. தருமசேனரும் அவர்தான்; நாவுக்கரசரும் அவர்தான். தமிழ்மொழி உலகமொழிகளிலே இனியதொரு மொழி என யார்வேண்டுமானாலும் கூறலாம். தமிழ்மொழி தவிரப் பிறமொழி அறியாதாரும் கூறலாம். ஆனால் பாரதி கூறுவதுதான் பொருத்தப்பாடு உடையது; சிறந்தது; உறுதியானது; உண்மையானது. ஏனெனில் இந்திய மொழிகள் பலவற்றையும் உலகமொழிகள் சிலவற்றையும் அறிந்த தகுதி படைத்தவன் அவன். அதுபோலத்தான் இதுவும். அதனால்தான் சிவப்பிரகாசர் சைவ நலம் கூர்தலும், மிளிர்தருதலும் நாவுக்கரசரால்தான் முடியும் என்கிறார். இதற்கு ஓர் ஒப்புமையும் படைத்துக் காட்டுகிறார்.

''........நாவர சேநல் குரவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமுமே.''

என்பது அது. வறுமைநிலையை முன்னர்ப் பெற்று, பின்னர் செல்வநிலை எய்தப்பெற்றவர்க்கே செல்வமும் சிறந்து ஓங்குறும் என்கிற பழமொழி ஒன்றைக் கொண்டு மேலதை விளக்கியுள்ளார். இவ்

வகையில் ஒவ்வொரு பாடலும் மிக அரிய செய்திகளைத் தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குகின்றன.

நாவுக்கரசர் பற்றிய பத்துப் பாடல்களையும் தொகுத்துக் காணுகையில், சிவப்பிரகாசர் அவரைத் திருத்தாண்டக வேந்தராகவும், திருநாவுக்கரசராகவும், நோயிலியாகிய சொல்லிறையாகவும் அழைத்தாலும் 'நாவுக்கரசு' எனும் திருப்பெயருக்கே முதன்மையளித்தது தெற்றென விளங்குகிறது. அது மந்திரமாகும் மாண்பும் மேன்மைப்படுத்தப் பெற்றுள்ளது.

'ஒரு நம்பி அப்பூதி' என்று சுந்தரராலும், சேக்கிழாராலும் போற்றப்பெற்ற அப்பூதியடிகள் பெருமை, சிவப்பிரகாசரால் அத்தொடரில் 'பெருந்தகை' என்னும் இணைப்பும் பெறுகிறபோது இன்னும் சிறக்கிறது. பத்துப் பாடல்களில் மிகுதியான குறிப்புகள் அப்பூதியடிகள் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டனவே. இறை வழிபாட்டினும் இறையடியாரைக் குருவாகக் கொள்ளும் வழிபாடு உயர்ந்தது; சிறந்தது எனும் கொள்கைக்கு விளக்கமாக நின்றவர் சிவப்பிரகாசர். அவ்வகையில் சிவனை வழிபடும் முறையிலிருந்து சற்று விலகி, சிவனடியாராம் திருநாவுக்கரசரைக் குருவெனக் கொண்டுவழிபட்டவர்அப்பூதியடிகள். குருவுக்கேமுதன்மை; குருவைப் பற்றுதல்; குருவே எல்லாம் எனக்கொள்ளல் என்ற அடிப்படைகளில் தம் சிந்தை சேர்ந்த தூய எண்ணத்தின் படிமம் அவ்வடியாரே. அதனால்தான் குருவழிபாட்டில் உயர்ந்த வீர சைவராகிய சிவப்பிரகாசர்க்கு மீளமீள அவ்வரலாறு விரிந்து இடம்கொடுத்தது. மேலும் அடியார் வழிபாடு, தொண்டின் திறம், நட்பாங்கிழமை, சாதி வேறுபாடுகளற்ற சமய சமுதாயப் பணி, அந்தண மரபுச் சடங்குகளையும் மீறித் தொண்டு செயல், நம்பியாரூரரும் ஏத்தும் சிறப்பு எனப் பல்வேறு கோணங்களில் அப்பூதியடிகளின் வரலாறு சிவப்பிரகாசரால் ஆயப்பெறுகிறது.

"அப்பரடிகள் வரலாற்றில் சுவாமிகள் பெரிதும் ஈடுபட்டு உள்ளம் உருகும் இடம் அப்பூதியடிகள் வரலாறே" 113 என்னும் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் (பத்தொன்பதாம் பட்டம்) கருத்து அதற்கு அரண்செய்வதாக விளங்குகிறது. வசிட்டர் வாயால் பிரம்மரிஷிபட்டம் பெறுவதைப்போன்றது, நம்பியாரூரரே

ஏத்தும் சிறப்பு. இதை விரிவாக இப்பாடல்களில் காணவியலுகிறது.

நாவுக்கரசர்க்குச் சமணரால் நிகழ்ந்த கொடுமைகளில் எல்லார்க்கும் தெரிந்த நிலையில் - உலகமெலாம் அறியும்வகையில் சமுதாயத்தின் முன்னிலையிலேயே கடலில் கல்லொடு கட்டிப் போட்ட நிகழ்ச்சி விளங்கியது. கடல்நீந்திய அந்த நிகழ்ச்சியே பாவலர் - அருளாளர் பல்லோரின் மனதில் ஆழப் பதிந்து பல பாடல்களாக வெளிப்பட்டது. ஆனால் சிவப்பிரகாசரோ வேறு வித மாகச் சிந்தித்துப் பார்க்கிறார். நாவுக்கரசரின் ஆற்றலுக்கு இச் செயல் பெரிதாக இல்லை; மிக எளிய ஒன்றே என்கிறார். யாருக்கும் தெரியாமல் அருகக்கடலில் வீழ்ந்து, அமிழ்ந்து, வழிக்கொளும் துறையறியாமல் மயங்கிப் பின் சூலைநோயைத் தெப்பமாகக் கொண்டு கடந்துவந்த நிகழ்ச்சியே அரிது என்கிறார். உண்மை தான். சிவப்பிரகாசராலேயே இவ்வுண்மை வெளிப்படுகிறது.

சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டதையும் ஆய்கிறார். சிவ பெருமான் திருஞானசம்பந்தரையும் திருநாவுக்கரசரையும் ஆட் கொண்ட வகை வேறுபட்டு விளங்குகிறது. ஆனால் இதை ஏற்க மறுக்கிறார் சிவப்பிரகாசர். தம்மைப் பொறுத்தவரையில் இருவரும் ஒப்பாவார்கள் என்று உறுதியாகத் தெளிவாகக் கூறுவதையும் காண முடிகிறது. உயிர்களின் இயல்பு அடிப்படையில் அருள்கிடைத்தல் நிலையில் வேறுபாடு நிகழும் என்பதை அறியாதவர் அல்லர் சிவப் பிரகாசர். உணர்ந்தும் அவர், இறைவன் ஒருவர்க்கு ஞானவமுது உதவியதையும் ஒருவர்க்குச் சூலைநோய் தந்ததையும் மனதளவிலும் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்.

''ஞானசம்பந்தப் பெருமானை ஆட்கோடற்கு ஞானப்பால் தந்தருளிய இறைவன், நாவுக்கரசர் பெருமானை ஆட்கோடற்குக் கொடியதிற் கொடியதாகிய சூலைநோயைத் தந்தருளியது குறித்துச் சுவாமிகள் ஒருபாடலில் நைகின்றார். பாலமுதம் உண்டருளிப் பாடிய பாடலும் சூலைநோய் கொண்டருளிப் பாடிய பாடலும் பரமன் செவிக்கு ஒத்த அருமருந்தாக அன்றோ திகழ்ந்தன என்று கூறி நாவுக்கரசர்தம் ஏற்றத்தை நாட்டுகின்ற அருமை காண்க. நோயால் எழுந்த பாடலே அமுதமாயின், இவர்க்கு அமுதம் கொடுத்துப் பாடச் சொல்லியிருந்தால் எத்தகைய பாடல்கள் கிடைத்திருக்கும்!''114

எனும் கருத்தும் இங்கே ஒப்புநோக்கத்தக்கது. இன்னும் அவ்வகையில் 'படிக்காசு என் வாங்கினை' என்று நாவுக்கரசரைச் சினக்கின்றவராகவும் சிவப்பிரகாசர் விளங்குறார். படிக்காசு வாங்கியதையும் ஏற்க மறுக்கிறார். கதவு திறந்ததையும் தத்துவக் கண் கொண்டு நோக்குகிறார். நாம் நினைப்பதுபோல் திருக்கோயில் கதவு மட்டுமில்லை; ஆணவக்கதவும் திறந்தேவிட்டது. வெளிப்படையாக நிகழ்ந்தது ஒன்று. ஆனால் நமக்கே தெரியாமல் ஆணவம் நீங்கிய நற்பயன் நிகழ்ந்துள்ளது. இதைத் தெளிவாக்குகிறார் சிவப்பிரகாசர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, முடிவாக ஒன்றைக் கூறலாம். அது 'நினைப் பெற்றவர்போல் பெறலும் நினைப்போல் பிறப்பதும் நல்ல கண்டாய்' எனும் பாடல் தொடர். பிறந்தால் நாவுக்கரசரைப் போல் பிறக்கவேண்டும் என்ற முடிவான முத்திரையைச் சிவப்பிரகாசர் பதிந்தேவிட்டார். நால்வர் பற்றிய பாடல்களில் ஒவ்வொருவரைப் பற்றியும் அரிய கருத்துகளை அருளினும் சிவப்பிரகாசர் திருநாவுக்கரசர்பால் சற்று மிகுதியான ஈடுபாடு கொண்டவர் என்பது அவரின் அப்பத்துப் பாடல்களால் தெள்ளத்தெளிவாக அறியவியலுகிறது.

''நால்வர்பாலும் மெத்த ஈடுபாடு உடையராயினும் அவரது பெரும்பற்றும் பின்பற்றும் தன்மையும் நாவுக்கரசரையே பெரும்பாலும் சார்ந்துநிற்கிறது என்று கூறலாம்'' 115 என்ற அடிகளாரின் கூற்றை இக்கட்டுரை முடிவாகக் கொள்கிறது.



அடிக்குறிப்புகள் :

1. க. வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு, முதற்பகுதி, பக். 27
2. மேற்கோள், க. வெள்ளைவாரணன், மேற்படி, பக். 28
3. சு. செல்லப்பன், இக்காலத் தமிழ்க்கவிதை உத்திகள், முனைவர் பட்ட ஆய்வேடு, பக். 115 - 117
4. மேற்கோள், ஐயன்பெருமாள் கோனார் (ப. ஆ.), நால்வர் நான் மணிமாலை, பக். 1
   மேற்கோள், வை. இரத்தினசபாபதி,(உ. ஆ.), நால்வர் நான்மணி மாலை, பக். 13
5. தி. பட்டுசாமி ஓதுவார், 'திருமுறைச் சிறப்பு', திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக மலர், பக். 160
6. தி. பட்டுசாமி ஓதுவார், மேற்படி, பக். 160
7. க. வச்சிரவேல் முதலியார், 'சம்பந்தர் தமிழில் சாத்திர நோக்கு', திருவிடைமருதூர் திருமுறைக் கருத்தரங்கு ஆய்வுகள், பக். 40
8. வே. சுப்பிரமணியம், 'முகவுரை', பன்னிருதிருமுறை வரலாறு, முதற்பகுதி, பக்.1
9. தண். கி. வேங்கடாசலம், சுந்தரர், பக். 126
10. 1 - 2 - 11
11. 1 - 3 - 11
12. 1 - 4 - 11
13. 3 - 117 - 11
14. 7 - 19 - 11
15. 7 - 32 - 10
16. 7 - 68 - 10
17. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பா. எ. 74.
18. சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலை, பா. எ. 1
19. ,, ,, பா. எ. 37
20. ,, ,, பா. எ. 2

21. சிவப்பிகராசர், நால்வர் நான்மணிமாலை, பா. எ. 38
21 அ. ,, ,, பா. எ. 31
22. ,, ,, பா. எ. 16
23. ,, ,, பா. எ. 32
24. ,, ,, பா. எ. 36
25. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், திருநாவுக்கரசர் புராணம் பா. எ. 74
26. வை. இரத்தினசபாபதி, திருநாவுக்கரசர், இரண்டாம் பகுதி, பக். 151 - 152
27. மேற்படி, பக். 156 - 157
28. மேற்படி, பக். 49
29. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, நாவுக்கரசரும் மாணிக்கவாசகரும், பக். 116
30. ப. அருணாசலம், பக்தி இலக்கியம், பக். 3
31. ஏ. வி. சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, பக். 160
32. ச. வே. சுப்பிரமணியம், இலக்கிய உணர்வுகள், பக். 16
33. க. வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு, முதற்பாகம், பக். 544
34. மெ. சுந்தரம், 'அப்பர் - ஒரு புதிய கண்ணோட்டம்', அப்பர் அருட்செய்தி மலர், பக். 32
35. சொ. சிங்காரவேலன், அப்பர் தேவார ஆராய்ச்சிக் கட்டுரைகள், அப்பர் தேவாரத்தில் இலக்கியப் பண்புகள், ஆறாந்திருமுறை, ப. 18
36. மறை. திருநாவுக்கரசு, 'சேக்கிழார் பரவிய அப்பரடிகள்' அப்பர் அருட்செய்தி மலர், பக். 41 - 42
37. க. வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு, முதற்பகுதி, பக். 220
38. நாராயணவேலுப் பிள்ளை, பக்தி வளர்த்த சான்றோர், பக். 94 மேலும் சொ. சிங்காரவேலன், மூவர் தமிழ், பக். 52
39. க. வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு, முதற்பகுதி, பக். 544
40. சொ. சிங்காரவேலன், மு. நூ., பக். 17 - 19
41. ,, ,, பக். 20

42. க. வெள்ளைவாரணன், பன்னிருதிருமுறை வரலாறு, முதற்பகுதி, பக். 327
43. மேற்படி, பக். 328
44. 4 - 12 - 10
45. சுந்தரர், திருத்தொண்டத்தொகை, பா. எ. 38
46. சேக்கிழார், திருத்தொண்டர்புராணம், அப்பூதியடிகள், பா. எ. 7
47. சி. கே. சு., அப்பர், பக். 315
48. வை. இரத்தினசபாபதி, நாவுக்கரசர்-இரண்டாம் பகுதி, பக். 105
49. சேக்கிழார், திருத்தொண்டர்புராணம், அப்பூதியடிகள், பா. எ. 2
50. ,, ,, திருநாவுக்கரசர் புராணம், பா. எ. 1
51. மறை. திருநாவுக்கரசு, மு. நூ., பக். 180
52. வ. ஞானப்பிரகாசம், திருநாவுக்கரசர் போற்றிய திருத்தொண்டர்கள், பக். 45
மேலும் கா.சி.தனக்கோடி அடிகளார், அடியார் பெருமை, பக்.34
53. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, மு. நூ. பக். 10
மேலும் கா. சி. தனக்கோடி அடிகள், அடியார் பெருமை, பக். 28
54. சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலை, பா. எ. 38
55. மாணிக்கவாசகர், திருவாசகம்-கோயில்மூத்ததிருப்பதிகம்,பா.எ.1
56. திருமூலர், திருமந்திரம், பா. எ. 2624
57. 5 - 39 - 3
58. 4 - 101 - 9
59. திருத்தொண்டர் புராணம், சி. கே. சு. உரை, பக். 954
60. புறப்பொருள் வெண்பாமாலை, வாகைத்திணை - 14
61. திருக்குறள் - 785
62. அ. ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம்-ஓர் ஆய்வு, பக். 583
63. ந.பிச்சமுத்து,திறனாய்வும் தமிழிலக்கிய கொள்கைகளும், பக்.163
64. மா. இராசமாணிக்கனார், சைவசமய வரலாறு, பக். 133
65. மா. இராசமாணிக்கனார், மேற்படி, பக். 126 - 133
66. கலைக்களஞ்சியம், தொகுதி ஆறு, பக். 410
67. 6 - 95 - 10
68. அ. ச. ஞானசம்பந்தன், மு. நூ., பக். 552 - 553
69. மறை. திருநாவுக்கரசு, மு. நூ., பக். 141
70. சி. கே. சு., திருத்தொண்டர் புராணம்-உரை, பக். 982
71. சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலை, பா. எ. 6, 26, 38

72. சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலை, பா. எ.6
73. 5 - 72 - 7
74. சிவப்பிரகாசர் - மு. நூ., பா. எ. 22
75. 4 - 1 - 5
76. வை. இரத்தினசபாபதி (உ. ஆ.) நால்வர் நான்மணிமாலை, பக். 130
77. உண்மை விளக்கம், பா. எ. 44
78. நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி, பா. எண். 25
78. அ) ,, திருஏகாதசமாலை - பா.எண்.6
79. சி. கே. சுப்பிரமணிய முதலியார் (உ. ஆ.), அப்பர் சுவாமிகள் புராணம், முன்சேர்க்கை-2, பக். 17-21
80. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், திருநாவுக்கரசர் புராணம், பா. எ. 18
81. சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலை, பா. எ. 18.
82. அ. ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம்-ஓர் ஆய்வு, பக். 233
83. ,, ,, பக். 233
84. வை. இரத்தினசபாபதி (உ. ஆ.), நால்வர் நான்மணிமாலை, பக். 60
85. பு. சி. புன்னைவனநாத முதலியார் (உ. ஆ.), நால்வர் நான்மணி மாலை, பக். 8
86. சிவஞான சித்தியார் பாடல், 2. அதிகரணம்-16
87. மறை. திருநாவுக்கரசு, மு. நூ., பக். 163
88. அ. ச. ஞானசம்பந்தன், மு. நூ.
89. சேக்கிழார், திருத்தொண்டர்புராணம், திருநாவுக்கரசர், பா.எ.260
90. சி. கே. சு., திருத்தொண்டர் புராணம்-உரை, பக். 433
91. வை. இரத்தினசபாபதி (உ. ஆ.), நால்வர் நான்மணிமாலை, பக். 214
92. சிவப்பிரகாசர், மு. நூ., பா. எ. 10
93. பு. சி. புன்னைவனநாத முதலியார் (உ.ஆ.), பக். 22
இராமலிங்க சுவாமிகள் உரை, பக். 42
94. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், திருநாவுக்கரசர்புராணம், பா. எ. 257
95. சி. கே. சு., பெரியபுராண உரை, பக். 433

96. வை. இரத்தினசபாபதி (உ. ஆ.), நால்வர் நான்மணி மாலை உரை, பக். 106-107
97. 5 - 10 - 1
98. 5 - 10 - 11
99. 5 - 50 - 8
100. சிவப்பிரகாசர், மு. நூ., பா. எ. 14
101. திருக்கூவப் புராணம், பா. எ. 10
102. வை. இரத்தினசபாபதி (உ. ஆ.), நால்வர் நான்மணி மாலை உரை, பக். 143
103. வை. இரத்தினசபாபதி, நாவுக்கரசர், இரண்டாம் பகுதி, பக். 222 - 223
104. ஜி. சுப்பிரமணிய பிள்ளை, மு. நூ., பக். 115
105. சிவப்பிரகாசம், பா. எ. 20
106. திருவருட்பயன், இருள்மல நூலை, பா. எ. 23
107. திருக்குறள், பா. எ. 61
108. திருக்குறள், 70
109. திருக்குறள், 114
110. நம்பியாண்டார் நம்பி, திருநாவுக்கரசர், திருவேகாதச மாலை, பா. எ. 2
111. வை. இரத்தினசபாபதி (உ. ஆ.), நால்வர் நான்மணி மாலை உரை, பக். 197
112. சிவப்பிரகாசர், மு. நூ., பா. எ. 34
113. ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், சிவப்பிரகாசர் போற்றிய அப்பரடிகள் பக். 25
114. ,, ,, பக். 23
115. ,, ,, பக். 23

சிவப்பிரகாசர் நோக்கில் 'சுந்தரர்'

நால்வர் நான்மணிமாலை என்னும் இந்நூலில் சமய குரவர் நால்வர்க்கும் பப்பத்துப் பாடல்கள் உள்ளன என்பதை முன்னர்க் கண்டோம். அவற்றுள் சுந்தரரைப் பற்றியன பத்துப் பாடல்கள். அவை 3,7,11,15,19,23,27,31,35,39 எனும் எண்கள்கொண்ட பாடல்களாகும். சிவப்பிரகாசரின் அப்பாடல்களைப் பொதுவாக நோக்குகையில் பல்வேறு கோணங்கள் புலப்படுகின்றன.

முதலாவது, அப்பத்துப் பாடல்களை நான்கு வகையாகப் பகுத்துக் காணலாம். அவை

(1) சுந்தரரின் பெருமையைப் பொதுநிலையில் கூறுவன (3,7)
(2) சுந்தரர் வரலாற்றுநிகழ்ச்சிகளைக் கூறுவன (11,15,19,23,27,31,35,39)
(3) பொருள் அடிப்படை கொண்டது (11)
(4) சிவப்பிரகாசரின் பொருள்புலப்பாட்டு நுட்பம் கொண்டன (7,19,39)

என்பன. இவற்றுள் இரண்டாவது வகையாகக் கூறப்பெற்ற வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறும் அமைப்பு மிகுதியாக உள்ளது. பல்வேறு வரலாற்றுநிகழ்ச்சிகள் (மிகச்சில தவிர) அப்பாடல்களில் அமைந்து விளங்குவதைக் காண்கையில் அவருடைய ஒவ்வொரு அசைவும் சிவப்பிரகாசரின் எண்ணத்தில் படிந்து விளங்குதலைக் காணமுடிகிறது. நால்வர் பாடல்களில் சுந்தரர் பற்றிய பாடல்களிலேயே மிகுதியான வரலாற்றுச்செய்திகள் கூறப்பெற்றுள்ளன என்ற உண்மையும் இங்கே புலப்படுகிறது. வரலாற்றுநிகழ்ச்சிகள் இல்லாத பாடலே இல்லை எனலாம். மேலும் சுந்தரரைச் சிவப்பிரகாசர் விளிக்கும் இடங்களிலும் வரலாற்றுக் குறிப்புகள் அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்க ஒன்று.

இரண்டாவதாக அப்பாடல்களை வரலாற்று நிகழ்ச்சிகள் அடிப்படையிலும் பகுத்துக் காணலாம்.

(1) சிவபெருமானே சுந்தரர்க்குச் செய்த செயல்கள்
(2) சுந்தரர் செய்த அரிய செயல்கள்

(3) சுந்தரர் வரலாற்றில் பிற நாயன்மார் செய்த செயல்கள் என மூவகையாக அவற்றை அமைக்கலாம்.

சிவபெருமானே சுந்தரருக்குச் செய்த அரிய செயல்களாக, (1) தடுத்தாட்கொண்டது (2) தூதாளாகி நடந்தது (3) தோழமை கொண்டது என்பவற்றைக் குறிப்பிடலாம். இவை இரண்டு பாடல்களில் (3,7) அமைந்து விளங்குகின்றன.

சுந்தரர் செய்த அரிய செயல்களாக,

(1) முதலை வாயிலிருந்து பிள்ளையை மீட்டது
(2) செங்கல்லைப் பொன்னாக்கியது
(3) பொன்னை ஆற்றிலிட்டுக் குளத்தில் கொண்டது
(4) சிற்றின்பத்தில் அமிழ்ந்தும் பேரின்பம் பெற்றது
(5) திருத்தொண்டத்தொகை செய்தது

ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை ஐந்து(11, 19, 27, 35, 39) பாடல்களில் காணப்பெறுகின்றன.

பிற நாயன்மார் செய்த செயல்களாக,

(1) ஏயர்கோன் கலிக்காமரே சுந்தரரை வணங்கியது
(2) உபமன்னிய முனிவரே சுந்தரரை வணங்கியது
(3) கழறிற்றறிவார் எனும் சேரமான்பெருமாள் கயிலை அடைந்தது
(4) பெருமிழலைக்குறும்பர் எனும் பரமயோகி வணங்கியது

ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை நான்கு பாடல்களில் (15, 23, 31, 39) அமைந்து சிறக்கின்றன.

மேலும் இப்பத்துப் பாடல்களையும் வேறுவகையிலும் பகுத்துக் காணவியலும். அவற்றை,

(1) திறனாய்வுவகையில் அமைந்து விளங்குவன (3, 7, 31, 35)
(2) தத்துவ அடிப்படையில் அமைந்துவிளங்குவது (11)
(3) வினவி விளக்கம்பெறும்நிலையில் அமைந்தன (15, 39)
(4) ஒப்பீட்டுவகையில் அமைந்துவிளங்குவது (19)
(5) தன்னிரக்கம் உணர்த்தும்நிலையில் அமைந்தன (23, 27)

என ஐவகையிலும் அமைத்துக் காணலாம். இவ்வாறு சிவப்பிரகாசரின் சுந்தரர் பற்றிய அப்பத்துப் பாடல்களும் வெவ்வேறு வகையில் பகுத்துக் காணக்கூடியநிலையில் விரிந்து இடம்கொடுக்கின்றன.

சுந்தரர் வரலாறு :

திருக்கயிலை அடியார்கூட்டத்துள் ஒருவர் சுந்தரர். இவர் ஒருநாள் திருக்கயிலை நந்தவனத்தில் மலர்கொய்யச்சென்றபோது, அங்கே அநிந்திதை, கமலினி எனும் இரண்டு பெண்கள் மலர் கொய்து கொண்டிருக்கக் கண்டார். அண்ணலும் நோக்கினார்; அவர்களும் இவரை நோக்கினர். இவரும் அவர்கள்மீது காதல் கொண்டார். அவர்களும் அவ்வாறே., திரும்ப அவ்வவர் தம் பணிக்குத் திரும்பினர். இறைவன் சுந்தரரைப் பார்த்துத் திருக் கயிலையில் இருந்தும் பெண்கள்மீது ஆசைகொண்டமையால் தென் னாட்டிலே மானிடனாகத் தோன்றி, அவ்விருவரொடு இன்பம் நுகர்வாயாக என்று ஆணையிட்டார். சுந்தரர் அதுகேட்டு மனங் கலங்கினார். தான் மானிடப் பிறவியில் மயங்கும் காலத்துத் தன் னைத் தடுத்தாட்கொள்ள வேண்டினார். இறைவனும் அதற்கிசைந் தான். இது திருக்கயிலாயத்தில் நடந்த நிகழ்ச்சி. அடுத்து நடந்தது பார்ப்போம்.

சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவர் குலத்தில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் மகனாகப் பிறந் தார். அவருக்குப் பெற்றோரால் இடப்பட்ட பெயர் நம்பியாரூரர் என்பதாகும். இக்குழந்தை சிறுதேருருட்டி விளையாடுகையில் அந்நாட்டு அரசர்பெருந்தகை நரசிங்க முனையரையர் கவனத்தை ஈர்க்கிறது. மன்னர் அதன் அழகில் மயங்கினார், பிறகு தன் விருப்பப்படி வளர்ப்புமகனாக ஆக்கிக்கொண்டார். அரச குலத்தில் நம்பியாரூரர் வளர்ந்த'லும் ஆதிசைவ ஒழுக்கநியதிகளுக்கேற்பவே வளர்க்கப்பெற்றார்.மணப்பருவம் அடைந்தபோது புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளை மணம்பேசினர். புத்தூரில் மணம் நிகழ விருந்தது.மணவிழாவின்போது சிவன் திருக்கயிலையில் வாக்களித்த வாறே தடுத்தாட்கொள்ளத் தோன்றினான். மணவிழாவிற்கு இறைவன் முதிய அந்தண வடிவத்தில் வந்து சுந்தரரோடு வழக் காடினான். வழக்கு திருவெண்ணெய்நல்லூர்வரை தொடர்ந்தது. திருவெண்ணெய்நல்லூர் சான்றோர் அவையில் தான் கொணர்ந்த மூல ஓலையின் அடிப்படையில் இவ்வந்தணனுக்கே அடிமையென முடிவு கூறப்பெற்றது. அவ்வூரில் அவ்வந்தணரின் வீட்டைக் காண

அனைவரும் பின்தொடர்ந்து செல்ல, அவரோ அருட்டுறையில் நுழைந்தார்; மறைந்தார். நம்பியாரூரர் தம்மைத் தடுத்தாட்கொண்டது இறைவனே என்பதை உணர்ந்து நெகிழ்ந்தார். எவ்வாறு தங்களின் இன்னருளைப் பாடுவது என இறைவனை அவர் வினவ, அர்ச்சனை பாட்டேயாகும்; ஆகவே சொற்றமிழால் பாடுக எனப் புகன்றான் இறைவன். வலிய வழக்காடியதால் இறைவனால் அவருக்கு வன்தொண்டன் எனும் பெயரும் வழங்கப்பட்டது.

'பித்தா' எனத் தொடங்கிப் பாடுமாறு இறைவன் பணிக்க, 'பித்தா பிறைசூடீ' எனும் பதிகம் அவரால் அருளப்பெற்றது. பிறகு அவர் பல்வேறு திருத்தலங்களுக்குத் திருச்செலவு மேற்கொண்டார். புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகள் மணமகனாக அமைந்த நம்பியாரூரரையே தினமும் சிந்தித்துச் சிவனடியைச் சேர்ந்தார். தில்லை செல்லும்வழியில் இவர் திருவதிகையை அடைந்தார். நாவுக்கரசர் உழவாரப்படையால் திருத்தொண்டு செய்த இடமாகையால் காலால் மிதிக்க அஞ்சி, மிதியாது செல்ல எண்ணி, அருகிலிருந்த சித்தவட மடத்தில் தங்கினார். இராப்பொழுது அங்கேயே உறங்கினார். சிவபெருமான் முதிய அந்தண வடிவுகொண்டு அவருக்கு அங்கேயே திருவடிதீக்கை புரிந்தருளினார். வழியில் பல திருத்தலங்களை வணங்கிப் பின் தில்லையை அடைந்தார். தில்லைக் கூத்தனை வணங்கினார். அப்போது 'ஆரூர்க்கு நம்மிடம் வா'. எனும் அசரீரி ஒன்று கேட்டது. திருவாரூர்க்குப் புறப்பட்டுச் செல்கையில், வழியிலுள்ள சீகாழிப் பதியையும் மிதிக்கலாகாது என்று எண்ணி, அப்பதியை விலகிச் சென்றார். திருவாரூரை நம்பியாரூரர் அடைந்தபோது இறைவன் திருவாணையால் அடியார்கள் எல்லாம் குழுமி வரவேற்றனர். அதன்பின் திருவாரூரிலே தங்கியிருந்து தினமும் திருக்கோயில் சென்று வழிபட்டுவரலானார். அப்போது தம்பிரான் நம்பியாரூரரைத் தோழமை கொண்டதை அசரீரியால் உணர்த்தினார். அன்றுமுதல் 'தம்பிரான் தோழர்' எனப்பெற்றார்.

திருவாரூரில் நம்பியாரூரர் இருந்தபோது, அங்கேயே கமலினி என்பார் உருத்திர கணிகையர் குலத்தில் பரவையாராகப் பிறந்து வளர்ந்துவந்தார். அவரும் தினமும் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டுவந்தார் அப்போது ஒருநாள் நம்பியாரூரர் பரவையாரைக்

கண்டார். அவரும் இவரைக் கண்டார். இருவரும் காதல் கொண்டனர். இறைவன் திருவருளால் மணமும் நிகழ்ந்தது. நம்பியாரூரர் பரவையாருடன் கூடி வாழ்கையில் முன்போலவே வழிபாடும் தொடர்ந்தது. ஒருநாள் ஆரூரில் திருக்கோயிலில் தேவாசிரிய மண்டபத்தில் அடியார்கள் குழுமியிருப்பதைக் கண்டார். இவர்களுக்கு அடியார் ஆகும் நாள் எந்நாளோ? என்னும் நினைவோடு திருக்கோயிலுக்குள் சென்றார். தேவாசிரிய மண்டபத்துள் இருந்த அடியார்களுள் ஒருவராகிய விறன்மிண்டர் என்பார் அடியார்களை வணங்காமல் சென்றதாக நம்பியாரூரர்மேல் சினங்கொண்டார். ஆரூர்பெருமான் அவர்க்குமுன் தோன்றி 'அடியார்களைப் பாடுக' எனப் பணித்தான். எவ்வாறு பாடுவது எனத் தயங்கிநிற்ப, இறைவனே 'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்கியருள, சுந்தரர் திருத்தொண்டத்தொகையைப் பாடி முடித்தார்.

இவருக்கு அரிசி முதலான எல்லாப் பொருள்களையும் குண்டையூர்க்கிழார் என்பார் ஒருவர் கொடுத்துதவிவந்தார். ஒருமுறை அந்நாட்டில் பஞ்சம் ஏற்படவே, திருத்தொண்டில் முட்டுற்ற குண்டையூர்க்கிழார் இறைவனை வேண்டி வணங்கினார். இறையருளால் குண்டையூர் முழுவதும் நெல்மலை குவிந்தது. நம்பியாரூரர் பதிகம் பாட இறையருளாலும் பூத கணங்களின் துணையாலும் ஆரூர் தெருக்களில்எல்லாம் நெல்மலை நிறைந்து விளங்கியது. பரவையார் மகிழ்வோடு அவரவர் இல்லங்களின் முன்னுள்ள நெற்குவியல்களை அவரவர் எடுத்துக்கொள்ளலாம் என்று அறிவித்தருளினார். எல்லோரும் நெல்லை மகிழ்வோடு கொண்டனர். சில நாட்களுக்குப் பிறகு கோட்புலிநாயனார் தம்முடைய சிங்கடியார், வனப்பகையார் ஆகிய இரு மகள்களையும் அடிமைகொள்ளவேண்டும் என்று வேண்ட, நம்பியாரூரர் தம் மக்கள் எனக் கூறிச் சிறப்பித்தார்.

பிறகு பங்குனிஉத்திரப் பெருவிழாச்செலவுக்காகப் பொன்வேண்டினார். அவர் திருப்புகலூரில் திருப்பணிக்காகக் கொட்டிக்கிடந்த செங்கற்களில் சிலவற்றை எடுத்துத் தலைக்குஅணையாக வைத்துப் பகற்பொழுதிலேயே உறங்கிப்போனார். விழித்தெழுகையில் அச்செங்கற்கள் பொன்னாக மாறியிருந்தன. அவற்றைப் பரவையாரிடம்

கொடுத்தார். அதன்பின் பல திருத்தலங்களுக்குத் திருச்செலவு மேற்கொண்டார். அதுபோது திருமுதுகுன்றம் அடைந்தார். திருமுதுகுன்றத்து இறைவரிடம் நம்பியாரூரர் பொன்தர வேண்டினார். இறைவனும பன்னீராயிரம் பொன் கொடுத்தார். அப்பொன்னை மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் பெற்றார். அவற்றையும் பரவையார்க்குக் கொடுத்தார். பின்னர்ச் சென்ற திருச்செலவில் திருக்குருகாவூர்க்குச் செல்கையில் இறைவன் கொடுத்த பொதிசோற்றையுண்டார். அதற்கடுத்து இறைவன் திருக்கச்சூரில் மனைதோறும் இரந்திட்ட உணவை அடியார்சூழ உண்டார்.

மீண்டும் திருத்தலச்செலவு மேற்கொண்டார். அதுபோது திருவொற்றியூர் அடைந்தார்; திருக்கோயிலிறைவனை வணங்கினார். அவ்வூரில் அநிந்திதையார் வேளாளர் குலத்தில் ஞாயிறுகிழார் என்பார்க்குச் சங்கிலியார் எனும் பெயர்கொண்ட மகளாகத்தோன்றி வளர்ந்துவந்தார். மணப்பருவம் எய்தியும் யாரையும் மணக்க எண்ணாது கன்னிமாடத்திலிருந்து விரதங்காத்திருந்தார். அவர் பூமாலை தொடுத்து இறைவர்க்கு அணிவித்து வணங்கிவருவது வழக்கம். திருக்கோயில் வழிபாட்டின்போது சங்கிலியாரை நம்பியாரூரர் கண்டார்; காதல்கொண்டார். இறைவனும் இருவருக்கும் மணம்செய்வித்தருளினான். சுந்தரரிடம் மகிழ மரத்தின் அடியில் 'எப்போதும் பிரியாது இருப்பன்' எனும் உறுதியைப் பெற்றார் சங்கிலியார்.

சங்கிலியாரும் நம்பியாரூரரும் இனிமையாக வாழ்ந்துவருநாளில் சுந்தரர்க்குத் திருவாரூர் வசந்தவிழா நினைவுக்கு வந்தது. திருவொற்றியூரின்றும் புறப்படுகிறார். உறுதி பொய்த்தமையால் கண்ணிழந்தார். அப்போது திருமுல்லைவாயில் எனும் ஊரில் இறைவன் ஊன்றுகோல் ஒன்றைக் கொடுத்தான். காஞ்சிபுரத்தில் இறையருளால் இடக்கண் பெற்றார். பின்னர்த் திருவாரூரில் வலக்கண்ணையும் பெற்றார்.

திருவாரூர் வந்தடைந்ததும் இவர் சங்கிலியாரை மணந்ததைக் கேள்வியுற்ற பரவையார் இவரை ஏற்க மறுத்தார். இறைவனே இருவருக்கும் ஊடலைத் தவிர்த்தருளினான். ஊடலைத் தீர்க்க இறைவன் தானே தூதனாகி நடந்த செய்தி இங்குக் குறிப்பிடத்தக்கது. மன்னர் இருவரும் இணைந்து வாழும்காலத்து ஏயர்கோன்

கலிக்காமநாயனார் என்பார். இறைவனைத் தூதாளாக அனுப்பியது குறித்து நம்பியாரூரர் மீது சினங்கொண்டிருந்தார். இறைவன் இருவரையும் சேர்க்க எண்ணி, நம்பியாரூரரால்தான் தீர்க்கவியலும் என்னும் சூழலை உருவாக்கினார். இவர் கலிக்காமர் இருந்த இடம் நோக்கிப் புறப்பட்டார். இவர் வருவதறிந்த கலிக்காமர் சினத்தால்-கொள்கைப்பெரும்பற்றால் உடைவாள்கொண்டுவயிற்றைக்கிழித்துக் கொண்டு இறந்தார். அங்கு சென்று அதையறிந்த நம்பியாரூரர் தானும் அவ்வுடைவாலால் குத்திக் கொள்ளத்துணிந்தார். இறைவன் திருவருளால் கலிக்காமர் விழித்தெழுவார் போல உடனே எழுந்து நம்பியாரூரர் கையைப் பற்றிக்கொண்டார். அந்நிகழ்ச்சியிலிருந்து இருவரும்நட்பினராயினர். பின்னர்ச் சேரமன்னன்சேரமான்பெருமாள் நாயனாரோடும் நட்பு வளர்ந்தது. இருவரும் பல தலங்களையு வணங்கி வழிபட்டனர். ஆரூரடைந்தபின் கொங்குநாடு சென்றார். அப்போது திருப்புக்கொளியூர் சென்றபோது அங்கே ஒரு வீதியில் எதிரெதிர் இரண்டு வீடுகளில் ஒன்றில் மங்கல ஒலியும், மற்றதில் அழுகை ஒலியும் கேட்டார். மங்கல ஒலிக்குக் காரணம் உபநயன நிகழ்ச்சி. அழுகை ஒலிக்குக் காரணம் உபநயனம் செய்து கொள்ளும் ஒத்த வயதுடையவனை முதலை விழுங்கிய நிகழ்ச்சி. இதையறிந்த நம்பியாரூரர் முதலை வாயிலிருந்த, விழுங்கிய குழந்தை எந்தவள விற்கு வளர்ந்திருக்குமோ அந்த அளவிற்கான வளர்ச்சியோடு குழந்தையை மீட்டுத் தந்தார். பின்னர்ச் சேரமானோடு இருந்த அவர், திருவஞ்சைக்களத்தில் உள்ள திருக்கோயிலை வணங்கி இறை திருவடியடைய எண்ணம்கொண்டார். இறைவனும் தேவர்களோடு வெள்ளை யானையை அனுப்பி நம்பியாரூரரைத் திருக்கயிலைக்கு அழைத்துக்கொண்டார். இதையறிந்தசேரமானும்ஒருகுதிரைமீதுஏறி யமர்ந்து, அதன்காதில் திருவைந்தெழுத்தை ஓதித் திருக்கோயிலை அடைந்தார். இதை முன்னமே தன் யோகத்தால் உணர்ந்த பெருமிழலைக்குறும்பர் எனும் பரமயோகி நம்பியாரூரருக்குமுன்பே திருக்கோயிலை அடைந்து அவர்க்குவரவேற்பு அளித்தார். பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினி, அநிந்திதையாகிக் கயிலையடைந்தனர். இவ்வரலாற்றில் சுந்தரர் பெயர் நம்பியாரூரர் எனவே ஆளப்பட்டுள்ளது.

இவ்வரலாற்றில் இன்றியமையாத நிகழ்ச்சிகளை இங்கு வரிசைப் படுத்தலாம்.

1. திருக்கயிலையில் அடியார் நடுவுள் சுந்தரராக இருந்தது.
2. திருவெண்ணெய்நல்லூரில் இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பெற்றது.
3. சிவபெருமானே நம்பியாரூரரைத் தோழமையாகக் கொண்டது
4. புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகள் பற்றிய செய்தி.
5. சித்தவட மடத்தில் திருவடி தீக்கை பெற்றது.
6. திருவாரூரில் பரவையாரை மணந்தது.
7. திருத்தொண்டத்தொகை பாடியது.
8. குண்டையூர் நெல்மலையை ஆரூரில் பெற்றது.
9. கோட்புலியாரின் இரு மக்களைத் தம் மக்களாகக் கொண்டது.
10. திருப்புகலூரில் செங்கல் செம்பொன்னாகியது.
11. பொன்னை ஆற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் கொண்டது.
12. திருக்குருகாவூரில் பொதிசோறு பெற்று உண்டது.
13. திருக்கச்சூரில் இறைவன் இரந்திட்டது.
14. திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தது.
15. கண்ணிழந்து கண்பெற்றது.
16. இறைவன் திருவாரூரில்தூதாளாகிப் பரவையாரிடம் நடந்தது
17. ஏயர்கோன் கலிக்காமர் வயிற்றில்குத்திக்கொண்டது.
18. வெள்ளையானை மீது இவர்ந்து திருக்கயிலை சென்றது.
19. உபமன்னியமுனிவர் மேற்காட்சியைக் கண்டு வணங்கியது.
20. சேரமான்பெருமாள் திருக்கயிலை சென்றது.
21. பெருமிழலைக்குறும்பர் திருக்கயிலையடைந்து வரவேற்றது

ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வரலாற்று நிகழ்ச்சிகளில் சிவப்பிரகாசர் ஈடுபாட்டைப் பெற்றவையாவை எனக் காணுதல் வேண்டும். இவற்றுள்,

1. திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட்கொண்டது.
2. சிவபெருமானே சுந்தரரைத் தோழமை கொண்டது.
3. பரவையார், சங்கிலியார் ஆகிய இருவரையும் மணந்தது.
4. திருத்தொண்டத்தொகை பாடியது.
5. குண்டையூர் நெல்மலையைத் திருவாரூரில் பெற்றது.

6. செங்கல்லைப் பொன்னாக்கியது.
7. பொன்னை ஆற்றிலிட்டுக் குளத்தில் கொண்டது.
8. மனைதொறும் இரந்திட்டதை உண்டது.
9. சிவபெருமான் தூதாளாகி நடந்தது
10. ஏயர்கோன் கலிக்காமர் வயிற்றில் குத்திக்கொண்டது.
11. உபமன்னிய முனிவர் கயிலைக் காட்சியைக் கண்டது.
12. வெள்ளையானை மீது இவர்ந்து சென்றது.
13. சேரமான் குதிரைமீது இவர்ந்து கயிலை சென்றது.
14. பெருமிழலைக் குறும்பர் திருக்கயிலையில் வரவேற்றது

ஆகிய நிகழ்ச்சிகள் இவரின் இப்பத்துப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

சமயக் குரவர் பற்றிய நாற்பது பாடல்களிலும் அவரவர் வரலாற்று நிகழ்ச்சிகள் பலவும் பாடப்பெற்றுள்ளன. பொது நிலையில் அவர்கள் வரலாற்று நிகழ்சிகள் அமைந்து விளங்குகின்றன என்றாலும், சிறப்பாக நோக்குமிடத்துப் பிற மூவரினும் சுந்தரர் பற்றிய பாடல்களிலேயே மிகுதியான வரலாற்று நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பெற்றுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஒரே பாடலிலேயும் பல வரலாற்றுக் குறிப்புகள் வருவது உண்டு. சுந்தரரை விளிக்கும் அவ் விளித்தொடரும் வரலாற்றுக் குறிப்போடு அமைந்து விளங்குவது இப்பத்துப்பாடல்களிலேயே ஆகும். ஒருசில வரலாற்றுக் குறிப்புகளே சுந்தரர் பற்றிய பாடல்களில் விடுபட்டுள்ளன. எனவே சுந்தரர் வரலாற்றின் ஒவ்வொரு பகுதியிலும் சிவப்பிரகாசரின் உள்ளம் தோய்ந்திருந்ததை இப்பாடல்கள் மூலம் உணரமுடிகிறது. ஆனால் அவை வரலாற்றுக் குறிப்புக்களாக மட்டுமல்லாமல் சிவப்பிரகாசரின் ஆழ்ந்த அனுபவம்சுமந்த பாடல்களாக மலர்ந்துள்ளன.

வான் அமுதம் பாவாய்ப் பொழிந்தான்:

சுந்தரரின் தேவாரமாகிய ஏழாந்திருமுறை முத்தியைத் தரவல்லது என்கிறார் சிவப்பிரகாசர். திருமுறைகள் யாவும் வெவ்வேறு அருளாளர்களால் பாடப்பெற்றிருந்தாலும் அவை யாவும் முத்தி தர வல்லன. இக்கருத்தைச் ‘ சிவப்பிரகாசர் நோக்கில் திருநாவுக்கரசர்’ எனும் கட்டுரையில் விரிவாகக் கண்டோம். திருநாவுக்கரசர் பாடல்கள் வீட்டிற்கு வாயில் என்று கூறிய சிவப்பிரகாசர், சுந்தரர் பாடல்

களைக் குறிப்பிடும்போது பொழிந்த பாக்கள்யாவும் வானமுதமாகிய முத்தியைத் தரவல்லன என்கிறார். திருமுறை நூல்கள் யாவும் குறிப்பாகத் தேவாரத் திருவாசகங்கள் முத்தி தரவல்லன என்பதைத் தெளிவாகவும் உறுதியாகவும் உணர்ந்தவர் சிவப்பிரகாசர். அதையே அவர் ‘ வானமுதம் பாவாய்ப் பொழிந்தான் ’ என்று சுந்தரரைக் குறிப்பிடுகின்றார்.

சிவப்பிரகாசர் சுந்தரரை விளிக்கும் முறை :

சுந்தரரைப் பாடும் இப்பத்துப் பாடல்களில் அவரை முன்னிலை யாக்கிப் பாடியன எட்டுப் பாடல்கள் (3,7,11,15,19,27,31,39) ஆகும். படர்க்கையில் அமைந்த பாடல்கள் இரண்டு (23, 35) ஆகும். இவர் முன்னிலையாக்கி அழைக்கும்போதும் படர்க்கையில் குறிப்பிடும்போதும் சுந்தரரை எவ்வாறு குறிப்பிடுகிறார் என்று காணுதல் வேண்டும்.

சிவப்பிரகாசர் சுந்தரரை,

1. ஆரூர (3)
2. துறந்த முனிவர் தொழும் பரவை துணைவா (7)
3. குண்டையூர் நென்மலைமுற் கொண்ட அருட்கடலே (11)
4. முதலை கான்றிடத் தோன்றும் நாவலனே (15)
5. நம்பி (19)
6. உனற் கரும்புகழ் மேவிய சுந்தரன் (23)
7. கயிலை மலையடைந்த மணியே (27)
8. பாவாய்ப் பொழிந்த வானமுதப் பவளத் திருவாய் நம்பி (31)
9. நம்பியாரூரன் (35)
10. பெருஞ்சீர்த் தொண்டத் தொகை செய்தோய் (39)

என்று குறிப்பிடுகிறார்.

ஆரூரன் என ஒரு பாடலிலும் நம்பியென இரு பாடல்களிலும் நம்பியாரூரன் என ஒரு பாடலிலும் சுந்தரன் என ஒரு பாடலிலும் சுந்தரர் குறிக்கப்பெறுகிறார். பிற ஐந்து பாடல்களிலும் அவர்செய்த அருஞ்செயல்களின் அடிப்படையிலேயே அழைக்கப் பெறுகிறார். பெயரிலேயே பெயர் பெற்றார் திருநாவுக்கரசர், சுந்தரரோ செயற் கருஞ்செயல்களால் பெரிய பெயர் பெற்றார். அந்த ஐந்து தொடர்

களும் அவரது உளத் தூய்மையையும் அருள் உள்ளத்தையும், நாவன்மையையும், உடல் தூய்மையையும் முத்தி தரவல்ல பாடல் பாடினதையும், சீர் பெறு தொண்டத்தொகை கொடையாகத் தந்ததையும் சுருக்கமாக - செறிவாக விளக்கக் காணலாம்.

நம்பி - ஆரூரர் - நம்பியாரூரர் :

திருநாவலூரில் பிறந்த இந்தப் பிள்ளைக்குப் பெற்றோர்கள் பிள்ளைமைப் பெயராக இட்டது 'ஆரூரன்' என்பது ஆகும். நம்பி என்ற சொல் ஆண்களுள் சிறந்தவரைச் சுட்டும் சொல்லாகும். இது வன்றியும் இரண்டும் இணைந்தநிலையில் நம்பியாரூரர் என்றும் அழைக்கப்பெற்றுள்ளது. மூலஓலையில் பாட்டனார் ஊர் திருவாரூர் என்று குறிப்பிடப்பெற்றுள்ளதாகச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். திருநாவலூரில் பிறந்தும் திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட் கொள்ளப்பெற்றும் இறைவனால் இவரின்முன்னோர் திருவாரூரைச் சார்ந்தவர் என்று குறிப்பிடப்பெற்றது அவ்வூர். அவ்வகையில் திருநாவலூரனாகவும் அல்லாமல், வெண்ணெய்நல்லூரனாகவும் அல்லாமல் இறைலன் சுட்டிய திருவாரூரனாக, திருவாரூர் நம்பியாக, நம்பியாரூரராகக் குறிக்கப்பெறுகிறார். நம்பி - ஆரூரர் - நம்பியாரூரர் எனும் மூன்று நிலைகளையும் சிவப்பிரகாசர் பாடல்களில் அமைந்த விளிகளில் காணமுடிகிறது.

''ஆரூர்த் தொடர்பு காரணமாக 'ஆரூரன்' என்பதும் ஆடவர்களுள் சிறந்தார் என்பதைச் சுட்டும் வகையில் நம்பி என்பதும் அமைய இரண்டன் இணைப்பாக நம்பியாரூரர் என்ற பெயர் அக் குழந்தைக்கு இடப்பெறுகிறது'' 1 எனும் வை. இரத்தினசபாபதி அவர்களின் கருத்து சிவப்பிரகாசரின் விளிகளில் விளக்கம் பெறக் காணலாம். திருக்கயிலையில் விளங்கிய சுந்தரர் என்ற பெயராலும் ஒருமுறை அழைக்கப்பெற்றுள்ளார்.

பெருஞ்சீர்த் தொண்டத் தொகை செய்தோய் :

இவர் செய்த அருஞ்செயல்கள் பலவற்றினும் மிகச் சிறந்த ஒன்றாகவும் காலம் உள்ளவளவும் நின்றுநிலைக்கக் கூடியதாகவும் விளங்கும் செயல் திருத்தொண்டத்தொகை பாடியதுதான். தமிழக

வரலாற்றைப் பொறுத்தமட்டில் எழுதி வைக்கப்பெறாத ஒன்று. இலக்கியங்களே இல்லாமலோ, தோன்றாமலோ போயிருந்தால் நம் தமிழகத்தின் வரலாறு புதையுண்டு போயிருக்கும். புதையுண்டிருந் தாலும் மீள எடுக்கலாம். ஆனால் அதற்கு மேற்பட்ட ஓரிழப்பாக ஆகியிருக்கும். ஒரு நாட்டினுடைய இரண்டு கண்களாக இலக்கியத் தையும் வரலாற்றையும் குறிப்பது ஒரு மரபு. ஏற்கனவே எழுதிப் போற்றாததால் வரலாற்றுக்கண் இல்லாமல் இருக்கிறோம். இலக் கியமும் இல்லையென்றால் விழியிழந்தவராகவே இருந்திருப்போம். சுந்தரர்மட்டும் திருத்தொண்டத்தொகை பாடியருளவில்லை எனில் நம்பியாண்டார்நம்பியின் திருத்தொண்டர்திருவந்தாதியும் இல்லை; சேக்கிழாரின் திருத்தொண்டர்புராணமும் இல்லை எனும் நிலை ஏற்பட்டிருக்கும். தொன்மைக்காலம் முதல் இடைக்காலம் வரை வாழ்ந்த சிவனடியார்கள் பற்றித் தெரிந்துகொள்ள இயலாமற் போயிருக்கும். இந்த இலக்கியம் இலக்கியமாக மட்டுமல்லாமல் வரலாறாகவும் திகழ்ந்த பெருமை உடையது.

இந்நூல் மட்டும் பாடப்பெறவில்லையெனில் அடியார் பெருமை களை அறிந்திருக்க இயலாது.

''மாதவம் செய்த தென்றிசை வாழ்ந்திடத்
தீதிலாத் திருத்தொண்டத் தொகை'' 2 எனவும்

''ஈச னடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்'' 3 எனவும்

சேக்கிழார் குறிப்பிடுகிறார். ஈசனடியார் பெருமை கூற எழுந்தது; தீதிலாதது; தேசம் உய்யத் தோன்றியது; இறைவனால் எடுத்துக் கொடுக்கப்பெற்றது; இறைவன் உள்ளக்கிடக்கையினது எனும் பல பெருமைகளை இதன்மூலம் உணரமுடிகிறது.

''திருத்தொண்டத்தொகைப் பதிகம் பொதுவாகத் தமிழ் இலக் கிய உலகத்துக்கும் சிறப்பாகச் சைவப் பேருலகத்திற்கும் பெரும் பயன் தந்துள்ளது. 'தில்லைவாழ் அந்தணர்' என்று தொடங்கும்

இப்பதிகம் சுந்தரர் காலத்து விளங்கிய சைவப் பெருந்தொண்டர்களின் பெயர்ப் பட்டியலாய் அமைந்துள்ளது கருதத்தக்கது. தனியடியார் அறுபத்து மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் ஆகிய அனைவரையும் பற்றி இன்று நாம் அறிந்துகொள்வதற்கு இப் பதிகமே முதல் நூலாய் விளங்குவது. இஃது தோன்றாதிருந்தால் நமது 'அடியார் வரலாறே நமக்குக் கிடைத்திருக்க முடியாது'' 4 எனும் தண். கி. வெங்கடாசலம் அவர்களின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

உலக உயிர்களுக்கே இது பெரிய நன்மை தருவது. ''பல எண்ணற்ற பெரியார்களையும் அவர்தம் வாழ்க்கை வரலாறுகளையும் அறிய முடியாது போய்விட்டது. இது தவக்குறைவே. தந்நலம் இன்மையால் தம்மைப்பற்றிக் கூறிக்கொள்ளாத பெரியோர்களைப் பற்றிய செய்திகளை அவர்கள் காலத்து வாழ்ந்த பிற பெரியார்கள் கூறியிருந்தால் நமக்கு அது எவ்வளவு பெரிய நன்மையாகும். அந் நன்மையைத்தான் நமது ஆரூர் நம்பியாகிய சுந்தரர் செய்துவைத்தார்'' 5 என்ற முன்னவரின் கருத்தும் திருத்தொண்டத்தொகை அடியார்களின் வரலாற்றுக் கருவூலமாக விளங்கிப் பெரும்பெருமை பெற்றதை உணர்த்தக்காணலாம்.

இங்கு விறன்மிண்டரின் சினத்தை நாம் வழிபட்டுத்தான் ஆக வேண்டும். அன்று ஆரூர் தேவாசிரிய மண்டபத்தில் அடியானும் புறம்பு; ஆண்டவனும் புறம்பு என்று கூறவில்லை என்றால் இத் திருத்தொண்டது ஏது? அதனால்தானே இறைவனே திருத்தொண்டரைப் பாடுக எனச் சுந்தரரைப் பணித்தான். அவனே முதலில் தொடங்கியும் வைத்தான். ஆகவே இறைவனால் தொடங்கிவைக்கப் பெற்ற பெருமையும் உடையது அது. சேக்கிழாரின் திருத்தொண்டர் புராண விரிவுக்கும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டத் திருவந்தாதியின் சுருக்கக் குறிப்பிற்கும் அடிநிலையாய் - மூல இலக்கியமாக விளங்கும் பெருமையை உடையது. இதையெல்லாம் கருத்தில் கொண்ட சிவப்பிரகாசர் 'பெருஞ்சீர்த் தொண்டத் தொகைசெய்தோய்' என்று விளியில்கூட இவ்வரலாற்றைத் தெளிவாகப் புலப்படுத்துகிறார்.

துறந்தமுனிவர் தொழும் பரவைதுணைவா:

சிவப்பிரகாசரைச் சுந்தரர் அழைக்கும் இத்தொடரில் இருவகையான விளக்கங்களைக் காணவேண்டியுள்ளது. அவற்றுள் ஒன்று, துறந்த முனிவராகிய உபமன்னிய முனிவரே தொழும் பெருமை என்பது. மற்றது பரவை துணைவனாக விளங்குவது. விளிநிலையில் சிறு தொடராக அமையினும் இதற்கான பொருள்விளக்கம் விரிந்த நிலையினது.

முதலில், துறந்தமுனிவர் தொழும் சுந்தரர் என்பதைக் காண்போம். வரலாற்று நிகழ்வுகளில் தம் பார்வையை நுணுக்கமாகச் செலுத்தக்கூடியவர் சிவப்பிரகாசர். அப்பூதியடிகளைப் பற்றிக் கூறும்போது சிவபெருமானையே வணங்கும் சுந்தரரே புகழ்ந்த அப்பூதியார் என அப்பூதியாருக்கு ஏற்றம் தருகிறார். அத்தகையதே இத்தொடரும். பொதுவாக முற்றும் துறந்த முனிவர்கள் எல்லாரும் வழிபடுகின்ற சுந்தரர் என்று பொருள்கொள்ளலாம். அதனினும் உபமன்னிய முனிவரும் தொழும் பெருமைகொண்டவர் என்று கொள்வதே பெரிதும் பொருந்துவது. அவர் வரலாறு உணர்ந்தால் இது தெளிவுறும்.

கயிலைமலையின் அடிவாரத்தே இருப்பவர் இம்முனிவர்; புலிக்கால் முனி புதல்வர்; திருப்பாற்கடலையே சுருக்கியுண்டவர்; முனிவர்கள் புடைசூழ இருப்பவர்; இவ்வியல்புகளுக்கு மேலும் இவரின் சிறப்பியல்பு ஒன்றுண்டு. சிவனை மட்டுமே வழிபடக்கூடியவர்; வணங்கக்கூடியவர், பிற யாரையும் வணங்காத கொள்கைப் பிடிப்புள்ளவர் என்பது. அத்தகைய நெறியினராகிய தவசீலர், சுந்தரர் திருக்கயிலை செல்லும்போது காண்கிறார். முனிவர் புடைசூழ இருந்தும், பிற முனிவர்களின் கண்களுக்கு அகப்படாத காட்சியைக் காண்கிறார். ஆயிரம் கதிரவர்களின் கூடிய ஒளிபோலப் பேரொளி செல்ல வியந்த அம்முனிவர்களுக்கு மேலும் ஒரு வியப்பு. சுந்தரர் அப்பேரொளி என உணர்த்தியதும் இன்னும் பெரிதாக வியக்கின்றார்கள். சிவனைத் தவிர வணங்காத இப்பெருமுனி சுந்தரரை வணங்கியதைக் கண்டு வியக்கிறார்கள். தம்பிரான்தோழனாகிய அவர் தம்மாலும் வணங்கப்படும் தகுதியுடையவர் என்று உரைக்கிறார் முனிவர். அவ்வகையில் பெருந்துறவுதன்னொடு

பெருங்கொள்கை ஒன்றையும் கொண்ட உபமன்னிய முனிவரே வணங்கும் பெருந்தகவு படைத்தவர் என்பதைத் தெளிவாக்குகிறார் சிவப்பிரகாசர்.

இரண்டாவதாக, பரவை துணைவன் என்பதைக் காணல் வேண்டும். பரவையாரின் வரலாறு பின்னர் விரிவாகவரினும் இங்கு இக்கோணத்தில் சுருக்கமாகப் பார்ப்போம். திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்தவர் இவர். கணிகையர்குலம் எனினும் உருத்திரனையே வணங்கித் தம்மை முழுவதும் அவனுக்கே ஒப்படைக்கும் தூய்மையான குலம் என்பதை உணர்தல்வேண்டும். இடைக்காலத்தை நினைத்து இழிவுபடுத்திவிடக்கூடாது. அந்த வகையில் அவர் இறைவன் திருப்பணிக்கென்றே தோன்றியவர் என்பது புலப்படுகிறது. மேலும் இல்லறம் நல்லறமாவதற்கு இன் துணையாக மட்டுமல்லாது,நற்றுணையாவதும் இன்றியமையாதது. திருவாரூர்ப் பெண்ணும் திருவொற்றியூர்ப் பெண்ணும் உடலால் உறவு சுந்தரரோடு அமையினும் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர் கள். அதனால்தான் அவ்வுறவுகள் சிற்றின்பமாக இல்லை. பேரின் பத்தின் அடிப்படையாகிறது. இன்பநிலைக்கு மேலும் பரவையார் வாழ்வில் இறைவனே செங்கல்லைப் பொன்னாக்குகிறான். ஆற்றி லிட்டுக் குளத்தில் தேடிப் பெறச்செய்கிறான் என்பதையும் காண வேண்டும்.அவர்திருப்பணிக்குக் குண்டையூர் நென்மலை ஆரூர்க்கே வருவதைக் காண்கிறோம். இல்லறவாழ்க்கையில் இணைவதற்கு முன்னும் தன்னை ஒப்படைத்துள்ளார்; இல்லற வாழ்வின்போதும் தம்மை ஒப்படைத்துள்ளார். இவையெல்லாவற்றுக்கும் மேல் தூதாளாக இறைவனே பரவையாரிடம்வந்த செய்தியும் குறிப்பிடத் தக்கது. இவையெல்லாம் தொகுத்துநோக்குகையில் ‘புகழ்புரிந்த இல்லாகவே’ பரவையார் வாழ்வு தெளிவாகத் தெரிகிறது.ஒருபுறம் முனிவரே வணங்குகிறார் என்ற பெருமை; இன்னொருபுறம் உலக வர் பரவையாரின்துணைவன் என அடையாளங்காட்டுகிறபெருமை நினைக்க நினைக்க நிறைகிற நெஞ்சாக அமையாமல் அவரின் பெருமை அளவிடற்கரியதாகச் செல்லுவதைக் காணமுடிகிறது. பரவையாரால் சுந்தரர் ஆற்றல் புலப்படுவதையும் மறக்கவியலாது. இவர் இல்லையென்றால் செங்கல் பொன்னாவது ஏது? பன்னீ ராயிரம் பொன் பெறுவது ஏது? குண்டையூர் நெல்மலை ஏது?

இறைவன் தூதாளாகி வருவது ஏது? எல்லாம் இவராலேயே. அதனால்தான் சிவப்பிரகாசர் பரவை துணைவா என அழைக்கிறார் என்பது பொருந்தும்.

பரவை மகிழக் குண்டையூர் நெல்மலை முற்கொண்ட அருட்கடலே:

சுந்தரர் வரலாற்றில் இதுவும் ஒரு முக்கியமான நிகழ்ச்சி. திருவாரூர் வாழ்ந்த சுந்தரர்க்கும் பரவையார்க்கும் இல்லறம் இனிது நடப்பதற்காக நெல் முதலிய எல்லாப்பொருளையும் குண்டையூர்க் கிழார் கொடுத்துவந்திருந்தார். ஒருமுறை பஞ்சம் ஏற்படவே அப்பணியைச் செய்ய இயலவில்லை. இறைவனிடம் குண்டையூர்க்கிழார் வேண்ட, குண்டையூர் வீதிகளில் நெற்குவியல் மலைபோலக் குவிந்து கிடந்தது. தன்னால் அவற்றைத் திருவாரூர்க்கு எடுத்துச் செல்ல இயலாமையை உணர்ந்த கிழார் சுந்தரரிடம் முறையிட்டார். சுந்தரர் தம்பிரானை வேண்ட, பூதங்களின் துணையால் ஆரூர்த் தெருக்களில் மலைபோலக் குவிந்தது. இதைக்கண்ட பரவையார் மகிழ்ந்தார். தமக்குப் போதுமானது கொண்டு, பிற யாவற்றையும் அவரவர் வீட்டிற்கு முன்னுள்ளதை அவரவர்கள் அள்ளிக்கொள்ளலாம் என அறிவிக்கச்செய்து மகிழ்ந்தார். இந்த வரலாற்றைச் சிவப்பிரகாசர் மூன்று நிலைகளில் அமைத்துக் காணுகிறார். ஒன்று, குண்டையூர்க்கிழார் நென்மலை பெற்றுச் சுந்தரரிடம் விண்ணப்பித்தது; மற்றொன்று, பரவை மகிழ நெல் கொண்டளித்தது; இன்னொன்று இதற்குக் காரணமான சுந்தரரின் அருட்கடல்.

அச்சூழல் தம்பணியைச் செவ்வனே செய்ய இயலாதவகையில் பஞ்சம் நிலவியது என்பது தெரிகிறது. சிவனடியாராகிய - தம் குருவாகிய சுந்தரர்க்குக் கிழார் நெல் அனுப்ப இயலவில்லை என்பதும் விளங்குகிறது. கிழாரின் வேண்டுகோள் சுந்தரருக்காக என்பதும் தெளிவான ஒன்று. அருளுகின்ற இறைவன் நேரிடையாகச் சுந்தரர் இல்லத்தில் நிரப்பியிருக்கலாம். ஆனால் அவர் குண்டையூரிலேயே தருகிறார். அதுமட்டுமல்ல. வேண்டும் அளவில் அல்ல; மலைமலையாக ஊர்முழுதும், குண்டையூரார்க்கே உரியதாக வழங்குகிறார். இவ்வாறு அமைவதற்கு என்ன காரணம் எனக் காணுதல்வேண்டும்.

குண்டையூர்க் கிழார் சுந்தரரைக் குருவாக வணங்குபவர்; நேரிடையாக இறைவன் ஆரூரில் தந்திருந்தால் சுந்தரர் இல்லறத்திற்குப் போதுமானதாக ஆகியிருக்கும். ஆனால் குண்டையூராரின் அரும்பணி உலகிற்குத் தெரிந்திருக்காது.மேலும் குருவை வழிபடும் அவர்க்கு அதற்குரிய பயன் இல்லாமல் போய்விட்டிருக்கும். குருவை வணங்கும் அடியார்களை வணங்கும் வழிபாட்டின் சிறப்பு விளக்கம் பெறவே அவ்வாறு செய்தார் இறைவன்.

''குண்டையூர்க் கிழார் வேண்டியவாறே நெல்மலை அருளியதுடன் அதனைத் திருவாரூர்க்கு எடுக்கப் பூதங்களையும் இறைவர் ஏவியருளினார். தாமே திருவாரூரில் நம்பிகளுக்கு நெல்தராது இவ்வாறு அருளியது குண்டையூர்க்கிழாருக்குக் குருபணியின் பலன் தருதற்காம்'' 6 எனும் செங்கல்வராய பிள்ளையவர்களின் கருத்தின் விளக்கமாக மேலது அமையக் காணலாம்.

இறைவன் திருவருட்செயலினைக் காட்டினும் சுந்தரரின் தவப் பெரும் ஆற்றலைக் காட்டிலும் அடியார்களைத் தம் தலைவனாக, குருவாக வழிபடும் அடியார் வழிபாட்டின் ஆற்றலைக் காட்டுவதாகவே அச்செயல் அவ்வாறு நிகழ்ந்தது.

இனி, இரண்டாவது செய்தி விளக்கப்பெறல் வேண்டும். ஆரூரில் குண்டையூர் நெல்மலை முழுதும் வீதிகளெங்கும் நிறைந்தது. இதுகண்டு மகிழ்ந்தார் பரவையார். பரவையார் தம்மைச் சிவனுக்கே ஒப்படைத்தவர்; அத்திருப்பணியில் ஆழங்கொண்டவர் என்பது தெளிவான ஒன்று. அதற்குமேலும் பரவையாருக்காசச் செங்கல் பொன்னாகியது; பன்னீராயிரம் பொன் பெற்றதெல்லாம் சுந்தரரோடு வாழும் தம் சுயநல வாழ்க்கைக்காக அல்ல என்பதைப் புரிந்துகொண்டால், பரவை மகிழ்வதில் மிளிர்வது தந்நலமா? பொதுநலமா? என்பது விளங்கும். குடும்பம் நடத்துவதற்கான அளவு நெல் குவிந்திருக்குமானால் உறுதியாகப் பரவையார் மகிழ்ந்திருக்கமாட்டார். குண்டையூரார் செயலும் உலகறிய வெளிப்பட்டிருக்காது. பெற்றது நெல்மலைகள். இங்குப் பொதுநலந்தான் மகிழவைக்கிறது. இறைவன் அருளால் குண்டையூரார் வழியாக ஆரூர் வறுமை நீக்கம் பெறுகிறதே என்ற மனநிறைவு - சமுதாயத்

தொண்டில் மனநிறைவு மகிழ்ச்சியை அவரிடத்தில் மலர வைக்கிறது. மேலும் இது பொதுநலம் என்பதை இன்னும் சில சான்றுகளால் விளக்கலாம்.

பங்குனி உத்திர விழாவிற்குக் குடும்பத்திற்கு மட்டும் என்றால் செங்கல் அளவுக்குப் பொன் தேவைப்படாது. பன்னீராயிரம் பொன்னும் தேவையல்ல. அவை திருவாரூர்க்கு அத்திருவிழாவின்போது வெளியூர் உள்ளூர் அடியார்களுக்குத் திருவமுதும் வேறு பல உதவிசெய்தற்கும் பயன்படுத்தவே அவ்வளவு பொன் தேவைப் பட்டது. பரவையார்க்குத் துணிகளோ, நகைகளோ வாங்கவும் வேறுபிற வசதிகள் செய்துகொள்ளவும் அல்ல; பொதுத்தொண்டிற்குத்தான். இறைவனிடத்திருந்து சுந்தரர் பெறுவதும் சுந்தரரிடத்திருந்துப் பரவை பெறுவதும் மேலோட்டமாகப் பார்ப்பவர்களே பிழையாகக் கொள்வர். அச்சூழல்களில் எல்லாம் சமுதாயத்திற்காகத்தான் அவை நிகழ்ந்தன என்பது சற்று ஆழமாகக் காண்பவர்க்கே விளங்கும்.

''அடியார்களைப் பற்றிய வேறொரு தவறான எண்ணமும் உண்டு. அதாவது, அவர்கள் சமூகத்திற்கு உதவும் மனப்பான்மையில்லாத தனிப்போக்கில் தனிசிறந்தவர்; பொதுமக்களின் வேறானவர்; வாழ்க்கையின் கடுமையை உணராதவர்; கிறுக்குப் பிடித்தவர் என்பதாம். எனினும் உண்மையில் மக்களுக்குத் தொண்டுசெய்வதில் ஈடுபாடும் உரமான பொது அறிவும் உடையவர்களாக இருக்கக் காண்கிறோம்......... மெய்யடியார்களின் நற்பண்புகளில் இரக்க உணர்வே தலையாயது. உலகில் பொருள்களை வாரி வழங்குவதில் ஊதாரிகள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவர்கள் தாராள மனப்பான்மை உடையவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் மேற்சட்டையை யாராவது எடுத்தால், தங்கள் மேற்போர்வையையும் அவர்கள் கொடுத்துவிடுவார்கள். சமூகத் தொண்டாற்றுவதற்கு ஏற்ற கருவிகளாகத் தங்களைச் செய்யும்படி அடியார்கள் இறைவனைப் பலகாலும் வேண்டிக்கொள்கின்றனர்'' 7 எனும் வ. ஆ. தேவசேனாபதி அவர்களின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களும் இதற்கு விளக்கம் தந்துள்ளார். ''நம்பிகள் பரவையார்பொருட்டுப் பொன்னும் பிறவும்

வேண்டி இறைவரைப் பாடிப் பெறுகின்றார் எனச் சில அறிவில்லா மக்களிடை வழங்கும் ஒரு பிழையான எண்ணம் மிக்க தவறு என்பது இதனால் விளங்கும். வற்காலத்தின் கொடுமையால் மக்கள் நெல் பெறாது வருந்தும் அந்நாளில் பரவையார் செய்த செயல் காலத்தி னாற் செய்த பெருநன்றியுமாதல் கருதுக '' 8 என்பது அவர்தம் கருத்தாகும்.

''மக்களால் விளைவிக்கக்கூடாத பேரளவினதாகிய நென் மலையை இறைவன் ஈந்தருளியது திருவருட்செயலின்பெருமையை விளக்குதற்பொருட்டும் வன்தொண்டரின் பெருந்தவத்தினைப் பிறர்க்கு உறுதியாக உணர்த்துதற்பொருட்டும்,

நல்லா ரொருவ ருளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை'' என்றபடி

சுந்தரமூர்த்தியின் தவப்பயனாகத் திருவாரூரில் உள்ளவர்எல்லாரும் வறுமை நீங்கிச் சிறப்படையும் பொருட்டும் என்க'' 9 என்னும் கா. சு. பிள்ளையவர்களின் கருத்தும் அதற்கு அரணாக விளங்கு கின்றது.

அடுத்து, சுந்தரரின் அருட்கடலைக் காணவேண்டும். இறைவ னிடம் நெல் வேண்டியதும் அவற்றைப் பரவையார் மகிழக் கொடுத் ததும் குரு-சீட மரபோடு இணைத்துப்பார்க்கலாம். ஏதோ ஒரு வகையில் தொடர்புகொண்டதாகவே விளங்குகிறது. எனவே அன்பு இதற்கு அடிப்படை எனக் கொள்ளலாம். வேண்டுமானால் பக்தி என்று கூறலாம். ஆனால் அருள் எனக் கூறல் பொருந்தாது. சுந்தரர் குண்டையூர் நெல்லை ஆரூர்க்கு இறைவனால் பூதங்களை ஏவிக் கொண்டது என்றவகையில் அன்பு எனக்கூறல் பொருந்தாது. ஆரூர் மக்களெல்லாம் - ஆரூர்க்கு வரும் மக்கள் எல்லாம் வறுமை நீங்கப்பெற வேண்டும் என்ற உள்ளம் அடிப்படையாவதால் இது அன்பிற்கு மேலும் அருளாகக் கொள்ளப்பெறுகிறது. அவ்வகை யிலும் சுந்தரர்பெறும் அடிப்படையிலும் அல்லது சுந்தரர் திருவா ரூர்க்குக் கொள்ளும் அடிப்படையிலும் தந்நலம் இல்லை என்பதை அறிவுறுத்தவே சிவப்பிரகாசர் அருட்கடல் என்று குறிப்பிடுகிறார்.

குண்டையூர்க் கிழார் பெறுதல் குருவழிபாட்டின் பயன் என்

பதை நிலைநிறுத்துவதற்கும், பரவை மகிழ்தலும், சுந்தரர் அருட் கடலாக விளங்குதலும் இச்செயல் தந்நலத்திற்கானதன்று; பொது நலத்தின் பொருட்டு என விளங்குதற்கும் சிவப்பிரகாசர் அத் தொடரை அமைத்துள்ளமை விளங்குகிறது.

வரதன் கயிலை மலையடைந்த மணியே!

சிவப்பிரகாசரின் இப்பத்துப் பாடலில் இவ்வடி மிக நீண்டது. சேரமான் பெருமாள்நாயனார் குதிரைமேலேறி உடன்வர நெடுநல் யானை எருத்தத்து அமர்ந்து கயிலைமலை அடைந்த மணியே என்பதது. இங்கும் மூன்றுநிலைகள் தொடர்ந்தமைந்து விளங்குகின் றன. அவற்றுள் ஒன்று கயிலை செல்லுங்கால் சேரமான்பெருமாள் நாயனார் குதிரைமேலேறி உடன்வந்தது; மற்றொன்று தாம் யானைமேல் ஏறிச் சென்றது; மேலும் ஒன்று ஒளிவிடும் மணியாக அடைந்தது.

முதலில் சேரமான்பெருமாள் நாயனார் உடன்வரச் சென்றது. திருத்தலச்செலவில் திருவஞ்சைக்களம் சென்ற சுந்தரர், மனமுருகித் தம்மைத் திருக்கயிலைக்கு அழைத்துச்செல்ல இறைவனிடம் வேண்டுகிறார். அவர் வேண்டுகோளுக்கு இணங்க, இறைவனால் கயிலையிலிருந்து.வெள்ளையானை அனுப்பப்பெற்றது. சுந்தரரும் திருக்கயிலை புறப்பட ஏறி இவர்ந்தார். அப்போது சுந்தரர் தம் தோழராகிய சேரமான் பெருமாள் நாயனாரை நினைக்கிறார். இவ் வரலாற்றில் இவ்விடம் மிக இன்றியமையாத இடம், முதன்நிலையி லேயே ஒருவரையொருவர் காணாமலேயே நட்புகொண்டவர்கள். அருகித்தொடர்கின்ற இந்நட்புமுறை, சங்ககாலத்தில் பிசிராந்தை யார் கோப்பெருஞ்சோழன் நட்பாக விளங்கியது; இடைக்காலத் திலே திருநாவுக்கரசர் அப்பூதியடிகள் நட்பாகத் தொடர்ந்தது; அடுத்த காலத்தில் சுந்தரர் சேர்மான்பெருமாள் நாயனார் நட்பாக மிளிர்ந்தது.

''சேரமான் பெருமையுணர்ந்து சுந்தரரும் சுந்தரர் பெருமை யுணர்ந்து சேரமானும் ஒருவரையொருவர் நாடுகின்றனர். கண்டு பழகும் முன்னரே அவர்கள் நட்பு மலர்ந்துவிட்டது'' 10 என்று தண்.கி.வெங்கடாசலம் அவர்கள் கூறுவதும் காண்க. கோப்பெருஞ்

சோழன் பிசிராந்தையார் நட்பினும் திருநாவுக்கரசர் அப்பூதியடிகளின் நட்பிலும் இந்த நட்பு சற்று வேறுபட்டது. சுந்தரர் திருக்கயிலைக்குப் புறப்படுகையில் அவரே முதலில் நினைத்துப் பார்க்கிறார். சேரமானினும் சுந்தரரே மிகுந்த நினைவில் இருப்பதாகத் தெரிகிறது. சுந்தரரைவிடத் தம்பிரானே தோழமையை நினைவு கொண்டு தொடர்வதைப்போல இது விளங்குகிறது. சுந்தரரே மிகுதியும் தோழமைகொண்ட பெருமைபெற்றவர் சேரமான். அதனால்தான் சேரமானும் உடன்வரத் திருக்கயிலை சென்றதாகக் குறிப்பிடுகிறார். இல்லையேல் அவரின் அச்செலவு முழுமையுற்றதாக ஆகியிருக்குமா என்பதே அய்யம். அதனாலேயே முதலில் சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார்.

இரண்டாவதான யானைமேல் இவர்ந்துசென்றதாகும். சுந்தரரை அழைத்துச்செல்ல வந்த நெடுநல்யானையாகிய வெள்ளை யானை இறைவனால் அனுப்பப்பெற்றது. நல்லூர்ப் பெருமணத்தில் அடியார் புடைசூழத் திருஞானசம்பந்தர் திருக்கயிலை அடைந்த செய்தியும் நாவுக்கரசர் திருக்கயிலை] அடைந்ததும் ஆகிய முத்தி அடைந்த நிகழ்ச்சிகளில் இல்லாத விவரிப்பு இவர் திருக்கயிலை அடைந்த நிகழ்ச்சியில் காணப்படுகிறது. திருவஞ்சைச்களத்தில் யாவரும் காணுமாறும், யானைமேல் இவர்ந்தும், சேரமான்பெருமாள் உடன்வரவும் நிகழ்வது அரிய செயல். திருக்கயிலை நோக்கிச் சென்ற இவரின் செலவு வேறுபாடு மிக்கதும் ஆகும். பிறர் திருக்கயிலை சென்றதை யாவரும் காணவில்லை; காண இயலவில்லை. இவரின் செலவு காணுமாறு அமைந்தது; காட்டுமாறும் அமைந்தது குறிப்பிடத்தக்கது. காட்டுமாறும் மட்டுமல்ல; சுட்டுமாறும் அமைந்தது. வெள்ளையானைமேல் அமர்ந்துசெல்லுதல் என்பதும் அந்த யானை இறைவனின் ஆணையால் வந்தது என்பதும் அவரின் சிறப்பைச் சுட்டுமாறு அமைந்தது. மேலும் உபமன்னிய முனிவரால் சுட்டுமாறும் அமைந்தது. துறந்தாரும் தேவரும் அடியாரும் காணும் வகையில் அமையத்தான் அவ்வாறு நிகழலாம். முற்பிறவியிலிருந்தே சைவநலம் மிளிர்கூர்தற்காகப் பிறந்த திருஞானசம்பந்தரின் கயிலைச்செலவும் முழுவதும் துறந்த நாவுக்கரசர் கயிலைச்செல்வும் காண இயலாமற்போக, இல்லறத்தில் இனிதாக வாழ்ந்து சிவப்

பணி மேற்கொண்ட சுந்தரர்க்கு உலகத்தார் முதலானோர் காண நிகழ்ந்தது என்ற நிலைக்கு இன்னுமொரு காரணமும் சுட்டலாம். இறையருளைப்பெற துறவுமட்டுமே வழியன்று; இல்லறத்தில் இருந்துகொண்டேயும் இறைவனிடத்தில் அன்புகொண்டாலே போதுமானது. இல்லறத்தானுக்கே இன்னும் திருப்பணியில் சமுதாயவளவில் தொடர்புகொண்டு வளர்க்க இயலும். ஆகவேதான் சுந்தரரின் திருக்கயிலைச் செலவு யானைமீது யாவருங்காணத் தொடர்ந்தது. இதைக் கருத்தில்கொண்ட சிவப்பிரகாசர், இதை இவ்வாறு பாடினார்.

அதற்கடுத்த நிலையில் கயிலைமலையடைந்த மணி என அழைக்கப்பெறுவதையும் காணவேண்டும். தேவார மூவருள் திருஞானசம்பந்தர் கயிலைச் செலவும் திருநாவுக்கரசர் கயிலைச் செலவும் ஒருவகையாக அமைய, சுந்தரர் கயிலைச்செலவு செல்லும் முறைவகையில் வேறுபட்டது எனக் கண்டோம். இனி இன்னொரு கோணத்திலும் இது சிவப்பிரகாசரால் காட்டப்பெறுகிறது. மானிடராகப் பிறந்த இந்தவுடலை இழந்து திருக்கயிலை அடைவதுதான் மரபு; காலங்காலமாகக் கண்டது. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் கயிலை அடையும்போது உடலை இழந்து திருக்கயிலை அடைந்தார்கள் என்று கூறமுடியாது. அதற்கான சான்றுகள் ஏதும் இல்லை. ஆனால் அதேசமயத்தில் மானிட உடலோடு கயிலை சென்றார்களா எனக் கண்டால் அத்தகைய சான்றுகள் இல்லை. உடலோடு திருக்கயிலை சென்றதாகச் சுந்தரர் ஒருவர்மட்டுமே வரலாற்றில் குறிக்கப்பெற்றுள்ளார். வேறு எந்த அடியாரும் உடலோடு திருக்கயிலை அடைந்ததாகக் குறிக்கப்பெறுவதும் இல்லை. சேக்கிழார் குறிப்பிடும் திருநாவுக்கரசர் வரலாற்றிலும் மானிடஉருவோடு திருக்கயிலைஅடைய இயலாது என இறைவனே அந்தண வடிவம் கொண்டு, திருநாவுக்கரசருக்கு உணர்த்துகிற குறிப்பொன்றுள்ளது. இவற்றையெல்லாம் தொகுத்துநோக்குகையில் மானிட உடலோடு சுந்தரர் சென்றதும் - யானைமீது சென்றதும் - சேரமான் உடன்வரச் சென்றதும் இறைவன் இந்த உலகிற்கு ஏதோ ஒன்றை உணர்த்தவேண்டும் எனும் குறிக்கோளோடு அமைந்துள்ளதாக உள்ளது.

துறவி திருக்கயிலை அடைதலில் யாருக்கும் அய்யம் இருக்காது யாவருக்கும் காட்டவேண்டிய அவசியமும் இல்லாதுபோயிற்று ஆனால் இல்லறத்திலே வாழ்ந்த ஒருவன் - இரு மனைவியரோடு வாழ்ந்த ஒருவன் - இல்லறச் சூழலிலே அமிழ்ந்த ஒருவன் - திருக்கயிலைக்குச் செல்லுதல் இயலுமா என்பதே அக்காலச் சூழலில் அய்யம் விளைவித்த ஒன்று; தொடர்கிற அய்யம்தான். ஆனால் சுந்தரர் மூலமாக இதற்கு விடைகூறப்பெறுகிறது. இல்லறநிலையிலிருந்து திருக்கயிலை அடையமுடியும் என்பதை உணர்த்தவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டுள்ளது. உணர்த்துவது காட்சிப்புலன் அடிப்படையில் அமைதல் மிகவும் சிறப்பாக அமையும்.

அவ்வகையில் இல்லறமும் கயிலைச்செலவுக்குத் தடையன்று என்பதை உணர்த்த இது காட்டப்பெறுகிறது. உடல் தடையாகுமே என நினைக்கலாம். எனவே அவ்வுடலைத் தடையல்லாத நிலைக்கு மாற்றினால் நிறைவுறும். அதுவே சுந்தரர் வாழ்வில் நிகழ்ந்தது. திருக்கயிலைக்குச் செல்லுங்கால் பலகோடிச் சூரியர்களின்ஒளிகூடிய ஒரு பேரொளி சென்றதாகக் காட்டுவார். உடலை ஒளியாக மாற்றிய செயல் நிகழ்ந்திருக்கிறது. அதைக் குறிப்பிடவே சிவப்பிரகாசர் சுந்தரரை மணியே என அழைக்கிறார். அவ்வுடல் பேரொளி விடும் பெருமணியாகத் திகழ்ந்து தடையை நீக்கியிருக்கிறது.

''உலகியல் இன்பம் கருதி அழித்துக்கொள்ளும் ஆண்மையை மடைமாற்றி இவ்வுடல் முழுவதிலும் அமுதமாகப் பரவச்செய்து, இரத்தினம்போலும் ஒளியுடைய உடலாக மாற்றி, என்றும் அழியாச் சோதியாக மாற்றும் வன்மையை மனித இனம் பெற்றுள்ளது. அவ்வாறு அமைத்து வாழ்ந்த அருளாளர் ஆகையால் அவரை மணி என அழைத்தார். அவர் உடல் ஞானத்தீயால் எரிக்கப்பெற்றுக் கோடி சூரிய ஒளியுடையதாய் விளங்கிக்கொண்டிருந்தமையின் மணி போல் ஒளிவிடும் நம்பியாரூரரை மணி என்றார்'' 11 எனும் வை. இரத்தினசபாபதி அவர்களின் கருத்து அரணாதல் காணலாம்.

மேலும்,

''மலவாதனையற்றாரும் பூமியில் மானிட உருக்கொண்டு சில பகல் வதிவரேல், அவ்வாதனை வந்துசேருதலின், அவ்வுருவை

ஞானாக்கினியாற்றகித்து, விசுத்தவுருப்பெற்றுச் சேறல் மரபாக, இவ்வாளுடைய நம்பிகள் தம்முருவம் இயற்கையே விசுத்தவுருவாதல் பற்றி, அவ்வுருவோடு திருக்கயிலை அடைந்தவர்'' என்று அத்தொடருக்குச் சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகளும், இராமலிங்கத் தம்பிரானும், பு. சி. புன்னைவனநாத முதலியாரும் தரும் விளக்கமும் 12 இங்குப் பொருத்தமாக விளங்குகிறது. மானிட உடலை மடைமாற்றம் செய்து மணியாக மாற்றி ஒளியுடையதாக ஆக்கினால் அதுவும் திருக்கயிலைச் செலவுக்குத் தடையன்று என்பதை விளக்குகிறது. அதைத்தான் சிவப்பிரகாசர் ‘வரதன் கயிலை மலையடைந்த மணியே’ என்கிறார்.

இறைவனால் மட்டுமல்லாமல் இறையடியார் நினைத்தாலும் தம் அன்பர்களுக்கு அருள்வழங்க இயலும் என்பதை உணர்த்தும் வகையில் சுந்தரரின் ஆற்றலைக் காட்டுகிறது முதல் செய்தி; சிவபெருமானே சிறப்புசெய்து அழைத்துக்கொண்ட பெருஞ்சிறப்பைக் காட்டுகிறது இரண்டாவதுசெய்தி; இல்லறத்தானும் வாழ்க்கையை, உடலை மடைமாற்றித் திருக்கயிலை அடையவியலும் என்று சமுதாயத்திற்கு நம்பகத்தன்மை ஊட்ட எழுந்தது மூன்றாவது செய்தி. இத்தகைய விளக்கங்களை உள்ளடக்கியதுவே அந்த விளித்தொடர்.

''வான்காண இந்திரனும் மாலயனும் மாதவரும்
தான்காண இறையருளால் தனித்தவள யானையின்மேல்
கோன்காண எழுந்தருளிக் குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே!'' 13

என வள்ளலாரும் அந்நிகழ்ச்சியை அமைத்துப் பாடியுள்ளார்.

உணற்கரும்புகழ் மேவிய சுந்தரன் :

ஆரூர! நம்பி! நம்பியாரூர! எனும் விளிகள் சில விளக்கங்களைத் தந்தன. துறந்த முனிவர் தொழுவதும், பரவை துணைவன் எனக் குறிப்பிடுவதும், பரவை மகிழக் குண்டையூர் நென்மலை கொண்டதும், கயிலைமலைக்குச் சேரமான் உடன்வர யானைமீது இவர்ந்து சென்றதும் ஆகிய சுந்தரர்தம் பல்வேறு வாழ்வியல் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இவையன்றியும் பாடல்களில் செய்திநிலையில்

பல்வேறு பெருமைகள் கூறப்பெறுகின்றன. மேல்கூறப்பெற்றனவும் இனிக் கூறப்பெறுவனவும் ஆகிய எல்லாவற்றிற்கும் விளக்கமாக அமைந்து விளங்குவது இத்தொடரே. சுந்தரன் சுந்தரனாக இருந்த போது திருக்கயிலையில் சிறப்பு. ஆனால் ஆரூரராக மாறியபோது தான் திருக்கயிலைக்கே சிறப்பாகும். நினைப்பருங்கயிலை உனற் கரிதாக இருந்து மாறியது சுந்தரரின் அரும்புகழாலேயே.

முதலை கான்றிடத் தோன்றும் நாவலன் போன்ற தொடர் களின் விளக்கங்கள், பாடல்களின் செய்திகள் விளக்கம் பெறுகின்ற போது விளக்கம் பெறுகின்றன.

சிவப்பிரகாசரின் பாடல்களில் அமைந்த அப்பத்து விளிகளையும் பகுத்துக் காணுகையில் பெயர்களாக அமைந்ததும் பொருள் அடிப் படையிலே அமைந்துள்ளன என்பதும் பிறவும் அவரின் அருஞ் செயல்களை விளிக்கும்நிலையில் அமைந்தும் பொருள் அடிப்படை யிலே அமைந்துள்ளன என்பதும் இங்கு அறியப்பெற்றது.

படியிலா நின்பாட்டில் ஆரூர!
பரமன் நனிவிருப்பன் :

ஆரூரன் பாட்டு படியில்லாப் பாட்டு என்பதும் அப்பாட்டில் பெருமான் மிகவும் பெருவிருப்புடையவன் என்பதும் இப்பாடலில் சிவப்பிரகாசரால் விளக்கப்பெறுகிறது. இறையுண்மையை விளக்கு வனவாகத் திருஞானசம்பந்தரின் பாடல்கள் விளங்குகின்றன. இறைவன் அருட்செயலோடு திருத்தொண்டின் நிலை விளக்குவன திருநாவுக்கரசர் பாடல்கள். ஆனால் சுந்தரர் பாடலோ வாழ்வியல் நிலையாமையைப் பற்றிக் கூறுவதோடு இறைவனோடு உரிமை யாக வினவும்நிலையில் அமைந்தன. இறைவனைக் காட்டியது ஒரு வகை; இறைத்தொண்டை நிலைநிறுத்தியது ஒருவகை; இறை வனைச் செயலாற்றச் செய்வது ஒருவகை; மூன்றாம் வகைமைக்கே சுந்தரர் பாடல்கள் பொருந்துவன. இறைவன் புகழ்கிளத்தி, அருள வேண்டிப் பாடியன முன்னிருவர் பாடல்கள். இறைவன் புகழ் கூறி னாலும் இறைவனைச் செயலாற்ற உரிமையோடு ஆணையிட்ட நிலையில் அமைந்தன இவரின் பாடல்கள். வான அமுதத்தைப் பாவாக மொழிந்தவர் என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

திருஞானசம்பந்தரின் பாடல்கள் மகன்மைநெறியில் அமைந்தன. திருநாவுக்கரசரின் பாடல்கள் தொண்டுநெறியில் அமைந்தன. சுந்தரர் பாடல்களோ தோழமைநெறியில் அமைந்தன. தேவார மூவர் பாடல்களும் மூவகை நெறியின. இறைவனைத் தோழனாகக் கொண்டு அமைந்த பாடல்கள் வேறெந்த சமயத்திலும் இல்லை. இச்சமயத்திலேயும் வேறெந்த அருளாளர்களிடத்தும் இல்லை. அவ்வகையாலும் இவரின் பாடல்கள் படியிலா - ஒப்புமையில்லாத பாடல்களாகவே உள்ளன என்பது தெளிவாகிறது. அவை அனுபவங்களை விளக்கும் நெறியில் வேறுபட்ட - புதிய - புரட்சியான முறையில் அமைந்து விளங்குவனவே.

''பித்தன் என நின்று உயிருக்கு இன்பம் கொடுப்பதும், உயிரின் வளர்ச்சிபெற்ற தன்மையும் இறைவனின் அருள் தன்மையும் தோழமை முறையில் கலந்து செயலாற்றப்படுகின்றன. இரண்டும் இணைந்து செயலாற்றினாலும் தத்தம் தனிநிலைகளை விட்டுவிடவில்லை. இத்தகைய அனுபவ நெறிகளை விளக்க எழுந்ததே நம்பியாரூரர் தேவாரம். இத்தகைய அனுபவ நெறியை விளக்கும் வேறு நூல்கள் இல்லை. எனவே நம்பியாரூரர் பாட்டைப் படியிலா நின் பாட்டு என்றார்'' 14 என விளக்கந்தரும் வை. இரத்தினசபாபதி அவர்களின் கருத்தும் கருதத்தக்கது.

சுந்தரரின் அனுபவநிலையில், இறைவன் செயலற்று இருக்கும் நிலையில், பாட்டின் பொருளமைப்புநிலையில் எனப் பல்வகையிலும் பிறவற்றோடு ஒப்புமை காண இயலாதவகையில் இவர் பாடல்கள் விளங்குகின்றன. இத்தகைய வேறுபாட்டைச் சிவப்பிரகாசர் குறிப்பிடுகிறார் என்பதிலிருந்து தேவார, திருவாசகங்களில் முழுவதும் தோய்ந்து ஆய்ந்து அறிந்தவர் என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

கேட்டும், படித்தறிந்தும் உணர்ந்த சிவப்பிரகாசர் தம் ஞானத் திருப்பாடலின் வழியாக உணர்த்தும் திறன் காணவேண்டும். 'படியிலாப் பாட்டில் பெருமான் பெருவிருப்பன்' என்பதைக் கேட்டும், படித்தும் அறிந்த சிவப்பிரகாசர் அக்கருத்தை அப்படியே ஏற்கவில்லை. ஆய்ந்தறிகிறார்; ஆய்ந்து நமக்கும் அறிவிக்கின்றார். 'அடியேன் விளங்குமாறு அறிந்தனன்' என்று அதைக் குறிப்பிடு

கிறார். அவர் எவ்வாறு தெளியத் தெளிந்தார் என்பதை அவரே குறிப்பிடுகிறார். சிவபெருமான் தடுத்தாட்கொண்டதும், பரவைபால் தூது சென்றதும், திருக்கச்சூரில் இரந்து உணவு தந்ததும் ஆகிய வற்றைக் கொண்டு விளங்குமாறு அறிந்ததாகக் குறிப்பிடுகிறார். எப்பொருளாயினும் மெய்ப்பொருள்காண்பது சிவப்பிரகாசர் இயல்பு. எத்தனையோ நிகழ்ச்சிகள் இருப்பினும் இம்மூன்றின் அடிப்படையி லேயே சிவப்பிரகாசர் உணர்த்துவதைக் காணவேண்டும். வள்ளலார் இராமலிங்க சுவாமிகளும்,

''இன்பாட்டுத் தொழிற்பொதுவில் இயற்றுகின்ற எம்பெருமான்
உன்பாட்டுக்கு உவப்புறல்போல் ஊர்பாட்டுக்கு உவந்திலரே'' 15

என்றே கூறுகிறார்.

வான்தொழும் ஈசன் தடுத்தாட்கொண்டது

சுந்தரர் இவ்வுலக வாழ்வு தொடங்கியபின், இறையருள் தொடர்பு முதன்முதலாக வெளிப்பட்ட சூழல் தடுத்தாட்கொண்ட செயலிலேயே ஆகும். புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளோடு சுந்தரர்க்கு நிகழவிருந்த திருமணம் நிகழாதவாறு - உலகப்பற்றில் அமிழாதவாறு தடுத்தாட்கொள்ளப்பெற்ற செய்தி முன்பே வரலாற் றில் தரப்பெற்றுள்ளது. அதற்கான அகச்சான்று உளவா எனக் காணல்வேண்டும்.

''ஆவணஞ்செய் தாளுங்கொண்டு'' 16

''வெண்ணெய்நல்லூரில் வைத்தென்னை யாளுங்கொண்ட'' 17

''நேசத்தி னாலென்னை யாளுங் கொண்டார்'' 18

''ஒட்டியாட்கொண்டு போயொளித்திட்ட வுச்சிப்போதனை'' 19

''அன்று வந்தெனை அகலிடத் தவர்முன்
ஆளாகவென் றாவணங் காட்டி...'' 20

''நின்று வெண்ணெய்நல் லூர்மிசை யொளித்த
நித்தி லத்திரள் .....'' 21

''......வெண்ணெய்நல் லூரில் அற்பு தப்பழ ஆவணங் காட்டி
அடிய னாவென்னை யாளது கொண்ட நற்பதத்தை'' 22

''நம்பனே யன்று வெண்ணெய்நல் லூரில்
நாயி னேன்றன்னை யாட்கொண்ட'' 23

என்ற சுந்தரரின் தேவாரப் பாடலடிகள் அவ்வரலாற்றுக்கு அகச் சான்றுகளாக விளங்குகின்றன. சிவபெருமான் தானே சுந்தரர் பொருட்டு முதிய அந்தணர்வடிவங்கொண்டு புத்தூரில் நிகழவிருந்த திருமணத்தைத் தடுத்து, திருவெண்ணெய்நல்லூரில் ஆட்கொண்டான். சேக்கிழார் மற்றும் பன்னிருதிருமுறை வரலாற்றாசிரியர், அறிஞர் பலரும் தடுத்ததையும் குறிப்பிடுகின்றனர்; ஆட்கொண்டதையும் குறிப்பிடுகின்றனர். ஓலையாகிய ஆவணங்காட்டி, வழக்கு செய்து ஆட்கொண்டசெயல் இவ்வகச்சான்றுகளில் புலப்படுகின்றது ஆனால், அவற்றுள் புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார்மகளோடு நிகழ விருந்த திருமணம் தடைப்பட்ட தற்கான செய்திகள் எதுவும் காணப் பெறவில்லை. இருப்பினும், அச்சான்றுகளால் இறைவன் எதையோ தடுப்பதற்காகத்தான் வழிகாட்டியிருக்கிறான்என்று உணரமுடிகிறது.

''திருப்பதிகச் செய்திகளில் சடங்கவி சிவாச்சாரியார் மகள் மூல மாக அமைந்த மணத்தைத்தடுத்து என்னை ஆட்கொண்டார் என்ற பொருளில் வரலாற்றமைப்பைக் காணமுடியவில்லை என்பது உண்மையே. ஆயினும் வழக்கின்மூலம் ஆளாகக் கொண்டிருக்கின்றான் என்ற பொது உண்மையை மறுக்க இயலாது'' 24 என்னும் வை. இரத்தின சபாபதி அவர்களின் கருத்தும் அச்செய்தியை விளக்கக் காணலாம். அந்த நிகழ்ச்சி நம்பியாண்டார் நம்பி பாடலிலும் காணப்பெறவில்லை.

''தொழுதும் வணங்கியும் மாலயன் தேடரும் சோதிசென்றாங்(கு)
எழுதும் தமிழ்ப்பழ ஆவணம் காட்டி எனக்(கு)உன்குடி
முழுதும் அடிமைவந்(து) ஆட்செய் எனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகு(ம்) மலரின் நற்றார்எம் பிரான்நம்பி ஆரூரனே'' 25

என்பது நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டத் திருவந்தாதிப் பாடலாகும்.

''மண்புகழ அருட்டுறையான் ஓலை காட்டி
மணம்விலக்க வன்தொண்டாய்''

எனும் உமாபதி சிவாச்சாரியார் திருத்தொண்டர்புராணச் சாரத்திலும் காணப்பெறவில்லை.

இன்றைக்கு அடிமை என்பது இல்லாத ஒன்று. முடியாட்சிக் காலத்தில் ஒருவரிடத்தில் ஒருவர் அடிமையாக வாழ்தல் என்பது நடந்த செயல். அதற்கான சான்றுகள் வரலாற்றிலுள்ள குறிப்புகளிலும் கல்வெட்டுகளிலும் காணப்பெறுகின்றன. ஒருவர் தாம் தம் குழந்தையை விற்றதற்கான சான்றுகளும் உள்ளன. சில பத்தாண்டுகளுக்கு முன் கொத்தடிமை என்ற முறை இருந்ததும் யாவரும் அறிந்த ஒன்று. இந்த அடிமைநிலை உலகியல் வழக்கிலிருந்த ஒன்று. ஆனால் சுந்தரரின் அடிமைநிலை சற்று வேறுபட்டது. ஆன்மிக உலகுக்கு அழைத்துச்செல்லும் ஆற்றல்பெற்றது. இந்த மடைமாற்றந்தான் உய்வுக்கு - அதாவது உலக உய்வுக்கு அடிப்படையானது. அதற்காக ஆவணம் ஒன்றையும் அமைத்துக்கொள்கிறார் இறைவன். சுந்தரரை வல்வழக்காடவும் செய்கிறார். மாணிக்கவாசகர் வரலாற்றிலும் திருநாவுக்கரசர் வரலாற்றிலும் உலகியல் அழுகை ஆன்மிக அழுகையாக மடைமாற்றம் பெறுவதும் அவ்வழி அருள்பெறுதலும் காணப்பெறுகிறது. அதுவே இங்கு அடிமைநிலை மடைமாறி ஆன்மிக வளர்ச்சியின் அடிப்படையாக அமைகிறது.

இறைவன் உயிர்களின் முன்னேற்றத்திற்காகத் தானே பரம்பொருள் தன்மையிலிருந்து இறங்கி, மனித உருத்தாங்கி வந்து அருளுவான் என்பதற்குச் சான்றாகவும் இந்நிகழ்ச்சி அமைகிறது. இறைவன் திருக்கயிலையில் சுந்தரரிடம் கூறியவாறே வந்து தடுத்தாட்கொள்கிறான். உரிய நேரம் வருகிறபோது இறைவன் ஆட்கொள்ள வருவான் என்ற நம்பகத்தன்மையையும் வெளிப்படுத்துகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக அழவைத்து அருள்பெற்ற நிலை திருஞானசம்பந்தரிடத்தும் திருநாவுக்கரசரிடத்தும் காணப்பெறுகிறது. இவர்கள் அழைக்க இறைவன் வந்தது தெளிவாகிறது. ஆனால், இவ்வரலாற்றில் அழைக்காதபோதும் அவனே வந்தருளுதல் காணமுடிகிறது. தானே வந்து அருளுகிற தயாளனாகக் காட்டப்பெறுகிறான். 'தானே வந்து என் கரதலத்து அமர்ந்த சிவன்' எனச் சிவப்பிரகாசர் சிவபெருமானைக் குறிப்பிடும் பாடலுக்குச் சான்றாக இவ்வரலாறு அமைந்துள்ளது. உயர்ந்த மரத்தின் கிளையிலுள்ள தேன் ஒருவனுடைய வாயில் தானாக - நேராக - வாய்ப்பாக விழுகின்ற சூழலைப் பார்க்கமுடிகிறது. எனவேதான் இவ்வரலாறு சிவபெருமான் தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள நிகழ்ந்த

தாகக் காண்கிறார் சிவப்பிரகாசர். அதனால்தான் அவருடைய ஆய்வில் தடுத்தாட்கொண்டது, சிவபெருமான் சுந்தரர் பாட்டில் நனிவிருப்பன் என்பதாலேயே நிகழ்ந்தது என்று கூறுகிறார். இக் கருத்தைத் தவிர வேறெந்த கருத்தையும் இணைத்துப்பார்க்க இய லாத வகையில் இவரின் கருத்து உறுதியாக அமைந்துள்ளது.

மேலும் நட்பாங்கிழமை இங்குச் சிறப்புநிலை எய்துவதையும் காணமுடிகிறது.

''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.'' 26

என்ற வள்ளுவத்தின் இலக்கணமாக விளங்குகிறது. உடுக்கையை இழக்கிறவனுடைய கை எவ்வாறு விரைந்து சென்று உடுக்கை நழு வாத வகையில் தடுத்துக் காப்பாற்றுகிறதோ, அதுபோல விரைந்து சென்று காப்பாற்றும் சூழலை இல்வரலாற்றில் காணமுடிகிறது. சுந்தரரின் இடுக்கண் களையும் நட்பாக இறைவன் நட்பு விளங்கு கிறது. தனக்கு நட்பினனாய் அமைந்த மிகச் சாதாரண மனித னுக்கே மனிதன் விரைந்தோடுதலைக் காணுகிறபோது இறைவன் தன் நண்பனை மிக எளிதாகக் கருதுவானா? அதனால் சரியான சூழலில் விரைவாகக் காரியம் நிகழ்கிறது.

தொடியுலா மென்கை மடமாதர்பால் தூது சென்றது :

சுந்தரர் வரலாற்றில் அவரொடு தொடர்புகொண்ட மகளிர் மூவர். அவருள் சிவாச்சாரியாரின் மகள் அவரையே நினைந்து இறையடி அடைந்தார். இரண்டாமவர் பரவையார்; மூன்றாமவர் சங்கிலியார். இவ்விருவருள் இறைவன் தூதுசென்றது பரவையா ரிடம்தான். ஆகவே மடமாதர் எனப் பொதுநிலையில் குறிக்கப் பெறினும் பரவையாரையே குறிக்கும். இந்நிகழ்ச்சி வரலாற்றில் விரிவாக உள்ளது.

முதலில் சுந்தரர் பாடலிலுள்ள அகச்சான்றுகளைக் காண்போம்.

''நாதனை நாதமிகுத்(து) ஓசைய தானவனை
ஞானவி ளக்கொளியாம் ஊனுயி ரைப்பயிரை
மாதனை மேதகுதன் பத்தர்ம னத்திறையும்
பற்றுவி டாதவனைக் குற்றமால் கொள்கையனைத்

தூதனை யென்றனையாள் தோழனை நாயகனைத்
  தாழ்மக ரக்குழையுந் தோடும்அ ணிந்ததிருக்
காதனை நாயடியே னெய்துவ தென்றுகொலோ
  கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.'' 27

என்ற பாடலில் தூதனை என்று இறைவனைக் குறிப்பிடும் தொடர் ஒன்று குறிப்பாக அப்பொருள் தரும்வகையில் அமைந்துள்ளது.

''தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
  தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
  நாதனை......'' 28

என்ற பாடலடிகளும்,

''தோழனுமாய் யான்செய்யும் துரிசுகளுக் குடனாகி
  மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை'' 29

என்ற பாடலடிகளும் இறைவன் தூதனாகிச் சென்றது பரவையா ரிடத்தில்தான் என்று கருத வாய்ப்பளிக்கின்றன.

வள்ளலாரும்,

''பேருரும் பரவைமனப் பிணக்கறஎம் பெருமானை
  ஊருரும் பலபுகல ஓரிரவில் தூதன்எனத்
  தேருரும் திருவாரூர்த் தெருவுதொறும் நடப்பித்தாய்
  ஆரூர நின்பெருமை அயன்மாலும் அளப்பரிதே.'' 30

எனும் பாடலால் பரவையாரிடம் தூதுசென்றதை விளக்கக் காணலாம்.

வள்ளலாரின் இன்னொரு பாடலைக்கூட வை. இரத்தினசபாபதி அவர்கள் மேற்கோளாகக் காட்டுகிறார்கள்.

''எழில்-பரவை இசைய ஆரூர்மருங்கில் அருள்கொண்டு
  இராமுழுதும் உலவும் பதம்'' 31 என்பதது.

திருக்களிற்றுப்படியாரில் அந்நிகழ்ச்சி,

''மோகம் அறுத்திடில்நாம் முத்தி கொடுப்பதென
  ஆகமங்கள் சொன்ன அவர்தம்மைத் - தோகையர்பால்
  தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுகளை
  ஏதாகச் சொல்லுவேன் யான்?'' 32

எனும் பாடலில் அமைந்துவிளங்கக் காணலாம்.

''காதுகொண்டு கேட்குமவர்க் கின்ப வெள்ளம்
கரைபுரள மனங்கொண்டு களிக்கின் றோர்கட்
கேதுகொண்ட பாசவிருட் படலம் நீக்கி
யிணையிலருட் சுடரெங்கு மெறிப்ப வெற்பின்
மாதுகொண்ட பாகர்விருப் பாகத் தோன்றி
வாமதுர பாகப்பா மாலை மல்கத்
தூதுகொண்டு நடந்திளைத்த வடியிற் சாத்துஞ்
சுந்தரர்தஞ் சீர்த்தியினைத் துதித்தல் செய்வாம்.''

- மருதூர்ப்புராணம்.

''வெள்ளியங் கிரியை நீங்கி நாவலூர் மிளிரத் தோன்றி
யொள்ளிய தோகை பாகன் சாதனத் தோட்டிக் குள்ளாய்த்
தெள்ளிய பரவை யாழ்ந்து சங்கிலி சிமிழ்ப்புற் றாசு
தள்ளிய களிற்றின் பாதத் தாமரை தலைமேற் கொள்வாம்.''

- கருவூர்ப்புராணம்.

''அடிமை யானவர்க் கருளையும் தன்னையும் உயிரிற்
படியி லாவகை அளிப்பது பாருளோ ரறிய
வடிவின் மாண்டவ ளொருத்திதூ தெனவிறை வழங்க
நொடியின் மாலைசெய் வன்றொண்டர் அடிமலர் நுவல்வாம்.''

- திருவானைக்காப்புராணம்

''அரவக லல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் தன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானா
ளிரவினிற் றூது கொண்டோ னிணையடி முடிமேல் வைப்பாம்.''

- திருவிளையாடற்புராணம்.

''ஏனமாய் மாயோன் வேலை யிருநிலங் கீண்டுங் காணாத்
தேனவிழ் கமல மன்ன சேவடி படியிற் றோய
ஞானவார் குழலி பங்கி னாதனைத் தூது விட்ட
வானுலாம் பொழில்சூழ் நாவன் மன்னனை வணங்கல் செய்வாம்''

- சங்கரநாராயணர்கோயிற்புராணம்.

இந்த ஐந்து பாடல்களும் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் 'சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்' என்னும் நூலில்

தொகுத்துத் தரப்பெற்றுள்ளது. 33 அவர்க்குப் பெருநன்றியுடை யோம்.

சிவப்பிரகாசரே 'சிவஞான பாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ்' என்னும் நூலிலும் இச்செய்தியைக் குறிப்பிடுகிறார்.

''பைந்தா துகுக்கும் நறுங்கொன்றைப்
பனிமா மலரும் குழவியிளம்
பயில்வெண் மதியும் துளையெயிற்றுப்
பாம்பும் சுமக்கும் அன்றுநீ
செந்தா மரைச்சே வடிநோவத்
திரும்பித் திரும்பி யோரிரவில்
சேல்வென் றகன்ற அரிமதர்க்கண்
சிலைக்கூன் புருவத் தரளநகை
நந்தா விளக்கின் திருமனைக்கு
நாவல் நகரின் வன்தொண்டர்
நடத்த ஒருதூ தாளாகி
நடந்த உனக்கின் றடியோம்பால்
வந்தால் வருமோர் பழியுண்டோ
மதுரக் கனியே வருகவே
மயிலை வரையில் சிவஞான
மணியே வருக வருகவே.'' 34

என்ற பாடல் அது.

இவ்வாறு பலரும் புகழ்தற்குரிய ஒன்றாக அந்நிகழ்ச்சி விளங்கு கிறது. பரவையார் கணிகையர்குலத்தில் பிறந்து சுந்தரர் மனைவி யானதும், அவர் சங்கிலியாரை மணந்து திருவொற்றியூரிலிருந்து திருவாரூர்க்கு வந்தபோது பரவையார் ஏற்க மறுத்ததும், அப் பிணக்கைத் தீர்க்க இறைவன் ஆரூர்த்தெருவில் தூதாளாகி நடந்த தும் வரலாற்றில் அறிந்ததே. இந்நிகழ்ச்சியை ஏற்பாரும் உண்டு; மறுப்பாரும் உண்டு.

பரவையார் கணிகையர் குலத்தில் பிறந்தவர். அக்குலம் உருத்திர கணிகையர் குலம்.

''அவர்கள் சிறந்த ஒழுக்கம் காத்து, உயர்ந்த கடவுள் அன்பில் கருத்தைச் செலுத்திவந்தார்கள். அவர்கள் கடவுள் ஒருவரையே பதியாக மதித்து வாழ்ந்தனர். கடவுளையே பதியாகக் கொண்ட அவர்களை உலகத்தார் 'பதியிலார்' என்று அழைத்துவந்ததில் வியப்பில்லை'' 35 எனும் தண். கி. வேங்கடாசலம் அவர்களின் கருத்தின்வழி இழிகுலப் பண்பில்லாதவர் என்பது தெரிகிறது.

''உருத்திர கணிகைமார், சிவபெருமானையே பதியாகக்கொண்டு சிவப்பணி செய்ய உறுதிகொண்ட பெண்மணிகள். பண்டைநாளில் இவர்களுக்கு மரபுவளர்ச்சி கிடையாது. உலக வாழ்விற்குத் தகுதி யற்ற பெண்மணிகள் ஆண்டவனையே பதியாகக் கொண்டு அவன் பணிசெய்து பேறுபெற்றுவந்தார்கள். வேறு பதியின்மையால் அவர் பதியிலார் என்று அழைக்கப்பெற்றனர். பின்னர் மற்றுஞ் சிலரும் அவர்களோடு கலக்கலாயினர். அவருள் சிலர் உலகவின்பம் துய்த்துக்கொண்டு இறைபணி செய்ய எண்ணினர். இது தவறுதலா காது. ஒழுக்கத்தில் சிறந்த ஒருவனுடன் ஒருத்தி வாழும் இயற்கை யறம் அவர்களால் பேணப்பட்டது. அன்னார் இவ்வறம் பேணினமை யால் மரபுவளர்ச்சிக்கு இடம்தந்தது. பண்டைப் பதியிலார் என்ற பெயரே இடைக்காலத்திலும் இவர்கட்கு வரலாயிற்று. இச்சீரிய பதியிலார் குலத்தில் தோன்றியவரே பரவையார் என்னும் பாவை யார்'' 36 எனும் திரு. வி. க. அவர்களின் கருத்தையும் அவர் மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களும்,

''உருத்திர கணிகையர் என்பவர் உருத்திர மூர்த்தியாகிய சிவ பெருமானுக்குத் தொண்டுசெய்யும் பணிப்பெண்களாவர். அன்னோர் ஆதியில் தம் பெற்றோருக்கு வரத்தினால் உதித்து இறைவர் பணிக் கேயென விடுக்கப்பட்ட பெண்மணிகள் என்பர். இறைவர் பணி யையே தமது கடமையாகக்கொண்டு மக்கள் பணி செய்யக் கருதா மையின் அவர்கள் மணம் செய்துகொள்ளாமல் வாழ்ந்தவராதலின் 'பதியிலார்' எனப்பட்டார்கள். ஆதியில் அவர்கள் துறவுநிலையில் இருந்தனர் எனவும் பிற்றைக்காலத்தில் ஆடவரோடுகூடிவாழ்தலை மேற்கொண்டாரெனவுங் கூறுப. இவர்கள் விதிமுறையின்றி விரும் பியவாறு பல ஆண்மக்களோடு கூடி வாழ்க்கை நடத்தும் வேசையர்

போலாது உயர்குல மக்களுள் விரும்பிய ஒருவரைக் கணவராகக் கொண்டு திருக்கோயிலில் ஆடல்பாடல் புரிந்தோராவர்'' 37 எனும் கருத்தையே குறிப்பிடக் காணலாம்.

பிற்காலத்தில் இழிவழக்குகளை மேற்கொண்டு இழிவடைந்த குலமாக மாறினமையால் பரவையாரைக் குலத்தின் அடிப்படையில் தற்போது சிந்தித்துப் பார்த்தல் தவறான ஒன்றாகும். இடைக் காலம் வரையில் உயர்வாக இருந்த குலம் அது. அவ்வாறு காணு கையில் உயர்ந்த ஒருவனையே தலைவனாகக் கொண்டொழுகி னார். இத்தகு பரவையாரிடத்துக் காதல்கொண்டு வாழும் இவரைச் சிவப்பிரகாசர் ''மல்லலம் பரவை தன்கண் மாழ்குற அமிழ்த்தும்'' என்றே குறிப்பிடுகிறார். பரவையைப் பார்த்துச் சுந்தரர் அமிழ்ந் ததைப்

''பரவைபால் ஆரூரர்க்குத் தோன்றிய காதலால் அவர்தம் நிறை யும் குணமும் ஒருபுடை சாய்ந்து தளர்ந்துவிட்டன என்றாலும் மடக் கொடிபால் சென்ற தம் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு மேற்சென் றார். பரவையாரும் கோயிலுக்குள் புகுந்துவிட்டார். அருகுநின்ற வர்கள் பரவையாரை இன்னார் எனச் சுந்தரர்க்கு எடுத்துரைத்த னர். அம்மையாரும் சிவபக்தர்என அறிந்துகொண்டதும் சுந்தரர்க்கு மேலும் மேலும் காதல் கடல்போலக் கிளர்ந்து பரவுவதாயிற்று. அவர் பரவைமயமே ஆகிவிட்டார்'' 38 என்று தண். கி. வேங்கடா சலம் கூறுகிறார்.

''பேர்பரவை பெண்மையினில் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை அணிதிகழும் மணிமுறுவல் அரும்பரவை
சீர்பரவை ஆயினாள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை இடைப்பட்ட என்ஆசை எழுபரவை.'' 39

என்று சேக்கிழாரும் பரவையைத் திரும்பத்திரும்ப வருமாறு மயக்கி யுள்ளார். அது சுந்தரரின் மயக்கத்தையே குறிப்பிடுவது போன்றுள் ளது.

மேலோட்டமாக இவ்வாழ்வைக் காணுகையில் சிற்றின்பத்தில் அமிழ்ந்ததாகவே தெரியும். ஆனால் இது சிற்றின்பத்தாலும் பேரின்ப நினைவே சிறந்து விளங்கியது விளைவாலேயே தெளிவாகும்.

முதல்நிலை உலகியல்நிலை; இரண்டாவது ஆன்மிகநிலை. முதலில் உலகியல்நிலையைக் காண்போம். ஆனால் உலகியல்நிலையைக் குறிக்கும்போது இல்லறம் முத்தியடைதற்குத் தடையாகாது என்பதை விளக்க அமைந்தது இவ்வாழ்வு எனலாம். பெருந்துறவே இறையைஅடைய வழி என்று கொண்டிருந்த காலம்.துறவு தேவையில்லை; இல்லறத்திலிருந்தே - இன்பம் நுகர்ந்துகொண்டே இறைவனைச் சிந்தித்திருந்தால் இறைவனை அடைய முடியும் என்பதை உணர்த்துகிறது இவ்வாழ்வு.

''உலக வாழ்க்கையில் அமிழ்ந்துகிடக்கும் உயிரைப் பற்றறச் செய்யும் பொருட்டு ஊண் ஒழித்தல் வேண்டும் என்றும், விடியற் காலத்தில் குளிர்ந்த நீரில் மூழ்கவேண்டும் என்றும், சடை, மரவுரி முதலியன தரித்தல்வேண்டும் என்றும், வெயிற்காலத்தில் அனல் நடுவிலும் மழைக்காலத்தில் தண்ணீரிலும் பனிக்காலத்தில் வெளியிலும் நின்று தவம்புரியவேண்டும் என்றும் பல துறவுநூல்கள் கூறும். அவ்வாறு கடுமையாகத் தவம்புரியாது 'நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் என்றும் சிவன்தாள் நினை' என்றபடி எப்போதும் கடவுளை மறவாத அன்பினையே கடைப்பிடிக்கவேண்டும் என்பது சில பேரறிஞர் கொள்கை. ....சைவத்திருநெறித் தலைவர்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார், மேற்கூறிய இருவகையுள் இரண்டாவது வகையைச் சார்ந்த மக்கட்குத் தலைசிறந்த ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்'' 40 என்ற கா. சுப்பிரமணிய பிள்ளையவர்களின் கருத்தை இங்கு ஒப்புநோக்கவேண்டும். இது மக்களிடையே நம்பகத்தன்மையை உணர்த்துகிற சான்றாகிறது எனலாம்.

இனி, சிற்றின்பத்தையே பேரின்பமாக நுகர்ந்தார்கள் எனும் கருத்தைக் காண்போம்.

''தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாரும் கொடிமருங்குல் பரவையெனும் மெல்லியள்தன்
பொன்னாரும் முலைஓங்கல் புணர்குவடே சார்வாகப்
பன்னாளும் பயில்யோக பரம்பரையின் விரும்பினார்.'' 41

என்ற சேக்கிழாரின் பாடலில் சுந்தரர் சிற்றின்பத்திலும் பேரின்பமே கண்டார் என்பது கூறப்பெற்றுள்ளது,

''மலைத்தலை மீதிருந்து சிவயோகம் பயில்வார் சிவபெருமானை ஒன்றி நினைந்திருப்பர். பேரன்பர்போலத் தாம் பெற்ற சிற்றின்பத்தைப் பேரின்பமாக நுகரவல்ல மெய்யுணர்ச்சிசான்ற திருநாவலூரர் பரவையின் மார்பகத்தையே தமக்குரிய குன்றமாகவும், அவள் புணர்ப்பையே பலநாளும் பயில்கின்ற யோகமாகவும் கொண்டார் போலும். திருநாவுக்கரசர் முன்னிலையில் தமக்கு நேர்ந்த துன்பத்தைப் பேரின்பமாக நுகர்ந்தது போலத் திருநாவலூரர் தமக்கு நேர்ந்த சிற்றின்பத்தைப் பேரின்பமாகத் துய்த்தவர் என்று கூறுகிறார் கா. சு. பிள்ளை அவர்கள். சேக்கிழாரின் கருத்தையே அடிப்படையாகக் கொண்டு அவ்விளக்கம் எழுந்துள்ளது.

பட்டினத்தார் பாடலொன்றும்கூட அதற்குச் சான்றாக விளங்குகிறது.

''மலர்தலை யுலகத்துப் பற்பல மாக்கள்
மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ
மனையும் பிறவும் துறந்து நினைவருங்
காடும் மலையும் புக்குக் கோடையில்
கைம்மே னிமிர்த்துக் காலொன்று முடக்கி
யைவகை நெருப்பி னழுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளிலும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்துஞ்
சடையைப் புணர்ந்தும் தலையைப் பறித்தும்
உடையைத் துறந்தும் உண்ணா துழன்றும்
காயுங் கிழங்கும் காற்றுதிர் சருகும்
வாயும் நீரும் வந்தன வருந்தியும்
களரிலும் கல்லிலும் கண்படை கொண்டும்
தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவ
ரம்மை முத்தி யடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவு மொறுப்ப
ரீங்கிவை செய்யா தியாங்க ளெல்லாம்
....
மதியென மாசறு வதனம் விளங்க
புதுவிரை யலங்கல் குழன்மிசை பொலியும்
அஞ்சொன் மடந்தைய ராகந் தோய்ந்துஞ்

சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தி
னறுசுவை யடிசில் வறிதினி தருந்தா
தாடினர்க் கென்றும் வரையாது கொடுக்கும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசு நல்லன தொடையிற் சேர்த்தியு
மைந்து புலன்களு மார வார்ந்து
மைந்தரு மொக்கலு மகிழ மனமகிழ்ந்
திவ்வகை யிருந்தோ மாயினு மவ்வகை
மந்திர வெழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலி னந்த
முத்தியு மிழந்தில முதல்வ வத்திறம்'' 42

என்ற அப்பாடல் சுந்தரர் வாழ்வையும், வாழ்வின் வகைகளையும், அதன் விளைவுகளையும் தெள்ளத் தெளிவாகக் காட்டுவதாக அமைந்துள்ளது.

சுந்தரரும் பரவையாரும் இல்லறவின்பமே நுகர்ந்தாலும் சிந்தை சிவன்வயப்பட்டே இருந்ததால் பேரின்பமாம் தகுதிபெற் றிலங்கியது. இது சுந்தரரும் சங்கிலிநாச்சியாரும் இணைந்திருந்த வாழ்க்கைக்கும் பொருந்தும். இதைத்தான் சிவப்பிரகாசர்,

''செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற அமிழ்த்து மேனு
மல்லுநன் பகலு நீங்கா தவன்மகி ழடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப னம்பியா ரூரன் றானே.'' 43

எனும் பாடலில் விளக்கம் தருகிறார். இத்துணை விளக்கங்களைக் கொண்டதாக இப்பாடல் விளங்குகிறது.

''இத்துணை அலங்காரங்களுடன் இரு மனைவியரை மணந்து வாழ்ந்த சுந்தரர், சேரமான்பெருமாளுடன் இருக்கையில் திடீரென்று அனைத்தையும் ஒரே விநாடியில் துறந்துவிட்டுக் கயிலைக்குப் புறப் பட்டுவிட்டார். குடும்பம் நடத்துகையில் பரவை வருந்தாமல்இருக்க வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்ட சுந்தரர் ஒரே விநாடியில் அனைத்தையும் மறந்து புறப்பட்டுவிடுகிறார். இதுவே உள்ளத் துறவு என்று கூறப்பெறும்'' 44 என்கிறார் அ. ச. ஞானசம்பந்தம்

அவர்கள். உள்ளத் துறவுக்கான தகுதிகள் அவர்களுக்கு இருந்ததை முன்விளக்கங்கள் சான்று பகர்கின்றன.

''பெற்றசிற் றின்பமே பேரின்ப மாம்அங்கே
முற்ற வரும்பரி(சு) உந்தீபற
முளையாது மாயைஎன்(று) உந்தீபற'' 45

எனும் உந்தியாரின் கருத்தும்,

''ஏடுதரு மலர்க்குழலாள் முலைத்தலைக்கே இடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்தும்இறை ஞானம்
கூடுமவர் கூடரிய வீடும் கூடிக்
குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே யிருப்பர்'' 46

எனும் சித்தியார் பாடலின் கருத்தும் அதற்குக் காரணமாக அமைதலைக் காணவியலுகிறது. சுந்தரரும் பரவையாரும் ஒத்தநிலை மனமுடையாராகவே காணப்பெறுகின்றனர்.

அத்தகைய பரவையார்பால் இறைவன் தூதுசென்றான். பொதுநிலையில் கண்டால் சுந்தரர் தவறிழைத்ததாகவே தெரியும். தற்போது பரவையார் எத்தகைய சிவம்பெருகு சிந்தையார் என்பதனை உணர்ந்தோம்.

தூதுசென்றது எவ்வடிப்படையில் என்பதற்கு விளக்கம் தருகிறார் செங்கல்வராய பிள்ளை அவர்கள்.

''இறைவன் பரவையார்பால் நம்பிகளுக்காக ஒருமுறையன்றி இருமுறை தூதுசென்றது நம்பிகள்பால் வெம்புறு வேட்கை காணும்படி மேற்கொண்ட திருவிளையாட்டின் திறமும் பரவையாரது தவத்தின் திறமும் ஆகும்'' 47 என்பது அவர் கருத்து. வெம்புறு வேட்கை என்று குறிக்கப்பெறுவதையே சிவப்பிரகாசர் நனிவிருப்பு என்கிறார். மேலும் அத்தூது மிக எளிய சிற்றின்ப வேட்கைக்கான தூதன்று. அது இறைவன் போகியாயிருந்து உயிர்களுக்குப் போகத்தை அருளுவதற்காக நிகழ்ந்த ஒன்றாகும். இன்பம் துய்ப்பாரும் சிற்றின்ப வேட்கையினர் அல்லர். இறைவனும் அழிந்து போகும் அச்சிற்றின்ப வேட்கைக்குத் துணைபோவான் அல்லன். எனவே அவன் தூது போகநுகர்தற்கானது. இதனை,

''இறைவன் தாமே சிவமும் சக்தியுமாயிருந்து எல்லா உயிர்களுக்கும் போகங்களைக் கூட்டுவித்து நுகரச் செய்தருளுகின்றார். போகங்கள் நுகர்தற்குரிய உடலையும் கரணங்களையும் போகபண்டங்களையும் தமது சக்திகொண்டு தாமே கொடுத்தருளிப் போகநுகர்ச்சிக்கண்ணே துணையும் செய்கின்றார்.

''போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்'' (சித்தியார் 1 - 70) என்று உடன்பாட்டிலும்,

''வில்லாடன் மாரன் இருப்பவும் யோகம் விளைத்தவந்நாட்
புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே''

என இறைவர் செயலன்றி இல்லை என்று எதிர்மறையிலும் இவ்வுண்மைகள் பேசப்படுதல் காண்க'' 48 எனும் கருத்தும் விளக்குதல் காணமுடிகிறது.

பரவைபால் இத்தகு நிலையில் இறைவனே தூதாகச் சென்றது; இவ்வகையான காரணங்களைக் காட்டுதற்குக் காரணம் இறைவன் ஆரூரன் பாட்டில் நனிவிருப்பன் என்பது புலனாகிறது.

மிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டது :

திருக்கச்சூரில் அடியார் புடைசூழ இருந்த சுந்தரர் மிகவும் பசியால் துன்புற்றார். அடியார்களும் அவ்வாறே. அப்போது சிவபெருமானே அந்தண வடிவுகொண்டு வந்து திருக்கச்சூரில் வறுமையில்லாத மனைகள்தொறும் சென்று இரந்த உணவைக் கொணர்ந்து சுந்தரரிடம் அளித்தார். சுந்தரரும் அடியாரும் அவ்வுணவை உண்டு பசியாறினர் என்பதே அந்நிகழ்ச்சி. சிவபெருமானே சுந்தரருக்காகப் பிச்சையெடுத்துவந்து தந்தான். அந்த அளவிற்குச் சுந்தரர்மேல் நனிவிருப்பன்.

''முதுவா யோரி கதற முதுகாட்
டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்
மலையான் மகடன் மணவாளா
கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக்
கண்டா லடியார் கவலாரே

அதுவே யாமா றிதுவோ கச்சூ
ராலக் கோயி லம்மானே.'' 49

எனும் சுந்தரர் பாடலைப் பலிகொண்டதற்கான அகச்சான்றாகக் கொள்ளலாம்.

''இன்தொண்டர் பசியறக் கச்சூரில் மனைதொறும்
இரக்கநடை கொள்ளும் பதம்'' 50

என்று இராமலிங்க சுவாமிகளும் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

சுந்தரருக்காக இறைவன் மிடியிலா மனைகளாகத் தேடித்தேடிப் பிச்சையெடுத்தான் என்கிறார் சிவப்பிரகாசர். வறுமையுற்ற நிலையிலுள்ள இல்லங்களில் உணவு கிடைக்காது என்பதில்லை. இருப்பதையும் ஈந்து வறுமையில் செம்மையாக வாழ்பவர் நம் முன்னோர். அவ்வாறிருக்க மிடியிலாத மனைகளில் இரந்தது இனிய உணவும் மிகுதியான உணவும் பெறுதற்பொருட்டேயாகும். இரந்து பெறுவதிலும் தேடித்தேடிப் பெறுதலை இங்குக் காணமுடிகிது. வை. இரத்தின சபாபதி அவர்களோ, மிடி என்பது இல்லாமை. செல்வம் இருந்து 'கற்பு' எனும் பண்புடைமை இல்லாமையும் மிடியே என்கிறார். இரந்து பெறுகிறபோது அப்பாத்திரம் நிறைவடைய வேண்டுமெனில், தக்கவர் கையால் பெறவேண்டும். அப்போதுதான் தான் கொண்ட எண்ணம் நிறைவேறும் என்கிறார். அவர்,

''மணிமேகலை சிறந்த தவவொழுக்கினளேனும் ஆதிரை கையால் வாங்கி அட்சய பாத்திரத்தை நிறைத்ததுபோல, தக்கவர் கையால் வாங்கினால்தான் வளர்ந்து அனைவர் பசியையும் போக்கும். கற்பிற் சிறந்த சாரதா நங்கை அற்புடன் அளிக்கும் உறையூர் 'ஆதிரை இல்லம்' போன்று அருங்கற்பின் மடவார் நிறைந்திருப்பதால் மிடியில்லாத மனைகள் என்றார்'' 51 என்று குறிப்பிடுகிறார்.

மிடியிலாத பல மனைகளிலிருந்து உணவை இரந்து பெற்றார் என்பதால் ஒருவருக்காக அன்று; பலருக்காக அந்நிகழ்ச்சி நடைபெற்றது என்பதும் புலனாகிறது. சுந்தரர்பசியால், திருத்தொண்டர் கூட்டத்தினரின் பசியும் நீங்குகிறது. இங்கும் சுந்தரர் தனக்காக உணவைக் கேட்கவில்லை. தன்னொடு சூழவந்திருக்கின்ற அடியார்க்கே ஆகும். தன்னலத்தினும் பொதுநலமே மேலோங்கியிருக்கிறது.

இங்குக் குறிப்பிடப்பெறும் மூன்று செய்திகளும் நடந்துழன்ற செய்திகளாகவே அமைந்துள்ளன. சிவபெருமான் முதலாவதாக, தடுத்தாட்கொள்வதற்காகப் புத்தூரிலிருந்து திருவெண்ணெய்நல்லூருக்கும் திருவெண்ணெய்நல்லூரில் பொதுமன்றத்திலிருந்து அருட்டுறைக்கும் நடந்தவன்; நடந்தவன் என்பதைக்காட்டிலும் நடந்தலைந்தான் என்பதே பொருந்தும். இரண்டாவதாக, பரவையாரிடத்து நடந்தவன்;மூன்றாவது,பிச்சையெடுக்க நடந்தலைந்தவன். எவ்வகையாலாவது தடுத்தாளவேண்டுமே என ஓர் எதிர்பார்ப்பு; எவ்வகையாலாவது பரவையாரின் ஊடல் தீரவேண்டுமே என்ற எதிர்பார்ப்பு; எவ்வகையாலாவது சுந்தரர் முதலான அடியாரின் பசியறவேண்டுமே என்ற எதிர்பார்ப்பு எனப் பல்வகையில் நடை உளைச்சலோடு மன உளச்சலையும் காணமுடிகிறது.இவையெல்லாவற்றிலும் இறைவனுடைய மிகுந்த விருப்பம் சுந்தரரிடத்து இருந்தது தெளிவாகப் புலப்படுகிறது. இதையே சிவப்பிரகாசர் 'படியிலா நின்பாட்டில் நனிவிருப்பன்' என்று குறிப்பிடுகிறார்.

உறழ்ந்த கல்வியுடையான் ஒருவன் வேண்டும் என இருந்து தோழமை கொண்டான் :

சிவபெருமான் சுந்தரரைத் தோழமைகொண்டான்; காத்திருந்து தோழமை கொண்டான். ஒரு அடியார் மற்றொரு அடியாரைத் தோழமைகொண்ட நிலை வரலாற்றில் உண்டு. ஆனால் சிவபெருமானே அடியார் ஒருவரைத் தோழமைகொண்ட நிலை தமிழ் வரலாற்றில் - தமிழக வரலாற்றில் தவிர, பிற எவ்வரலாற்றிலும் காணவியலாத ஒன்று; புரட்சியான ஒன்று.

"நம்மை உமக்குத் தோழனாகத் தந்தோம்' என்று கூறிய இறைவன் செயல் சமய உலகிலேயே மிகவும் சிறப்புறுத்திப் பேசப்பெறுவதொன்று. தந்தைமகன் முறை, ஆண்டான்அடிமை முறை என்று இவ்வாறு உறவுமுறைகளை அமைத்து இறைவனுக்கு அடிமைபேணும் நிலைகளில் உலகில் யாண்டும் எச்சமயத்திலும் காணப்பெறாத ஒரு முறையே தோழமைமுறை எனக்கொள்வர். தான் அவன் என்ற வேற்றுமையற்ற விழுமிய பேரன்பே தோழமையில் அமைவது என்ற அடிப்படையில் இதனை மிக உயர்ந்த உறவு

எனக்கொண்டு சமய உலகம் போற்றுகிறது'' 52 என்ற கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

''தலைவன் - தலைவி அல்லது நாயக - நாயகி பாவத்திலே இறைவனை வணங்கிக் காதல்கொண்டு வாழ்வது என்ற முறையில் நம் நாட்டு ஆழ்வார்களும் நாயன்மார்களும் பிறரும் பாடினர்........ ஆனால் நமது திருநாவலூரராகிய சுந்தரரோ இன்னும் ஒருபடி மேலே சென்றுவிட்டார்.

ஆண்டவன் நமக்குத் தலைவன் என்னும் கொள்கையைச் சிறிது மாற்றிவிட்டார். புரட்சி என்று இதற்கும் பெயர்கொடுக்கலாம். ஆண்டவனை நாம் நம்மினும் உயர்ந்தநிலையில் வைத்துப் போற்றுவது சரியேயானாலும் உயர்வு, தாழ்வு என்ற படிகள் இருப்பதால் அவ்வன்புக்கு இடையே இடைவெளி இருப்பதுபோல் தோன்றுகிறது. அவ்விடைவெளியையுங்கூட இல்லாது ஒழித்து நெருங்கிய பிணைப்பை உண்டாக்கக் கருதினார் சுந்தரர். சுந்தரரின் இக் கருத்தே அவர்தம் பேச்சாகவும் செயலாகவும் வாழ்வாகவும் அமைத்துவிட்டு தோழமை அன்பு என்றால் உயர்வுதாழ்வு காணாத வகையில் ஓங்கி விளங்குவது'' 53 எனத் தண். கி வேங்கடாசலம் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்.

சுந்தரர்க்கும் சிவபெருமானுக்கும் உள்ள தொடர்பின் அடிப்படையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை ஆய்ந்தால் இறைவன் சுந்தரரை நட்பினனாகக் கொண்டான் என்பதினும் சுந்தரர் இறைவனை நட்பினனாகக் கொண்டார் என்பதே பொருந்தும் சுந்தரரின் மேனிலையாக்கத்திற்கு இறைவன் நட்பினன் எனும் நிலையில் செய்வன எல்லாம் செய்தான். இந்த நட்பினால் பெரிதும் பயன் உற்றவர் சுந்தரரே. அவ்வகையில் சுந்தரர் பயன்பெறவே நட்பு கொண்டவன் இறைவன் ஆவான். அத்தகைய புதுமையான நட்பு இது.

''இறையன்பு அல்லது பக்தி என்பது ஒன்றேயாயினும் பின் கூறப்படும் 11 வழிகளில் வெளிப்படுகிறது.

1. இறைவனின் கல்யாண குணங்களைப் பலபடியாகப் புகழ்தல்
2. அவனுடைய முருகியல் அழகில் ஈடுபடுதல்
3. அவனை வழிபடுவதில் இன்பம் காணல்

4. ஓயாது அவ்னை நினைத்தல்
5. தொண்டு செய்வதில் ஈடுபடுதல்
6. இறைவனை நண்பனாகவே நினைத்தல்
7. இறைவனைத் தந்தையாக நினைத்தல்
8. இறைவனைக் கணவனாகவே நினைத்தல்
9. இறைவனிடம் தன்னையே முழுவதுமாகத் தியாகம் செய்து விடல்
10. அவனிடமே முழுவதுமாக அமிழ்ந்துவிடல்
11. அவனைப் பிரியநேரிடின் அதற்காகப் பெரிதும் வருந்து தல்'' 54

என்பன அவை. அவ்வகையில் சுந்தரர் பக்தி 'இறைவனை நண்ப னாகவே நினைத்தல் எனும் நிலைக்குப் பொருந்தும். இருப்பினும் சிவபெருமானும் சுந்தரரும் கொண்ட நட்பு இன்னும் மேலான தாகவே உள்ளது. சுந்தரர் இறைவனை நண்பனாகக் கொண்டார் என்பதினும் இறைவன் சுந்தரரை நண்பனாகக் கொண்டார் என்பதே பெரிதும் பொருந்துவதால், கூறப்பெற்ற வகையினும் இந்நட்பு மேலானதே.

''ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி'' 55

''தூதனை என்றனைஆள் தோழனை'' 56

என்ற சுந்தரர் பாடல்கள் இறைவன் சுந்தரரின் நண்பன் என்பதற்கு அகச்சான்றுகளாகின்றன.

''ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் என்றுமுன் நீ சொன்னபெருஞ் சொற்பொருளை'' 57

என்றும்,

''பரம்பரமாம் துரியமெனும் பதத்திருந்த பரம்பொருளை
உரம்பெறத்தோ ழமைகொண்ட உன்பெருமை தனைமதித்து'' 58

என்றும் ஆளுடைய நம்பிகள் அருள்மாலையில் வள்ளலாரும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடல்களில் இறைவன் தானே தோழனாகச் சுந்தரரைக் கொண்டான் என்பதற்குப் போதுமானதாகச் சான்று இல்லை. ஆனால்,

''தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை'' 59

என்ற அவரின் பாடல் இறைவனே சுந்தரரை நண்பனாகக் கொண்டான் என்பதற்குப் பொருத்தமான சான்றாக உள்ளது. இப் பாடலடியே சுந்தரர் தேவாரத்தில் இவ்வகை நட்பிற்கான இன்றி யமையாத சான்று.

இக்கருத்தையே சேக்கிழார் சிவபெருமான் கூற்றாகக் கூறி யுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. ''தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்'' 60 என்றே கூறுகிறார். இறைவன் தம்மையே தோழனாகத் தத்துள்ளான் என்பதற்கு முன்னைய பாடலடியே ஆதாரமாக இருந்திருக்கும். இக்கருத்தைத் தெளிவாக அறிந்தவர் சிவப்பிரகாசர். அதனால்தான்,

''துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா! நினைத்தோ ழமைகொண்டான்''

என்றே குறிப்பிடுகிறார். இறைவனே சுந்தரரைத் தோழமை கொண்டான் என்றுமட்டும் கூறியிருந்தால் சேக்கிழார் பார்வை யொடு இவர் பார்வையும் ஒத்துப்போயிருக்கும். ஆனால் சிவப்பிர காசர் சேக்கிழாரிலிருந்தும் வேறுபடுகிறார்; வேறொரு வகையிலும் அந்நிகழ்ச்சியை மேம்படுத்துகிறார்.

''உறழ்ந்த கல்வி உடையானாம்
ஒருவன் வேண்டும் எனஇருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா! நினைத்தோ ழமைகொண்டான்''

என்று இன்னொரு கோணத்தையும் காட்டுகிறார்.

செல்வம் உடைய ஒருவன் அளகாபதியான்; குபேரன். உலகி லேயே அவன் செல்வத்திற்கு இணையாக வேறொருவர் செல் வத்தைக் கூற இயலாது. அத்தகைய குபேரனைத் தனக்குத் தோழனாகக் கொண்டான் இறைவன். அதுபோலவே கல்வியிற் சிறந்தான் ஒருவனைத் தோழமைகொள்ள எண்ணுகிறார். செல்வ முடைய குபேரன் கிடைத்ததுபோலக் கல்வியுடையான் ஒருவன்

எளிதில் கிடைக்கப்பெறவில்லை. பல காலங்கள் காத்திருந்தும் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. சுந்தரர் பூவுலகத்தில் அவதரித்து வளர்ந்தபோது அவர் எண்ணம் நிறைவேறிற்று. அத்தகைய தோழமை காத்திருந்தபின்தான் கிடைத்தது.

சுந்தரர் இறைவனைத் தோழமைகொண்டார் என்பதே சிறப்பு; இறைவனே சுந்தரரைத் தோழமைகொண்டான் என்பது அதனினும் பெருஞ்சிறப்பு; இறைவன் காத்திருந்து காத்திருந்து உரிய சுந்தரர் வந்தபோது, அவரைத் தோழமை கொண்டான் என்பது எல்லாவற்றினும் மிகப் பெருஞ்சிறப்பு வாய்ந்தது. அந்நிலையே சுந்தரர் பெருமையை ஏற்றமுற உரைப்பது. இதையே சிவப்பிரகாசர், 'கல்வியுடையான் ஒருவன் வேண்டும் எனஇருந்து தோழமை கொண்டான்' என்கிறார்.

சுந்தரரைக் கல்வியுடையான் என்று குறிக்காமல் உறழ்ந்த கல்வியுடையான் என்று குறிப்பிடுகிறார் சிவப்பிரகாசர். இங்கு உறழ்ந்த கல்வி எனப்பெறுவது யாது எனக் காணல்வேண்டும். கொ. இராமலிங்கத் தம்பிரான் அவர்களும், சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகளும், பு. சி. புன்னைவனநாத முதலியார் அவர்களும் உறழ்ந்த கல்வி என்பதற்கு 'இறைவனையொத்த கல்விச்செல்வம் என்று குறிப்பிடுகிறனர். 61 உறழ்ச்சியை ஒப்புமைப் பொருளாகவே கொள்கின்றனர். ஒப்புமையை இறைவனோடு இணைத்துக்காண்கின்றனர். 'சுந்தரர் ஓர் ஆய்வு' என்னும் நூலில் வை. இரத்தினசபாபதி அவர்கள் 'கல்விக்கு உற்ற தோழன்' என்று மட்டுமே குறிப்பிடுகிறார். 62 முன்கூறிய அவ்வுரையாசிரியர்கள் அவ்வொப்புமையைச் செல்வத்திற்கு ஒப்பிட்டும் கூறுகின்றனர்.

ஆனால் நால்வர் நான்மணிமாலை உரையில் வை. இரத்தின சபாபதி அவர்கள்,

''நம்பியாரூரர் கல்வி உறழ்ந்த கல்வி எனப்பெற்றது. உறழ்ந்த கல்வி என்பதற்கு ஒத்த கல்வி என்ற உரை பொருந்தாது'' 63 என்று கூறி வேறு விளக்கமும் தருகிறார். உறழ்ச்சி என்பது ஒப்பு என்பதினும் முரண் என்பதே பொருந்துவது. உறழ்ந்த கல்வி என்பது செல்வத்திற்கு மாறுபட்ட கல்வி என்பது மரபுவழியாகக் கூறப்பெறுகின்ற உரை. இலக்கணப் புலவர் ஆ. சிவலிங்கனார்

அவர்களோடு உசாவியபோது, உறழ்ச்சி என்பது செல்வத்தோடு உறழ்ந்த கல்வி என்பதே பொருந்தும் என விளக்கம் கூறினார். இறைவனோடு கல்வியை ஒப்பிட்டுக் காணல், முரணிக்காணல் ஆகிய இரண்டும் பொருந்தாதன என்று கூறினார். 64 தீயால், கள்வரால் எவ்வகையிலும் அழிக்கமுடியாத செல்வம் கல்விச்செல்வம். அவ்வகையில் இக்கல்வி உறழ்ந்த கல்வி என்பதே.

வை. இரத்தினசபாபதி அவர்கள்,

''உறழ்ந்த கல்வி என்பது உலகியற் கல்விக்கு மாறுபட்ட கல்வி. கல்லூரிக்கல்வி உயர்நிலைப்பள்ளியில் கொடுக்கப்பெற்ற கல்விக்கு உறழ்ந்த கல்வி அல்ல; உள்ளடக்கிய கல்வி. எதிர்த்த கல்வியல்ல; இணைந்த கல்வி. இவையெல்லாம் கலையறிவு. கலையறிவும் காணாத ஓர் அறிவு உண்டு. அது கலையறிவுக்கு மாறுபட்டது. இதனைக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்'' என்கிறார். மேலும் உயராய்வுமையம் ஓராண்டு நிறைவின்போது மயிலம் திருமடத்தில் நிகழ்ந்த கூட்டத்தில் உரையாற்றுகையில் அனுபவ ஞானம் என்று குறிப்பிட்டார். இறைவன் இறற்கையறிவினன்; முற்றறிவினன். ஆயினும் அவன் அனுபவ அறிவு உள்ளவனல்லன். இறைவனோடு ஒத்த உரிமைபெற்ற சுந்தரர் அவ்வகையினவாகிய அறிவுபெற்றவன். ஆனால் அதற்குமேலும் இறைவனோடு வேறுபட்ட நிலையில் அனுபவ அறிவும் சிறப்பாகப் பெற்றவன். அத்தகைய கல்வியே உறழ்ந்த கல்வி என்றார் அவர்.

''சிவப்பிரகாச சுவாமிகளின் நோக்கு யாது? தொடையியல்புக்கு மாறாக 'உறழ்ந்த' என்ற செஞ்சொல்லைப் பயன்படுத்துவானேன்? அறிவே வடிவமானவனுக்கு அறிவுத்தோழன் தேவையா? .... என்றும் மாறாத 'நல்ல இன்பு' அடைந்து வாழ்ந்த நம்பியாரூரர் வாழ்க்கை அனைத்து வாழ்க்கையினும் மேற்பட்ட வாழ்க்கை. அறிவும் செல்வமும் தனித்தனியே நின்றும் அளிக்கமுடியாத அற்புத வாழ்க்கை. இவ்வுலகில் அவ்வாழ்க்கையை வாழ்ந்துகாட்டியவர் நம்பியாரூரர். அவருக்கு அவ்வாழ்க்கையைத் தந்த கல்வி மற்றெல்லாக் கல்வியொடும் மாறுபட்ட கல்வியாமிற்று'' 65 என்று உரைவிளக்கமும் தந்துள்ளார். இவ்விளக்கமும் பொருத்தமானதே.

வெங்கரவின் பகுவாயினின்றும் உமிழ்வித்தான் :

திருப்புக்கொளியூரில் முதலை விழுங்கிய பிள்ளையை வரவழைத்தது முன்னர் வரலாற்றில் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. சுந்தரர் மேல் பாடப்பெற்ற பத்துப்பாடல்களில் மூன்று இடங்களில் (11,15, 19) இவ்வரலாறு கூறப்பெற்றுள்ளது.

சிவப்பிரகாசர் அவற்றுள் ஒருபாடலில் முதலையானது பிள்ளையைக் கக்கிய செய்தியைத் தத்துவ அடிப்படையில் (11) விளக்கியுள்ளார். இச்செயல் அரிய செயல் என்று பிற அருளாளர்களின் செயல்களோடு ஒப்பிட்டு மற்றுமொரு பாடலில் (19) காட்டப்பெற்றுள்ளது. சுந்தரரை விளிக்கின்றபோது இவ்வரலாற்றைப் பயன்படுத்திய இன்னுமொரு (15) பாடலும் உண்டு.

இவ்வரலாற்றுக்குச் சுந்தரர் தேவாரத்தில் அகச்சான்றுகள் உள்ளன.

''புரைக்காடு சோலைபுக் கொளியூர விநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லுகாலனையே'' 67

''பொழிலாருஞ் சோலைபுக் கொளியூரிற் குளத்திடை
இழியாக் குளித்தமாணி யெனைக்கிறி செய்ததே.'' 67

''புள்ளேறு சோலைபுக் கொளியூரிற் குளத்திடை
உள்ளாடப் புக்கமாணி யெனைக்கிறி செய்ததே.'' 63

ஆகிய தேவாரப் பாடல்களே அவ்வகச் சான்றுகளுக்கு உரியன ஆகும்.

''கதழெரி நேமி தூண்டிக் கராங்கவர் குரவ னீன்ற
மதலையை யழைத்த செங்கண் மாலென வருந்து றாம
லதிர்கட லமுதா மென்ன வருந்தமிழ்ப் பதிகம் பாடி
முதலைவாய்ப் பிள்ளை தந்த முதல்வனை வழுத்தல் செய்வாம்.''

- காசி காண்டம்.

''வறந்திடு பொய்கைமுன் நிரம்ப மற்றவண்
உறைந்திடு முதலைவந் துதிப்ப அன்னதால்
இறந்திடு மகன்வளர்ந்து எய்தப் பாடலொன்று
அறைந்திடு சுந்தரன் அடிகள் போற்றுவாம்.''

- கந்தபுராணம் - கட்வுள் வாழ்த்து, 22

இவ்விரு பாடல்களும் கா. சு. பிள்ளை அவர்களின் 'சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம்' என்னும் நூலில் குறிக்கப்பெற்றுள்ளன.

இவ்வரலாற்றை நம்பியாண்டார் நம்பி,

''கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக்கு
உயிரன்று புக்கொளியூர்'' 69

என்று குறிப்பிட்டுள்ளார்.

இராமலிங்க சுவாமிகளும் ஆளுடைய நம்பிகள் அருள்மாலையில்,

''இலைக்குளநீர் அழைத்து அதனில்
இடங்கர்உற அழைத்து அதன்வாய்த்
தலைக்குதலை மதலை உயிர்
தழைப்பஅழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற்
கலைக்கும்உறு கணக்கு உயர்பொன்
மலைக்கும்அணு நிலைக்கும்உறா
வன்தொண்டப் பெருந்தகையே.'' 70

என்று குறிப்பிடுகிறார். இவ்வகையில் பலரையும் இச்செயல் ஈர்த்துள்ளதாக விளங்குகிறது.

தத்துவக் கருத்து:

வளைந்த வில்போன்ற உடல் என்னும் குளத்தில் ஆணவ மலமாகிய முதலைவாயினின்றும் உயிர் எனும் அந்தணச் சிறுவனை, ஆதி திரோதாயி எனப்பெறும் கூற்றுவனால் நாதாந்தம் எனும் கரையில் கக்குமாறு செய்தவர் சுந்தரர் என்று குறிப்பிடுகிறார் சிவப்பிரகாசர். உடலுக்கு ஒப்புமையாக வளைந்த வில்லைக் கூறுவதோடு வளைந்த வானவில்லை ஒப்புமையாக்குவதும் உண்டு. தோன்றி மறையும் இயல்பால் அது ஒப்புமையாயிற்று.

உடல் - குளம்; மூலமலம் - முதலைவாய்; உயிர் - அந்தணச் சிறுவன்; ஆதிதிரோதாயி - கூற்றுவன்; நாதாந்தம் - கரை என்னும் உருவக அமைப்பில் அத்தத்துவம் கூறப்பெறுகிறது.

உடலைக் குளமாக உருவகப்படுத்துகிறார்.

''புண்ணாகிய சேறும் செந்நீராகிய புனலும் புழுக்களாகிய கொடிகளும் பிணிகளாகிய நீர்வாழ் உயிர்களும் முதலியன நிறைந்தது'' 71

ஆகையால் அது குளமாக உருவகிக்கப்பட்டது என்கிறார் அய்யன் பெருமாள் கோனார்.

''எலும்பு, புண், புண்ணீர், மூளை, புழு, மலம், பிணி முதலியன அளவிலவாக அவையெலாம் நிரம்பும் ஆழமும் அந்தக்கரண புறக் கரணங்கள் முதலிய சலசரம் முதலிய ஆர்ந்தது'' 72 என விளக்கு பவர் பு. சி. புன்னைவனநாத முதலியார். ஈசானிய மடம் இராம லிங்க சுவாமிகளின் கருத்தும் அதுவே. 73

''குளத்திற் சேறும் புனலும் கொடியும் நீர்வாழ் உயிர்களும் இருத்தல்போன்று புண்ணும் இரத்தமும் பலவகை நீரும் பிணியும் புழுவும் இருத்தலால் உடலைக் குளம் ஆக்கினார்.

குளம் போன்ற இடத்திலன்றி முதலை வெளிப்படாது. ஆதலி னால் உயிர் உடலைக் கொண்ட காலத்தில்தான் ஆணவம் ஒருசிறி தாயினும் வெளிப்படும் ஆதலின் உடலைக் குளம் என்றார்'' 74 என மேலும் வை. இரத்தின சபாபதி அவர்கள் விளக்குகிறார்.

இதையே பட்டினத்தடிகளும்,

''......... ... . தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
யூறு முதிரப் புனலோ கூறுசெய்
திரையிடை நிற்கு மெலும்போ வெலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்
துள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின்
றூரும் புழுவி னொழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் இவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ வுடம்பிற்குட்
பிரியா தொறுக்கும் பிணியோ'' 75

என்று பாடியுள்ளார்.

மூல மலமாகிய ஆணவம் இங்கு முதலையாகக் காட்டப்பெற் றுள்ளது. நெல்லிற்கு உமியும் நிகழ்செம்பினில் களிம்பும் போல - அவ்வப்பொருள் தோன்றிய அன்றே அவை உளவாறுபோல உடல் தோன்றிய அன்றே ஆணவம் உண்டு என்பர். அவ்வாறே குளம் உளதால் அங்கே பகுவாய் வெங்கரவும் உண்டு. அம்முதலையின்

இருவாய்கள் இங்குக் குறிக்கப்பெறுவதற்குக் காரணம் உண்டு. ஆணவம் உயிரினது அறிவை முழுமையாக விளங்க ஒட்டாது மறைத்து நிற்கும். அறிவு, இச்சை ஆகிய இருவகையினவற்றை மறைப்பதால் இரு வாய்களாகக் காட்டப்பெற்றுள்ளன. ''அறிவை விழுங்கி நிற்றலின் முதலையை ஒத்தது'' என்கிறார்கள் உரை யாசிரியர்கள் மூவர். 76

''ஆணவமலம் பொருளால் ஒன்று; செய்யும் வேலை இரண்டு. அதன் சக்திகள் பல. பொருளால் ஆணவம் ஒன்றாதலின் ஓர் கரவு என்றும் கொடிய சக்திகள் பலவும் கொண்டதாதலின் 'வெங்கரவு' என்றும் கூறினார். ஆன்மாக்களின் அறிவை மறைத்து யான் என்ற எண்ணத்தையும் ஆன்மாக்களின் இச்சைகளையும் செயல்களையும் கட்டுப்படுத்தி, எனது என்ற எண்ணத்தை உண்டாக்குவது ஆதலின் பிளவுபட்டு இரண்டாக நிற்கும் (பகுவாய்) ஒருவாய் என்றார். விழுங்குதல் ஒன்றன்றி விடுதல் அறியாத தன்மையை உடைய முதலையைப் பற்றுதல் ஒன்றன்றி விடுதல்செய்யா ஆணவத்தோடு ஒப்புமையாக்கினார்'' 77 என்னும் வை. இரத்தினசபாபதி அவர் களின் விளக்கமும் இங்குத் தெளிவாக்குகிறது.

திரோதாயியைக் கூற்றுவனாகக் காட்டுகிறார் சிவப்பிரகாசர். திரோதானம் என்பது மறைப்பு எனப்படும். ஆணவமலத்தைப்போல இதுவும் அறிவை மறைத்தல் ஒப்புமையால் மலமெனவும் கூறுவர். ஆனால் ஏனைய மலங்களோடு ஒன்றாக இது கருதுவதற்கு உரிய ஒன்றன்று. ஏனைய மலங்கள் உயிர்க்கு எப்போதும் இடர்களைச் செய்வன. இது மலம் பக்குவம் பெறும்வரை மறைத்தலைச் செய் யும். பக்குவம் பெற்றதும் இறைதிருவடியில் சேர்ப்பிக்கும். உயிர் வினைப்பயன்களை நுகரும்வரையிலும் அதனுள் அழுந்துமாறு செய்தலையே மறைத்தலைச் செய்தல் என்கின்றனர். அவ்வகையில் காலன் உயிர்களைப் பிறவிதொறும் மறைத்தலைச் செய்வதால் ஒப்புமையாயிற்று.

''திரோதானம்-மறைப்பு; உயிர் துய்த்துத் தொலைக்கவேண்டிய வினைப்பயன்களை நுகருங்கால் அந்நுகர்விற்கேதுவாகியது பொருள்களின் நன்மைதீமைகளை அறியவொட்டாது மறைக்கும் ஆற்றல்'' 78 ஆகும்.

''ஆதி திரோதாயி என்னும் வெந்திறற் கூற்று. ஆதி திரோதாயி என்பது ஒரு சக்தி. இது தொடக்க காலந்தொட்டே உயிர்களை ஆணவத்திலிருந்து வெளியேற்றவேண்டும் என்ற அருள் உள்ளம் கொண்டு உயிர்களிடத்திலேயே அதுவும் ஒன்றியிருக்கிறது. இதை அருள் என்று வழங்குவர். இது வேறொரு வேலையையும் செய்கிறது. ஆணவத்தை வெளிப்படுத்தி அதன் சக்திகளை அழிக்க வேண்டும் ஆகையால் உயிர்களை இருவினை, இன்ப துன்பம், பிறப்பு இறப்பு, புண்ணிய பாவங்களில் ஈடுபடுத்தி இயங்கவைக் கிறது. இது ஒரு மலம்போல நின்று ஆன்மாக்களின் குற்றங்களை வெளிப்படுத்துவதால் மறைந்துநின்றும் மறைத்தும் காரியங்கள் செய்வதால் 'திரோதாயி' என்ற பெயரோடு மலமெனக் குறிப்பிட் டார்'' 79 என்கிறார் வை. இரத்தினசபாபதி அவர்கள். இவ் வகையில் அந்நிகழ்ச்சியைத் தத்துவ அடிப்படையில் சிவப்பிரகாசர் காணும்திறன் இப்பாடல்மூலம் வெளிப்படுகிறது.

யாது நம்பி அரிது?

சமய குரவர் அருட்செயல்களாகிய அரிய செயல்களை ஒப்பிட்டுப் பாராட்டும்வகையில் நால்வர் பற்றிய பாடல்களில் ஒவ்வொருவரை யும் பற்றி ஒவ்வொரு பாடல் இந்நூலில் காணப்பெறுகிறது. சிவ நேசச் செல்வர் வணிகக் குலமகனாரின் மகள் பூம்பாவையின் எலும்பைத் திருஞானசம்பந்தர் மீளவும் பெண்ணாக்கிய செயலும் சொல்லின் மன்னர் திருநாவுக்கரசர் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடலில் மிதந்த செயலும் சுந்தரர் திருப்புக்கொளியூரில் முதலை விழுங்கிய பிள்ளையை மீட்டுத்தந்த செயலும் ஆகிய மூன்று வேறு செயல்கள் இங்கு ஒப்பிடப்பெற்றுள்ளன.

திருநாவுக்கரசர் பற்றிய பாடலில் அருகக்கடல் கடந்ததோ? பெருகக் கடல்கடந்ததோ? யாது அரிது என வினவி விடையளித் ததை முன்னர்க் கண்டோம். அங்குத் திருநாவுக்கரசரின் அரிய செயல்களே ஒன்றோடொன்று சீர்தூக்கிக் காணப்பெற்றது. ஆனால் இங்கு மூவரின் தனித்தனி அருட்செயல்கள் ஒப்பிடப்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண் ணாக்கினார். சொல்லின்மன்னர் திருநாவுக்கரசர் கல்லைத் தெப்ப

மாகக்கொண்டு மிதந்தார். சுந்தரர் முதலையைக் கக்குமாறு செய்து மீட்டருளினார். இவ்வகையான ஒப்பீட்டுப் பாடலில் வினாவுக்கான விடையை நுட்பமாகச் சிவப்பிரகாச சுவாமிகள் அமைத்திருப்பார் என்பது !முன்னரே காணப்பெற்ற ஒன்று. அதை இப்பாடலிலும் பொருத்தலாம்.

திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுகையில் போதமுண்ட பிள்ளை என்று அடைகொடுத்துச் சிறப்பித்துள்ளது இங்கு நுட்பமானது. அவ்வாறே திருநாவுக்கரசரைச் சொல்லின்மன்னர் என்று குறிப்பிடுவதும் ஆகும். ஒரு செயல் செய்யப்பெறுவதற்கு செய்பவரின் ஆற்றலை அறிதல்வேண்டும். எலும்பைப் பெண்ணாக ஆக்கியவர் ஞானசம்பந்தர். அவர் யார்? போதம் உண்ட பிள்ளை (மகன்மை) - அதுமட்டுமா ஞானப்பால் உண்ட பிள்ளை. எனவே அவரால் செய்ய இயலும் அச்செயல். அதுமட்டுமல்ல; அச்செயல் அவர்க்கு இவ்வாற்றலால் எளிமையானதும் ஆகும். மேலும் அவர் செயலாற்ற ஒரு அடிப்படைப்பொருளும் இருந்தது. பூம்பாவையின் எலும்பு இருந்தது. அந்த எலும்பையே மீளவும் படைத்தார். இருந்த ஒன்றையே இருக்குமாறு படைத்தார். இவ்வகையிலும் இச்செயல் எளிமையானதே. போதம் உண்ட பிள்ளை அவர்; அவர் செய்ததோ இருந்த எலும்பையே பெண்ணாக்கினார் என்ற இருவகையிலும் அவரின் செயல் அளவிடப்பெறுகிறது.

இரண்டாமவர் யார்? சொல்லின்மன்னர்! அவர் சொல்லும் சொல் ஒவ்வொன்றும் செயல்படும் ஆற்றல்மிக்கது. மந்திர மொழிகளே அவை. ஆகையால் அவர் தம்வாயால் எதுகூறினும் நிகழும். அவ்வகையில் 'கல் துணையாவது' என்றார். கல் தெப்பமாகித் துணையானது. சொல்லின் மன்னராகையால் அவரால் இயலும் எளிய செயலே இது. அதுமட்டுமா? இல்லை. பெண்ணாக்குதற்கு எலும்பு ஆதாரமானாற்போல இவருக்கும் ஒரு ஆதாரம் கிடைத்திருந்தது. அது அவரைக் கட்டியிறுக்கிய கல்லே. இருந்த கல்லையே மிதக்கும் தெப்பமாக மாற்றினார். இருந்த ஒன்றையே இன்னொன்றாக மாற்றினார். ஆகையால் அவ்விருவகையிலும் எளிமையானதே.

ஆனால் சுந்தரர் செயல் எத்தகையது எனக் காணப்பெறல் வேண்டும். போதமுண்டவரும் அல்லர்; சொல்லின் மன்னரும் அல்லர். இவர் தடுத்தாட்கொள்ளப்பெற்ற தம்பிரான்தோழர். அவ்

வவர்களுக்கு எலும்பும் கல்லும் ஒருவகையில் ஆதாரமாகக் கிடைத்தது. இவர்க்கு எதுவும் இல்லை. குளம் இருந்த இடத்தைத்தான் காட்டினார்கள். நீரும் இல்லை; முதலையும் இல்லை. ஆனால் குளத்தை உருவாக்கி, நீர்நிறைத்து, முதலையை வரவழைத்து, பொருள்கள் உட்செல்லுதற்கு மட்டுமே திறக்கும் வாயைக் கக்குவதற்காகத் திறக்கச்செய்து பிள்ளையை மீட்டருளினார். இவ்வகையில் முன்னிரு செயல்களினும் பிள்ளையை முதலையிடமிருந்து மீட்ட செயலே அரிய செயல் என்பதை நுட்பமாக விளக்குகிறார் சிவப்பிரகாசர்.

''நம்பியாரூரர் செயல் இவ்விரண்டுக்கும் மாறானது. மடுவைத்தான் காட்டினார்கள். தண்ணீர் இல்லை; முதலை இல்லை. இவ்விரண்டும் இருந்தாலும், முதலையே மனம்வந்து உமிழ முற்பட்டாலும் அது விழுங்கிய பொருளை உருச்சிதையாமலோ அல்லது உடனேயே உமிழவோ முதலையால் இயல்பிலேயே முடியாத காரியங்கள். முதலை வாயை மிக வேகமாக மூடிக்கொள்ளும். வாயை மூடுதற்குரிய தசைநார்கள் மிகமிக வலிமையானவை. ஆனால் அதற்கு வாயைத் திறப்பதற்குரிய தசைநார்கள் மிகமிக மென்மையானவை. எனவே முதலையே முயன்றாலும் வாயைத் திறப்பது எளிதில் நடப்பது அன்று.

எனவே மடுவில் தண்ணீர் வருதல் வேண்டும். விழுங்கிய முதலையே வரவேண்டும். அது இயல்புக்கு மாறாகக் கக்கவேண்டும். வெளிவரும் பிள்ளையோ எதிர்வீட்டுப் பையனைப் போன்ற ஆண்டுவளர்ச்சியும் உடல்வளர்ச்சியும் பெற்று உபநயனத்திற்கு ஏற்ற முறையில் வரவேண்டும். இவ்வளவையும் சுவாமிகளின் ஒரு திருப்பாடலே செய்தது'' 80 எனும் வை. இரத்தினசபாபதி அவர்களின் விளக்கமும் குறிப்பிடத்தக்கது.

இன்னொரு வகையிலும் இச்செயலைக் காணலாம். பூம்பாவை எனும் பெண்ணின் குடும்பம் திருஞானசம்பந்தரிடத்தில் பெரிதும் அன்புகொண்டிருந்த ஒன்று. அப்பெண்ணைச் சிவநேசர் திருஞானசம்பந்தருக்கு மணமுடிக்கவே எண்ணியிருந்தார். அவ்வகையில் அன்பு - பக்தி - அடியவர் எனும் தொடர்பு அவர்களோடு திருஞானசம்பந்தர்க்கு உள்ளது. மேலும் தன்னையே தலைவனாகக் கருதிய -

தன்னை நம்பி வாழ்கின்ற அவர்களுக்கு ஏற்பட்ட இடர்களைக் களைதல் திருஞானசம்பந்தர்க்குக் கடமையாகிறது. தன்மீது அன்பு கொண்டவர்கள் என்ற முறையில் காப்பாற்றுதல் கடமை என்ற இரண்டுநிலையில் அமைந்துள்ளது.

அதுபோன்றே திருநாவுக்கரசர் கல்லைத் தெப்பமாக்கியதும் ஆகும். முதலில் இச்செயல் தன்னைக் காத்துக்கொள்ள நிகழ்ந்தது. தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தோடு காலத் தேவையாகவும் விளங்கியது. மக்கள் நம்பிக்கையைச் சைவசமயத் திற்கு ஈர்க்கவேண்டிய அவசியமாகும். சமயக் கடமையாகவும் ஆகியது. ஆனால் சுந்தரர்செயல் அவ்வகையினதன்று. முதலை விழுங்கிய பிள்ளையை மீட்டுத் தருதற்கு திருஞானசம்பந்தரைப் போல - திருநாவுக்கரசரைப்போல - சுந்தரர்க்கு உறவுநிலையிலும் தொடர்பு இல்லை; சமயக்கிளர்ச்சிக் காலத்திற்குச் சற்றுப் பிற்பட் டவராகையால் கடமையாகக் கூறவேண்டிய நிலையில்லை; காலத் தேவையுமில்லை. முன்னிருவர் செயல்களில் செய்தார்க்கும் செய லுக்கும் ஏதோ ஒருவகையில் தொடர்பிருப்பதால் முழுமையாகப் பொதுநலத்துள் அடக்கவியலாது. ஆனால் சுந்தரர் செயலோ முழுமையும் பொதுநல நோக்கில் அமைந்தது. அவ்வகையிலும் அரிய செயலாக அமைந்தது. இச்செயலை அன்பு என்ற நிலையி லிருந்து அருள் என்றநிலைக்கு உயர்த்திக் காணவியலும். இவற்றை யெல்லாம் கருத்தில் கொண்ட சிவப்பிரகாசர் சுந்தரரை நோக்கி 'நின்செயலினும் யாது நம்பி அரிது?' என வினவுவதாக நுட்பமாக அமைத்துள்ளார்.

கோக்கலிக்காமன் வயிற்றிடைக் குத்திக்கொண்டது ஏதுக்கு ?

சுந்தரர் சிவபெருமானைத் தூதாளாக்கி நடக்கவைத்த செயலை அறிந்த கலிக்காம நாயனார் வெறுக்கிறார்; சினக்கவும்செய்கிறார். சிவனடியார்களை வழிபடும் நெறியை மேற்கொண்டவரே ஆயினும் சுந்தரரின் இச்செயல் அவர்க்கு ஏற்புடையதாக இல்லை. இறை யடியாராயினும் தவறுசெய்தால் அத்தவற்றைச் சரியென ஏற்றுக் கொள்ளல் கூடாது என்ற மனத்திண்மை உடையவர் அவர். அவ் வகையில் சிவபெருமானையே சுந்தரர் இழிவுபடுத்திவிட்டதாகக் கருதி மனங்கலங்கிச் சினம் மேம்பட்டுநின்றவர்.

அதனாலேயே அவருக்கு வந்த சூலைநோய் சுந்தரரால் நீக்கப் பெறும் சூழலை இறைவனே கனவில் தோன்றி உரைத்தும் கூட மறுத்தவர். இறைவனே கூறினாலும் ஏற்றுக்கொள்ளாத வீரத் திண்மை. ஆயினும் இறைவனை எதிர்க்க இயலாமை; தன்வகையில் செய்ய இயலாமை ஆகிய நிலையில் தன் கைவாளால் வயிற்றில் குத்திக்கொண்டிறந்தார். சுந்தரர் அவரைக் காணச்சென்று, இறந்த வகையறிந்து, அவ்வாளால் தானும் உயிரை மாய்த்துக்கொள்ள முற்பட்டார். இறையருளால் வாளில் கை பட்ட உடனே அடியார் உயிர்பெறுகிறார். உண்மை உணருகிறார். தன்பொருட்டுச் சுந்தரர் தன் உயிரை மாய்த்துக்கொள்ளவிருந்ததை உணர்ந்து அவரொடு நட்பினராகிறார்.

இந்நிகழ்ச்சியை நுட்பமாகக் காட்டுகிறார் சிவப்பிரகாசர். இறைவனே சுந்தரரிடம் கொண்ட பேரன்பால் இச்செயலை ஏற்றுக் கொண்ட பிறகு கலிக்காமர் தன்னை மாய்த்துக்கொண்டது ஏன்? என வினவுகிறார். கலிக்காமர் ஒரு செயலைத் தன்நோக்கில் மட்டும் சிந்திக்கிறார்; செயல்செய்தவர் நோக்கிலோ செய்யவைத்தவர் நோக்கிலோ நோக்கவில்லை. அதனால்தான் இந்நிகழ்ச்சி அமைந்துவிட்டது.

''தன்வழிதான் சிறந்தது என்று அவர் கருதுவதில் தவறில்லை. மற்றவன்வழி தவறு என்று கூறினால்தான் தவறு நேரிடும். கலிக் காமரைப் பொறுத்தமட்டில் இத்தவற்றைச் செய்கிறார். சுந்தரர் செய்ததை அவர் ஏற்றுக்கொள்ளாமல் விட்டுவிடலாம். இறைவனே அதனை ஏற்றுக்கொள்ளும்போது இவர் அதனை எதிர்த்துப் போராடுவதில் பொருளில்லை. தான் ஏற்றுக்கொள்ளாததும் உலகில் இருக்க நியாயம் உண்டு என்ற கொள்கையை மறுப்பவர் கலிக் காமர்......... இறைவனையும் ஒதுக்கிவிடும் வீரம் ஒப்பற்றதாயினும் அதனடியில் அகங்காரம் மறைந்துநிற்றலால்தான் அவர் வயிற்றில் குத்திக்கொள்கின்றவரை இறைவன் விட்டுவிடுகிறான். அவர் வயிற்றைக் கிழித்துதான் அவருடைய அகந்தைக்கிழங்கை அகழ்ந்து எடுக்க வேண்டியதாயிற்று'' 81 எனும் அ. ச. ஞானசம்பந்தன் அவர்களின் கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

''வழிவழி வந்த பழவடிமை உரிமையிற் பெருமிதமுற்று அதனை உயிரினுஞ் சிறந்ததாகக்கொண்டு, நம்பிகளால் சூலைதீர்க்கப்

பெறுதலினும் உயிர்துறத்தல் நன்றென்று துணிந்து உயிர்துறந் தனர் கலிக்காமனார். இஃது அன்பின் உறைப்பினால் வந்த உயர் வாகிய இறுமாப்பு'' 82 என்ற செங்கல்வராய பிள்ளை அவர்களின் கருத்தும் மேற்கருத்தையே அரண்செய்கிறது.

''ஒன்று மானத்தைவிட்டு அவன் வந்து தீர்க்கட்டும் என்றிருக்க லாம். இறைவனே இவ்வாறு பணித்துவிட்டான் என்று சமாதான மும் கூறிக்கொள்ளலாம்.ஆனால் அவ்வாறுசெய்வது இந்த உயிரின் மேல் கொண்ட ஆசையால் செய்யப்பெறுவதேதவிர வேறு இல்லை. எனவே கலிக்காமர் தாம்கொண்ட கொள்கையை இறைவனுக்காகக் கூட விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை'' 83 என்பதுதான் கலிக் காமரை அவ்வாறு செய்யவைத்தது.

அவ்வாறு செய்ததற்கான காரணத்தை மேலும் கா.சு. பிள்ளை அவர்களும்,

''சிவபெருமானுக்கு மீளா அடிமைகள் ஆதலால் அவனை ஆண்டவனாகவே அவர்கள் கருதவேண்டும். அவனைத் தோழ னாகக் கருதுதற்கு உரிமைபெற்ற சுந்தரமூர்த்தி சுவாமி அவனை ஆண்டவன் எனக்கருதிப் பெருமைப்படுத்த வேண்டுமே யொழிய, தோழமைபாராட்டித் தூதுவிடுத்தல் கூடாது என்றும் அஃது ஆண்ட வனை இழிவுபடுத்தலாகும் என்றும் ஏயர்கோன் கருதினார்.

இறைவனே தூதுசெல்ல இசைந்தமையாற்படும் இழுக்கு யாதெனக் கருதவில்லை. இறைவன் பேரருளாளன் ஆதலின் அன்பர்க்கு எளிவந்து அருள்செய்வான் என்பது திண்மையாயினும் அவனது ஒப்பற்ற உயர்வினை அடியார் பாராட்டாதிருத்தல் தவறு என்பது கலிக்காமர் கருத்து'' 84 என்று குறிப்பிட்டுள்ளார்.

''குத்திக்கொண்டது உள்ளக்கிடக்கையை உணராது இச்செயல் சிவ அபராதம் என எண்ணியிருந்தமையாற் போலும்'' 85 என இராமலிங்க சுவாமிகளும், புன்னைவனநாத முதலியாரும் குறிப்பிடு கின்றனர்.

அவ்வகையில் வயிற்றிடைக் குத்திக்கொண்டது அன்பின் உறைப்பு, கொள்கைத்தீவிரம், அகந்தை என்றெல்லாம் கூறியிருப் பினும் அந்நிலையில் வேறென்ன செய்ய இயலும் என்பதையும் சிந்திக்கவேண்டும். அதைச் சி. கே. சு. அவர்களின்,

''சிவஅபராதத்தினைக் கண்டபோது அதுசெய்தானைக் கொல்லுதலும் அதுகூடாதபோது தாம் இறந்துபடுதலும் அல்லது அவ்விடம் விட்டு அகலுதலும் செய்க'' 86 என்ற குறிப்பொன்று உள்ளது. கலிக்காமர் இச்செயலைச் சிவ அபராதமாகக் காண்கிறார் என்பது தெளிவு. தெளிந்த, உறுதியான கொள்கையை மேற்கொண்டவர் ஆதலால் அவ்விடத்தைவிட்டு அகலார்; சிவபெருமானே அவர் கனவில் தோன்றி, சுந்தரர் அவரின் சூலைநோயை நீக்க வருகிறார் என்று கூறியதால் சிவபெருமான் ஆணைக்குக் கட்டுப்படவேண்டியிருக்கிறது. மேலும் அவரைக் கொல்லவும் இயலாது. கொன்றால் சிவனடியாரைக் கொன்ற பாவம் வந்துசேரும். சிவபெருமானது ஆணையையும் மீறக்கூடாது; சுந்தரரையும் கொல்ல முடியாது. இனிச் செய்ய இயலுவது ஒன்றே. அதாவது தாம் இறந்துபடுதலே ஆகும். ஆகவேதான் கலிக்காமர் வயிற்றில் வாளால் குத்திக் கொண்டு இறந்தார்.

இதைச் சிவப்பிரகாசர், 'செயலைச் செய்யுமாறு பணித்தவர் சுந்தரர்; செயலைச் செய்தவர் சிவபெருமான். சிவபெருமானே விரும்பி இச்செயலைச் செய்ததால் கலிக்காமர் குத்திக்கொள்ள வேண்டிய காரணம் என்ன?' என்பதாக வினவி, கலிக்காமரின் திறத்தையும், சிவபரம்பொருளிடத்திற்கொண்ட அன்புறைப்பையும் இவ்வழியாக வெளிப்படுத்தியுள்ளார்.

பெருமிழலைக் குறும்பர் எனும் பரமயோகி வந்தனை செய்கின்றான் :

இல்லறத்தில் இனிதாக வாழ்ந்த அப்பூதியடிகள், துறவு நிலையிலிருந்த திருநாவுக்கரசரை வணங்கி வழிபட்டுப் பெருவாழ்வு பெற்றார். அடியார்கள் வரலாற்றில் இந்நிகழ்ச்சி கூர்ந்து நுட்பமாகக் காணவேண்டிய ஒன்று. சிவப்பிரகாசர் பாடலில் அக்கூர்ந்த நுட்பம் தெளிவாகக் காணப்பெறுகிறது.

துறவு வாழ்க்கையில் உள்ள ஒருவர் இல்லறத்தார்க்கு உயர்ந்த வாழ்வுதருவது இயலுகின்ற ஒன்று; சமூகத்தில் காணுகின்ற ஒன்று; சமூகம் ஏற்றுக்கொள்கிற ஒன்று; சமூகம் அய்யப்படாத ஒன்று. துறவு ஒன்றினால்தான் இயலும் என்பதில்லை. இல்லறத்தில் இருப்பார் இறையன்பில் வழுவாதிருந்தாலும் இயலும் என்பதை

அறிவுறுத்துவதே பெருமிழலைக் குறும்பர் வரலாறு. இவர் துறவி இவரால் வணங்கப்பெற்றவர் இல்லறத்தார். அவ்வில்லறத்தாரா லேயே துறவிக்குப் பெருவாழ்வு கிட்டுகிறது. இவ்வரலாறு சமுதா யத்தில் இருந்த அய்யத்தைப் போக்குவதாக உள்ளது. சமய நம்பிக்கையை ஊட்டுவதாக அமைந்து சிறக்கிறது. அவ்வகையி லேயே எத்தனையோ வரலாறுகள் இருக்க, இவ்விரு வரலாறுகளும் சிவப்பிரகாசர் மனதில் தோய்ந்து பாடலாக மலர்வதைப் பார்க்க முடிகிறது.

இவ்வகையில் சுந்தரர் வாழ்க்கை முழுவதும் சிவப்பிரகாசர் உள்ளத்தில் தோய்ந்து அனுபவமாகிப் பாடல்களாகியுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. வை. இரத்தினசபாபதி, சுந்தரர், முதற்பகுதி, பக். 28
2. சேக்கிழார், பெரியபுராணம், திருமலைச்சிறப்பு, பா.எ. 25
3. ,, ,, மும்மையால், பா. எ. 60
4. தண். கி. வேங்கடாசலம், சுந்தரர், பக். 38,39
5. ,, ,, பக். 40
6. வி. எஸ். செங்கல்வராய பிள்ளை, சி.கே.சு. உரையில் திருத் தங்களும் குறிப்புகளும், பெரியபுராணம், ஆறாம் பகுதி, ப.457
7. வ. ஆ. தேவசேனாபதி (மொ. பெ. ஆ.), மெய்யடியார்கள்,; பக். 15
8. சி. கே. சுப்பிரமணிய முதலியார், பெரியபுராண உரை, ஆறாம் பகுதி, பக். 22
9. கா. சு. பிள்ளை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம், ப. 132
10. தண். கி. வேங்கடாசலம், சுந்தரர், பக். 100
11. வை. இரத்தினசபாபதி (உ. ஆ.), நால்வர் நான்மணி மாலை, பக் 199
12. 1) ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள்(உ. ஆ.), நால்வர் நான்மணிமாலை, பக். 109

2) கொ. இராமலிங்கத் தம்பிரான் (உ. ஆ.), நால்வர் நான்மணிமாலை, பக். 84
3) பு. சி. புன்னைவனநாத முதலியார் (உ. ஆ.), நால்வர் நான்மணிமாலை, பக். 60, 61

13. வள்ளலார், ஆளுடைய நம்பிகள் அருள்மாலை, பா. எ. 6
14. வை. இரத்தினசபாபதி (உ.ஆ.), நா.நான்மணிமாலை, ப.65
15. வள்ளலார், ஆளுடைய நம்பிகள் அருள்மாலை, பா. எ. 8
16. 7 - 5- 10
17. 7 - 17 - 1 முதல் 11
18. 7 - 19 - 2
19. 7 - 59 - 10
20. 7 - 62 - 5
21. 7 - 68 - 6
22. 7 - 69 - 8
23. 7 - 70 - 2
24. வை. இரத்தினசபாபதி, சுந்தரர், முதற்பகுதி, பக். 48, 49
25. சிவப்பிரகாசர், பிரபுலிங்கலீலை, பா. எ. 1
26. திருக்குறள், பா. எ. 788
27. 7 - 84 - 9
28. 7 - 68 - 8
29. 7 - 51 - 10
30. வள்ளலார், ஆளுடைய நம்பிகள் அருள்மாலை, பா. எ. 10
31. மேற்கோள், வை. இரத்தினசபாபதி (உ. ஆ.), நால்வர் நான்மணிமாலை, பக். 69
32. திருக்களிற்றுப்படியார், பா. எ. 72
33. கா. சுப்பிரமணிய பிள்ளை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம், பக். 7 - 8
34. சிவப்பிரகாசர், சிவஞானபாலய சுவாமிகள் பிள்ளைத்தமிழ், பா. எ. 53
35. தண். கி. வேங்கடாசலம், சுந்தரர், பக். 25
36. மேற்கோள், ,, ,, பக். 25
37. கா. சுப்பிரமணிய பிள்ளை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம், பக். 59
38. தண். கி. வேங்கடாசலம், சுந்தரர், பக். 33 - 34

39. சேக்கிழார், திருத்தொண்டர்புராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பா. எ. 148
40. கா. சுப்பிரமணிய பிள்ளை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம், பக். 2 - 3
41. சேக்கிழார், திருத்தொண்டர்புராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பா. எ. 181
42. பட்டினத்தடிகள், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, பா. எ. 19
43. சிவப்பிரகாசர், நால்வர் நான்மணிமாலை, பா. எ. 35
44. அ. ச. ஞானசம்பந்தம், பெரியபுராணம் - ஓர் ஆய்வு, பக். 554 - 555
45. உய்யவந்ததேவ நாயனார், திருவுந்தியார். பா. எ. 33
46. அருள்நந்தி சிவாச்சாரியார், சிவஞானசித்தியார், பா.எ. 308
47. சி. கே. சுப்பிரமணிய முதலியார் (உ. ஆ.), பெரியபுராணம், ஆறாம் தொகுதி, பக். 460
48. ,, ,, ,, பக். 421
49. 7 - 41 - 1
50. மேற்கோள், வை. இரத்தினசபாபதி (உ. ஆ.), நால்வர் நான்மணிமாலை, பக். 69
51. வை. இரத்தினசபாபதி, (உ. ஆ.), நால்வர் நான்மணிமாலை, பக். 66
52. ,, ,, ,, பக். 97
53. தண். கி. வேங்கடாசலம், சுந்தரர், பக். 116 - 117
54. அ. ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, பக். 455 - 456
55. 7 - 51 - 10
56. 7 - 84 - 9
57. வள்ளலார், ஆளுடைய நம்பிகள் அருள்மாலை, பா.எ. 5
58. ,, ,, பா. எ. 9
59. 7 - 68 - 8
60. சேக்கிழார், திருத்தொண்டர்புராணம், தடுத்தாட்கொண்ட புராணம், பா. எ. 127
61. கொ. இராமலிங்கத் தம்பிரான் (உ. ஆ.), மு. நூ., பக். 22

ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள் (உ. ஆ.), மு. நூ., பக். 31

பு. சி. புன்னைவனநாத முதலியார் (உ. ஆ.) மு. நூ. பக். 16

62. வை. இரத்தினசபாபதி, சுந்தரர் ஓர் ஆய்வு, பக். 98
63. வை. இரத்தினசபாசதி (உ. ஆ.) நால்வர் நான்மணிமாலை பக். 90
64. ஆ. சிவலிங்கனார் அவர்களிடம் இதுபற்றி வினவியபோது அளித்த விடை [சிவப்பிரகாசர் உயர் ஆய்வு மையம் திருமடத்தில் நடத்திய நேர்கரணல் நிகழ்ச்சியின்மோதும், தமிழ்க் கல்லூரி ஆசிரியர் அறையிலும் வினவிப் பெற்றது].
65. வை. இரத்தினசபாபதி (உ. ஆ.) நால்வர் நான்மணிமாலை, பக். 91, 92
66. 7 - 92 - 4
67. 7 - 92 - 2
68. 7 - 92 - 9
69. நம்பியாண்டார்நம்பி, திருத்தொண்டர்திருவந்தாதி, பா.எ.8
70. வள்ளலார், ஆளுடைய நம்பிகள் அருள்மாலை, பா. எ. 3
71. ஐயன்பெருமாள் கோனார், நால்வர் நான்மணிமாலை உரை, பக். 31
72. பு. சி· புன்னைவனநாத முதலியார், ,, உரை. பக். 23
73. இராமலிங்க சுவாமிகள் ,, உரை. பக். 46
74. வை. இரத்தினசபாபதி ,, உரை. பக். 100
75. பட்டினத்தடிகள், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, பா. எ. 13
76. அ) ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள், நால்வர் நான்மணிமாலை உரை, பக். 47

    ஆ) பு. சி. புன்னைவனநாத முதலியார் ,, பக். 24

    இ) அய்யன்பெருமாள் கோனார், நால்வர் நான்மணிமாலை உரை, பக். 31
77. வை. இரத்தினசபாபதி, நால்வர் நான்மணிமாலை உரை, பக். 110 - 111
78. கு. சுந்தரமூர்த்தி (ப. ஆ.), சிவஞானபோதம் - சிவஞான முனிவர் சிற்றுரை, பக். 52

79. வை. இரத்தினசபாபதி, நால்வர் நான்மணிமாலை, உரை, பக். 111 - 112
80. ,, ,, உரை, பக். 166
81. அ. ச. ஞானசம்பந்தன், பெரிய புராணம் ஓர் ஆய்வு, பக்.545
82. வி. எஸ். செங்கல்வராய பிள்ளை, சி. கே. சு. பெரியபுராண உரை, பக். 460
83. அ. ச. ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, பக். 347
84. கா. சுப்பிரமணிய பிள்ளை, சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம், பக். 136
85. அ) ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகள், நால்வர் நான்மணிமாலை, பக். 67
ஆ) பு. சி. புன்னைவனநாத முதலியார், நால்வர் நான்மணிமாலை, உரை, பக். 36
86. சி. கே. சுப்பிரமணிய முதலியார், பெரியபுராண உரை, ஆறாம் பகுதி, பக். 419

துணைநூற் பட்டியல்

1. அருணாசலம், ப., பக்தி இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை - 5, முதற்பதிப்பு 1973
2. அருள்நந்தி சிவாச்சாரியார், சிவஞான சித்தியார், தி. கி. நாராயணசாமி வெளியிடு, கடலூர் - 1.
3. இரத்தினசபாபதி, வை., சுந்தரர் - ஓர் ஆய்வு, முதற்பகுதி, சென்னை பல்கலைக் கழகம், 1986
4. இரத்தினசபாபதி, வை., திருநாவுக்கரசர் இரண்டாம் பகுதி, சென்னைப் பல்கலைக்கழகம், 1985
5. இரத்தினசபாபதி, வை., (உ.ஆ.) நால்வர் நான்மணிமாலை, மாணிக்கவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1984
6. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, பாரிநிலையம், சென்னை-1. மூன்றாம் பதிப்பு 1978
7. இராமலிங்க சுவாமிகள் ஈசானிய மடம் (உ..ஆ) நால்வர் நான்மணிமாலை, குமரன் செந்தமிழ் நூற்பதிப்புக்கழகம், சிதம்பரம், இரண்டாம் பதிப்பு, 1970

8. உமாபதி சிவாச்சாரியார், திருவருட்பயன், கழக வெளியீடு, சென்னை - 1, 1975
9. உமாபதி சிவாச்சாரியார், சிவப்பிரகாசம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு, திருப்பனந்தாள், இரண்டாம் பதிப்பு, 1991
10. ஐயன்பெருமாள் கோனார், (ப. ஆ.), நால்வர் நான்மணி மாலை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 14, இரண்டாம் பதிப்பு, 1990
11. சிங்காரவேலன், சொ., ''அப்பர் தேவாரத்தில் இலக்கியப் பண்புகள்'', ஆறாந்திருமுறை, முகவுரை, தருமையாதீனப் பதிப்பு, 1963
12. சிங்காரவேலன், சொ., மூவர் தமிழ், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1966
13. சிவஞானபாலய சுவாமிகள், ''சிவப்பிரகாசர் போற்றிய அப்பரடிகள்'', தமிழ்நாடு தெய்விகப் பேரவை மாநில மாநாட்டு மலர், சென்னை - 18, 1973
14. சிவப்பிரகாசர், சிவஞானபாலய தேசிகர் பிள்ளைத்தமிழ், குருபூஜை மலர், மயிலம் -பொம்மபுர ஆதீனம், மயிலம், 1968
15. சுந்தரமூர்த்தி, கு., (ப. ஆ.), சிவஞானபோதமும் சிவஞான முனிவர் சிற்றுரையும், ஸ்ரீ காசிமடத்து வெளியீடு (எண். 34) திருப்பனந்தாள்.
16. சுந்தரமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருப்பதிகங்கள், ஏழாந்திருமுறை, தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1964
17. சுந்தரம், மெ., ''அப்பர் - ஒரு புதிய கண்ணோட்டம்'', அப்பர் அருட்செய்திமலர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம், குத்தாலம், தஞ்சை, 1975
18. சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, அமுத நிலையம் லிமிடெட், சென்னை - 4, இரண்டாம் பதிப்பு, 1971
19. சுப்பிரமணிய பிள்ளை. கா., சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரம், கழகவெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1961
20. சுப்பிரமணிய பிள்ளை. ஜி., நாவுக்கரசரும் மாணிக்க வாசகரும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு.

21. சுப்பிரமணிய முதலியார், சி.கே., அப்பர்சுவாமிகள் புராணம் தருமையாதீன வெளியீடு (எண். 65), தருமபுரம், 19:4
22. சுப்பிரமணியம், வே., முகவுரை, பன்னிரு திருமுறைவரலாறு முதற்பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1962
23. சுப்பிரமணியம், ச. வே., இலக்கிய உணர்வுகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1978
24. செல்லப்பன், சு., இக்காலத் தமிழ்க்கவிதை உத்திகள், முனைவர்பட்ட ஆய்வேடு, திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி.
25. சேக்கிழார், திருத்தொண்டர்புராணம் (மூலம்), ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் 294-ஆம் ஆண்டு மகேசுவர பூசை நினைவு வெளியீடு, ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள், 1982
26. ஞானசம்பந்தன், அ. ச., பெரியபுராணம் ஓர் ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தத்துவமையம், காஞ்சிபுரம், முதற்பதிப்பு, 1987
27. ஞானப்பிரகாசம், வ., திருநாவுக்கரசர் போற்றிய திருத் தொண்டர்கள், அருள்வடிவேலன் பதிப்பகம், கடலூர், முதற் பதிப்பு, 1986
28. தனக்கோடி அடிகளார், கா. சி., அடியார்பெருமை, ஜெய கணபதி நிலையம், சென்னை - 51, முதற்பதிப்பு, 1985
29. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், தேவாரத் திருப்பதிகங் கள், முதல்திருமுறை, தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1953.
30. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், தேவாரத் திருப்பதிகங் கள், இரண்டாம் திருமுறை, தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1954
31. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், தேவாரத் திருப்பதிகங் கள், மூன்றாம் திருமுறை, தருமையாதீன வெளியீடு, தரும புரம், 1955
32. திருநாவுக்கரசு, மறை., 'சேக்கிழார் பரவிய அப்பரடிகள்', அப்பர் அருட்செய்திமலர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம், குத்தாலம், தஞ்சை, 1975.

33. திருநாவுக்கரசு, மறை., பெரியபுராண ஆய்வுரை, அப்பர் - இரண்டாம் பகுதி, மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை - 82, முதற்பதிப்பு, 1974
35. திருநாவுக்கரசு நாயனார். தேவாரத் திருப்பதிகங்கள், நான் காம் திருமுறை, தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1956.
36. திருநாவுக்கரசு நாயனார், தேவாரத் திருப்பதிகங்கள், ஐந் தாம் திருமுறை, தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1961
37. திருநாவுக்கரசு நாயனார், தேவாரத் திருப்பதிகங்கள்,ஆறாந் திருமுறை, தருமையாதீன வெளியீடு, தருமபுரம், 1963
38. திருமூலர், திருமந்திரம், கழக வெளியீடு, சென்னை, 1969
39. திருவள்ளுவர், திருக்குறள், பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, சென்னை, பத்தாம் பதிப்பு, 1960
40. தேவசேனாபதி, வ ஆ., (மொ.பெ.ஆ.), மெய்யடியார்கள், ஜெமினி பிரசுரம். சென்னை - 6, முதற்பதிப்பு, 1959.
41. நாராயணவேலுப்பிள்ளை, எம் ஏ., பக்தி வளர்த்த சான் றோர், சரசு பதிப்பகம், சென்னை - 18, முதற்பதிப்பு, 1991.
42. பட்டுசாமி ஓதுவார், தி., ''திருமுறைச் சிறப்பு'' திருவா னைக்கா ஸ்ரீ அகிலேண்டேஸ்வரி சமேத ஸ்ரீ ஜம்புகேஸ்வரர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக மலர், திருப்பணிக்குழு, மண்டலாபிஷேக வெளியீடு, 1970.
43. பிச்சமுத்து, ந., திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கை களும், சக்தி வெளியீடு, சென்னை - 5, முதற்பதிப்பு, 1983.
44. புன்னைவனநாத முதலியார், பு. சி., (உ. ஆ), நால்வர் நான்மணிமாலை, கழக வெளியீடு, சென்னை - 1, 1960.
45. மனவாசகங்கடந்தார், உண்மைவிளக்கம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு, திருப்பனந்தாள், மூன்றாம் பதிப்பு, 1992.
46. வச்சிரவேல் முதலியார், க., ''சம்பந்தர் தமிழில் சாத்திர நோக்கு'', திருவிடைமருதூர் திருமுறைக் கருத்தரங்கு ஆய்வுரைகள், தொகுதி - 1, திருவாவடுதுறை ஆதீனம், திருவிடைமருதூர், 1973.
47. வெள்ளைவாரணன், க., பன்னிருதிருமுறை வரலாறு, முதற் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1962.

48. வேங்கடாசலம், தண். கி., அப்பர் பெருமான், தண்டலை இல்லம், பெங்களூர் - 5, இரண்டாம் பதிப்பு, 1968.
49. வேங்கடாசலம், தண். கி., சுந்தரர், தண்டலை இல்லம், பெங்களூர் - 5, இரண்டாம் பதிப்பு, 1967.
50. கலைக்களஞ்சியம், தொகுதி ஆறு, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு 1958.
51. பதினொன்றாம் திருமுறை, ஸ்ரீ காசிமடம் பன்னிருதிருமுறை பதிப்புநிதி வெளியீடு, திருப்பனந்தாள், 1972.

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	2	வேதங்களையும்	வேதங்களை
	3	வேதங்களை	வேதங்களையும்
	4	நூல்களை	நூல்களையும்
	25	நதிகளெல்லா	நதிகளெல்லாம்
5	6	அதற்குள்	அதற்குள
6	31	நிகழ்த்தியதாக	நிகழ்த்தியதாகச் சொல்லும்
7	12	சென்றுப்	சென்று
	19	வென்றுச்	வென்று
8	1	தென்தமழின்	தென்தமிழின்
	3	கயிலையின்கள்	கயிலையின்கண்
	26	கவிவளவர்	கவிவலவர்
12	10	தூலும்	நூலும்
	12	கட்டுரைசளும்	கட்டுரைகளும்
13	6	தமிழத்திற்கு	தமிழகத்திற்குக்
16	8	பொருள் - 26	பொருளியல் - 27
52	32	கருத்துகளரலும்	கருத்துகளாலும்
39	5, 6	அவ்வகையில்	அவ்வளவில்
41	6	பற்றி	பெற்று
	26	மகன்மநெறி	மகன்மைநெறி
43	8	ஞானச பந்தரை	ஞானசம்பந்தரை
	14	'தேனுந்து'	'வானும் புகழ்'
46	25	தகுவன	தருவன
50	3	அன்றே	அன்றே
55	5	'மாணிக்கவாசகர் காலமும் ஆராய்ச்சியும்'	'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்'
67	27	தமிழத்தில்	தமிழகத்தில்
69	17	தத்துவநெறிகள்	தத்துவங்கள்
71	30	சு. துரைசாமி அய்யர்	சி. துரைசாமி அய்யர்
72	5	திருப்பதிக ஆராய்ச்சி பற்றிய நூலில்	திருப்பதிகம் பற்றிய ஆராய்ச்சிநூலில்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
72	19	டஉம்பிலே	உடம்பிலே
	26	வழிபாடி	வழிபாடு
73	23	இலிங்காய	இலிங்காயத
74	10	ஒத்திருந்பதாக	ஒத்திருப்பதாக
	13	உறுதிபடுத்து	உறுதிப்படுத்து
78	8	ஆய்வுச் ஆய்வுச்	ஆய்வுச்
	25	திருவசகம்	திருவாசகம்
80	6	கருத்தமைந்த	கருத்தமைத்து
84	4	ஈா	ஈர
	24	வாயிலாக	வாயிலாகச்
85	1	ணர்வினால்	உணர்வினால்
95	36	சவகத் திருநீறு	கவசத் திருநீறு
99	22	திருமுலர்	திருமூலர்
100	7	அடைத்த	அடைந்த
116	10	மங்கள	மங்கல
144	22	ஸ்ரீ சுப்பிரமணியப்பிள்ளை	ஜி.சுப்பிரமணிய பிள்ளை
156	24	—	பக். 283
178	12	இரண்டாவதான	இரண்டாவதானது
204	16	இறற்கையறிவினன்	இயற்கையறிவினன்
219	9	நேர்கரணல்	நேர்காணல்
		நிகழ்ச்சியின்மோதும்	நிகழ்ச்சியின்போதும்
220	26	மாணிக்கவாசகர்	மணிவாசகர்
		பதிப்பகம்	பதிப்பகம்

— ★ —